வாரவெளியீடு
# தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ் : 07 சோபகிருது வருடம், ஆடி மாதம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (13.08.2023) ஹிஜ்ரி-1445, முஹர்ரம் - 25, 0115886187 - பக்கங்கள் 18+8+8+8
விலை ரூ.130

## நக்கல் நமசிவாயம்

ஒரு சீட்டில வந்த ரணில் ஐயா, 69 இலட்சம் வாக்குகள் கிடைச்ச கட்சியையே ஆட்டி வைக்கிறார் என்றால் பாருங்கோவன் நிலைமைய..



## இயக்கத்தின் தங்கத்தை தோண்டியெடுக்க முயற்சி
### கிளிநொச்சியில் 4 பேர் கைது

விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டதாகக் கூறப்படும் தங்கம், பணம் மற்றும் ஆயுதங்களை தேடுவதற்காக அதிநவீன ஸ்கேனிங் இயந்திரத்தை கொண்டுசென்ற நால்வர் கிளிநொச்சி, கனகபுரம் பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

மாதம்பை, கண்டி, நாத்தாண்டிய, மித்தெனிய ஆகிய இடங்களில் வசிக்கும் 30 முதல் 58 வயதுக்குட்பட்ட நால்வரே கைதுசெய்யப்பட்டனர்.

02 ஆம் பக்கம்

# பாராளுமன்றத்தை கலைத்துவிடுவேன்!
## ரணில் எச்சரிக்கை

நா.தினுஷா

ஆட்சியை முறையாக நடத்த இடங்கொடுக்காமல் அரசுக்கு எதிரான வேலைகளை ஆளுந்தரப்பிலிருந்து எவரும் செய்வார்களாயின், பாராளுமன்றத்தை கலைப்பதைத் தவிர தமக்கு வேறு வழியில்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரமுகர்களால் பொறுப்பற்ற விதத்தில் தெரிவிக்கப்படும் கருத்துகள், அமைச்சரவையில் அவர்கள் கோரும் இட ஒதுக்கீடு, மக்களை அரசுக்கு எதிராக திருப்பும் செயற்பாடுகள் என்பன தொடர்பில் சில தினங்களுக்கு முன்னர் ஆளுங்கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்கள் சிலருடன் மனந்திறந்து பேசியுள்ளார் ஜனாதிபதி ரணில்.

பொருளாதார நிலைமைகளை சீர்செய்து நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், ஆளுங்கட்சிக்குள் உள்ள சிலரால் அரசுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக சுட்டிக்காட்டிய ரணில், மீண்டுமொரு மக்கள் கிளர்ச்சியை உருவாக்க...

02 ஆம் பக்கம்

## 'வெடி'மணியம்



13ஆம் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது பற்றி இப்போது "அறம்புறமாக" பேசப்படுகிறது.

இதில் வடக்கு, கிழக்கு தமிழ்மக்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் இந்த சட்டத்தை கொண்டுவரவேண்டும் என்றே விரும்புகிறார்கள்.

ஆனால், முஸ்லிம் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் இந்த "வடக்கு - கிழக்கு இணைப்புக்கு" எதிரான மனநிலையில்தான் இருக்கிறார்கள்.

06 ஆம் பக்கம்

## டைனமைற் பயன்படுத்தி மீன் பிடிப்பதை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை
### கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ்



தடைசெய்யப்பட்ட கடற்றொழில் முறைகளில் ஒன்றான டைனமைற் மற்றும் வெடிபொருட்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கடற்றொழிலை தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் - என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 10ஆம் திகதி அமைச்சின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

02 ஆம் பக்கம்

## தொல்லியல் திணைக்கள ஆக்கிரமிப்பு கண்டிக்கத்தக்கது
### அகில இலங்கை இந்து மாமன்றம்

பு.கஜிந்தன்

வரலாற்றுச் சிறப்புமிக்கதும் சைவ மக்களின் முக்கியமான சமய சம்பிரதாயங்களோடு தொடர்புடையதுமான கீரிமலை கேணியையும் தொல்லியல் திணைக்களம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது - என அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் மன்றத்தின் அறிக்கையில் உள்ளதாவது,

ஒவ்வொரு சைவ ஆதாரங்களையும் தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்த நினைப்பதும், அதற்கான கண்டனங்கள் வெளிநாடுகள் வரை சென்று எதிரொலிக்கும்போது தமது செயற்பாடுகளிலிருந்து திணைக்களம் தற்காலிகமாக பின்வாங்குவதும் என்று சைவ மக்கள் தமது அடையாளங்களை ஒன்றன் பின் ஒன்றாக இழந்துவரும் துர்ப்பாக்கிய நிலைக்கு இட்டுச்செல்வது மிகவும் கவலைக்குரியது.

02 ஆம் பக்கம்




## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம்: மேற்பார்வைக் குழு மேலதிக விசாரணை!



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம் மற்றும் அது தொடர்பான இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் கண்டறிவதற்கு 2023.08.10ஆம் திகதி பாராளுமன்ற...

02 ஆம் பக்கம்

## தற்போதைக்கு ஏற்றவாறு திட்டத்தைத் தயாரிக்கவும்!
### சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு கோபா குழுவால் ஆலோசனை

சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஏதாவது ஒருவகையில் செயற்படுவதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரிக்குமாறு கோபா குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆலோசனை வழங்கினார்.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2019/2020/2021 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் விசாரணை...

02 ஆம் பக்கம்

## பிரபாகரனின் படத்துடன் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் சுவரொட்டிகள்

பாறுக் ஷிஹான்

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கைத்துப்பாக்கியுடன் 1990 ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி என்று பொறிக்கப்பட்ட அநாமதேய சுவரொட்டி ஒன்று ..பரவலாக ஒட்டப்பட்டுள்ளது.

இச்சுவரொட்டி வெள்ளிக்கிழமை ஒட்டப்பட்டுள்ளதுடன், கறுப்பு ஒகஸ்ட் 11 என்ற தொனியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு ...

02 ஆம் பக்கம்




## விவசாயத்தை நவீனமயப்படுத்தும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும்
### ஜனாதிபதி ரணில்

விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் மூலம் நாட்டின் விவசாயத்துறையில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தும் பணிகளை துரிதப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

விவசாயம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயலணியொன்றை உருவாக்கவுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, பெருந்தோட்ட, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சுகளை இணைத்து தனியார்துறையின் பங்கெடுப்புடன் மேற்படி செயலணியை நிறுவ எதிர்பார்த்திருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

"விவசாயத் துறை...

02 ஆம் பக்கம்





# தொலைத்தொடர்பு கோபுரத்தை அகற்றக் கோரி ஆர்ப்பாட்டம்




(கிண்ணியா நிருபர்)

தொலைத்தொடர்பு கோபுரத்தை அகற்றுமாறு கோரி திருகோணமலை - கிண்ணியா பிரதான வீதியில் பொதுமக்களால் வெள்ளிக்கிழமை (11) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிண்ணியா பிரதான வீதியின் அருகாமையிலுள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான வீடொன்றின் மேல் அமையவுள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தை அகற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அகற்று அகற்று கோபுரத்தை அகற்று, வேண்டாம் வேண்டாம் கோபுரம் வேண்டாம் ஆகிய சுலோகங்களை ஏந்திய பதாகைகளுடன் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இவ்வார்ப்பாட்டத்தின்போது அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் தலையிட்டதன் பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.

## பாராளுமன்றத்தை...

சிலர் முயற்சிப்பதாகவும் சாடியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட உதவி முக்கியமானது என்றும் ஆனால், அதனை குழப்பவும் சிலர் வேலைகளை செய்வதாகவும் தெரிவித்துள்ள ஜனாதிபதி, இந்த நிலைமை இப்படித் தொடருமாயின் பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய மக்கள் ஆணையை பெறவேண்டி வருமென்றும், அதற்கு தாம் பின்னிற்கப்போவதில்லையென்றும் தெரிவித்துள்ளாரென அறியமுடிந்தது.

## இயக்கத்தின்...

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட நவீன ஸ்கேனிங் இயந்திரத்தையும், அவர்கள் பயணித்த காரையும் அதிரடிப்படையினர் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட உபகரணங்களும், சந்தேகநபர்களும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.




## பிரபாகரனின்...

ஓகஸ்ட் மாதம் ஏறாவூர் மற்றும் காத்தான்குடி பகுதியில் விடுதலைப் புலிகளால் கொடூரமாக படுகொலைசெய்யப்பட்ட எமது நண்பர்களையும் உறவினர்களையும் நினைவுகூருகின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, புலிகளுக்கு ஆதரவான அனைத்து நியாயங்களையும் கண்டிக்கவேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கு கனேடிய அரசாங்கம் வெட்கப்பட வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உண்மையை புரிந்துகொள்ள வேண்டும். அனைவரும் பாரபட்சமின்றி இருங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, நிந்தவூர், ஒலுவில், சம்மாந்துறை, சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை உள்ளிட்ட முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இவ்வாறு சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.


தற்போது விற்பனையில்!

ஜீனியர் வழங்கும்
தமிழன்

2023ஆம் ஆண்டுக்கான
தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை
'வெற்றிக்கு வழிவகுக்கும்'
விசேட மாதிரி வினாத்தாள் பொதி




பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால்
தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது
பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!
பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
0777983308 / 0741684643


## தொல்லியல்...

இவ்வாறான செயற்பாடுகள் முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும். இப்படியான சமிக்ஞைகளால் அரசாங்கம் சைவத் தமிழ் மக்களின் நம்பிக்கையை பெறுவதற்கான அதன் முயற்சிகளில் பாரியளவில் பாதிப்பு ஏற்படும்.

கீரிமலை கேணி, தமது நீத்த உறவினர்களின் பிதிர்க்கடன்களை நிறைவேற்ற வெளிநாடுகளிலிருந்தும் சைவமக்கள் வந்து செல்கின்ற இடம். ஈழத்தில் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரத்தின் அருகில் அமைந்துள்ள இந்தக் கேணி பல நூற்றாண்டு கால பழமை வாய்ந்தது. இது ஒரு நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக வலி.வடக்கு பிரதேச சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகிற இடம்.

சைவத் தமிழ் மன்னன் இராவணனோடும் இராமாயணத்தோடும் தொடர்புடைய திருக்கோணேஸ்வர ஆலய சுற்றாடலில் வெளியார் ஆக்கிரமிப்பு, கன்னியா வெந்நீரூற்று தொடர்பில் தொல்லியல் திணைக்களத்தின் தலையீடு, அண்மையில் பறளாய் முருகன் கோவிலில் உள்ள ஒரு அரச மரத்தைப் பற்றிய சர்ச்சை, வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்டமை, பின் அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட சர்ச்சைகள் என சைவ மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்கின்றன. எனவே, இத்தகைய அநீதியான செயலைத் தடுத்து நிறுத்துவதோடு, சிறுபான்மை மக்களின் மத வழிபாடுகளைத் தடுக்கின்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

நாங்கள் எந்த மதத்துக்கும் எதிரானவர்கள் அல்லர். ஆனால், எமது மத வழிபாட்டை தடைசெய்ய எவருக்கும் உரிமையில்லை. அத்தகைய செயற்பாடுகளை தடுக்க வேண்டும் என ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

## தற்போதைக்கு...

செய்வதற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா) இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் அண்மையில் (08) பாராளுமன்றத்தில் கூடியபோதே அவர் இந்த ஆலோசனையை வழங்கினார்.

அத்துடன், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான அரசாங்கக் கொள்கையுடன் பொருந்தும் வகையில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டரீதியான கட்டமைப்பை தயாரிப்பது தொடர்பில் செப்டெம்பர் 11ஆம் திகதிக்கு முன்னர் திகதிகளுடன் கூடிய அறிக்கையை கோபா குழுவுக்கு வழங்குமாறும் லசந்த அழகியவண்ண பரிந்துரை வழங்கினார்.

மூன்றரை வருடங்களாக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டில்லை என்றும் சிவில் பாதுகாப்புப் படை தேய்வடையும் படையாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். அத்துடன், தற்பொழுது 33,687 பேர் சிவில் பாதுகாப்புப் படையில் சேவையில் ஈடுபட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியதுடன், அவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள இடங்கள் மற்றும் அதன் விபரங்களையும் குறிப்பிட்டனர்.

அத்துடன், இந்தப் படையை ஸ்தாபித்தல் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன இதன்போது தெளிவுபடுத்தினார்.

அதற்கு மேலதிகமாக, தேவைக்கு அதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்வனவுகள், இந்தத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும் இந்தப் படையால் பயிரிடப்பட்ட தானியங்கள், விளைச்சல்களை விற்பனை செய்வது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தக் குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, சாமர சம்பத் தசநாயக்க, டயனா கமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, நிரோஷன் பெரேரா, ஹெக்டர் அப்புஹாமி, சஹன் பிரதீப் விதான, இசுறு தொடங்கொட, ஜயந்த கெட்டகொட மற்றும் (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட ஆகியோர் கலந்துகொண்டனர்.

## எக்ஸ்பிரஸ்...

உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தலைமையில் பாராளுமன்றத்தில் கூடிய சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பவரவைக் குழு முன்னிலையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அழைக்கப்பட்டிருந்தனர்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம், அது தொடர்பான இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் இதன்போது குழுவால் வினவப்பட்டது. நீதி அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் இணைந்து முன்வைத்த அமைச்சரவைப்பத்திரத்தின் பிரகாரமே சிங்கப்பூர் கப்பல் உரிமையாளர்களின் சட்டப் பிரதிநிதிகள் மற்றும் காப்புறுதிப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு இந்நாட்டின் பிரதிநிதிகள் குழுவொன்று பெயரிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சட்ட மா அதிபரின் தலைமையிலான அந்தக் குழுவில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் இரண்டு அதிகாரிகள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர், கரையோர செயலகத்தின் பணிப்பாளர் நாயகம், ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஒருவர், மீன்பிடி அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவர் உட்பட எட்டு பேர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் ஜூலை 18-19ஆம் திகதிகளில் சிங்கப்பூரில் சந்தித்து உத்தேச இழப்பீட்டுத் தொகை எவ்வாறு தொகுக்கப்பட்டுள்ளது என்பது குறித்துக் கலந்துரையாடினர்.

தற்பொழுது இடைக்காலக் கோரிக்கைகள் 13 முன்வைக்கப்பட்டிருந்தபோதிலும் அதில் 4 கோரிக்கைகளுக்கு மாத்திரம் நிதி கிடைத்துள்ளதால் ஏனைய இடைக்காலக் கோரிக்கைகளுக்காக நிதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது தொடர்பில் கலந்துரையாடியதாகவும் முன்வைக்கப்பட்ட இடைக்காலக் கோரிக்கைகள் இலக்கம் 5, 6, 7, 8 ஆகியவற்றுக்கு மிகவும் குறுகிய காலத்தில் செலவுகளை வழங்குவதற்கும் அதற்கு மேலதிகமாக 13 வரையான இடைக்காலக் கோரிக்கைகளுக்கான செலவுகளை வழங்குவதற்கும் இந்தக் கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டது. சிங்கப்பூர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டு இறுதியாக ஊடகங்களுக்கு கூட்டாக அறிவிப்பு வெளியிடப்பட்டது.

சிங்கப்பூரில் வழக்கை தொடரும் பணிகள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுவதால், இந்தக் குழுக் கூட்டத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கலந்துகொள்ளுமாறு அறிவித்திருந்தாலும், தற்பொழுது இந்த வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருவதால் அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்க முடியாது என அறிவிக்கப்பட்டிருந்ததால், வழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பில் குழுவில் தெரிவிக்கப்படவில்லை.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையால் நியமிக்கப்பட்டிருந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம் தொடர்பான இழப்பீட்டை மதிப்பிடும் சூழல் மதிப்பாய்வுக் குழுவுக்கு இந்த ஆண்டுக்கான நியமனக் கடிதங்கள் வழங்காமை தொடர்பிலும் அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் தொடர்பில் 2 வருடங்களாகியும், இதுவரை முறையாகக் கொடுப்பனவுகள் வழங்கப்படாமை தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது. இவ்வாறான சூழல் மதிப்பீடு இதற்கு முன் செய்யப்படாததால், இதுபோன்ற முன்மாதிரி இல்லாமல் பணம் செலுத்துவது குறித்து தீர்மானிப்பதற்கு சில காலம் எடுத்ததாகவும் தற்பொழுது அந்தக் கொடுப்பனவுக்காக அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் எதிர்வரும் காலத்தில் பகுதி பகுதியாக கொடுப்பனவு வழங்க முடியுமென இதன்போது கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்தது.

அத்துடன், துறைசார் மேற்பார்வைக் குழுவால் 2023 ஜூலை 21ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட "எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் அனர்த்தம் மற்றும் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளுதல்" தொடர்பான குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் தொடர்பில் இதன்போது குழு கவனம் செலுத்தியதுடன், அந்த பரிந்துரைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து ஒக்டோபர் முதலாம் வாரத்தில் கூடவுள்ள துறைசார் மேற்பார்வைக் குழுவின் கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளருக்கும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவருக்கும் குழு ஆலோசனை வழங்கியது.

இந்தக் கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான வருண லியனகே, அகில எல்லாவல, திலக் ராஜபக்ஷ, நாலக பண்டார கோட்டேகொட ஆகியோர் கலந்துகொண்டனர்.

## விவசாயத்தை...

நவீனமயப்படுத்தல்" தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் (10) நடைபெற்ற சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாய நவீனமயப்படுத்தலுக்கான செயலகமொன்றை ஸ்தாபிப்பதற்கான வரைபு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றை இரு வாரங்களுக்குள் பெற்றுத்தருமாறு அதிகாரிகளுக்கு வலியுறுத்திய ஜனாதிபதி, தேவை ஏற்படுமாயின் அச்செயற்பாடுகளுக்காக பாராளுமன்றக் குழுவொன்றை நியமிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

விவசாயம் இந்நாட்டு பொருளாதாரத்தின் பிரதான அங்கமாக காணப்படுகிறது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதனை அமைச்சு அல்லது சில நிறுவனங்களுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்த முடியாதெனவும், அரச மற்றும் தனியார் துறைகள் உரிய ஒருங்கிணைப்புடன் விவசாயத்தை நவீனமயப்படுத்தும் பணிகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அதேபோல் பழமையான முறைமைகளுக்கு மாறாக புதிய முறையில் சிந்தித்து சிறந்த பிரதிபலன்களை அடையும் வகையில், விவசாயத்தை நவீனமயப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இதுவரையில் விவசாயத்துக்கான நிதி ஒதுக்கீடுகள் மாத்திரமே இடம்பெற்றதாகவும், அதனால் நாட்டுக்கு எவ்வித பலன்களும் கிடைக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உரிய முகாமைத்துவத்தின் கீழ் விவசாய திட்டமிடல்களை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் விவசாய அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்துவதற்கான அறிவுரைகளை வழங்கிய ஜனாதிபதி, 9 மாகாணங்களிலும் காணப்படும் வளங்களை அதற்காக பயன்படுத்திக்கொள்வதோடு, அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது, உரிய அமைச்சுகள் மற்றும் பல்கலைக்கழகங்கள், ஏனைய ஆய்வு நிறுவனங்களின் நிபுணத்துவ தெரிவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

அந்தந்த போகங்களுக்கு ஏற்ற நெல் வகைகளைப் பயிரிடுதல், குறித்த பயிர்கள் தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து அறிவைப் பெறுதல், தரமான விதைகளை கொள்முதல் செய்தல் ஆகிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும் என்றும், நாடுபூராகவும் உள்ள கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக சிறு விவசாயிகளுக்கு அவசியமான நவீன தொழில்நுட்ப அறிவை வழங்கும் திட்டத்தை உருவாக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், நவீன விவசாய உபகரணங்களை உற்பத்தி செய்யும் தாய்லாந்து போன்ற நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறும் ஜனாதிபதி விவசாய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு, தனியார் துறை தொழில் முயற்சியாளர்களை உள்ளீர்ப்பதன் மூலம் அதிக நன்மைகளைப் பெற முடியும் என்பதுடன், நிலையான விவசாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

காலநிலை மாற்றம் தொடர்பான இலக்குகளை அடையும் வகையில் இந்தப் பணிகளை செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், முறையான நீர் முகாமைத்துவத்தை பராமரிப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி விளக்கினார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க கருத்துத் தெரிவிக்கையில், ஒவ்வொரு பிரதேசத்துக்கும் உரிய பயிர்களை கிராமப்புற ரீதியில் ஊக்குவித்தல் மற்றும் புதிய தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளை தெளிவூட்டல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற அரச மற்றும் தனியார்துறை பிரதிநிதிகளும் தங்களது கருத்துகளையும் ஆலோசணைகளையும் முன்வைத்தனர்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க, துறைசார் அமைச்சுகளின் செயலாளர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இக்கலந்துரையாடலில் பங்கெடுத்தனர்.


தேவை

பலசரக்கு கடைக்கு அனுபவமுள்ள சிங்களம் வாசிக்கக்கூடிய வேலையாள் ஒருவர் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். சம்பளம் 30,000 ரூபாவுக்கு மேல் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். கிராம சேவையாளர் அத்தாட்சிப்பத்திரத்துடன் வரவும்.

தும்பரை டிரேடர்ஸ் - பொல்கொல்ல
071 6441210 / 0779304956

பண்டாரகம

அட்டுலுகம சிறிய பள்ளி சந்தியில், சகல வசதிகளுடன் கூடிய கடை அறையொன்று வாடகைக்கு வழங்கப்படவுள்ளது. இந்த கடை அறை செலூன் அமைப்பதற்கு மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

மேலதிக தகவல்களுக்கு: 66 160 2425, 65 32 5070



தேசிய லொத்தர் சபை National Lotteries Board — வியாழக்கிழமை 2023.08.10 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5202 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,077,416.00 — ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 0 4 2 4 0 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3444 — சீட்டிழுப்பு திகதி 2023.08.10 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 72,148,024.40 — ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 06 39 50 61 — விசேட எழுத்து M — இலட்சாதிபதி பவர் சான்ஸ் வெற்றி இலக்கம் 61264

லக்கி 7 — திகதி 10.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0028 — வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 4 0 7 0 3 1 — L7 இலக்கம் 2 1 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,783,760.88

தன நிதானய — தேதி 2023/08/10 — சீட்டிழுப்பு இலக்கம் 1232 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 104,281,636.80 — ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 11 14 23 40 — விசேட ஆங்கில எழுத்து D — Double Chance இலக்கம் 13745

ராசிசப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 511 — சீட்டிழுப்பு திகதி 2023-08-10 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,442,249.40 — வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 34 43 49 59 — விசேட இலக்கினம் மீனம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1550 — 10/08/2023 — Double Chance 78935 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 403,648,316.00 — ஆங்கில எழுத்து I — சுப்பர் இலக்கம் 18 — வெற்றி இலக்கங்கள் 19 48 55 76 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00


## டைனமைற்...

ஜெல் வோட்டர் (டைனமைட்) பயன்படுத்தி மீன்களைப் பிடிப்பதால் ஏராளமான மீன் வளங்கள் அழிவடைவதாகவும், இதனைத் தடுப்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் அதன்பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், இவ்விடயம் தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிப்பதற்காக அமைச்சரவைப்பத்திரமொன்றை தயாரிக்குமாறும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து ரத்நாயக்க உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

டைனமைற் பயன்படுத்தப்படுவதனால் திருகோணமலை, கற்பிட்டி, மன்னார் மற்றும் தென்பகுதியிலும் கடல் வளம் அழிக்கப்படுவதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், இவ்விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்குமாறும் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர், டைனமைட் பயன்படுத்துவோருக்கான விநியோக மார்க்கங்களைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் தமக்கு அறிவிக்குமாறும் இதனைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சுற்றிவளைப்புகள் தொடர்பில் கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உரிய ஆலோசனை வழங்குமாறும் தெரிவித்தார். இதற்கான உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக கடற்றொழில் சட்டமூலம் மற்றும் சுடுகலங்கள், வெடிபொருட்கள் தடுப்பு கட்டளை சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனவும் குறித்த சட்டங்களில் இதனை தடுப்பதற்கான வழிமுறைகள் இல்லாவிடில் புதிய சட்டமூலங்களை தயாரிக்க முடியும் எனவும் கூறினார்.

டைனமைற் பயன்படுத்துவதால் அழிவடையும் மீன்களை இனங்காண்பதற்கு நாரா நிறுவனத்தில் போதுமான அதிகாரிகள் இல்லையெனில் சுற்றிவளைப்புகளில் ஈடுபடும் கடற்றொழில் திணைக்களத்தின் பிராந்திய அதிகாரிகளுக்கு அறிவித்து இம் மீன்களை இனங்காண்பதற்கான திட்டங்களை வகுக்குமாறும் அதற்குரிய நிதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரத்நாயக்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, அமைச்சின் மேலதிக செயலாளர் தம்மிக ரணதுங்க, பொலிஸ் திணைக்கள சுற்றாடல் பிரிவுப் பொறுப்பதிகாரி, கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்பு துறைகளின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.



# இணையவழி மோசடியும் சிறுவர் பாலியல் சுரண்டலும்



சிறுவர் என்பவர்கள் ஒரு நாட்டின் எதிர்காலத்தின் தூண்களாக சித்திரிக்கப்படுகிறார்கள். பதினெட்டு வயதுக்குக் குறைந்த எந்தவொரு நபரும் சிறுவர் என ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சமவாயம் கூறுகிறது.

சிறுவர்கள் சார்ந்த பல்வேறு சமவாயங்கள், சட்டங்கள் காலத்துக்குக்காலம் உருவாகி வந்தாலும் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை, சுரண்டல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன.

குறிப்பாக, கொவிட் நோய் தொற்றுக்காலத்தின் போதும் அதற்குப் பின்னரும் நேரடியாகவும் இணையத்தின் மூலமாகவும் பல்வேறு சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் தொடர்பான முறைப்பாடுகள் பதியப்பட்டிருப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA) குறிப்பிட்டுள்ளது. இதற்கான பிரதான காரணமாக சிறுவர்கள் மத்தியில் வெகுவாக அதிகரித்துள்ள இணையப் பாவனை மற்றும் கைத்தொலைபேசி பாவனையை சுட்டிக்காட்டலாம்.

சிறுவர்களில் பெரும்பாலானோர் சமூக ஊடகங்களுக்கும் (Social Media) பல்வேறு செயலிகளுக்கும் (Apps) அடிமையாகி உள்ளதோடு, அதனூடாக உடல், உள, சமூக ரீதியாக பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளனர். சிறுவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் இணையதள தொடர்பு சாதனங்களின் பாவனை தொடர்பான சரியான விழிப்புணர்வு இல்லாமையே இவ்வாறான பிரச்சினைகளுக்குப் பிரதான காரணமாக அமைகின்றது.

சிறுவர்களும் பெற்றோர்களும் இணையவழி மோசடிகள் (catfishing) மூலம் எவ்வாறு பாலியல் ரீதியான சுரண்டலுக்கு உள்வாங்கப்படுகிறார்கள் என்பதை பின்வருமாறு பார்க்கலாம்.

இணையவழி மோசடி என்பது அல்லது (Catfishing) கெட்பிஷிங் என்பது ஒரு நபர் பொதுவாக மற்றவர்களின் தகவல் மற்றும் புகைப்படங்களை திருடி தனக்கென ஒரு பொய்யான அடையாளத்தை உருவாக்கி அவற்றை பயன்படுத்துவதைக் குறிக்கும். சில சமயங்களில் ஒரு கெட்பிஷர் மற்றொரு நபரின் முழு அடையாளத்தை (அவரது உருவம், பிறந்த திகதி மற்றும் இருப்பிடம்) என்பவற்றை உரியவரின் அனுமதியின்றி பாவித்து அவர்கள் அந்நபரைபோல்பாசாங்கு செய்வர். இதில் பாதிக்கப்பட்ட பெற்றோர்களும் சிறுவர்களும் உள ரீதியான பிரச்சினைகளுக்கும் பொருளாதார ரீதியான பிரச்சினைகளுக்கும் முகங்கொடுகின்றனர்.

முகப்புத்தகக் கணக்குகளில் ஐந்து சதவீதமான கணக்குகள் போலியான தகவல்களைக்கொண்ட கணக்குகள் என கண்டறியப்பட்டுள்ளது. கெட்பிஷிங் பெரும்பாலும் டிண்டர் மற்றும் கிரைண்டர் (Tinder and Grinder) போன்ற அந்தரங்க உறவுக்கான (Dating) செயலிகளிலும் முகநூல் (Facebook), வைபர் (Viber), டிக்டொக் (Tiktok), வட்ஸ்அப் (WhatsApp), வீச்செட் (WeChat) போன்ற செயலிகளிலும் அதிகரித்துள்ளன. பெரும்பாலும் இணையவழி மோசடிக்காரர்கள் சிறுவர்களை மையப்படுத்தி இதைச் செய்கின்றனர். அதற்கான காரணம் சிறுவர்களை இலகுவில் வசப்படுத்திவிடலாம் என்ற நோக்கத்தினாலாகும்.

அதிகமாக இணையவழி மோசடிக்காரர்கள் பின்வரும் வழிமுறைகளைப் பயன்படுத்தி சிறுவர்களை அடைய முயற்சிப்பர்.

★ காதல் (Romance) வசப்படக்கூடிய வார்த்தைகளைப் பேசி உறவை வலுப்படுத்தி அதன் மூலம் பணம் பறிக்க முயற்சித்தல்.

★ நம்பிக்கை ஊட்டும் வகையில் நண்பரைபோல் உறவாடி காதல் வார்த்தைகளைப் பேசி அவற்றை பதிவுசெய்து சமூக ஊடகங்களில் வெளியிடுவதாக மிரட்டி, பாலியல் அல்லது பணம் பெற முயற்சித்தல்.

★ பொய்யான படங்களைப் பகிர்ந்து நம்பிக்கையை ஏற்படுத்தி நேரடியாக சந்திக்கத் தூண்டுதல். இதன் மூலம் கடத்தல், பாலியல் ரீதியான வன்முறை மற்றும் சுரண்டலில் ஈடுபடல், உயிராபத்துகளை ஏற்படுத்தல்.

★ வசப்படுத்தும் வார்த்தைகளைப் பாவித்து போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயல்களை செய்யத் தூண்டுதல்.

★ இலங்கையில் சிறுவர்களுக்கு எதிராக நேரலை (Online) மற்றும் இணையம் (Internet) மூலம் ஏற்படுகின்ற துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தரம் மற்றும் அளவு அடிப்படையிலான ஆய்வில் 1911 சிறுவர்கள் இருபத்தைந்து மாவட்டங்களிலிருந்தும் உள்வாங்கப்பட்டார்கள். (965 சிறுவர்கள், 946 பெண் சிறுமிகள்). இந்த ஆய்வானது மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் கொழும்பு பல்கலைக்கழக நெறிமுறை மீளாய்வுக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஆய்வாகும்.

இந்த ஆய்வின் அடிப்படையில்,

பத்து சிறுவர்களில் மூன்று பேர் நேரலை சம்பந்தப் பட்ட வன்முறை, துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல்களுக்கு உள்ளாகின்றனர். ஆண்பிள்ளைகளை விட பெண்பிள்ளைகளே அதிகமாக நேரலை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகின்றனர். அதனடிப்படையில் 22.90 சதவீதமானோர் சிறுவர்கள் அறிமுகமற்ற இணைப்புகள் மற்றும் புகைப்படங்களை அழுத்துவதன் மூலமும், 26.30 சதவீதமானோர் அறிமுகமற்ற வீடியோக்கள், புகைப்படங்கள், குறுஞ் செய்திகள், விளம்பரங்கள் போன்றவற்றை பெறுவதன் மூலமும் 24.30 சதவீதமானோர் சுய புகைப்படங்கள், வீடியோக்கள், தகவல்கள் போன்றவற்றைப் பகிர்வதன் மூலமும் இப்பிரச்சினைகளுக்கு உள்வாங்கப்படுகின்றனர்.

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 3,102 சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA) தெரிவித்துள்ளது.

தேசிய சிறுவர் அதிகாரசபையின் சட்ட அமுலாக்க பணிப்பாளர் சஞ்சீவனி அபயகோன் மாதத்துக்கு அறுநூறுக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவானதாக கூறுகிறார். அதிகப்படியான சம்பவங்கள் இந்த ஆண்டின் (2023) மார்ச் மாதத்தில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மார்ச் மாதம் மொத்த பதியப்பட்ட சம்பவங்கள் 1026 எனவும் குறிப்பிட்டார். இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் 779 சம்பவங்களும் பெப்ரவரி மாதத்தில் 709 சம்பவங்களும் பதியப்பட்டுள்ளன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA) குறிப்பிட்டுள்ளது.

**தெரிவுசெய்யப்படும் பத்து சிறுவர்களில் மூவர் ஒன்லைன் முறையினூடாக துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவதாக பல்கலை மீளாய்வுக்குழுவின் ஆய்வில் உறுதியாகியுள்ளது. மார்ச் மாதத்தில் மாத்திரம் இணையத்தினூடாக முன்னெடுக்கப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 1026 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன**

ஜூலை மாதம் கம்பஹாவில் ஒரு ஆண், பெண்பிள்ளையைபோல இணையத்தில் நடித்து 14 வயது சிறுவனை கம்பஹாவிற்கு அழைத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவம், முகநூல் ஆடை விற்பனை பக்கத்தினூடாக பெண்ணொருவரின் ஆபாச படங்களை சேகரித்த உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவன் கைதுசெய்யப்பட்டமை போன்ற சம்பவங்களும் பதிவாகியுள்ளன. ஆயினும் சிறுவர்களுக்கு எதிரான நிறைய இம்மாதிரியான சம்பவங்கள் மறைக்கப்பட்டும் முறைப்பாடு செய்யாமலும் இருக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

**இணையதள மோசடிகளில் ஈடுபடுவோரை எவ்வாறு இனங்காணலாம்?**

★ அவர்கள் நேருக்கு நேர் தொடர்பாடலை புறக்கணிப்பார்கள், அவர்களின் சுய முகத்தையோ தகவலையோ தருவதற்குத் தயங்குவார்கள்.

★ குரலொலி (Voice), காணொளி மூலமாக (Video) தன்னை வெளிப்படுத்தத் தயங்குவார்கள். அதற்கு பொய்யான காரணங்களை வெளிப்படுத்துவார்கள்.

★ அடிக்கடி நேரலையில் (online) இருக்கமாட் டார்கள். சிலசமயங்களில் போலியான படங்களைப் பதிவேற்றுவார்கள், மற்றவர்களால் சந்தேகப்பட முடியாதவாறு இணையத்தைப் பாவிப்பார்கள்.

★ சமூக ஊடகங்களில் அவர்களை தொடர்பவர் கள் குறைவாக இருப்பர். அவர்களுக்கு இணைய நண்பர்கள் குறைவாகவே இருப்பர்.

★ இணைய மோசடிக்காரர்களுக்கு எவ்வாறு நெருக்கமான தொடர்பை ஏற்படுத்த வேண்டுமென நன்கு தெரியும். அவர்கள் எதிர்பார்த்த தொடர்பை அடைந்ததும் நிர்வாணப் புகைப்படங்களை அனுப்புமாறு கேட்பார்கள். அவை எதிர்காலத்தில் மிரட்டுவதற்காக சேமிக்கப்படலாம்.

★ அவர்களைப் பற்றி நிறைய விடயங்களைக் கூறமாட்டார்கள். தனது கடந்த காலம் மற்றும் நிகழ்காலத்தை மட்டுமே கூறுவார்கள்.

**இணையதள மோசடிகளிலிருந்து சிறுவர்கள் பின்வருமாறு தம்மை பாதுகாத்துக்கொள்ளலாம்.**

★ நேரலையில் சமூக ஊடகங்களில் அறிமுகமற்ற நபர்களோடு தொடர்புகளை ஏற்படுத்துவதை நிறுத்துதல், அவசியமற்ற இணைப்புகள் வரும்போது அழுத்துவதை நிறுத்தல்.

★ சமூக ஊடகங்களில் சுய தகவல்களைப் பகிராமல் இருத்தல்.

★ பொருத்தமில்லாத புகைப்படங்களை பகிர்தல் மற்றும் பதிவேற்றுதலை நிறுத்தல்.

★ சமூக வலைத்தளங்களில் பாவனை இல்லாத கணக்குகளுக்கு குறுஞ்செய்தி மற்றும் தொடர்பாடல் ஏற்படுத்துவதை நிறுத்தல்.

★ தெரியாத நபர்களிடமிருந்து வரும் கோரிக்கைகள் (Requests) மற்றும் குறுஞ் செய்திகளுக்குப் பதிலளிப்பதை நிறுத்தல்.

★ நேரலை மற்றும் இணையதள பாவனை பாதுகாப்பு தொடர்பாக அறிந்துவைத்திருத்தல்.

**பெற்றோர்கள் இணையதள மோசடிகளிலிருந்து தம் பிள்ளைகளை பாதுகாக்க செய்யவேண்டியவை,**

★ நேரலையை அல்லது இணையதளத்தை பாவிக்கும் நேரத்தை மட்டுப்படுத்தல்.

★ தேடல் முடிவுகளிலுள்ள தளங்கள், படங்களை பரிசீலனை செய்தல். இதன்மூலம் ஆரம்பத்திலேயே இணையவழி மோசடிகளைத் தடுக்கலாம். எழுபத்து மூன்று சதவீதமான பெற்றோர்களுக்கு நேரலை மற்றும் இணையம் தொடர்பில் போதிய அறிவில்லை என ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.(SLCERT)

★ தொலைபேசி மற்றும் சமூக ஊடக கணக்குகளின் தனியுரிமை அமைப்புகளை (Privacy setting) காலத்துக்குக்காலம் புதுப்பித்தல். இது சில அச்சுறுத்தலுக்கு எதிராக பாதுகாப்பளிக்கும்.

★ நேரலையின் மூலம் ஏற்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்கள் தொடர்பாகவும் எவ்வாறு நேரலையில் பாதுகாப்பாக இருக்கலாம் என்பது பற்றியும் விளக்கமாகவும் விரிவாகவும் கலந்துரையாடல்.

★ பெற்றோர் கட்டுப்பாடு (Parental control) என்பது அதிகமாக டிஜிட்டல் கருவிகளில் உள்ளது. அதை பெற்றோர் சரியான முறையில் அறிந்து செயல்படச் செய்வதாலும் சிறுவர்களை நேரலை ஆபத்துகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம்.

மேலும் இவ்வாறான சிறுவர்களுக்கு எதிரான இணையவழி மோசடிகள் மற்றும் பாலியல் சுரண்டலுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் பல்வேறு சட்ட வரைபுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

அரச சார்பற்ற நிறுவனம் என்ற அடிப்படையில் 'எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும்' (PEaCE /ECPAT Sri Lanka) அமைப்பானது சிறுவர்களுக்கு எதிரான வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல், சுற்றுலாத் துறையில் சிறுவர்களுக்கெதிரான பாலியல் சுரண்டல், சிறுவர் கடத்தல், சிறுவர் தொழில், கட்டாய மற்றும் பலவந்த திருமணம், நேரலையில் சிறுவர்கள் பாலியல் ரீதியாக சுரண்டப்படுதல் போன்றவற்றுக்கு எதிரான பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக சிறுவர்கள், பெற்றோர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவனங்கள் போன்றோருக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளூடாக நாடு முழுவதும் அறிவூட்டி வருகிறது. மேலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சட்ட ரீதியான ஆலோசனைகள் மற்றும் சேவைகளையும் இலவசமாக வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இணையம் மற்றும் சமூக ஊடகங்களில் எமது சிறுவர்களுக்கு எதிராக செய்யப்படுகின்ற பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் தொடர்பாக சமூக அக்கறை உடையவர் என்ற வகையில் நாம் அனைவரும் அறிந்து வைத்திருப்பது மிக முக்கியமாகும். இதன் மூலமாகவே நாம் அவற்றை தடுக்க முடியும்.

சிறுவர்களுக்கெதிரான பாலியல் ரீதியான சுரண்டல் மற்றும் வன்முறைகளுக்கு எதிராக எங்களோடு இணைந்துகொள்ளுங்கள்.

கட்டுரை ஆசிரியர்: ஜோதிவேல் நவநீதன், திட்ட உத்தியோகத்தர். எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாப்பும் அமைப்பு

## Dialog Axiata தொடர்ந்து 5ஆவது வருடமாக இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க வர்த்தக நாமமாக Brand Finance இனால் தரநிலைப்படுத்தப்பட்டுள்ளது

உலகின் முன்னணி சுயாதீன வர்த்தக நாம மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனமான Brand Finance தமது 20ஆவது வருடாந்த ஆய்வில் 'இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க வர்த்தகநாமம்' எனும் மேன்மைமிகு பட்டத்தை நாட்டின் முன்னணி தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இற்கு ரூ. 52 பில்லியன் வர்த்தக நாம பெறுமதியுடன் தொடர்ந்து ஐந்தாவது முறையாகவும் வழங்கி கௌரவித்துள்ளது. அதற்கமைய இலங்கையின் பலம்பொருந்திய வர்த்தகநாமமாக வளர்ந்திருக்கும் டயலொக், AAA+ ஃபிட்ச் மதிப்பீட்டை பெற்றுள்ளது. அத்துடன் டயலொக் ஆனது தொடர்ந்து 16ஆவது முறையாக 'மிகவும் மதிப்புமிக்க தொலைத்தொடர்பு வர்த்தகநாமம்' எனும் பட்டத்தையும் சுவீகரித்துள்ளது.

இவை மட்டுமின்றி 17 மில்லியன் இலங்கையர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையை டயலொக் வென்றிருப்பதையும் இலங்கை மக்களின் வாழ்வு மற்றும் நிறுவனங்களை நிலைபேறான டிஜிட்டல் சூழல் அமைப்புகளின் ஊடாக வலுவூட்டி வளப்படுத்தும் நிறுவனத்தின் தீர்க்கமான அர்ப்பணிப்பையும் பறைசாற்றும் விதமாக 'மிகவும் விரும்பப்படும் தொலைத்தொடர்பு வர்த்தகநாமம்' எனும் பட்டத்தையும் தொடர்ந்து 7ஆவது ஆண்டாக சூடிக்கொண்டது.

'எதிர்காலம் இன்றே' எனும் தன் வர்த்தகநாம உறுதிமொழிக்கு உண்மையாக இருக்கும் வகையில் டயலாக் தொடர்ந்தும் அனைவரையும் உள்வாங்கும் வகையிலான, மலிவான, எல்லோரும் அணுகக்கூடிய அபரிமிதமான தொழில்நுட்பம் மற்றும் இணைப்பையும் தொடர்ந்து வழங்குவதோடு நாட்டை ஒரு டிஜிட்டல் தேசமாக மாற்றியமைப்பதற்கான தன் முயற்சியிலும் மும்முரம் காட்டி வருகின்றது.

'உளமார்ந்த சேவை' எனும் நிறுவனத்தின் கொள்கைக்கு தீர்க்கமான அர்ப்பணிப்பை வழங்கும் பொருட்டு நிறுவனமானது தன்னிகரற்ற வாடிக்கையாளர் அனுபவங்களை வழங்கிவருகிறது. எடுத்துக்காட்டாக, இதன் டிஜிட்டல் பராமரிப்பு சூழலமைப்பை குறிப்பிடலாம். இதில் 'DIA'எனும் மெய்நிகர் உதவியாளர் (Virtual Assistance) , MyDialog App மற்றும் Google Assistant உடன் குரல் கட்டளை வசதியை ஒருங்கிணைத்தல் ஆகியனவும் அடங்கும்.

நாடளாவிய ரீதியில் சமூகத்தில் நல்மாற்றத்தை விளைவிக்கும் பொருட்டு நிறுவனமானது தனது கூட்டாளர்களுடன் இணைந்து நாட்டில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வைக் காணும் வகையில் 'தேசிய எரிபொருள் அட்டை (Fuel Pass)'யை அறிமுகப்படுத்தியது. மேலும், தனது பங்காளர்களுடன் கைகோர்த்து நாட்டில் நிலவிய அசாதாரண



படத்தில் இடமிருந்து வலமாக: டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, Brand Finance தலைவர் ருச்சி குணவர்தன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி அமலி நாணயக்கார

சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட 1,20,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குமுகமாக 'மனிதநேய ஒன்றிணைவு' எனும் மனிதாபிமான கூட்டின் மூலம் அத்தியாவசிய நிவாரணப் பொருட்களை வழங்கியது. அத்துடன், 'Karuna.lk' எனும் இலங்கையின் முதல் crowdfunding தளத்தின் அறிமுகமானது தொழில்நுட்பம் மூலம் அர்த்தமுள்ள மாற்றத்தை நிகழ்த்த டயலொக் காட்டும் முனைப்பை எடுத்துக்காட்டுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கருத்து தெரிவித்த டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, "இந்த அங்கீகாரத்தை வெற்றிகொள்ள எமக்கு உதவிய 17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியோரின் அசைக்கமுடியாத நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் நாம் நன்றியுடையவர்களாகின்றோம். இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க மற்றும் பலம்பொருந்திய வர்த்தகநாமமாக நாம் தொடர்ந்தும் தொழில்நுட்பத்தின் மாறிவரும் சக்தியை கையாண்டு இலங்கையர்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் நிறுவனங்களை வளமூட்டி வலுவூட்டுவோம்" என்றார்.

இலங்கை Brand Financeஇன் தலைவர் ருச்சி குணவர்தன உரையாற்றுகையில், "எமது பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தை தக்கவைத்துக்கொண்ட டயலொக்கிற்கு எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இது ஏனைய வர்த்தகநாமங்களால் பின்தொடரப்பட வேண்டிய ஒரு முன்னுதாரணமாகும். தொலைத்தொடர்புத்துறையில் பல்வேறு குறிகாட்டிகளினூடாக நாம் மேற்கொண்ட மதிப்பீடுகள் அத்தனையூடாகவும் டயலொக் தனது வர்த்தகநாமத்தின் மதிப்பை அதிகரித்து வர்த்தகநாமத்தின் பலத்தைக் கட்டியெழுப்பியுள்ளமை புலப்பட்டுள்ளது" என்றார்.

Brand Finance உலகின் முன்னணி சுயாதீனமான வர்த்தகநாம மதிப்பிடல் ஆலோசனை நிறுவனமாகும். இது இலங்கை உட்பட 25 நாடுகளில் தன் அலுவலகங்களைக்கொண்டு இயங்கி வருகிறது. Brand Finance ஆனது வர்த்தகநாமங்களின் நிதி மதிப்பை அளவிடுதல் மூலம் சந்தைப்படுத்தல் மற்றும் நிதிக்கிடையிலான இடைவெளிக்கு ஒரு பாலமாய் அமைகிறது. Brand Finance ஆனது தனது லீக் அட்டவணையிலுள்ள வர்த்தகநாமங்களின் மதிப்புகளை Royalty Relief approach எனும் ISO 10668 சான்றுக்கு இணங்கிய ஒரு வர்த்தகநாம மதிப்பீட்டு முறை மூலம் கணக்கிடுகிறது. இது ஒரு வர்த்தகநாமம் அடையக்கூடிய எதிர்கால வருவாய்களை மதிப்பிடுதலை உள்ளடக்கும். இம்மதிப்பிடல் அதன் பாவனைக்காக அறவிடப்படும் ஒரு ராஜரீக அணுகுமுறை விகிதத்தின் மூலம் கணக்கிடப்படும். இதன்மூலமாகவே ஒரு வர்த்தகநாம மதிப்பை அடையமுடியும். வர்த்தகநாம மதிப்பென்பது திறந்த சந்தையில் வர்த்தகநாமத்தின் உரிமத்தை பெறுவதன் மூலம் அவ்வர்த்தகநாமத்தின் உரிமையாளர் பெறக்கூடிய நிகர பொருளாதார அனுகூலமாகும்.



தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, ஓகஸ்ட் 13, 2023

# காலநிலை அச்சுறுத்தலை எதிர்கொள்வதெப்படி?

காலநிலை மாற்றத்தால் தூண்டப்பட்ட ஆபத்துகள் அதிகரித்து வருகின்றன. புவி வெப்பமாதல் குறித்தும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் உள்ள பிரச்சினைகளைப் பற்றியும் ஊடகங்களில் அடிக்கடி பேசப்படுகிறது. புவிவெப்பம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பதால் பனிப்பாறைகள் உருகும்; கடல் மட்டம் உயரும்; நகரங்கள் மூழ்கும்; பேரிடர் பேரழிவு ஏற்படும் எனப் பூமிப் பந்துக்குப் பலதரப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன.

கரியமிலவாயு, மீத்தேன், நைட்ரஸ் ஒக்ஸைட், ஓசோன் போன்ற வாயுக்கள் வளிமண்டலத்தில் அளவுக்கு அதிகமாகச் சேரும்போது பூமி சூடாகிறது. இன்றைய மக்கள்தொகைப் பெருக்கம், நவீனத் தொழில்முறைகள், நிலக்கரி, பெற்றோல், டீசல் எரிசக்தி வாகனங்கள், காடுகள் அழிக்கப்படுவது, நவீன வாழ்க்கைமுறை எனப் பலவும் நச்சுவாயுக்களின் அளவற்ற வெளியீட்டுக்குக் காரணமாகின்றன.

இவற்றில் கரியமிலவாயுதான் வளிமண்டலத்தில் அதிக அளவில் நிறைந்திருக்கிறது. இப்படி நச்சுவாயுக்களின் அடர்த்தி அதிகரிக்க அதிகரிக்க பூமியின் வெப்பமும் அதிகரித்துக்கொண்டே போகிறது. அப்போது பூமியில் வாழும் உயிரினங்களின் மீது அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

வளிமண்டலத்தில் 2.5 மைக்ரொன் அளவுக்கும் குறைவாக உள்ள மிக நுண்துூசி (PM2.5) அதிகமானால், அது மனித ஆரோக்கியத்துக்கு ஆபத்து தரும் என்பது உறுதிப்படுத்தப்பட்ட உண்மை. உலக சுகாதார ஸ்தாபனத்தின் 2022ஆம் ஆண்டு அறிக்கையின்படி, பல நாடுகளில் குறிப்பாக, தெற்காசியாவில் இந்த மாதிரியான நுண்துூசி வரையறுக்கப்பட்ட அளவைவிட பல மடங்கு அதிகமாக இருப்பது தெரியவந்துள்ளது.

இதனால் ஆஸ்மா, சுவாசத்தடை உள்ளிட்ட பிரச்சினைகள் இரட்டிப்பாயிருக்கின்றன. இது ஒருபுறமிருக்க, இந்த நுண்துூசி இதயநோய், பக்கவாதம் உள்ளிட்ட இரத்தக்குழாய் நோய்களையும் அதிகப்படுத்தி இருக்கின்றது. கடந்த ஆண்டில் இந்த இரண்டு நோய்களால் இறந்தவர்களில் பெரும்பாலானோரின் உயிரிழப்புக்குக் காற்று மாசுதான் முக்கிய காரணமாக இருந்திருக்கிறது.

காலநிலை மாற்றத்தால் பெருவெள்ளமும் புயல் போன்ற பேரிடர்களும் ஏற்படும்போது தெருக்களில் தண்ணீர் தேங்கும். அதனால் கொசுக்களின் இனப்பெருக்கம் அதிகரித்து டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா போன்ற தொற்றுநோய்கள் இன்னும் பல மடங்கு அதிகமாகப் பரவும்.

மேலும், இந்தத் தொற்றுகள் கர்ப்பிணிகளைப் பாதிக்குமானால், அவர்களுக்கு இரத்தச்சோகை ஏற்படும்; குறைப்பிரசவத்தில் குழந்தை பிறக்கவும் எடை குறைவாகப் பிறக்கவும் வாய்ப்புண்டு. இன்னும் சொல்லப்போனால், பிறவிக்குறை நோய்களுடனும் குழந்தைகள் பிறக்கலாம். ஆகவே, காலநிலை மாற்றத்தால் சந்ததிகளின் ஆரோக்கியத்துக்கும் ஆபத்து காத்திருக்கிறது என எச்சரிக்கின்றனர் சூழலியலாளர்கள்.

வழக்கமாக, காலநிலை மாற்றம் நம் ஆரோக்கியத்தை இரண்டு வழிகளில் பாதிக்கிறது. முதலாவதாக, பேரிடரும் பேரழிவும் ஏற்படும்போது, அவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரே இடத்தில் நெருக்கமான சூழலில் வசிக்க வேண்டிவரும். அப்போது பொதுச் சுகாதாரம் அங்கு குறையும். சுத்தமான குடிநீருக்குத் தட்டுப்பாடு வரும். அவற்றின் விளைவால், எளிதில் நோய்க்கிருமிகளின் தாக்குதலுக்கு உள்ளாவார்கள்.

இரண்டாவதாக, ஊட்டச்சத்துள்ள உணவு அவர்களுக்குப் போதுமான அளவு கிடைப்பதிலும் சிரமம் ஏற்படும். அப்போது ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்படும். இதனால், நோய்க்கிருமிகளை எதிர்த்துப் போராடும் ஆற்றலை அவர்கள் இழந்துவிடுவார்கள். குறிப்பாக, குழந்தைகளுக்கு இது அதிக ஆபத்தை ஏற்படுத்தும். இந்த ஆபத்துகளை எல்லாம் எதிர்கொள்ள எவருமே ஏன் அரசாங்கம் கூட தயாராகியதாக தெரியவில்லை.

காலநிலை மாற்றம் சார்ந்து மக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதைத் தடுக்க, காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை அனைத்துத் தரப்பினரிடமும் ஏற்படுத்த வேண்டும். நாட்டில் மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்த வேண்டும், பொதுச் சுகாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும்.

காலநிலை மாற்றத்தின் தீவிரம் வெளிப்படத் தொடங்கியிருக்கும் இந்தச் சூழலில், பழைய திட்டங்களின் போதாமைகளை - குறைபாடுகளைக் கண்டறிந்து, புதிய திட்டங்களை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். உதாரணமாக, கரிம அமில உமிழ்வைச் சமாளிக்க மரங்கள் நடுவது முக்கியம்தான்.

ஆனால், காடழிப்பைத் தடுக்கவேண்டியது அதைவிட முக்கியம். அதுபோல், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் ஆரோக்கியப் பாதிப்புகளை எதிர்கொள்ளச் சிறந்த திட்டங்கள் அவசியம்தான். அதேவேளை, அந்தப் பாதிப்புகளை மட்டுப்படுத்தும் விதமான செயல்திறனுள்ள முன் தடுப்புத் திட்டங்கள் தீட்டப்பட வேண்டியது அதைவிட முக்கியம்.

அதற்கு நாட்டில் பேரிடர், பேரழிவு ஏற்படும் களங்கள் எவையெவை, அதிகம் பாதிக்கப்படுபவர்கள் யார், எந்த மாதிரியான ஆரோக்கியப் பாதிப்புகள் ஏற்படும், எத்தனை பேருக்கு ஏற்படும் என்பது போன்ற தரவுகளைச் சேகரிக்க வேண்டும்.

பிறகு, தேவையான மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் என்னென்ன, முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது சிகிச்சைக்கா, நோய்த் தடுப்புக்கா, நாட்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் எவையெவை என்பன போன்ற முக்கிய விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இது குறித்து அரசு, சூழலியலாளர்கள், சுகாதாரத் துறையினர், தொண்டு அமைப்பினர், ஆதரவளிப்போர் எனப் பலரும் கூடி விவாதிக்க வேண்டும்; காலநிலை மாற்றத்தின் தீவிர விளைவுகளைத் தடுக்க அனைத்துத் தரப்பினருக்கும் தெளிவான வழிகாட்டுதல்களைத் தர வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல்வாதிகளின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அடிப்படை பிரச்சினைக்குத் தீர்வைக் காணாமல் நிறைவேற்றப்படும் வெறும் சட்டதிட்டங்களால் நடக்கப் போவது ஒன்றுமில்லை.



# சிங்கள ஆளும் வர்க்கமும் பேரினவாதச் சக்திகளும்
# தமிழ் மக்களுக்கு மீண்டும் கூற வருகின்ற செய்தி என்ன?



வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

அயோக்கியனின் கடைசிப் புகலிடம் இனம் மற்றும் மதம் என்ற இரு ஆயுதங்களாகும். இலங்கையில் ஆளும் சிங்கள வர்க்கம் கடந்த 75 வருடங்களாக இந்த இரு ஆயுதங்களை மூலதனமாகக்கொண்டே தமது ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கின்றது.

இந்த ஆட்சிக்கு தென்னிலங்கை கொடுத்த பெரும் அடிதான் கடந்த வருடம் 2022 ஜூலை அரகலய எழுச்சி. ஆனால், சிங்கள ஆளும் வர்க்கம் சுதாகரித்துக்கொண்டு அரசியலில் முகவரியற்று இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின்கீழ் மீளெழுச்சி பெற தேவையான அனைத்து முயற்சிகளையும் மூர்க்கத்தனமாகவும் மிலேச்சத்தனமாகவும் பாராளுமன்ற பெரும்பான்மை இன ஜனநாயகத்தின் மூலம் நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றது.

தென்னிலங்கை மக்கள் தேர்தல்களில் தாம் வழங்கிய ஆணையைத் திரும்பப் பெற முடியாது ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் உள்ளனர்.

இந்த நிலையிலிருந்து விடுபட மாற்றத்துக்கான புள்ளடியை இட தென்னிலங்கை மக்கள் மாத்திரமன்றி, ஒட்டுமொத்த இலங்கை மக்களும் தயாராக இருந்தபோதும் ரணில் - ராஜபக்ஷக்களின் அரசியல் இருப்பு பறிபோய்விடும் என்பதால் தேர்தல் இப்போதைக்கு இல்லை என்றாகிவிட்டது. ஆனால், அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமென தற்போது கூறப்பட்டுள்ள நிலையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலைப்போன்று நாடு பெரும் எதிர்பார்ப்பில் வைக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலைப்போன்று ஜனாதிபதி தேர்தலுக்கும் நடைபெற்றுவிடுமோ என்ற அச்சமும் தென்னிலங்கை மக்களிடம் இல்லாமல் இல்லை. தேர்தல் என்பதே ரணில் - ராஜபக்ஷ அணியினருக்கு சிவப்பு விளக்காகவே உள்ளது. அந்த வகையில் ரணில் - ராஜபக்ஷ அணியினர் தேர்தலை நோக்கி நகர்வார்களா என்பது கேள்விக்குறியே. தற்போதைய நிலையில் இந்த இரு அணியினருக்கும் இடையில் முறுகல் நிலை தலைதூக்கியுள்ள போதும், இருபகுதியினருமே சமரசத்திற்குப் போய் பொருளாதார மீட்சியைக் காரணம் காட்டி, பாராளுமன்றத்துக்கூடாக தேர்தல் அற்ற சமரச முடிவை நோக்கி நகரக் கூடிய வாய்ப்புக்களே கூடுதலாகத் தெரிகின்றது.

தற்போது பாராளுமன்றமா? நீதித்துறையா? அதிகாரமிக்கது என்ற சர்ச்சையை ஆளும் தரப்பு ஆரம்பித்துள்ளது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு யோசனையை எந்தவொரு நீதிமன்றிலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது.

**இந்தியத் தேர்தல் சுலோகமாக இனப்படுகொலை விவகாரம்!**

உள்நாட்டு கடன்களை மறுசீரமைப்பதற்காக செயற்படுத்தப்படும் யோசனையை எந்தவொரு நீதிமன்றத்திலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்திற்கு (09) தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற நடைமுறையைப் பின்பற்றி நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு எதிராக எந்தவொரு வகையிலும் உத்தரவு அல்லது தீர்ப்பை வழங்குவதற்கு இலங்கை அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்டுள்ள எந்தவொரு நீதிமன்றத்திற்கும் அதிகாரம் இல்லை என சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறான எந்தவொரு உத்தரவு அல்லது நீதிமன்ற தீர்ப்பும் அரசியலமைப்பு மீறலாக அமையும். அரசியலமைப்பின் 148 ஆவது பிரிவிற்கு அமைய, அரச நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாடு பாராளுமன்றத்தின் வசம் காணப்படுவதாக சபாநாயகர் தெரிவித்தார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டமானது அமைச்சரவையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்ற அரச நிதி தொடர்பான செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், 2023 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி பாராளுமன்றத்தில் மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் நினைவுபடுத்தினார்.

அதற்கமைய குறித்த யோசனையானது உயர் நீதிமன்றத்தில் அல்லது 1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்ட வேறு எந்தவொரு நீதிமன்றத்திலும் விசாரணைக்குட்படுத்த மறுபரிசீலனை செய்ய அல்லது சவாலுக்கு உட்படுத்தப்பட முடியாது. பாராளுமன்ற செயற்பாடுகளை கேள்விக்குட்படுத்த அல்லது தலையீடு செய்ய நீதிமன்றத்திற்கு முடியாது என முன்னாள் சபாநாயகர் அனுர பண்டாரநாயக்க மிகத் தெளிவாக அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டார்.

இது பாராளுமன்றத்தில் ரணில் - ராஜபக்ஷ அணியினர் அரசியலமைப்பில், சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் எந்தத் திசை நோக்கியும் பயணிக்கலாம் என்பதை கோடிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது. அந்த வகையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தற்போதைக்கு இல்லை

என்பது போல மாகாண சபைகளுக்கான தேர்தலும் எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு இல்லை என்பதையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரவாரம் காட்டும் 2024 இல் ஜனாதிபதித் தேர்தல் என்ற சுலோகமும் பிசுபிசுத்துப் போகலாம் என்ற ஆரூடங்களும் எழ இடமுண்டெனலாம்.

இந்த ஒரு பின்னணியில் ரணில் - ராஜக்ஷ அணியினர் வெளித் தோற்றத்தில் முரண்பட்டுக் கொண்டபோதும் ஒரு புள்ளியில் தமது இருப்புக்காக சமரசம் காணும் நிலையே கூடுதலாக இருக்கின்றது.

**மாற்றத்துக்கான புள்ளடியை இட ஒட்டு மொத்த இலங்கை மக்களும் தயார்!**

இந்த முரண்பாடுகளுடனான உறவில்கூட இரு பகுதியினரும் தமக்கான அரசியல் பாதையைச் செப்பனிடுவதிலும் குறியாக இருக்கின்றனர் என்பதும் வெளிப்படை.

இதற்கென இரு பகுதியினருமே கைகளில் எடுத்துள்ளது அயோக்கியனின் கடைசிப் புகலிடம் இனம் மற்றும் மதம் என்ற இரு ஆயுதங்களாகும். அந்த ஆயுதத்தையே ரணில் - ராஜபக்ஷ அணியினர் தற்போதும் கைகளில் எடுத்துள்ளனர் என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அரசாங்கம் மீண்டும் மீண்டும் சில இனவாத அல்லது மதவாத சம்பவங்களை தூண்டி மீண்டும் ஒரு கறுப்பு ஜூலையை உருவாக்க முயற்சிக்கிறது என Fr J.C. Pieris தனது கருத்தை ஆங்கில நாளிதழில் பதிவு செய்துள்ளார்.

ஆனால், அவை ஒவ்வொரு முறையும் தோல்வியடைகின்றன என்றும் அவர் சுட்டிக் காட்டுகின்றார். இலங்கை முற்றிலும் வேறுபட்டது மற்றும் வேறு எந்த தலைமுறையும் இல்லாத ஒரு தலைமுறை என்பதை அரகலய நிரூபித்தது என்றும் Fr J.C. Pieris குறிப்பிடுகின்றார்.

தமிழ் மக்களுக்கெதிராக தற்போது நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறும் சம்பவங்கள் ரணில் - ராஜபக்ஷ அணியினர் இதுகுறித்து கண்டும்காணாதது போல் நடந்து கொள்வதும் இன்னொரு கறுப்பு ஜூலைக்கான அபாயத்தை உணர்த்துவதாக உள்ளது.

### அரகலயா சக்தி படைத்ததா?

ஆனால், அரகலயாக்கள் குறித்த கணிப்பு சிஸ்டம் சேன்ஜ் விடயத்தில் தென்னிலங்கையை சிங்கள ஆளும் வர்க்கத்திற்கெதிராக திசை திருப்புவதில் வெற்றி கண்டது போன்று கொதி நிலை நோக்கி நகர்த்தப்படும் இன்னொரு கறுப்பு ஜூலையை தடுத்துவிடும் சக்தி படைத்ததா என்பது கேள்விக் குறியே.

### கடலில் மிதக்கும் பனிப்பாறை

காலிமுகத் திடலில் மே 18 நினைவேந்தலின் போதும் கறுப்பு ஜூலை பொரளை அனுஷ்டிப்பின் போதும் அந்த நிகழ்வுகளைக் குழப்ப வந்தவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் என்பது உண்மையே. ஆனால், அந்த விரல்விட்டு எண்ணிக்கையானவர்களின் பின்புலத்தை குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. கடலில் மிதக்கும் பனிப் பாறை போன்று பலமான கொடூரமான மறைந்த கரங்களின் நிகழ்ச்சி நிரல்களும் உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

இந்நிலையில், சிஸ்டம் சேன்ஜ் அரகலயாக்களால் இன்னொரு கறுப்பு ஜூலை போன்ற நாசகார அரசியல் நகர்வுகளை தடுத்து நிறுத்தும் சக்தி படைத்தவர்களாக இருப்பர் என எதிர்பார்க்க முடியாது.

### சிஸ்டம் சேன்ஜ் இன்னும் நடக்கவில்லை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜக்ஷவும் தற்போது பதவியில் இருந்து விலகி வரி செலுத்துவோரின் ஆதரவுடன் ஆடம்பரமாக வாழ்கின்ற போதிலும் அரகலய அமைப்பு கோரிய முறைமை மாற்றம் அதாவது சிஸ்டம் சேன்ஜ் இன்னும் நடக்கவில்லை. இதற்கெதிராக தென்னிலங்கை மக்களை மீண்டும் அணிதிரட்ட சக்தியற்றவர்களாகவே அரகலயாக்கள் உள்ளனர்.

### மாயைக்குள் அவசரப்பட்டு வீழ்வதற்கு தமிழ் மக்கள் தயாராக இல்லை

இந்நிலையில், அரகலயாக்களின் வரவுடன் தென்னிலங்கை மக்களின் மனங்களில் அனைத்து மக்களையும் அரவணைத்து செல்லும் மனமாற்றம் ஏற்பட்டுவிட்டதான மாயைக்குள் அவசரப்பட்டு வீழ்வதற்கு தமிழ் மக்கள் தயாராக இல்லை. தென்னிலங்கை இடதுசாரிகளின் வர்க்க சிந்தனைகளுடன் இழுபட்டு மலையக மக்கள் தமது பிரஜா உரிமையை இழந்தனர். இறுதியில் தென்னிலங்கை இடதுசாரிகள் சிங்கள ஆளும் வர்க்கத்துடன் சமரசமாகி கரைந்து போனமை வரலாறு.

### அரகலயாக்களின் கருத்தியலுக்குக் கிடைத்த வெற்றி

எந்தவொரு தலைமைத்துவத்தின் உதவியுமின்றி எந்தவொரு அமைப்பும் இல்லாமல், எந்தவொரு சக்திவாய்ந்த மத அல்லது அரசியல் ஆதரவின்றி அந்த நிலையை அடைவது அரகலயாவின் உச்சக்கட்டமாகும்.

மேலும் ‘இளம் இலங்கை’ முற்றிலும் வேறுபட்டது மற்றும் வேறு எந்த தலைமுறையும் இல்லாத ஒரு தலைமுறை என்பதை நிரூபித்தது.

இது அரகலயாக்களின் கருத்தியலுக்குக் கிடைத்த வெற்றியாகும். இந்த வெற்றி போல் அனைத்து விடயங்களிலும் அரகலயாக்கள் வென்றிடுவர் என்று எதிர்பார்க்க முடியாததாகும். ஏனெனில், நாட்டின் சூழல் மாறிவிட்டது. நிச்சயமற்ற தன்மைக்குள் நாடு உள்வாங்கப்பட்டுவிட்டது.

எனவே, அரகலயாக்கள் குறித்து தமிழ் மக்கள் அதீத நம்பிக்கை வைத்து நடப்பதற்கான காலம் இன்னும் கனிந்துவிட்டதாகக் கொள்வதற்கில்லை. ஏனெனில் அரகலயாக்களின் நிகழ்ச்சி நிரல் சிஸ்டம் சேன்ஜ் என்ற கருத்தியலுடன் மட்டுப்படுத்தப்பட்டது. அந்தக் கருத்தியல் தென்னிலங்கையை குறுகிய காலத்திற்குள் அணி திரட்டுவதில் வெற்றியீட்டியது. ஆனால், அந்த வெற்றி தக்க வைத்துக் கொள்ளப்படவில்லை. அரகலயாக்கள் எதிர்பார்த்த மாற்றத்துக்கும் வழி சமைக்கவில்லை. எனினும், அரகலயாக்களும் அவர்களின் கருத்தியலும் தென்னிலங்கை மக்களின் மனங்களில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டது என்பது மட்டும் உண்மையாகும்.

அந்தவகையில், அரகலயாக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து புரட்சி செய்துவிடுவர் என்றோ அல்லது அரகலயாக்களை வைத்து தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை வென்றெடுத்துவிடுவர் என்றோ ரணில் - ராஜபக்ஷ அணியினருக்கோ அல்லது சிங்கள ஆளும் வர்க்கத்தினருக்கோ அச்சமூட்டும் நிகழ்வுகள் ஏதும் நடந்துவிடப் போவதில்லை.

சிலவேளைகளில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களுடன் அரகலயாக்கள் பொது உடன்பாட்டுக்கு வரும் சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

மொத்தத்தில் தமிழ் மக்கள் 2009க்குப் பின் எவ்விதமான தீர்க்கமான அரசியல் நகர்வுகளும் இன்றி பூஜ்ஜியத்திற்குள் தள்ளப்பட்டுவிட்டனர். தனி நாடு கோரி மக்கள் ஆணை வழங்கிய தமிழ் மக்கள் சமஷ்டி தீர்வுக்குக் கீழ் இறங்கி இன்று வெறும் கையுடன் 13 உடன் சமரசமாகி உள்ளனர்.

2009 மே 18க்குப் பிறகு தமிழ்த் தலைமைகளின் வீரவசனம் அவர்கள் கூறித் திரிந்த இராஜதந்திரம் அனைத்துமே செல்லாக்காசாக போய்விட்ட நிலையில், தமிழ்த் தலைமைகள் தமது அரசியல் சுய நலத்துக்காக தமிழ் மக்களை அதல பாதாளத்தில் தள்ளியுள்ளனர்.

உண்மையில் அனைத்து தமிழ்த் தலைமைகளுமே கையாலாகாத நிலையில் தத்தமது இருப்புக்காக ஏதோ ஒருவகையில் இந்தியாவிடம் சரணாகதி அடைந்துள்ளனர்.13 ஆம் முழுமையாக நடைமுறைக்கு வருமா என்பதை தீர்மானிக்கும் சக்தி இந்தியாவின் கைகளில் உள்ளது.

அதேவேளையில், நடைபெற உள்ள இந்தியத் தேர்தலின் பரப்புரையினை இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே என தமிழக மண்ணில் இருந்து ஆரம்பித்துள்ளார்.

மொத்தத்தில் இந்தியத் தேர்தல் வியூகத்திற்குள் தமிழ் மக்களின் அரசியல் தலைவிதி பகடைக் காயாக மாற்றப்பட்டுவிட்டது.

மொத்தத்தில் ஆளும் தரப்பின் அரசியல் நகர்வுகளினால் தேர்தல்கள் இன்றி நாட்டு மக்கள் புள்ளடி ஜனநாயகத்தை இழந்து நிற்கின்றனர்.

மறுபுறம், தமிழ் மக்களுக்கு 13 ஐ காட்டிய ஜனாதிபதி அரசியல் விமர்சகர்கள் கூறுவது போன்று தேரினை இழுத்து தெருவில்விட்டு வேடிக்கை காட்டிக் கொண்டிருக்கின்றார். அரசியல் அமைப்பில் இருக்கின்ற சட்ட ஏற்பாடுகளுக்கு கங்காரு நீதிமன்றில் நீதி கோருவது போன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரகலயாக்களின் மக்கள் எழுச்சியினால் தூக்கி வீசப்பட்ட ஆட்சியை வைத்துக் கொண்டு மீண்டும் ஒரு ஆணையைக் கோரி அரசியலில் புதிய மரபினை எழுத முயற்சிக்கின்றார்.

உண்மையில் சிங்கள ஆளும் வர்க்கமும் பேரினவாதச் சக்திகளும் தமிழ் மக்களுக்கு மீண்டும் கூற வருகின்ற செய்தி என்ன?

Email: vathevaraj@gmail.com

# ★ பெசிலுக்கு டோஸ் விட்ட அனுர பிரியதர்ஷன யாப்பா

# ★ திருமண வீட்டில் ரணில் - மஹிந்த அரசியல் பேச்சு

# ★ தொல்பொருள் வர்த்தமானியை மீளப்பெற உத்தரவிட்ட ரணில்

# ★ ரணிலின் புதிய அரசியல் கூட்டணி, ராஜபக்சக்களின் கோட்டையிலிருந்து பிரசாரத்தை ஆரம்பிக்க ஆலோசனை

# சண்டே சாம்பார்



ஆர்.சிவராஜா
mesivaraj@yahoo.com

### ரணில் அரசியல் கூட்டணியின் வேலைகள் தீவிரம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஆரம்பமாகவுள்ள புதிய அரசியல் கூட்டணியின் வேலைகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

ராஜகிரியவில் உள்ள அதன் அலுவலகத்தில் கலைஞர்கள் , தொழிற்சங்க பிரதிநிதிகள், புத்திஜீவிகள் என பலதரப்பு பிரதிநிதிகள் கடந்தவாரம் ஒன்றுகூடி பேச்சு நடத்தினர். அதேபோல் தமிழ் , முஸ்லிம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பலரும் கடந்த வாரம் அங்கு இடம்பெற்ற பேச்சுக்களில் கலந்து கொண்டிருந்தனர். புதிய அரசியல் கூட்டணியின் பிரசார வேலைகளை ராஜபக்சக்களின் கோட்டையான அம்பாந்தோட்டையில் இருந்து ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.இதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ,மாகாண சபைகளில் இருந்த முக்கியஸ்தர்கள் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த புதிய அரசியல் கூட்டணியின் ஏற்பாட்டாளரான நிமல் லான்சாவை சில தினங்களுக்கு முன்னர் சந்தித்த ஜனாதிபதி ரணில் ,புதிய கூட்டணியில் இணையவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை சந்திக்க வேண்டுமெனவும் அதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும் கூறியுள்ளார். இந்த கூட்டணி குறித்து

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் பேசவேண்டுமெனவும் ரணில் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் ரணிலின் புதிய அரசியல் கூட்டணியை குழப்ப பொதுஜன பெரமுன முயல்வதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.புதிய கூட்டணியின் பிரமுகர்களான அமைச்சர் நளின் பெர்னாண்டோ , நிமல் லான்சா எம்.பி , பிரியங்கர ஜயரத்ன எம்.பி , பெசிலுடன் நெருக்கமாக செயற்பட்டு வெளியேறிய அமரசிங்க , கோட்டாவின் முன்னாள் செயலாளர் சுகீஸ்வர பண்டார ஆகியோர் அண்மையில் கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டலொன்றில் சந்தித்தனர்.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இப்போது நன்றாக அச்சமடைந்துள்ளனர். அவர்கள் இப்போது இங்கிருந்து எம்.பிக்களை பெரமுனவுக்குள் ஈர்க்க முயல்கின்றனர். ராஜபக்சவின் உறவினர் ஒருவர் இதனால் தான் ஊடகங்களிடம் வந்து புலம்புகிறார் . என்று கோட்டாவின் முன்னாள் செயலாளர் சுகீஸ்வர இங்கு குறிப்பிட்டுள்ளார். ரஷ்யாவின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க அண்மையில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதைப்பற்றி கவலைப்படாதீர்கள். இப்படியான பைத்தியக்காரர்களால் தான் ராஜபக்சக்களின் அரசியல் அழிந்துபோனது.இப்படியானவர்கள் தூதுவர் பதவிகளை வகித்து , மிக் விமான கொடுக்கல் வாங்கலை செய்து , பிரமிட் வியாபாரம் செய்த காரணத்தினால் தான் ராஜபக்சக்களுக்கு அந்த நிலைமை ஏற்பட்டது.இதனை மக்களே கணக்கில் எடுக்கமாட்டார்கள் என்று அப்போது கூறினார் நிமல் லான்சா .

ஆம் அவற்றுக்கெல்லாம் பதிலளித்து நேரத்தை செலவிட்டுக்கொண்டிருக்கக் கூடாது.நாட்டுக்காக 5 சதத்திற்கும் வேலை செய்யாதவர்கள் இவர்கள் என்று இதன்போது குறிப்பிட்டுள்ளார் அமைச்சர் நளின் பெர்னாண்டோ.

2015 ,2020 ஆம் ஆண்டுகளில் தேர்தல்களில் தோல்வியடைந்த பலரையும் இந்த அரசியல் கூட்டணியில் இணைத்துக்கொள்ளவேண்டும் என்று பியங்கர ஜயரத்ன விடுத்த வேண்டுகோளை ஏனையோர் ஆதரித்தனர்.

### பெசிலுக்கு டோஸ் விட்ட அனுர பிரியதர்ஷன யாப்பா

சிரேஷ்ட அரசியல்வாதி அனுர பிரியதர்ஷன யாப்பா எம்.பி கடந்தவாரம் பாராளுமன்றத்தின் அருகிலுள்ள உடற்பயிற்சி பாதையூடாக நடந்து சென்று கொண்டிருந்தபோது ,பெசிலுக்கு மிக நெருக்கமானவராக கருதப்படும் ரஞ்சித் பண்டாரவை எதிர்கொண்டார்.

சேர்.பெசில் உங்களைப்பற்றி அண்மையில் பேசிக்கொண்டிருந்தார் .. என்று ரஞ்சித் பண்டார கூற அப்படி என்ன பேசினார் ? அப்படி என்ன என் நினைவு வர காரணம் ? எண்டு அவரிடம் வினவினார் அனுர பிரியதர்ஷன யாப்பா .

மாவட்டத் தலைவர் பதவியை கொடுக்கும்போது கட்சிக்காக நீண்டகாலம் பணியாற்றியவர்களுக்கு வழங்கினால் நல்லது என்று பெசில் சொன்னார் என்று அதற்கு பதிலளித்தார் ரஞ்சித் பண்டார எம்.பி

இதைக்கேட்ட அனுர பிரியதர்ன யாப்பா எம்.பிக்கு கோபம் வந்தது. எங்கோ செல்லும் ஆட்களுக்கெல்லாம் மாவட்டத் தலைவர் பதவிகளை வழங்கி கட்சியை வீணாக்கினார் பெசில் .இப்போ எல்லாம் ரூ லேட். அவரிடம் போய்ச் சொல்லுங்கள் என்று அதற்கு பதிலளித்தாராம் அனுர பிரியதர்ஷன யாப்பா .

### சர்ச்சைக்குரிய வர்த்தமானி

சுழிபுரம் பறாளை முருகன் ஆலயப் பகுதியில் உள்ள அரச (போதி) மரம், கீரிமலையின் இரு தீர்த்தக் கேணிகள் உட்பட யாழ்ப்பாணத்தில் - வடக்கின் உச்சியில் - பழம்பெரும் இடங்களான நான்கை புராதன மையங்களாக அடையாளப்படுத்தி, அவற்றைத் தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரத்துக்கு உரியனவாகக் குறிப்பிட்டு, வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டமை தமிழ் அரசியல் வட்டாரங்களில்



தெஹிவளை - கல்கிசை முன்னாள் மேயர் தனசிறி அமரதுங்கவின் புதல்வி ஆஷியின் திருமணத்தின்போது...

பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

ஆட்சியாளர்களின் இந்நடவடிக்கை தமிழ் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கில் உள்ள பல இடங்களில் பௌத்த அடையாளங்கள் உள்ளன என அடையாளப்படுத்தி, அவை தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு உரியன எனத் தெரிவிக்கும் வர்த்தமானி அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டு வந்திருந்தன.

இதன் தொடர்ச்சியாகவே தற்போது யாழிலும் நான்கு இடங்கள் அவ்வாறு தொல்லியல் திணைக்களத்திற்கு சொந்தமானவை என அடையாளப்படுத்தப்பட்டு வர்த்தமானி அறிவித்தலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் பறாளை முருகன் ஆலயப் பகுதியில் அமைந்துள்ள சங்கமித்தை அரசமரம் எனக் கூறப்படும் போதி மரம், பருத்தித்துறை கடற்கரைப் பகுதியிலுள்ள சுங்கக் கட்டடம், கீரிமலைக் கேணிகள், தெல்லிப்பளை, இளவாலை பத்தாவத்தை பிலிப் நேரியார் தேவாலயம் ஆகிய நான்கு இடங்கள் தற்போது வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த நான்கு இடங்களும் அடையாளப்படுத்தப்பட்டு, அவை தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு உரியன எனத் தெரிவித்து கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளில் இவ்வாறு சில இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு வர்த்தமனியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அதற்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு சூழலில்தான் இப்போது புதிதாக யாழ்ப்பாணத்திலும் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது. ஆட்சியாளர்களினால் மிகவும் இரகசியமாக முன்னெடுக்கப்படும் இத்தகைய செயற்பாடுகளுக்கு மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பறாளை முருகன் ஆலயத்தை ஒட்டிய அரச மரத்தை சங்கமித்தையின் இலங்கை வருகையுடன் தொடர்புபடுத்தி தொல்லியல் திணைக்களத்தினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

### ரணில் - தமிழ் எம்.பிக்கள் சந்திப்பு

பறாளை முருகன் கோயிலின் தல விருட்சமான அரச மரத்தின் ஆயுட்காலத்தை தீர்மானிக்க விஞ்ஞானரீதியில் ஆராய்ச்சி செய்து, முறையற்ற விதமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற நடவடிக்கையெடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வாக்குறுதியளித்துள்ளார்.

அத்துடன், விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளாமல் எப்படி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது என தொல்லியல் திணைக்களத்தினரிடம் விசாரணை நடத்தவும் உத்தரவிட்டார்.

கடந்த புதன்கிழமை (9) பாராளுமன்ற வளாகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து, பறாளை முருகன் கோயில் விடயமாக பேச்சு நடத்தினார்கள்.

இந்த விவகாரம் பற்றி இருவரும் தனது கவனத்திற்கு கொண்டு வருவதற்கு முன்னர், இப்படியொரு பிரச்சினை நீடிப்பது தனது கவனத்துக்கு யாராலும் கொண்டு வரப்படவில்லையென ரணில் தெரிவித்தார்.

பறாளை முருகன் கோயிலின் வரலாறு சுமார் 300 ஆண்டுகளிற்கு உட்பட்டது என குறிப்பிட்டு, சம்பவத்தின் பின்னணியையும், வரலாற்று சுருக்கத்தையும் சித்தார்த்தன் எம்.பி விளக்கமளித்தார்.

இந்த விவகாரத்தில் 2 உண்மைகளில் ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குறிப்பிட்டனர்.

இந்த மரம் 300 வருடங்கள் பழைமையானது என்பதால், சங்கமித்தை இலங்கைக்கு 300 வருடங்களின் முன்னரே வந்தார், பௌத்தம் 300 வருடங்கள் மாத்திரமே பழமையானது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அல்லது, இந்த மரம் சங்கமித்தை நாட்டிய மரமல்ல என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென குறிப்பிட்டனர். பறாளை முருகன் கோயிலின் தல விருட்சமான அரச மரம், சங்கமித்தை நாட்டிய மரமாக இருக்காது என்பதே தனது அபிப்பிராயம் என குறிப்பிட்ட ஜனாதிபதி, போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்டபோது நாட்டிலிருந்த அரசமரங்களையெல்லாம் தறித்து விட்டதாக தெரிவித்தார்.

அப்படியானால் வர்த்தமானியை மீளப்பெறுமாறு கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

மரத்தின் ஆயுட்காலத்தை அளவிடும் பரிசோதனை மேற்கொள்ள உத்தரவிடுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னரா அது வர்த்தமானியிடப்பட்டது என கூட்டமைப்பினர் கேள்வியெழுப்பினர். அப்படியான பரிசோதனையெதுவும் மேற்கொள்ளாமல், இது சங்கமித்தை நாட்டிய மரம் என்ற முடிவிற்கு எப்படி தொல்லியல் திணைக்களம் வந்தது என கூட்டமைப்பினர் கேள்வியெழுப்பினர்.

இதன்மூலம், அந்த வர்த்தமானி இனவாத நோக்கமுடைய, சட்டபூர்வமற்ற வர்த்தமானியென்பது புலப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினர்.

இதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, தொல்லியல் திணைக்களம் முறையற்ற விதமாக செயற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொண்டதுடன், அவர்கள் எந்த விஞ்ஞானபூர்வ நடைமுறைகளையும் கடைப்பிடிக்காமல் எப்படி வர்த்தமானியிட்டார்கள் என்பது தொடர்பில் உடனடி விசாரணை நடத்தி அறிக்கையிட, தனது செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை பணித்தார்.

உடனடியாக வர்த்தமானியை மீளப்பெறுவது, தென்னிலங்கை தரப்பில் எதிர்ப்பை ஏற்படுத்தி, தனக்கு சிக்கலை ஏற்படுத்தும் என்பதால், உடனடியாக மரத்தின் ஆயுட்காலத்தை கண்டறியும் சோதனை நடத்தி, வர்த்தமானியை மீளப்பெற நடவடிக்கையெடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

இராணுவத்தினரின் தகவலுக்கமையவே தொல்லியல் திணைக்களத்தினர் இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்கள் என்ற தகவலையும் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

### அமைச்சரவையில் பிரஸ்தாபித்த டக்ளஸ்

தொல்லியல் திணைக்களத்தின் ஆய்வுகளும் அடையாளப்படுதல்களும் இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களினதும் கலாசார தொன்மைகளையும் வரலாறுகளையும் பேணிப் பாதுகாப்பதாக அமைய வேண்டுமே தவிர, எரியிற நெருப்பிற்கு எண்ணை ஊற்றுவதாக அமையக் கூடாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் (07.08.2023) இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்திலேயே கடற்றொழில் அமைச்சர், தன்னுடைய கருத்துக்களை பதிவு செய்துள்ளார்.

சுழிபுரம் பறாளை முருகன் ஆலயம் உட்பட யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் 3 தொல்லியல் திணைக்களத்திற்கு உரிய பகுதியாக அண்மையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த பகுதிகளை தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தும் செயற்பாடானது உரிய வழிமுறைகளை பின்பற்றப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருப்பதை தன்னால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில், அனைத்து மக்களும் கௌரமான உரிமைகளை பெற்று வாழும் சூழலை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற சூழலில், குறுகிய நலன்களுக்காக சிலரினால் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வாறான விடயங்கள் வேதனைக்குரியவை எனவும் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட இணக்க அரசியல் என்பது, இருப்பவற்றை பாதுகாத்து முன்னோக்கி நகர்வதாகவும் பிரச்சினைகளை இலகுவாக தீர்ப்பதற்கான பொறிமுறையாகவும் இருக்க முடியுமே தவிர, தவறான நடவடிக்கைகளை கண்டுகொள்ளாமல் கடந்து செல்வதாக இருக்க முடியாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை அமைச்சரவை ஏற்றுக்கொண்ட நிலையில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, குறித்த விடயம் தொடர்பாக தொடர்ந்தும் அமைச்சரவைகளில் கலந்துரையாடி சரியான தீர்மானங்களை மேற்கொள்வதன் ஊடாக தவறுகள் இடம்பெற்று இருப்பின் திருத்திக் கொள்ள முடியும் என்று அமைச்சரவையில் தெரிவித்துள்ளார்.

### தினேஷ் சீனாவுக்கு

பிரதமர் தினேஷ் குணவர்தன 14 ஆம் திகதி திங்கட்கிழமை சீனாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். பீஜிங்கில் அவர் முக்கிய சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார்.ஜனாதிபதி ரணில் சீனா செல்வதே முதல் திட்டமாக இருந்தது . ரணில் அண்மையில் இந்தியா சென்று திரும்பியுள்ளதால் முதலில் பிரதமர் தினேஷை அழைத்து பின்னர் ஜனாதிபதி ரணிலை அழைக்க திட்டமிட்டது சீனா.

### ரணில் - மஹிந்த நீண்ட பேச்சு

தெஹிவளை - கல்கிசை முன்னாள் மேயர் தனசிறி அமரதுங்கவின் புதல்வி ஆஷியின் திருமணம் கடந்த வாரம் கொழும்பு ஷங்கிரி லா ஹோட்டலில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் , முன்னாள் பிரதமர் மஹிந்த, சாகல ரத்நாயக்க , காஞ்சன விஜேசேகர , ரவி கருணாநாயக்க ,வஜிர அபேவர்தன உட்பட்ட பலர் ஒரே மேசையில் அமர்ந்திருந்தனர். விவசாயிகள் நீரின்றி தவிப்பதால் அந்த பிரச்சினை குறித்து கவனம் செலுத்துமாறு ரணிலிடம் இங்கு கேட்டார் மஹிந்த. அமைச்சரவையில் இதுபற்றி பேசி தீர்மானிப்பதாக குறிப்பிட்டார் ரணில்.

ரணிலின் அரசியல் செயற்பாடுகளை மிகவும் வரவேற்றிப் பேசி மஹிந்த, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை ரணில் கவனித்து மேலும் பல நிவாரணங்களை வழங்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

## தமிழீழ அணிக்கெதிரான இலங்கை அரசின் வியூகம்!



**இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிவடைந்த பின்னர் வெளிநாடுகளில் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளை அவதானித்துக்கொண்டிருக்கும் இலங்கை அரசாங்கம் இப்போது தமிழீழம் என்ற பெயரில் போர்த்துக்கல்லில் விளையாடிக் கொண்டிருக்கும் உதைப்பந்தாட்ட அணி தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன.**

**அடுத்த வருடம் குர்திஸ்தானில் நடைபெற இருக்கின்ற கொனிபா உலகக்கிண்ண உதைப்பந்தாட்ட போட்டிக்கான தகுதிகாண் போட்டியாக ஆசிய கிண்ண போட்டி இடம்பெற்று வருகின்றது. இதற்காக பிரான்ஸ், கனடா, சுவிஸ், நெதர்லாந்து, பெல்ஜியம், ஜேர்மனி, பிரித்தானியா ஆகிய நாடுகளின் தமிழீழ அணிக்கான வீரர்கள் போர்த்துக்கல்லில் அணிதிரண்டுள்ளனர்.**

**போர்த்துக்கல்லில் இடம்பெற்று வருகின்ற ஆசிய கிண்ணத்திற்கான உதைப்பந்தாட்ட போட்டியில் மூன்றிற்கு பூச்சியம் என்ற கோல் கணக்கில் தமிழீழ அணி வெற்றிப் பெற்றுள்ளது. தென்சீனாவின் எச்மொங் அணியுடன் இடம்பெற்ற இச்சுற்றில் நிரஞ்சன் தலா இரண்டு கோல்களையும், அச்சுதன் ஒரு கோலையும் அடித்த நிலையில் தமிழீழ அணி வெற்றியை தமதாக்கிக் கொண்டுள்ளது.**

**அடுத்த ஆண்டு குர்திஸ்தானில் நடைபெற இருக்கின்ற கொனிபா உலகிக் கிண்ண உதைப்பந்தாட்ட போட்டியில் உலகின் பல பாகங்களில் இருந்து 16இற்கும் மேற்பட்ட அணிகள் பங்கெடுக்க இருக்கின்ற நிலையில் தமிழீழ அணி தன்னை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்தி வருகிறது.**

**இந்த விடயம் தொடர்பில் அறிந்த இலங்கை அணி இராஜதந்திர வட்டாரங்கள் ஊடாக நடவடிக்கைகளை முன்னெடுத்து தமிழீழ அணிக்கு அங்கீகாரம் வழங்க வேண்டாமென கோரவுள்ளதாக அறியமுடிந்தது.**




# ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் காணி சர்ச்சை

**அப்ரா அன்சார்**

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை வளாகத்துக்குச் சொந்தமான காணியின் அளவை திட்டவட்டமாக கண்டறியாமை தொடர்பில் கடந்த டிசம்பர் மாதம் 6ஆம் திகதி அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) அதன் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தலைமையில் கூடியபோது இந்தப் பிரச்சினை அடையாளம் காணப்பட்டது.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தால் 5 வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்த கணக்காய்வு அறிக்கைகள் இந்த காணிப் பிரச்சினையை உறுதிப்படுத்தியுள்ளன. நீண்ட கால மற்றும் குறுகிய காலத் திட்டம் சரியான முறையில் இன்மையால் திட்டமிடுதலில் கடுமையான பலவீனம் உள்ளது என்பதும் இங்கு புலப்பட்டது.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை மொத்தமாக 24 ஏக்கர் 9.4 பேர்ச்சஸ் பரப்பைக் கொண்டது. இதில் சட்டவிரோதமாக கையாளப்பட்டது 56 பேர்ச்சஸ். அதாவது 0.1422 ஏக்கராகும்.

இது குறித்த முறையான திட்டமொன்றை சமர்ப்பிக்குமாறு பலமுறை கோரிக்கை விடுத்தபோதிலும், இன்னும் உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் எதுவும் இல்லையென கோப் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார். இது அரசாங்க மருத்துவமனையா, இலாபம் ஈட்டும் பொது நிறுவனமா அல்லது இரண்டின் கலப்பினமா என கோப் தலைவர் வைத்தியசாலை சபையிடம் பலமுறை வினவியதாகக் கூறினார்.

மருத்துவமனை சபை, இது தங்களுடைய தவறு என ஒப்புக்கொண்டுள்ளதாக கோப் தலைவர் தெரிவித்தார்.

வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த வைத்தியசாலை வளவின் ஒரு பகுதி தொடர்பாக 2017 டிசம்பர் 31இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மின் கட்டணமாகிய 81,848 ரூபா, அத்தினத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய விற்பனைத் தரகான 1,46,041 ரூபா மற்றும் அத்தினத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஏனைய 9 வருமான விடயங்களின் பொருட்டு அறவிடப்பட வேண்டிய 6,28,460 ரூபா என்பன கணக்கிலிடப்படவில்லையென 2017ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை (SJGH) நிறுவப்பட்டு நான்கு தசாப்தங்கள் கடந்துள்ளபோதிலும், அதன் செயற்பாட்டு மாதிரியின் தன்மையை தீர்மானிக்க அதிகாரிகள் தவறியுள்ளனர். ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை (SJGH) அரசாங்கத்துக்குச் சொந்தமானது. இலாப நோக்கற்ற மூன்றாம் நிலை பராமரிப்பு நிறுவனம். இது மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவை கௌரவிக்கும் வகையில் ஜப்பான் மக்களால் பரிசாக வழங்கப்பட்டது. 1983ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் ஏற்பாட்டின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இது 1984ஆம் ஆண்டு செப்டெம்பர் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து உறுப்பினர்கள் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.




இந்தப் பிரச்சினை குறித்து பாராளுமன்ற உறுப்பினர், சட்டத்தரணி மதுர விதானகே தெரிவிக்கையில்,

''ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை ஏக்கர் 24, பேர்ச்சஸ் 9.4 ஆக உள்ளது.

வைத்தியசாலையின் காட்சியிலிருந்து சட்டவிரோதமாக கையாளப்பட்டது - பேர்ச்சஸ் 56 - அதாவது ஏக்கர் 0.1422.

1980ஆம் ஆண்டு வைத்தியசாலையில் மதில் ஒன்று கட்டப்பட்டது. கட்டப்பட்ட மதிலுக்கு வெளிப்புறமாக அனுமதியற்ற கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

1980ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டிருந்தாலும் காலப்போக்கில் குறித்த கட்டிடங்கள் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

1 பேர்ச்சஸ், 2 பேர்ச்சஸ் என மொத்தமாக 56 பேர்ச்சஸ் அபகரிக்கப்பட்டுள்ளது. இது தனிப்பட்ட ஒருவருடைய ஆக்கிரப்பு மாத்திரமல்ல, இதில் பலர் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்.

வைத்தியசாலையின் இடப்பெறுமதியையும், அபகரிக்கப்பட்ட இடத்தின் பெறுமதியையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. வைத்தியசாலையின் 1 பேர்ச்சஸ் காணியின் பெறுமதி 30 இலட்சம் ரூபா.



அபகரிக்கப்பட்ட காணியில் 10இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன.

வைத்தியசாலைக்கான ஆரம்ப நில அளவைத் திட்டம் (survey plan) 1981ஆம் ஆண்டு பெறப்பட்டுள்ளது. அதாவது, வைத்தியசாலைக்குரிய காணிப் பத்திரம் 1981ஆம் ஆண்டு பெறப்பட்ட நில அளவைத் திட்டத்தைக் (survey plan) கொண்டு எழுதப்பட்டது.



1981ஆம் ஆண்டை தொடர்ந்து 2015ஆம் ஆண்டு முன்னாள் பணிப்பாளரின் கட்டளைக்கிணங்க தாதியொருவருக்கு வைத்தியசாலையின் நிலத்தை அளப்பதற்கான பொறுப்பு வழங்கி இதை மீண்டும் நில அளவை மேற்கொள்ளுமாறு கட்டளையிடப்பட்டது.

2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த நில அளவைத் திட்டம் நில அளவை அதிகாரி (survey general) மூலம் அளக்கப்பட்டு இரண்டாவது நில அளவைத் திட்டம் (survey plan) பெறப்பட்டது.

2015ஆம் ஆண்டு பெறப்பட்ட நில அளவைத் திட்டம் (survey plan ) மூலம் அனுமதியற்ற ஆக்கிரமிப்பு 0.1422 பேர்ச்சஸ் இருப்பதாக உறுதி செய்யப்பட்டது.

2016ஆம் ஆண்டு கட்டிடங்கள் அமைப்பதற்காக மீண்டும் தேவைப்படு வதாகக் கூறி supply officer director விடுத்த வேண்டுகோளுக்கிணங்க நில அளவைக்கு அனுமதி பெற்ற தனியார் நிறுவனங்களிலிருந்து quotation பெறப்பட்டு அதில் குறைந்த செலவில் quotation இட்டவரின் மூலம் 2016ஆம் ஆண்டுக்கான நில அளவைத் திட்டம் (survey plan) மீண்டும் பெறப்பட்டது.

2015ஆம் ஆண்டு பெறப்பட்ட நில அளவைத் திட்டம் (survey plan) தெரியாமலே 2016ஆம் ஆண்டு மீண்டும் நில அளவைத் திட்டம் (survey plan) பெறப்பட்டது.

2016ஆம் ஆண்டு நில அளவை மேற்கொண்ட தனியார் நிறுவனம், வைத்தியசாலை அரச நிறுவனம் என்பதால் அந்த காலத்துக்கு முற்பட்ட காலங்களில் நில அளவைத் திட்டம் (survey plan) பெறப்பட்டதா என்பதை தேடிப் பார்த்திருக்க வேண்டியது குறித்த நில அளவை நிறுவனத்தின் பொறுப்பாகும். இந்த தவறு குறித்து தனியார் நிறுவனம் பொறுப்பு கூறியாக வேண்டும்.

தற்போதைய நிலைமையின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. 2015 ஆம் ஆண்டு நில அளவை அதிகாரி (survey general) மூலம் பெறப்பட்ட நிலத்திட்டத்தை (plan) அடிப்படையாகக்கொண்டு வழக்குகள் தொடரப்படும்'' - என்றார்.

வைத்தியசாலையின் வளாகத்துக்குச் சொந்தமான காணி முறைகேடுகள் தொடர்பில் கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார தெரிவிக்கையில்,

''வைத்தியசாலையின் இப்பிரச்சினைகள் தாம் இருக்கும்போது நடக்கவில்லையென எல்லா பிரச்சினைகளுக்கும் ஒரே பதிலை இலகுவாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும் இந்தப் பிரச்சினைக்கு அவர்களே பொறுப்புக் கூற வேண்டும்.

இட மோசடி என்பது ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் பெருமளவு நட்டத்தை ஏற்படுத்திய ஓர் ஊழல். இன்னும் அந்த இடங்களைப் பிடித்துக்கொண்டு இருக்கக்கூடியவர்கள் அந்த வைத்தியசாலையின் அயற் புறங்களில் இருந்தாலும் வைத்தியசாலையின் நிர்வாகமோ அதன் பணிப்பாளர்களோ எந்த நடவடிக்கையையும் இது வரையில் எடுக்கவில்லை.

அரச நில அளவை திணைக்களம் மூலமாக வைத்தியசாலையின் ஒட்டுமொத்த பரப்பையும் அளந்து சரியாக அளவிட்டு தரவுகள் வழங்கியிருந்தாலும் வைத்தியசாலையின் நிர்வாகம் ஒரு தனியார் அளவை நிறுவனம் ஒன்றின் மூலம் அளவைகளை மேற்கொண்டு இது தான் வைத்தியசாலையின் காணி என தெரிவிக்கிறார்கள்.

வைத்தியசாலையின் நிர்வாகத்தால் காணியை அபகரித்தவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. அரச அளவை திணைக்களம் மூலம் வைத்தியசாலைக்கு இடங்களை அபகரித்துகொண்டவர்களின் பெயர், முகவரி என அனைத்து தகவல்களையும் வழங்கியும் இவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரச அளவை திணைக்களம் 2015ஆம் ஆண்டு அளவைகளை வழங்கி இருந்தாலும் 2021ஆம் ஆண்டு வரை எந்த செயற்பாடும் அவர்களின் மூலம் மேற்கொள்ளப்படவில்லை'' - என்றார்.

வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் நாம் இது தொடர்பாக வினவியபோது, வைத்தியசாலைக்கு மொத்தமாக 165 பேர்ச்சஸ் காணி அபரிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணியை தொடர்புகொண்டு அவர்கள் இதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொண்டிருப்பதகவும் தெரிவித்தார்.

மேலும் பல தகவல்களை விபரமாக அவர் வழங்கவில்லை.

இப்பிரச்சினை குறித்து வினவ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் தொழிற்சங்க ஒருங்கிணைப்பாளர் சந்தன ஜயலத்தை பல முறை தொடர்புகொண்டிருந்தோம். எனினும், பதில் வழங்கவில்லை.

---

# வெடிமணியம்

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*அவர்கள் இந்த "13ஐ எதிர்ப்பதற்கு" அவர்கள் தங்கள் பக்க நியாயங்களை சொல்கிறார்கள்.*

*அது சரியா? பிழையா? என்பதற்கப்பால் அவர்களின் கருத்துகளுக்கும் நாங்கள் மதிப்பு கொடுக்கவேணும்.*

*ஒரு பேச்சுக்கு "வடக்கும் கிழக்கும் இணைக்கப்படவேணுமா?" எண்டு ஒரு வாக்கெடுப்பை முஸ்லிம் மக்களிடையே வைத்தால் முடிவு என்னவாக இருக்கும் எண்டு கொஞ்சம் யோசிக்கவேணும்.*

*ஆகவே;*

*ஒருசில அதி தீவிரவாத கொள்கை கொண்ட முஸ்லிம் தலைவர்கள் இந்த "13ஆம் திருத்தச்சட்டத்தை" பற்றி பெரிசா "ஊதி" அதை ஏதோ முஸ்லிம்களுக்கு எதிரான சட்டம் போல சித்திரிப்பதை நிறுத்தவேணும் எண்டால் நாங்கள் என்ன செய்யவேணும்?*

*வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களை சந்திச்சு "வடக்கு - கிழக்கு இணைப்பு பற்றியும் அதனால் சிறுபான்மை மக்களாகிய எங்களுக்கு கிடைக்கப்போகும் ஒருசில நன்மைகள் பற்றியும்" தெளிவாக பேசவேணும்.*

*மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரம் எந்தளவுக்கு சிறுபான்மை மக்களாகிய எங்களுக்கு முக்கியமானது எண்டு அறுத்துறுத்து சொல்லவேணும்.*

*ஏனெண்டால், சனாதிபதி ரணில் இந்த "வடக்கு - கிழக்கு இணைப்பு அல்லது 13ஆம் திருத்தச்சட்டத்தை" வைச்சு;*

*முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒருசிலரை கூப்பிட்டு "கொம்புசீவிவிட்டு" புதிய குழப்பம் ஒண்டை விளைவிக்கக்கூடும்.*

*"தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஒரு முறுகல் நிலையை தோற்றுவிப்பதுதான்" அடுத்தகட்ட நகர்வாக இருக்கும் எண்டு அடிச்சு சொல்லுறம்.*

*அதாவது சிங்கள மக்களும் தெற்கும் "வடக்கு - கிழக்கு இணைப்பு மற்றும் 13ஆம் திருத்தச்சட்டத்துக்கு" பச்சை கொடி காட்டினாலும் முஸ்லிம் மக்களும் அரசியல் கட்சிகளும் அதற்கு எதிராக இருக்கிறார்கள் எண்டு புதிய ஒரு "பெரிய கோட்டை" ரணில் கீறக்கூடும்.*

*ஏன் இன்னும் ஒரு படி மேலே போய் "மலையக தமிழ்மக்களும் இந்த 13ஆம் திருத்தச்சட்டத்துக்கு" எதிரான மனநிலையில்தான் இருக்கிறார்கள் என்றுகூட சொல்லக்கூடும்.*

*ஆக;*

*மாகாண சபைகளுக்கு "உயர்ந்த அதிகாரப்பகிர்வு" என்பது இலங்கையில் உள்ள அத்தனை மாகாண சபைகளுக்கும் பொருந்தும்.*

*ஆனால், அதை வேறுவிதமாக "திரித்து" வடக்கு, கிழக்கில் ஏதோ "அதிகாரங்கள்" குவியப்போவதாக ஒரு மாயையை உருவாக்குவதில் சிங்களப்பேரினவாதம் மிகத்தெளிவாக வேலைசெய்கிறது.*

*எனவே;*

*முதலில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் அரசியல் தலைவர்கள் மலையக தமிழ் அரசியல்வாதிகளைக் கூப்பிட்டு இருத்திவைச்சு இது சம்பந்தமாக பேசவேணும்.*

*மலையகத்தில் உள்ள அரசியல் செயல்பாட்டாளர்களை கூப்பிட்டு அவர்களுக்கு மிகத்தெளிவான "விளக்கம்" கொடுக்கப்படவேணும்.*

*சும்மா மோடிக்கும் லேடிக்கும் கடிதம் எழுதுவதை விட்டுப்போட்டு சம்பந்தர் அண்ணர் இதைத்தான் செய்யவேணும்.*

*சம்பந்தர் அண்ணர் கூப்பிட்டால் ரவூப் ஹக்கீமில் இருந்து மனோ கணேசன் வரை முக்கியமான அரசியல்வாதிகள் அத்தனைபேரும் நிச்சயம் மறுக்காமல் வருவார்கள்.*

*ஆனால், சம்பந்தர் அண்ணர் அதைச் செய்வதற்கு தயாராக இல்லை.*

*ஒண்டு அவர் உடல்நிலை சரியில்லை. இரண்டாவது அவரது கூட்டுகள் சரியில்லை!*

*ஆனால், சும்மா படங்காட்டுவதற்கு மட்டும் அவருக்கு "பெருந்தலைவர் சம்பந்தன்" எண்டு ஒரு அடைமொழி.*

*ஒருசில ஊடகங்களில் சம்பந்தர் அண்ணருக்கு கொடுக்கப்பட்ட இப்படியான அடைமொழியை பார்க்கும்போது;*

*கொடுப்புக்குள் சிரிப்பு வரும். சிலவேளைகளில் கெக்கட்டம் போட்டு சத்தமாக சிரிச்சும் போடுவம்.*

*ஏற்கனவே இந்தப் பத்தியில் சொன்னது போல;*

*திருகோணமலையில் சம்பந்தர் அண்ணருக்கு சிலைவைச்சு அதுக்கு கீழ "பெருந்தலைவர் சம்பந்தன்" என்று எழுதுவதற்கு முதல்...*

*சம்பந்தர் அண்ணர் இந்த தமிழனத்துக்கு செய்துவிட்டு போகவேண்டிய வேலைகள் இன்னும் கிடப்பிலேயே கிடக்கிறது.*

*கூட இருந்து அவரை பார்த்துக்கொள்பவர்கள் அவரது சிந்தனா சக்தியை புதுப்பிச்சு அவருக்கு "இதைச் செய்யுங்கோ ஐயா" எண்டு இடித்துரைக்கவேணும்.*

*இந்தியாவுடனான நேரடிப் பேச்சுவார்த்தையில் ரணில் விக்கிரமசிங்க "திருகோணமலையை" தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறார் எண்டு சொல்லுகினம்.*

*ஆக;*

*ரணில் அப்படிச் செய்திருந்தால் நிச்சயம் "13ஆம் திருத்தச்சட்டம்" பற்றி பெரிசாக அலட்டிக்கொண்டிருக்கமாட்டார்.*

*எங்கட கணக்குப்படி இந்தியா "100 விடயங்களை" கேட்டிருந்தால் அதில் 10 விடயங்களைத்தான் ரணில் ஓமெண்டு இருப்பார்.*

*எனவே, இந்தியா மிச்ச விடயங்களை அடைவதற்கு சிறிலங்காவை கொஞ்சம் "வெருட்டிப்பாப்பினம்"!*

*அப்பிடியான ஒரு "வெருட்டல்தான்" அண்மையில் இந்தியாவின் உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் கருத்து.*

*இந்தளவு காலமும் இலங்கையை ஜெனிவாவில் "பிணையில்" எடுக்கும்போது தெரியாத "இனப்படுகொலை" இப்பதான் அமித் ஷாவுக்கு தெரியுதெண்டால் பாருங்கோவன் புதினத்தை!*

*ரணில் இந்தியாவுடன் ஒருசில ஒப்பந்தங்களை செய்ததாக சொல்லுகினம்.*

*நிச்சயம் அவை "பொருளாதார ரீதியால நன்மைகளை பரஸ்பரம் பெற்றுக்கொள்வதற்கான" ஒப்பந்தங்களாகத்தான் இருக்கும்.*

*முக்கியமாக இலங்கை - இந்திய கடல்வழிப் போக்குவரத்து மற்றும் ஏற்றுமதி இறக்குமதி சார்ந்த விடயங்கள்தான் அதில் முக்கியத்துவம் பெற்று இருக்கும்.*

*தமிழர்களுக்கு இருக்கும் பிரச்சினை பற்றியோ அல்லது அரசியல் தீர்வுபற்றியோ "சீரியஸாக" ஒருபோதும் உருப்படியாக பேசியிருக்க வாய்ப்பேயில்லை.*

*எனவே, இந்த தள்ளாத வயசில் சம்பந்தர் அண்ணர் மோடிக்கு கடிதம் எழுதி அஞ்சு சதத்து பிரயோசனமும் இல்லை.*

*ஆனால், சம்பந்தர் அண்ணர் மினைக்கெட்டு மோடிக்கு கடிதம் போடுறார் எண்டால் அதில் ஏதும் முக்கியமான விடயங்கள் இருக்கவும் வாய்ப்பிருக்கு.*

*எது என்னவோ;*

*இந்த "13ஆம் திருத்தச்சட்டத்தை வைச்சு" இந்த வருசம் முழுக்க தமிழ் அரசியல்வாதிகளை பேக்காட்டி காலத்தை கடத்திவிடலாம் என்பதில் மிகத்தெளிவாக ரணில் இருக்கிறார்.*

*இந்த வருடத்தில் மாகாணசபைத் தேர்தல்களோ அல்லது 13 ஆம் திருத்தச்சட்ட நடைமுறைப்படுத்தலோ நடக்க வாய்ப்பே இல்லை எண்டு;*

*வெள்ளவத்தை தேத்தண்ணி கடை ஆறுமுகத்தார் "அடிச்சு" சொல்லுறார்.*

# உயர்நீதிமன்ற அறிவிப்பால் கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்

# செயற்பட முடியாத நிலை!






பா.அரியநேத்திரன்

கலைக்கப்பட்ட மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளை மீண்டும் தேர்தல் இடம்பெறும்வரை இயங்கவைக்க வேண்டும் என்ற தனிநபர் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது பல மாநகர, நகர, உள்ளூராட்சி சபைகளின் முதல்வர்கள், தவிசாளர்கள், உறுப்பினர்கள் பலர் மீண்டும் சில வருடங்கள் தொடர்ந்து பதவிகளில் இருக்கலாமென மனக்கோட்டை கட்டியிருந்தனர்.

ஆனால், அதற்கு உயர் நீதிமன்றம் இப்போது முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள பிரதேச சபைகள், நகர, மாநகர சபைகள் மற்றும் மாகாண சபைகள் தொடர்பான திருத்தச் சட்டமூலம் அரசியல் யாப்புக்கு முரணானது என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

உச்சநீதிமன்றின் இந்த வியாக்கியானத்தை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன கடந்த வாரம் ஒகஸ்ட் 8ஆம் திகதி பாராளுமன்றில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார். இதனால் அந்த தனிநபர் பிரேரணையை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றில் விசேட பெரும்பான்மை அல்லது பொதுஜன வாக்கெடுப்பு அவசியம் என்றும் உயர் நீதிமன்றின் வியாக்கியானத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இதில் விசேட பெரும்பான்மை என்பது மூன்றில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும். 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 150 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும். நிச்சயமாக இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக எதிர்க்கட்சிகளிலுள்ள எவருமே ஆதரவு தெரிவிக்கமாட்டார்கள்.

பொதுஜன வாக்கெடுப்பு என்பது சாத்தியப்படாத ஒன்று. ஏனெனில், உள்ளூராட்சித் தேர்தல் நடத்தவே நிதி இல்லை என்ற சாட்டுப்போக்கைக் கூறியவர்கள் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் கதைக்கே இலங்கையில் இடமில்லை என்றார்கள்.

இந்த திருத்தச் சட்டமூலத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே 2023, ஜனவரியில் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகளுக்கு 8,327 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை தேர்தல்கள் ஆணைக்குழு ஆணையாளர் நாயகம் எஸ்.ஜி.புஞ்சிஹேவா கோரியிருந்தார்.

இதன்படி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், தேர்தல் கட்டளைச் சட்டம் 2017இன் விதிகளின்படி 2023 பெப்ரவரி பிற்பகுதியில் நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கடந்த மார்ச் 09ஆம் திகதி நடத்துவதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்தினதும் தெரிவத்தாட்சி அலுவலர்களின் கையொப்பத்துடன், இந்த வர்த்தமானிகள் வெளியிடப்பட்டன. அதன்படி, குறித்த அதிவிசேட வர்த்தமானியில் தேர்தல் நடத்தப்படும் உள்ளூராட்சி சபைகளின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு கடந்த மார்ச் 9ஆம் திகதி காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கு நடைபெறவுள்ள தேர்தலில் பதிவுசெய்யப்பட்ட 58 அரசியல் கட்சிகள் மற்றும் 329 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 80,720 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாக வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

வேட்புமனுத் தாக்கல் முடிந்து ஐந்து வாரங்கள் முதல் ஏழு வாரங்கள் வரை உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் இந்தக் காலம் குறிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கத்தின் இரகசிய முயற்சிகள் பற்றிய ஊகங்களை நிராகரித்த எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல, தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் நிறைவேற்று ஜனாதிபதிக்குக் கூட இல்லை என்று கூறியிருந்தார்.

தேர்தல் ஆணைக்குழுவால் நிறைவுறுத்தப்பட்ட 2022 வாக்காளர் பதிவேட்டு அடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பயன்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டது.

இந்தத் தேர்தல் நடத்த உண்மையில் ஜனாதிபதி ரணில் விரும்பவில்லை. உள்ளூராட்சித் தேர்தல் நடக்குமா, நடக்காதா என்பது ஏறக்குறைய கடந்த பல மாதங்களாக பேசுபொருளாக இருந்தது. இதில் பொதுவாக ஓர் அபிப்பிராயம் உண்டு. அரசாங்கம் தேர்தலை நடத்த விரும்பவில்லை என்பது உண்மை.

ஏனென்றால், இப்போதிருக்கும் அரசாங்கம், ஜனாதிபதி ரணிலின் தலைமை தாங்கப்படும் மொட்டு கட்சி உறுப்பினர்களுடையது. ஒரு தேர்தல் நடந்து அதில் தாமரை மொட்டு, மக்கள் ஆணையை இழந்துவிட்டது என்று தெரியவந்தால், அது அரசியல் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கும். ரணில் விக்கிரமசிங்க தாம் கடந்த காலங்களில் முன்னெடுத்து வந்த பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான நகர்வுகளையும் பாதிக்கும்.

எனவே, பொதுப்படையாகப் பார்த்தால், ஒரு தேர்தலை நடத்த இந்த அரசாங்கம் விரும்பவில்லை. ஏனெனில், அரசாங்கத்தைப் பொறுத்தவரை அது ஒரு அமில பரிசோதனையாக அமையக்கூடும். ஆனால், இங்கே முக்கியமான ஒரு சிறு வேறுபாட்டைச் சுட்டிக்காட்ட வேண்டும். இப்போதிருக்கும் அரசாங்கம் ஒரு நூதனமான சேர்க்கை. தேர்தல் அரசியலில் பாரம்பரிய எதிரிகளாக

**உள்ளூராட்சிமன்றத் தேர்தலையும் மாகாணசபைத் தேர்தலையும் ஒத்திவைத்துவிட்டு தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதே ரணிலின் தந்திரமாகும். ஆனால், அவர் உள்ளிட்ட அரசாங்கத்தின் மனக்கோட்டைக்கு உயர் நீதிமன்றம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது**

காணப்பட்ட இரண்டு கட்சிகள் தங்களுக்கிடையே ஒரு சுதாகரிப்புக்கு வந்திருக்கின்றன. இந்தக் கூட்டிணைவு தன்னெழுச்சிப் போராட்டங்களுக்கு எதிரானது.

தன்னெழுச்சிப் போராட்டங்களால் ஏற்பட்ட ஆபத்துகள், அச்ச உணர்வு போன்றவற்றின் விளைவாக இரண்டு பாரம்பரிய எதிரிகளான கட்சிகள் ஒரு தந்திரபாயச் சேர்க்கைக்குப் போயிருக்கின்றன. ஆனால், இங்கு நாம் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், தன்னந்தனியே தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பதுங்கி, பதவி ஏற்று அதிர்ஷ்டத்தால் பிரதமராகி பின்னர் ஜனாதிபதியாகிய ரணிலைப் பொறுத்தவரை அவர் ஏற்கனவே மக்கள் ஆணையை இழந்தவர். அவரைப் பொறுத்தவரை இனி ஒரு தேர்தல் நடந்து அதில் அவருக்கு மக்கள் ஆணை இல்லை என்பதை கண்டுபிடிக்க வேண்டிய தேவை இல்லை.

தாமரை மொட்டுகளின் நிலைமை அப்படியல்ல. அரகலயவுக்கு முன்பு தாமரை மொட்டானது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்தது. ஆனால், அரகலயவுக்குப் பின் அந்த மக்கள் ஆணை கேள்விக்கு உள்ளாகிவிட்டது. ஒரு தேர்தல் அதை நிரூபிக்கக்கூடும். அது தாமரை மொட்டுக்கு எதிரான மக்கள் ஆணையாக அமைந்தால் அது தாமரை மொட்டுகளை - அதாவது தாமரை மொட்டுகள் பெரும்பான்மை வகிக்கும் பாராளுமன்றத்தைப் பாதிக்கும். எனவே, தாமரை மொட்டுகளைப் பொறுத்தவரை தங்களுக்கு மக்கள் ஆணை உண்டா, இல்லையா என்பதைப் பரிசோதிக்கும் ஒரு தேர்தலை எதிர்கொள்ள அஞ்சக்கூடும். அதாவது, இதில் ஒப்பீட்டளவில் அதிகம் ஆபத்து தாமரை மொட்டுகளுக்குத்தான் உண்டு.

ரணிலைப் பொறுத்தவரை ஒரு தேர்தல் நடந்தால், அதில் தாமரை மொட்டுக்கு மக்கள் ஆணை இல்லை என்று கண்டால் அது தாமரை மொட்டுகளை மேலும் பலவீனப்படுத்தும். அதன்மூலம் தாமரை மொட்டுகள் மேலும் ரணிலுக்கு கீழ்ப்படிவு உள்ளவர்களாக மாறுவார்கள். கடைசியாகச் செய்த யாப்பு திருத்தத்தின்படி ரணில் இப்போதிருக்கும் பாராளுமன்றத்தை எதிர்வரும் மார்ச் மாதத்தோடு கலைக்கலாம். அந்த ஏற்பாடும் ரணிலுக்குப் பலமானது. அது தாமரை மொட்டுகளை அவரில் தங்கியிருக்கச் செய்யும். இந்நிலையில், ஒரு தேர்தல் நடந்து அதன் முடிவுகளும் தாமரை மொட்டுகளைப் பலவீனப்படுத்தினால், பலவீனமான தாமரை மொட்டுகளின் அரசாங்கத்தை வைத்துக்கொண்டு ரணில் தன்னுடைய ஆட்சிக் காலத்தை முடிக்கலாம்.

பாராளுமன்றத்துக்கு மக்கள் ஆணை இல்லை என்று தெரியவந்தால், ரணிலுக்கு அது அதிர்ச்சியாக இருக்காது. அவர் ஏற்கனவே மக்கள் ஆணையை இழந்தவர். ஆனால், தேர்தல் முடிவுகளால் அரசியல் ஸ்திரத்தன்மை பாதிப்படைந்தால், அது அவருடைய திட்டங்களைக் குழப்பக்கூடும். பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம். அனைத்துலக நாணய நிதியத்தின் உதவி கிடைப்பதற்கு அது அவசியம். அனைத்துலக நாணய நிதியத்தின் கடனுதவி பாதிப்படையும் என்ற அச்சமும் அப்போது இருந்தது.

எனவே, பொருளாதார நெருக்கடியைக் கடப்பதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம். ஒரு தேர்தல் நடந்து அதனால் அரசியல் ஸ்திரத்தன்மை குழம்புமாக இருந்தால், அது ரணிலுக்குக் கூடாது. அவர் அந்தக் கோணத்தில்தான் சிந்திப்பார். அதேசமயம், மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் மேலும் பலவீனமடைவதை அவர் ரசிப்பார். அது அவருடைய பேரத்தைக் கூட்டும் என்பதெல்லாம் உணர்ந்தே உள்ளூராட்சித் தேர்தல் நடக்கக் கூடாது என்பதே ரணிலுக்கும் அவருக்கு முட்டுக்கொடுக்கும் மொட்டுக் கட்சியின் எண்ணமும் இருந்தது.

உள்ளூராட்சித் தேர்தல் எனப்படுவது உள்ளூர் நிலைவரங்களைப் பிரதிபலிப்பது. அது தேசிய அளவில் கட்சிகளின் வெற்றி தோல்விகளைப் பிரதிபலிக்காது என்று ஒரு வாதம் உண்டு. அதில் ஓரளவுக்கு வாக்குகள் கட்சிக்கல்ல, தன் முகத்துக்குத்தான் கிடைக்கின்றன என்று. இவ்வாறு உள்ளூராட்சித் தேர்தல் எனப்படுவது உள்ளூர் நிலைமைகளை - அதை இன்னும் ஆழமான பொருளில் சொன்னால், உள்ளூர் ஏற்றத்தாழ்வுகளை, சாதி, சமய, சமூக வேறுபாடுகள் போன்ற எல்லாவற்றையும் பிரதிபலிப்பது. அதில் கட்சி நிலைப்பாடு என்பது ஒப்பீட்டுளவில் இரண்டாம்பட்சம் என்று ஒரு வாதம் உண்டு. ஆனாலும் இறுதியிலும் இறுதியாக தேசிய அளவில் வாக்களிப்பைக் கணிக்கும்போது அங்கே அது கட்சிகளின் வெற்றி தோல்வியாகவே பார்க்கப்படும்.

அப்படி சிந்தித்துத்தான் நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ரணில் – மைத்ரி அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தல்களை 20 மாதங்களுக்கு ஒத்திவைத்தது. 2015இல் ரணில்+மைத்திரி கூட்டு வெற்றிபெற்றது. அதையடுத்து நடந்த கூட்டுறவுச் சபைகளுக்கான தேர்தலில் ராஜபக்ஷக்கள் பலமாக இருப்பது தெரியவந்தது.

கூட்டுறவுச் சபைத் தேர்தல்களும் ஏறக்குறைய உள்ளூராட்சி சபைத் தேர்தல்களைப் போலத்தான் உள்ளூர் நிலைவரங்களை பிரதிபலிக்கின்றன. எனினும், அத்தேர்தலில் ராஜபக்ஷக்கள் பெற்ற வெற்றியானது, அதற்கு முன் ரணில்+மைத்ரி கூட்டு பெற்ற வெற்றியை கேள்விக்குள்ளாக்கியது. ராஜபக்ஷக்கள் தொடர்ந்தும் பலமாக இருக்கிறார்கள் என்பதை அது உணர்த்தியது. அதனால் ரணிலும் மைத்ரியும் உள்ளூராட்சித் தேர்தல்களை மேலும் 20 மாதங்களுக்குக் குறையாமல் ஒத்திவைத்தார்கள். ஆனால், 2018இல் தேர்தல்களை நடத்தியபோது, மீண்டும் ராஜபக்ஷக்களே வெற்றிவாகை சூடினர்.

நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட கூட்டுக்குக் கிடைத்த மக்கள் ஆணை காலாவதியாகிவிட்டது என்பது தெரிய வந்தது. அதன் விளைவாக மைத்ரிபால சிறிசேன தனது விசுவாசத்தை இடம் மாற்றிக்கொண்டார். அவர் ராஜபக்ஷக்களின் கருவியாக மாறி ஒரு யாப்புச் சதிப் புரட்சியைச் செய்தார்.

எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தலோ அல்லது கூட்டுறவு சபைத் தேர்தலோ எதுவானாலும், அது அதிகபட்சம் உள்ளூர் நிலைமைகளைப் பிரதிபலித்தாலும் இறுதியிலும் இறுதியாக கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகள் என்று பார்க்கும்போது தேசிய அளவில் அது கட்சிகள் பெற்ற வெற்றி தோல்விகளாகவே பார்க்கப்படும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் இரண்டையும் ஒத்திபோட்டு இழுத்தடித்துக்கொண்டு எதிர்வரும் 2024இல் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி தாம் வெற்றிபெற வேண்டும் என்ற காய்நகர்த்தலே இப்போது ரணில் கையில் எடுத்துள்ள தந்திரம்.

கலைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளை மீண்டும் அதே உறுப்பினர்களைக்கொண்டு இயங்க வைப்பதன்மூலம் தமக்கு ஜனாதிபதித் தேர்தலில் அந்த உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெறலாம் என்ற எண்ணமும் ஜனாதிபதி ரணிலுக்கு சிலவேளை இருந்திருக்கலாம். அவரின் ஆசீர்வாதத்துடன்தான் இந்த திருத்தச் சட்டமூலத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட சமர்ப்பித்திருந்தார் என்ற கருத்தும் சிலரிடம் இருந்தது. அதை முற்று முழுசாக நிராகரிக்க முடியாது.

எது எப்படியானாலும் திரும்பவும் கலைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு மீண்டும் பதவியில் இருக்கலாம் என எதிர்பார்த்திருந்த 24 மாநகர சபை உறுப்பினர்கள், 41 நகர சபைஉறுப்பினர்கள் மற்றும் 276 பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 8,327 உறுப்பினர்களின் மனக்கோட்டை உயர் நீதிமன்றத்தின் அறிவிப்பால் தவிடுபொடியாகிவிட்டது.

இலங்கையில் இப்போது மாதம் ஒரு விசேட உரை!
வாரம் ஒரு பொருட்களுக்கு விலை ஏற்றம்!
வருடம் ஒரு நோய்த் தாக்கம்!
நாள் முழுதும் ஆர்ப்பாட்டம்!
நமது நாட்டு அதிசயம்!
இதுதான் நடக்கிறது.


24ஆவது சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022

விருது பிரிவுகள் பட்டியல் (அச்சு ஊடகம்)

- ஆண்டின் மிகச் சிறந்த ஊடகவியலாளருக்கான மேர்வின் டி சில்வா விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த புலனாய்வு ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த சுவாரஷ்யமான செய்தி வெளியீட்டிற்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த இளம் ஊடகவியலாளருக்கான டென்ஸில் பீரிஸ் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச்சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சூழலியல் அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த விளையாட்டுத்துறை ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்திரிகை பக்க வடிவமைப்புக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு பரிசு)
- ஆண்டின் மிகச் சிறந்த வணிகவியல் மற்றும் நிதியியல் ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ் அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிறிவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- தகவல் அறியும் உரிமை சட்டத்தை பயன்படுத்தி எழுதப்பட்ட ஆண்டின் மிகச்சிறந்த செய்தி அல்லது விவரணத்திற்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சமூகப் பிரச்சினைகளை அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த விவரண எழுத்தாளருக்கான உபாலி விஜேவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

விருது பிரிவுகள் பட்டியல் (பத்திரிகை இணையத்தளங்கள்)

- மிகச் சிறந்த பத்திரிகை இணையத்தளம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- மிகச் சிறந்த காணொளி ஆக்கம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

(தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) : ஒவ்வொரு மொழிப் பிரிவிலும் ஒவ்வொரு பரிசு

2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் பத்திரிகையொன்றில் தமது ஆக்கங்கள். கருத்துப்பட ஓவியங்கள் மற்றும் புகைப்படங்களின் பிரசுரங்களைக் கொண்ட விண்ணப்பதாரிகள் பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட தமது மூல ஆக்கங்கள். கருத்துப்பட ஓவியங்கள் அல்லது புகைப்படங்களை ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 வீதம் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மூல பத்திரிகை ஆக்கங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஆக்கத்தின் பிரதியை அனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுதந்திர நடுவர் குழுவினர் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வர்.

விண்ணப்ப முடிவுத் திகதி: வியாழக்கிழமை, ஆகஸ்ட் 31, 2023.

அனைத்து ஆக்கங்களும் சரியாக கோப்புருவாக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். (தளர்வாக கட்டப்பட்ட பத்திரிகை ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ஆக்கங்கள் சகிதம் விண்ணப்பங்கள் குழுத் தலைவர், சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பெர்னார்ட் சொய்ஸா மாவத்தை ( கிருள வீதி), கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

# நாட்டின் பொருளாதார சுமையை மக்கள் ஏன் தாங்க வேண்டும்?





சின்னத்தம்பி குருபரன்

அரசியல், பொருளாதார நெருக்கடியில் நாடு இருக்கும்போது மக்கள் பாதிக்கப்படாத வகையில் அரசு தீர்மானங்களை எடுக்க வேண்டும். நாட்டின் எதிர்காலப் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக நம்பிக்கை தரும் தீர்மானங்கள் எடுப்பதை விடுத்து மக்களை மேலும் மேலும் துன்பப்படுத்திக்கொண்டிருப்பது நாட்டின் எதிகாலத்துக்கு நல்லதல்ல. சாத்தியமான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின்றி அதிபுத்திசாலிகளும் திருடர்களும் மோசடிக்காரர்களும் நாட்டை ஆட்சிசெய்து கொண்டிருந்தால் நாடு மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப்படும். அதிபுத்திசாலிகள் மனதின் செயற்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மூளையின் செயற்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பதனால் மூளையின் சிந்தனாசக்திக்கு ஏற்பவே செயற்பட்டுக் கொண்டிருப்பர்.

இவர்கள் மனசாட்சியை விடுத்து மூளையின் செயற்பாடுகளால் கட்டுண்டு இருப்பர். தம்மை மேதாவி, அதிபுத்திசாலி, இராஜதந்திரங்கள் நிறைந்தவர் எவரையும் தம்வசம் ஈர்க்க முடியும் என்ற கர்வத்துடன் செயற்பட்டுக் கொண்டிருப்பார்கள். இத்தகையவர்களிடம் நாடு ஒப்படைக்கப்பட்டால் மக்கள் நடுத்தெருவுக்கு வரவேண்டிய நிலைதான் ஏற்படும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அதிபுத்திசாலித்தனம் காரணமாகவே அவர் பிரதமராக இருந்த காலப்பகுதிகளில் பதவிக் காலத்தை நான்கு தடவைகள் முழுமையாக நிறைவு செய்ய முடியாத பிரதமராகவே இருந்தார். அதிபுத்திசாலிகளிடம் திணைக்களங்கள், நிறுவனங்களை ஒப்படைத்தால் அந்நிறுவனங்கள் விரைவில் தோல்வியடையும்.

நாட்டின் நெருக்கடியான சூழலில் விலை அதிகரிப்பு, கட்டண அதிகரிப்புக் காரணமாக மக்கள் சொல்லொணாத் துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு ஒருபுறம், கூலித் தொழிலாளர்களின் தொழில் இழப்பு ஒருபுறம், மின்சார, நீர்க்கட்டண அதிகரிப்பு மறுபுறம் என மக்கள் திண்டாடிக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறு மக்கள் துன்ப, துயரங்களுடன் வாழ்ந்துகொண்டிருக்கும்போது அரசியல்வாதிகளும் உயர் அதிகாரிகள் பலரும் நாட்டில் ஒன்றும் நடவாததுபோல் செயற்பட்டுக்கொண்டிருப்பது மக்கள் மத்தியில் வேதனை, கோபம், விரக்தியைத் தூண்டுவதாக அமைகின்றது.

ஓரிரு பொருட்களின் விலையை சிறிதளவு குறைத்துவிட்டுத் தம்பட்டம் அடித்து இன்னும் பல பொருட்களுக்கு விலையைக் கூட்டுகின்றனர். அதற்குப் பொய்யான நியாயத்தையும் கற்பிதம் செய்கின்றனர். 'உரோம் எரிந்து கொண்டிருந்தபோது நீரோ மன்னன் பிடில் வாசித்துக்கொண்டிருந்தானாம்.' மக்கள் துன்பத்தில் இருக்கும்போது அரசியல்வாதிகளால் நாட்டு நடப்புப் புரியாது மேலும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். 'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது'போல் மேலும் மேலும் சுமையைக் கூட்டிக்கொண்டிருக்கின்றனர்.

2020இலிருந்து இன்றுவரை பல்லாயிரக்கணக்கானோர் தொழில் இழந்திருக்கின்றனர். விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, பல இலட்சமானோர் வருமானத்தை இழந்திருக்கின்றனர். மேலதிக வருமானம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அரச ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை. பல தொழிற்சாலைகள், வியாபார நிறுவனங்கள் பாதிக்கப்பட்டு மூடப்பட்டிருக்கின்றன. இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டமையாலும், உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டமையாலும் பொருட்களின் விலை பல மடங்கு அதிகரித்திருக்கிறது.

எரிபொருள் மின்சாரக் கட்டண ஏற்றம் காரணமாக வாழ்க்கைச் சுமை அதிகரித்திருக்கிறது. பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக பதுக்கல் அதிகரித்திருக்கிறது. இலஞ்சம், ஊழல் மோசடி ஆகியன நாட்டை மேலும் நெருக்கடியான சூழ்நிலைக்குள் தள்ளிக்கொண்டிருக்கின்றன. இவற்றிலிருந்து விடுபட்டு நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை வகுப்பதை விடுத்து அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலுக்கான வியூகம் அமைப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றனர்.

வறுமைக்கோட்டின் கீழுள்ளோர், மத்திய தர வர்க்கத்தினரின் வருமானம் அதிகரிக்காத நிலையில் பொருட்களின் விலைகளும் கட்டண அதிகரிப்புகளும் தொடர்ச்சியாக நிகழ்ந்துகொண்டிருப்பது வாழ்க்கைச் செலவு அதிகரித்து மக்களை இக்கட்டான நிலைக்குள் தள்ளிவிடும். அரசு சில பொருட்களுக்கு இடைக்கிடையே சிறிதளவு விலை குறைத்தாலும் வாழ்க்கைச் செலவில் குறிப்பிடத்தக்களவு மாற்றம் எதனையும் ஏற்படுத்தவில்லை என்பதே உண்மையாகும். அரசாங்கத்தின்மீதும் ஆளுந்தரப்பு அரசியல்வாதிகள்மீதும் மக்கள் வெறுப்படைந்திருக்கும் இத்தருணத்தில் மக்களின் மனங்களை மாற்றுவதற்காகவும் திசை திருப்புவதற்காகவும் மக்களிடத்தில் நம்பிக்கையை உருவாக்குவதற்காகவும் தேர்தல்களை மையப்படுத்தியும் விலைக் குறைப்புச் செய்யப்படுவதாக பலரும் கூறுவதைக் கேட்க முடிகிறது. அவர்களிடம் மக்கள் நலன், பொருளாதார அபிவிருத்திசார் திட்டங்கள், நாட்டு நலன்மீதான அக்கறை இருப்பதாக வெளியுலகுக்குக் காட்டிக்கொண்டு மாபெரும் நடிகர்களாக உலா வருகின்றனர். இதையும் நம்பிக்கொண்டு அவர்கள் பின்னால் செல்பவர்களும் இப்போதும் இருக்கிறார்கள்.

அரசு இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நீர்க்கட்டணத்தைப் பல மடங்கு அதிகரித்தது. மேலும் இம்மாதத்திலிருந்து 50 - 300 வீதம் வரை நீர்க்கட்டணத்தை அதிகரிப்பதற்கான வர்த்தமானியும் வெளிவந்துள்ளது. இலங்கையில் 60 வீதத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் 10 அலகுகளுக்குள் குடிநீரைப் பயன்படுத்துகின்றனர். முதல் ஐந்து அலகுகளுக்கான நீர்க்கட்டணம் 300 வீதம்வரை அதிகரித்திருக்கிறது. பத்து அலகுவரை பயன்படுத்துபவர்களின் நீர்க்கட்டணம் 250 வீதம்வரை அதிகரித்திருக்கின்றது. இவ்வாறுதான் மின்கட்டணத்தையும் அதிகரித்தார்கள். மீண்டும் மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு மின்சார சபை அனுமதி கோரி இருக்கிறது. குறைந்த குடிநீர்ப் பாவனை, குறைந்த மின் பாவனையாளர்கள் எல்லோரும் மத்தியதர வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்களாவர். அவர்களில் 75 வீதத்துக்கும் மேற்பட்டோர் இன்றைய வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கையில் அவர்கள் மீது மீண்டும் சுமையைச் சுமத்த அரசு திட்டமிட்டுக்கொண்டிருக்கிறது. இலங்கை மின்சார சபை, இலங்கை நீர் வழங்கல் அதிகாரசபை இரண்டும் அரச நிறுவனங்கள். அந்த நிறுவனங்கள் இரண்டும் நட்டத்தில் இயங்குவதற்கு யார் காரணம். தொடர்ச்சியாக ஒரு நிறுவனம் நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்தால் அவற்றை மறுசீரமைப்புச் செய்யாமல் இருந்தது யார் தவறு? அரசியல்வாதிகளின் அடிவருடிகளாகச் சலாம் போட்டுக் கொண்டு ஊழல், மோசடிகள் செய்த முகாமைத்துவப் பணிப்பாளர்களை மக்களா நியமனம் செயதார்கள்.

நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதற்குக் காரணமான பணிப்பாளர்களைப் பதவி நீக்கம் செய்து, இயக்குனர் சபையையும் கலைத்து அவர்களைச் சட்டரீதியாகத் தண்டித்து நட்டஈட்டைப் பெறாமல் விட்டது யாருடைய தவறு? ஆளுந்தரப்பு அரசியல்வாதிகள் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலாக ஆளணி நியமனம் செய்தது யாருடைய தவறு? அரச திணைக்களங்களில் உள்ளவர்களுக்கு சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ளபடி சம்பளம், படிகள் வழங்கப்படும்போது அரச நிறுவனப் பணியாளர்களுக்குப் பல மடங்கு அதிக சம்பளமும் படிகளும் மேலதிக நேரக் கொடுப்பவுகளும் வழங்குமாறு மக்களா கூறினார்கள்?

அரசியல்வாதிகள், உயர் அதிகாரிகள், அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் சபைகளிடமிருந்து நீர்க்கட்டணம், மின்கட்டணங்களை அறவிட வேண்டாம் என்று மக்களா கூறினார்கள். எல்லாவற்றுக்கும் அரசு காரணமாக இருந்திருக்கிறது. இத்தனைக்கும் காரணமான அரசுதானே நட்டஈட்டைச் செலுத்தி இருக்க வேண்டும். அதைச் செய்யாமல் நட்டத்தை ஈடுசெய்வதற்கான கட்டண அதிகரிப்பை மக்கள்மீது சுமத்தி அவர்களைத் துன்பப்படுத்துவது எந்தவகையில் நியாயமாகும்.

கடந்த மூன்று மாதங்களாக உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைந்து காணப்பட்டது. அப்போதெல்லாம் எரிபொருள் சூத்திரத்துக்கமைவாக எரிபொருளின் விலை குறைக்கப்படவில்லை. நீண்டகால ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஐஓசி (இந்தியா) குறைந்த விலையில் எரிபொருளைக் கொள்வனவுசெய்து இலங்கையில் பலருக்குத்தரகுப் பணம் கொடுத்து இலாபமீட்டிக் கொண்டிருக்கும்போது இலங்கையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறதென்பது யாருடைய தவறு?

ஓரளவு படித்த இளைஞர்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சாரசபை, நீர் வழங்கல் அதிகாரசபை, துறைமுகங்கள் அதிகாரசபை, இலங்கைப் போக்குவரத்துச் சபை, ரயில்வே திணைக்களம் ஆகியவற்றில் தொழில் பெறுவதையே பெரும்பாலும் விரும்புகின்றனர். அரசியல்வாதிகளும் பெருமளவு பணத்தைப் பெற்றுக்கொண்டு இத்துறைகளில் வேலைவாய்ப்பை வழங்குகின்றனர். பெருமளவு சம்பளம், வசதி வாய்ப்புகள், படிகள் கிடைக்கின்றன.

அரச பதவியில் இருந்து 30 வருடங்களுக்கு மேல் பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள் சில இலட்சங்களை - பணிக்கொடையைக் கடனாகப் பெற, நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களில் பணியாற்றியவர்கள் கோடி ரூபாக்களில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியைப் பெறுகின்றனர்.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

# கொந்தளித்த எடப்பாடி: அடங்கிய அண்ணாமலை!

ரமணி

தமிழகத்தையும் தாண்டி இந்திய அரசியலைப் புரட்டிப்போட்ட கட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். எம்.ஜி.ஆரையும், ஜெயலலிதாவையும் இரு கண்களாகப் போற்றும் தொண்டர்கள் நிறைந்த கட்சி. தேசியக் கட்சிகளை அரவணைத்து அரசியல் செய்தவர் எம்.ஜி.ஆர். மோடியா? லேடியா? எனச் சவால்விட்டு வெற்றிக் கொடி நாட்டியவர் ஜெயலலிதா.

தமிழகத்தில் தாமரையை மலரவைக்க முயற்சி செய்து தோற்றுப்போனவர் தமிழிசை. அரசியலில் அதிரடி காட்டி தன்னை முன்னிலைப்படுத்தும் தமிழக பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் அண்ணாமலையால் கூட்டணிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது. மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி ஏற்படும்போது டில்லி தலைவர்களின் முடிவே இறுதியானது. அண்ணாமலையின் தன்னிச்சையான நடவடிக்கையால் டில்லி தலைமை அதிர்ச்சியடைந்துள்ளது.

தமிழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை விட பெரிய கட்சி பாரதீய ஜனதா என்ற போதையில் அண்ணாமலை மிதக்கிறார். எடப்பாடிக்கும் அண்ணாமலைக்கும் பொருத்தம் சரியில்லை. அண்ணாமலையின் அத்துமீறிய பேச்சை அண்னா திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர். எடப்பாடி - அண்ணாமலை மோதல் உச்சத்தில் உள்ளது. டில்லி தலைவர்களுக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இடையிலான உறவு சுமுகமாக உள்ளது. அண்ணாமலையுடனான உறவில் பாரிய விரிசல் விழுந்துள்ளது.

இராமேஸ்வரத்திலிருந்து அண்ணாமலை பாத யாத்திரையை ஆரம்பித்துள்ளார். 2024 பாராளுமன்றத் தேர்தலைக் குறிவைத்து நடைபெறும் பாத யாத்திரை எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு இல்லையென்றால் பாரதீய ஜனதாவால் தமிழகத்தில் எதனையும் வெற்றிகரமாகச் செய்ய முடியாது என்பதை பாத யாத்திரை உணர்த்தியுள்ளது. பாத யாத்திரை செல்வதைவிட கரவனில் அதிக நேரத்தை அண்ணாமலை செலவிடுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பாத யாத்திரைக்கிடையில் மதுரையில் அண்ணாமலை கொடுத்த பேச்சால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் கொதித்துப் போயுள்ளனர்.

"ஓ.பன்னீர்செல்வத்தை நாங்கள் புறக்கணிக்கவில்லை. என்டிஏ கூட்டணி குறித்து முடிவு செய்வோம். அவர் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட்டவர். தமிழ் நாட்டின் வளர்ச்சிக்காக பல விடயங்களை செய்துள்ளார். தமிழ்நாட்டில் இருக்கவே நான் விரும்புகிறேன். தமிழ்நாட்டில் ஆட்சிமாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். அதற்குத்தான் பாரதீய ஜனதாவில் இணைந்தேன். கட்சியின் தொண்டனாக தலைமை சொல்வதைக் கேட்பேன். அவர்கள் சொல்வதைக் கேட்டு அவர்களின் வெற்றிக்குப் பாடுபடுவேன். டில்லி போவதில், அங்கே பதவி பெறுவதில் எனக்கு விருப்பம் இல்லை. அதனால் லோக்சபா தேர்தலில் போட்டியிட மாட்டேன். தமிழ்நாட்டில்தான் நான் அரசியல் செய்வேன்" என்று அண்ணாமலை கூறியுள்ளார்.



பன்னீர்செல்வத்தை அண்ணாமலை புகழ்ந்து பேசியதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. நடைபயணத்திற்கு இடையே அண்ணாமலை ஓ.பன்னீர் செல்வத்துக்குப் போன் செய்து நீண்டநேரம் ஆலோசனை செய்துள்ளாராம். இவர்கள் என்ன பேசினார்கள், ஏன் பேசினார்கள் என்ற விபரம் எதுவும் வெளியாகவில்லை. அண்ணாமலை எல்லை மீறிவிட்டதாக எடப்பாடி கருதுகிறார். அண்ணாமலையின் திருகுதாளங்கள் அனைத்தும் டில்லிக்குத் தெரியும். தமிழக பாரதீய ஜனதாவின் மூத்த தலைவர்களும் அண்ணாமலையைப் பற்றி டில்லுக்குப் புகாரளித்துள்ளனர்.

அண்ணாமலைக்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ பதிலளித்துள்ளார். "மோடி ஜிக்கு எங்க தலைவரோட அருமை தெரியுது, அண்ணாமலைக்கு தெரியலனா நாங்க என்ன சொல்றது. அரசியல் கத்துக்குட்டிக்கு நாங்கள் பதில் சொல்லத் தேவையில்லை. அரசியலில் அண்ணாமலை கத்துக்குட்டி. எங்கள் மீது துரும்பை வீசினால் மீண்டும் நாங்கள் இரும்பை வீசுவோம்" என்று செல்லூர் ராஜூ காட்டமாக பதிலளித்துள்ளார்.

செல்லூர் ராஜுக்கு அண்ணாமலை அளித்த பதிலில், ''விஞ்ஞானி செல்லூர் ராஜுக்கெல்லாம் பதில் சொல்லி என்னோட தரத்தை தாழ்த்திக்கொள்ள விரும்பவில்லை'' என்று கூறினார்.

அண்ணாமலையின் இந்தப் பேட்டியை எடப்பாடி விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. ஓ.பன்னீர்செல்வம் பற்றி அண்ணாமலை இப்படி பேசியிருக்கக் கூடாது. அவர் எல்லை மீறிவிட்டார் என்ற கோபத்தில் இருக்கிறாராம்.

பாரதீய ஜனதாவின் மதுரை மாநகர் தலைவர் மகா.சுசீந்திரன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை



கடுமையாக விமர்சனம் செய்துள்ளார். அவருடைய விமர்சனம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை கொந்தளிக்கச் செய்துள்ளது.

சுசீந்திரனின் அரிக்கையில், "இனிவரும் காலங்களில் திமுக. அதிமுக கட்சிகள் கூட்டணியின்றி வாக்காளர்களுக்கு பணம் கொடுக்காமல் 17 சதவீத வாக்கு வங்கிகளை கடந்து செல்கின்ற பாஜகவுடன் போட்டியிடத் தயாரா? நாங்கள் தேர்தல் களத்தில் பணிபுரிபவர்கள். உங்களுடைய பலமும், பலவீனமும் எங்களுக்குத் தெரியும். ஆளுங்கட்சி செய்கின்ற ஊழல்களை கண்டறிந்து DMK File 1 & DMK File 2 என்று நடவடிக்கை எடுத்து ஊழல் அமைச்சர்களை சிறைக்கு அனுப்பிய எங்களுக்கு அதிமுகவின் ஊழல் அமைச்சர்களின் பட்டியலைத் தேடி எடுத்து எங்களுடைய தலைமைக்கு அனுப்ப எவ்வளவு நேரமாகும் என்று கருதுகிறீர்கள். மலையோடு மோதி மண்ணாகி விட வேண்டாம் என்று எச்சரிக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுசீந்திரன் அண்ணாமலைக்கு மிகவும் நெருக்கமானவர். அண்ணாமலையின் அனுமதியின்றி இவர் அறிக்கை வெளியிட வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது. இந்நிலையில்தான் பாஜக மீது எடப்பாடி கோபமாக இருக்கிறாராம்.

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், அதிமுகவை தொட்டால் அண்ணாமலை கெட்டார் என்று கடுமையாக விமர்சனம் செய்திருந்தார். இதற்கு பாஜக நிர்வாகி கரு நாகராஜன் பதிலடி கொடுத்திருந்தார். பாராளுமன்றத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில் அதிமுக - பாஜக கூட்டணி இடையே கடும் வார்த்தை போர் நடந்துவருகிறது. அண்ணாமலைக்கு ஆதரவாக சிலர் பேசுவதை டில்லி விரும்பவில்லை.

தமிழகத்தில் பாஜக தனித்துப் போட்டியிட வேண்டும். அப்போதுதான் இன்றைக்கு இல்லாவிட்டாலும் எதிர்காலத்தில் பாஜக ஆட்சியில் அமரும் காலம் வரும். அப்போதுதான் பாஜகவின் செல்வாக்கு உயரும் என்று அண்ணாமலை நினைக்கிறார். ஆனால், பாஜகவின் மற்ற மூத்த நிர்வாகிகள் இதற்கு உடன்படவில்லை. குறிப்பாக, பாஜக டில்லி தலைமையும் கூட இதற்கு உடன்படவில்லை.

அதனால் அதிமுகவை அனுசரித்துச் செல்ல அண்ணாமலைக்கு அறிவுறுத்தி வருகிறது. அதேநேரம் அதிமுகவை சீண்டும் வேலையை செய்ய வேண்டும் என்றும் அண்ணாமலைக்கு தலைமை அறிவுறுத்தி இருக்கிறதோ என்னவோ அந்த வேலையை அண்ணாமலை அடிக்கடி செய்துகொண்டே இருக்கிறார்.

ஈரோடு இடைத்தேர்தலில் எடப்பாடிக்கும் அண்ணாமலைக்கும் இடையேயான மோதல் வலுத்தது. இதற்கு அடுத்தபடியாக பாஜகவின் தொழில்நுட்ப அணித் தலைவர் அக்கட்சியிலிருந்து விலகி அதிமுகவில் இணைந்தபோது ரொம்பவே கொந்தளித்து விட்டார் அண்ணாமலை. நயினார் நாகேந்திரன், சசிகலா புஷ்பா உள்ளிட்ட அதிமுகவினர் பாஜகவுக்கு சென்றபோது அதிமுகவிலிருந்து எந்த எதிர்ப்பும் இல்லை.

அதே பாஜகவினர் அதிமுகவுக்கு சென்றபோது ரொம்பவே கொந்தளித்தார் அண்ணாமலை. இதனால் இரு கட்சிக்கும் இடையே மோதல் உச்சகட்டத்திற்கு சென்றது. மாறி மாறி இரு கட்சியினரும் வசை பாடிக்கொண்டிருந்தனர். ஆனாலும், அண்ணாமலையை மாற்றுவதற்கு டில்லி விரும்பவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எதிராகத் தினமும் ஒரு குற்றஞ்சுமத்தி அண்ணாமலை செய்யும் அலப்பறையை டில்லி விரும்புகிறது.

இந்திய பாராளுமன்றத் தேர்தல் நெருங்குகையில் இந்த மோதல் முடிவுக்கு வந்துவிடும்.

## அக்னியான்

"நாங்கள் சொல்வதைத்தான் தமிழர்கள் நீங்கள் கேட்கவேண்டும் நாங்கள் தர விரும்புவதைத்தான் நீங்கள் ஏற்கவேண்டும். இதையே பாராளுமன்றிலுள்ள சிங்கள உறுப்பினர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் நினைப்பது மோசமானது. சிங்களத் தலைவர்கள் தங்கள் இனவாத சிந்தனையிலிருந்தும் கருத்துகளிலிருந்தும் வெளியே வரவேண்டும்.''

இவ்வாறு காட்டமாகக் கூறியவர் வேறு யாருமல்ல. யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன்.

சிங்களத் தலைவர்கள் தமிழர்கள் விவகாரத்தில் தாதாக்களாக நடக்கப் பார்க்கிறார்கள். தமிழர்களை காலங்காலமாக அடிமைகள்போல் நடத்தும் மனப்பாங்கிலிருந்து சிங்களத் தலைமைகளும், தென்னிலங்கை இனவாதிகளும்

# தூண்டிவிடப்படும் பௌத்தம்!



மாறவில்லை. இன்னும் இப்படியே போகுமாக இருந்தால் இந்த நாட்டில் இன ஒற்றுமையும், சமாதானமும் ஏற்படப்போவதில்லை - என பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியவர்கள் 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப்பகிர்வு தொடர்பாக தனது முன்மொழிவுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் முன்வைத்து பாராளுமன்றில் (கடந்த புதன்கிழமை 09.08.2023) உரையாற்றும்போது, "நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படும் எந்தத் திட்டத்தையும் நான் முன்வைக்கப்போவதில்லை, நாட்டின் எதிர் காலத்துக்காக 13ஆவது அரசியலமைப்பை பொது இணக்கப்பாட்டுடன் முன்னெடுப் பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். பாராளுமன்றம் உடன்படுமானால் மாகாண சபைத் தேர்தல் சட்டத்தையும் நான் திருத்த தயாராகவுள்ளேன்'' என தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்கள் கோரும் அதிகாரப்பகிர்வை வழங்கத் தயாராக இருக்கிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யத் தயாராக இருக்கிறேன் என்று ஆரம்பத்தில் கூறியவர், பின் அதிலிருந்து பின்வாங்கிக்கொண்டு சர்வகட்சி மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்தார். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து கலந்துரையாடினார். அதுவிடயத்திலும் ஏற்ற அரசியல் சூழல் காணப்படாத நிலையில் 13ஆவது திருத்தம் தொடர்பில் பேசத் தொடங்கியிருந்தார். அவ்வாறு பேசும்போது மாகாண சபைகளுக்கான காணி அதிகாரங்கள் பற்றியும், பொலிஸ அதிகாரம் வழங்குவது தொடர்பாகவும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்திவிட்டு இந்திய விஜயத்தை மேற்கொண்டார். அதை முடித்துக்கொண்டு வந்தவர், அவசரம் அவசரமாக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் கூட்டி ஆலோசனை நடத்திய ஜனாதிபதி, கடந்த வாரம் 13ஆவது திருத்தம் பற்றி பாராளுமன்றத்தில் அர்த்தபுஷ்டியோடு உரையாற்றியிருந்தார்.

ஜனாதிபதியவர்கள் தனது பாராளுமன்ற உரையில் குறிப்பிட்ட விடயத்தைக் கவனமாக செவிமடுப்போமானால், 13ஆவது திருத்தத்தினூடாக மாகாண சபைகளை அமுல்படுத்துவதில் கடந்த 36 வருடங்களாக நாம் வெற்றி பெற்றோமா, தோல்வி அடைந்தோமா என்பது ஆராயப்பட வேண்டும். அதிகாரப்பகிர்வு, விடயத்தில் 13ஆவது அரசியல் திருத்தம் இந்த நாட்டின் அதியுயர் சட்டமாகும். அதை நாம் புறக்கணிக்க முடியாது. நிறைவேற்று அதிகாரமும் பாராளுமன்றமும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

எனவேதான் 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப்பகர்வு தொடர்பான எனது முன்மொழிவுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் நான் இந்த சபையில் முன்வைக்கிறேன்" என்று பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து தொடர்பில் கருத்து தெரிவித்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இவ்வாறு கூறியிருந்தார்கள்.

13ஆவது திருத்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி முட்ட விட்டு மோத விட்டு வேடிக்கை பார்க்கும் தந்திரத்தை மிகக் கச்சிதமாக செய்து கொண்டிருக்கிறார் என சிறியும், 13ஐ நடைமுறைப்படுத்தப்போவதாக கூறி சட்டங்களை கொண்டுவந்து நிறைவேற்றப்போவதாகக் கூறி பூச்சாண்டி காட்டுகிற வேலையை ஜனாதிபதி செய்துகொண்டிருக்கிறார் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தமது கருத்துகளை நேரடியாகவே சாடியிருந்தார்கள்.

ஆனால், மறுபுறம் தென்னிலங்கை தரப்பினரோ நாட்டில் தற்போது கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கும் பிரச்சினைகள் பொருளாதார நிதி பிரச்சினைகளே தவிர, வடக்கு, கிழக்குக்கான அதிகாரப்பகிர்வு, தெற்குக்கான அதிகாரப் பிரச்சினை, முஸ்லிம் மக்களுக்கான அதிகாரப் பிரச்சினை, மலையகத்துக்கான அரசியல் பிரச்சினை என்று எதுவுமேயில்லை. ஜனாதிபதி தேவையற்ற விடயங்களை தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடவேண்டாம் என கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு, கிழக்குப்புல மக்களாயினும் சரி, தென்னிலங்கை சக்திகளாக இருந்தாலென்ன இரு துருவத்தாரும் எதிர்க்கும் விவகாரமாக அல்லது நம்பிக்கையீனமற்ற ஒரு முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார் என்ற கோதாவிலேயே இந்த விமர்சனங்களும் கண்டனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதுதான் நாட்டின் அரசியல் சூழ்நிலையாக நகர்ந்து கொண்டிருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குறிப்பிட்டதுபோல், நாங்கள் சொல்வதைத்தான் நீங்கள் கேட்கவேண்டும் நாங்கள் இடும் பிச்சையைத்தான் நீங்கள் யாசிக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டவர்களாகவே தென்னிலங்கையரும் பாராளுமன்ற பிரமுகர்களும் காணப்படுகிறார்கள் என்பது தெளிவாகவே தெரிகிறது.

நாட்டில் மீண்டும் ஓர் அசாதாரண சூழ்நிலையை உருவாக்கும் கெடுபிடிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பது மாத்திரம் தெளிவாகத் தெரிகிறது. அதிலும் குறிப்பாக பௌத்தமயப்பட்ட உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு அரசியல் இலாபம் பெறும்நோக்கில் ஒரு குழுவினர் தொடர்ந்தும் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டும் வெளிப்படையாக உணர்த்தப்படுகிறது. யுத்த முடிவுக்கு முன் கையாளப்பட்டுவந்த உத்திகள் கைவிடப்பட்டு தற்போது பௌத்தம், சிங்களம் என்ற தூண்டு போர்களை தொடக்கிவைக்க மேற்படி கூட்டத்தினர் தொடர்ந்து செயல்பட்டுவருவதன் ஒரு முனைப்பே 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவேண்டாமென நான்கு பௌத்த பீடங்களும் ஜனாதிபதிக்கு எச்சரிக்கை விடுத்ததும், மாகாண சபைத் தேர்தலை நடத்தப்படவேண்டாமென இன்னொரு தரப்பினரும் அதிகாரப்பகிர்வு விடயத்தை கைவிட்டு பொருளாதார உயர்ச்சியில் கவனம் செலுத்துங்கள் என மற்றொரு கூட்டத்தினர் ஆலோசனை கூறிவருவதும் இதன் வெளிப்பாடே!

13ஆவது திருத்தம் தொடர்பான ஜனாதிபதியின் பிரேரணைகள் நாட்டில் மீண்டும் இனவாத மோதலுக்கான வழியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தின தேரர் ஒருவகை எச்சரிக்கையை பாராளுமன்றில் விடுத்த நிலையில்தான பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சபையை பார்த்து, "இங்குள்ள பெரும்பான்மையினரின் இன மனோ பாவத்தில் இன்னும் மாற்றம் ஏற்படவில்லை. நாங்கள் சொல்வதையே நீங்கள் கேட்கவேண்டும் என்று கருதுகிறார்கள். இது ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையை வெளிப்படுத்தவில்லை'' என தனது கவலையை தெரிவித்திருந்தார்.

இதேவேளை, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில தலைவர்கள் துணிந்து 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த தமது பூரண ஆதரவைத் தர காத்திருக்கிறோமெனக் கூறுவது மிகவும் ஆச்சரியமான விடயம். அதிகாரப்பகிர்வு தொடர்பில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட தன்னால் எந்த முடிவுக்கும் வர முடியாது, பொது இணக்கப்பாட்டுடனேயே திருத்தத்தை முன்னெடுக்க விரும்புகிறேன் என்று கூறிவரும் ஜனாதிபதியின் நடவடிக்கைகளை விமர்சித்துவரும் சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்,

13 ஆவது திருத்த அமுலாக்கம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பாராளுமன்றுக்குக் கிடையாது. பொலிஸ் அதிகாரத்தைத் தவிர்த்து ஏனைய அதிகாரங்களை அமுல்படுத்தப்போவதாக கூறிக்கொண்டு ஜனாதிபதி முன்னெடுக்கும் நடவடிக்கைகள் முரண்பாட்டுக்குரிய வேலை என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

இக்கருத்தை கூறிய பேராசிரியர் பீரிஸ். வேறு யாருமல்ல. தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் ஆலோசனை நல்குவதற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவால் பாராளுமன்றுக்கு விசேடமாக கொண்டுவரப்பட்டவர். மறுகாலத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதமகுருவாக இருந்து மந்திர ஆலோசனை வழங்கியவர்.

இவையெல்லாவற்றையும், பார்க்கும்போது 13ஆவது திருத்த விவகாரம் என்பது சதுராட்டக்காரி மாதிரி எல்லாப் பக்கத்திலும் நடனமாடிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதி குறிப்பிடுவதுபோல் ஒரு பொது இணக்கப்பாட்டை உண்டாக்கும் நிலையில் பாராளுமன்றம் இருக்கிறதா, மக்கள் தயார் நிலையில் உள்ளனரா என்று கணக்கிட்டு பார்த்தால் அவ்வெதிர்பார்ப்பு விலத்திக் கொண்டு கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைபோல் ஆகிக்கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

இதற்கிடையில் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினரும் திருகோணமலை பாராளு மன்ற உறுப்பினருமாகிய இரா. சம்பந்தன் ஜனாதிபதியை எச்சரிப்பதுபோல், தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரமான தீர்வு பெறுவதற்கு நான்கு தசாப்த காலமாக ஈடுபாட்டை காண்பித்துவரும் இந்தியா, அதிகாரப்பகிர்வை உறுதிசெய்ய வேண்டும். இந்திய - இலங்கை ஒப்பந்தம் முழுமையாக இலங்கை அரசாங்கத்தால் அமுல்படுத்தப்படவில்லை. அவ்வாறு அமுல்படுத்தப்பட்டாலும் அது அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வாகுமா என்பதில் சந்தேகம் என தெரிவித்திருக்கிறார்.

அத்துடன் ஜனாதிபதியின் பாராளுமன்ற உரைக்கு தக்க பதில் அளிக்க காத்திருக்கிறேன் என்றும் கூறியிருக்கிறார். இதேவேளை, தமிழரசுக் கட்சியினர் 13ஆவது திருத்தம் சம்பந்தமாக தமது நிலைப்பாட்டை தெரிவிக்கவும் பரிந்துரைகளை முன்வைக்கவும் ஜனாதிபதியை விரைவில் சந்திக்கவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி தெரிவிக்கும் கருத்துகள், அதேவேளை பாராளுமன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் முன்வைக்கும் எதிர் கருத்துகள், தமிழத்தரப்பினரின் கோரிக்கைகள், விமர்சனங்கள், எந்தவொரு புள்ளியினரும் சந்திக்கும் வாய்ப்பை பெற்றவையாக காணப்படவில்லை.

இந்நிலையில்தான் பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. தமிழ்த்தரப்பினர் இது தொடர்பில் பல அழுத்தமான கருத்துகளை முன்வைத்து வருகிறார்கள். ஏலவே பல்வேறு சந்தர்ப்பங்களில் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களைத் தருவதற்குத் தயாரகவுள்ளேன் என்று கூறியிருந்த ஜனாதிபதி, மாகாண சபைகளுக்கான அதிகாரம் வழங்குவதில் பொலிஸ் அதிகாரம் போன்ற உணர்வுபூர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளிப்பது, இணக்கப்பாட்டுக்கு வருவது கடினமான காரியமாக அமையலாம் என்ற உண்மையையும் புரிய வைத்துள்ளார்.

மொத்தத்தில் மாகாண சபைக்கான அதிகாரங்களை வழங்குவது என்பது பாரிய எதிர்விளைவுகளை உருவாக்கும் போக்கு கொண்டதாகவே காணப்படுகிறது என்பது தெளிவாகவே உணரப்படுகிறது. காரணம், இந்த அதிகாரப்பகிர்வு விடயம் சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கப்படும் கருத்துகள் என்ற வகையில் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு காணி அதிகாரங்கள் வழங்கப்படுமாக இருந்தல், கிழக்கில் வாழும் பெரும்பான்மை மக்களின் காணிகள் பறிக்கப்படும, குடியிருப்புகள் கலைக்கப்படும், தங்களது சுதந்திரமான குடியேற்றங்கள் தடுக்கப்பட்டுவிடும் என்ற பயமும் எச்சரிக்கைகளுமே இவ்வதிகாரங்கள் வழங்கப்பட்டு விடக்கூடாது என்ற குரோத எண்ணத்துக்குக் காரணமாகும்.

சுதந்திரத்துக்குப்பின் உருவாக்கப்பட்ட கிழக்கில் கல்லோயாத் திட்டம் தொடக்கம் கல்லறாவை வரை ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களின் பலன், பேரின சமூகத்தை பெருக்கி தமிழ்ப்பேசும் சமூகத்தின் இனத்துவப் பரம்பலை சீரழித்த உண்மை சிங்களத் தலைமைகளுக்கு தெரியாத ஒன்றல்ல.

இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் பெரும்பான்மைத் தலைவர்கள் மிகக் கவனமாக இருக்கிறார்கள். பொலிஸ் அதிகாரங்களை இந்தியா போன்று அமையுங்கள். பிரித்தானியா போன்று அமையுங்கள் என தமிழ்த்தரப்பினர் கோருகிறபோதும் சிங்களத் தலைமைகள் அதற்கு கொடுக்கும் வியாக்கியானங்கள் மீண்டும் இனவாதத்தை தூண்டும் கருத்துகளாகவே இருக்கின்றன. ஒரு சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவராக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இருந்தபோதும் அவர் தனது விசுவாசத்தை மிகக் கச்சிதமாகவே காட்டிவருகிறார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பொது இணக்கப்பாட்டை கொண்டுவருவதென்பது எந்தளவுக்கு சாத்தியமாக இருக்கப் போகிறது என்பது புரியாத புதிராகவே இருக்கிறது.

ஜனாதிபதி மிக விசுவாசத்துடனும் கண்ணியத்துடனும் நடந்துகொள்ள முற்பட்டாலும் அவரால் ஒரு பொது இணக்கப்பாட்டைக் கொண்டுவரும் அரசியல் சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்பதுதான் கேள்வி.

பாராளுமன்றில் எதிரே இருப்பவர்கள், அடுத்த ஜனாதிபதி கனவில் மிதந்துகொண்டிருப்பவர்கள். பொதுஜன பெரமுன தெரியாத்தனமாக நிறைவேற்று அதிகாரத்தைப் பறிகொடுத்துவிட்டோமென்று எரிந்து கொண்டிருப்பவர்கள், ஸ்ரீலங்கா சுதந்திர தரப்பினரோ நல்லாட்சிக் காலத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை தங்கள் இயலாமை காரணமாக தவறவிட்டுவிட்டு இப்பொழுது தண்டம் செலுத்திக்கொண்டிருப்பவர்கள்.

மறுபுறத்தில் உதய கம்மன்பில, விமல் வீரவங்ச போன்றவர்கள் யானையை தடவிய குருடர்கள்போல் ஜனாதிபதியை வசை பாடுவதிலேயே தங்கள் அரசியல் பிழைப்பை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறானதொரு அரசியல் கட்டமைப்பில் பாராளுமன்றத்தினூடாக அதிகாரப்பகிர்வை கொண்டுவர, 13ஆவது திருத்தத்தை முழுமைப்படுத்த ஜனாதிபதி எடுக்கும் முயற்சி எந்தளவுக்கு வெற்றிதர முடியுமென்பது பற்றி சிந்திப்பதே கடினமான விடயம்.

பாராளுமன்றிலும் பலமின்றி நிறைவேற்று அதிகாரத்தையும் பயன்படுத்த முடியாத நிலையில் ஜனாதிபதி இருந்துகொண்டிருக்கிறார் என்ற நிலை பலமான விடயமா அல்லது பலவீனமான போக்கா என்பது தீர்மானிக்க முடியாவிட்டாலும் இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளின்பால் கவனம் செலுத்தவேண்டியவராக மட்டும் ஜனாதிபதி செயற்படவேண்டியுள்ளது என்பதே உண்மை.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதன் மூலமோ அன்றி சர்வஜன வாக்கெடுப் பொன்றை நடத்துவதன் மூலமோ இருக்கின்ற நிலைமைகளுக்கு முடிவு கட்டமுடியும் என்பதை அவர் புரிந்து வைத்திருப்பதனாலேயே அவ்வழியை நாட எத்தனித்திருப்பதும் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை எட்ட முடிந்தால் தேசிய அடையாளத்தைப் பாதுகாத்து ஒரே தேசமாக எழுச்சி பெறவும் நாட்டின் அதிகாரத்தை மக்களிடம் நெருங்கி செல்லும் வகையில் பரவலாக்குவதற்கும் வாய்ப்பு கிடைக்கும் என தெரிவித்திருந்தார்.



## அன்பு ஜவஹர்ஷா

# 4,718 அதிபர் நியமனங்களும், நடைமுறைச் சிக்கல்களும்

இன்றைய அரச நியமனங்களில் பேசுபொருளாகியுள்ள இலங்கை அதிபர் சேவையின் 3ஆம் வகுப்பு நியமனம் தொடர்பாக ஊடகங்களிலும் குறிப்பாக, சமூக ஊடகங்களிலும் பலவித கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கை அதிபர் சேவையின் வரலாறு, பிரமாணக் குறிப்பின் நியதிச் சட்டங்கள் கடந்த காலச் செயற்பாடுகள் தொடர்பாக மேலோட்டமான விளக்கமொன்றை முதலில் தெரிந்துகொள்வது பயனுள்ளதாகும்.

இலங்கையிலுள்ள 10,194 அரச பாடசாலைகளில் பொறுப்பான அதிபர்களாக, பிரதி அதிபர்களாக, உதவி அதிபர்களாக இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பின்படி 16,512 பேர் ஆளணித் தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள். 1985.01.01க்கு முன்னர் பாடசாலை அதிபர்கள் என்ற பதவி இருந்தாலும் அதற்கென வரையறுக்கப்பட்ட விதிமுறைகளைக்கொண்ட யாப்பு இலங்கை அதிபர் சேவை என்று 1985.01.01 முதல் ஸ்தாபிக்கப்பட்டது. 1986.11.06ஆம் திகதிய 426/11ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் இச்சேவை 1985.01.01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது.

அப்போது தரம் I, II, III என மூன்று பிரிவுகளில் ஆளணி தீர்மானிக்கப்பட்டு முதன்முதலாக 1989ஆம் ஆண்டும், பின்னர் 1991ஆம் ஆண்டும் போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. மூன்று தரங்களுக்கும் வெவ்வேறு பரீட்சைகள் நடத்தப்பட்டு எழுத்துப் பரீட்சை வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் இன விகிதாசார அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது.

1994.10.06 முதல் இலங்கை ஆசிரியர் சேவை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் ஆசிரியர் - அதிபர்கள் இடையே சம்பள முரண்பாடு தோன்றியமையால் நீண்ட கலந்துரையாடல்களுக்குப் பின்னர் 1999.07.02ஆம் திகதியிடப்பட்ட 1086/26ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 1997.01.01ஆம் திகதி தொடக்கம் இச்சேவை மீளச் சமைக்கப்பட்டது. அப்போது 3, 2-11, 2-1,1 என்ற வகையில் வகுப்பு, தரங்கள் தீர்மானிக்கப்பட்டன. இதன்படி மேற்படித் தரங்களுக்கு 2002.01.01 முதல் போட்டிப் பரீட்சை மூலம் நியமனங்கள் வழங்கப்பட்டன. இந்த நியமனம் மொழி, இன வேறுபாடு இல்லாது எழுத்துப் பரீட்சை புள்ளிகளை மட்டும் வெட்டுப்புள்ளிகளாகக்கொண்டு வழங்கப்பட்டன.

மீண்டும் இன்றுள்ள இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பு 1885/31ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2008.07.01 முதல் செயல்படும்படியாக 2014.10.22 அன்று வெளியிடப்பட்டது. இதன்மூலம் மீண்டும் 3, 2, 1 என்ற அடிப்படையில் அதிபர் சேவை வகுப்புகள் பிரிக்கப்பட்டன.

**Sri Lanka Principals' Service Vacancies & Medium Appointment (Class-3)**

| No | Province | Sinhala Medium | Tamil Medium | Total |
|---|---|---|---|---|
| 1 | Sabragamuwa Province | 649 | 135 | 784 |
| 2 | North Western Province | 527 | 137 | 664 |
| 3 | Eastern Province | 97 | 526 | 623 |
| 4 | Central Province | 335 | 279 | 614 |
| 5 | Uva Province | 376 | 87 | 463 |
| 6 | Southern Province | 494 | 32 | 526 |
| 7 | Western Province | 427 | 72 | 499 |
| 8 | Northern Province | 13 | 217 | 230 |
| 9 | North Central Province | 275 | 40 | 315 |
| | Total | 3193 | 1525 | 4718 |
| | New Interview Appointment | 1892 | 1266 | 4710 |
| | Already Selected | 1552 | | |

இச்சேவைக்கு மூன்றாம் வகுப்புக்கான போட்டிப் பரீட்சை மூலமே ஆட்சேர்ப்பு செய்யமுடியும் என்ற விதியும் சட்டமாகியது.

ஆனால், 2008.07.01 முதல் செயல்படும் புதிய பிரமாணக் குறிப்பு ஆறு வருடங்களுக்குப் பின்னரே 2014.10.22 அன்று வெளியிடப்பட்டது. ஆனால், 1997.01.01 முதல் அமுலில் இருந்த முன்னைய பிரமாணக் குறிப்பின்படி பரீட்சைகளும்,நியமனங்களும் பின்வருமாறு இடம்பெற்றன.

2008.07.01 க்கு முன்னர் நடைமுறையில் இருந்த இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பின்படி 2-11, 3 ஆம் வகுப்புகளின் வெற்றிடங்களை நிரப்ப 2005ஆம் ஆண்டு விண்ணப்பம் கோரப்பட்டு, 2006 ஆம் ஆண்டு போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு சிங்களவர், இலங்கைத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள், இந்தியத் தமிழர், பறங்கியர், மலாயர், வேறு இனத்தவர் என்ற அடிப்படையில் 2008.12.01 அன்று நியமனம் வழங்கப்பட்டது. 2-11 தெரிவு வெட்டுப்புள்ளி முறையே 232, 228, 228, 218, 212, 212, 212 என்று இருந்தது. 597/08(F/R), 593/08(F/R ), 531/08(F/R ) ஆகிய இலக்கங்கள்கொண்ட வழக்குகளின் தீர்ப்பின்படி இது இரத்துசெய்யப்பட்டு பின்னர் பின்வருமாறு நியமனம் வழங்கப்பட்டது.

மேற்படி உயர் நீதிமன்ற வழக்கு தீர்ப்பின்படி 2009,11.13 முதல் மேல் சொல்லப்பட்ட இன அடிப்படையில் வெட்டுப்புள்ளிகள் தீர்மானிக்கப்பட்டு நியமனம் புதிதாக வழங்கப்பட்டது.

இதன்படி 212 புள்ளிகள் பெற்றவர்களுக்கு நியமனம் கிடைத்தமையால் இதைச் சுட்டிக்காட்டி தொடுக்கப்பட்ட 212/2010(F/R) உயர் நீதிமன்ற வழக்கு தீர்ப்பின்படி 212 புள்ளிகளுக்கு மேல் சகலருக்கும் இன அடிப்படை பாராது 2012.01.26 முதல் நியமனம் கிடைத்தது. இதில் எழுத்துப் பரீட்சையில் 155 வெட்டுப்புள்ளியாக கணிக்கப்பட்டது.

மேல் சொல்லப்பட்ட மூன்று நியமனங்களிலும் நேர்முகப் பரீட்சையின்போது வேறு தகமைகளுக்கும் புள்ளி வழங்கப்பட்ட நிலையில், கடமை பார்த்த காலத்துக்கு மொத்தம் 30 புள்ளிகள் வழங்கப்பட்டன.

இலங்கை அதிபர் சேவையில் வெற்றிடங்கள் இல்லாமையால் இந்தப் பட்டியலில் இருந்த 212 முதல் 219 புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு மேலதிக ஆளணி நியமனம் வழங்கப்பட்டது. 2014.01.01அன்று இவர்கள் நிரந்தர அதிபர் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

மேல் சொல்லப்பட்டபடி தெரிவுசெய்யப்படாத, 2010.12.31 வரை மூன்று வருடங்களுக்கும் மேல் கடமை பார்த்த சுமார் 2,000 பேருக்கு இறுதியாக வழங்கப்படும் நியமனம் என்ற நிபந்தனையோடு இலங்கை அதிபர் சேவையின் 2-11, 3ஆம் வகுப்புகளுக்கு விண்ணப்பிக்கும் தகைமையை அடிப்படையாகக்கொண்டு மேலதிக ஆளணி நியமனம் வழங்கப்பட்டது. இவர்கள் இன்றும் பதவி உயர்வு இல்லாமல் மேலதிக ஆளணியாகவே உள்ளார்கள்.

இவையெல்லாம் 2008.07.01க்கு முற்பட்ட இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பின்படி செய்யப்பட்ட நியமனங்களாகும். 2008.07.01 முதல் செயல்படும் இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்புக்கு சகல 3ஆம் வகுப்பு அதிபர்களும், 220 மொத்த புள்ளிகள் பெற்றிருந்த 2-11 தர அதிபர்களும் முறையே 3, 2 ஆம் வகுப்புகளுக்கு நியமனத் திகதியிலிருந்து உள்ளீர்ப்பு செய்யப்பட்டு பதவி உயர்வு பெற்றுவிட்டார்கள். 212-219 இடையில் புள்ளிகள் பெற்றவர்கள் 2014.01.01 முதல் 2ஆம் வகுப்புக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டு 2020.01.01 முதல் முதலாம் வகுப்பு பதவி உயர்வு பெற்றுள்ளனர். 2008.07.01 முதல் செயல்படும் இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பின்படி முதல் முறையாக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு 2016.05.09 சுமார் 4,000 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

எம்.எஸ். அமீர் ஹுசைன்

# மாகாண சபைகள்; வேண்டுமா?



## தீர்மானிக்கும் பொறுப்பு பாராளுமன்றத்திடம்

1987ஆம் ஆண்டிலிருந்து 2017ஆம் ஆண்டுவரையான 30 வருடங்களாக நடைமுறையில் இருந்துவந்த மாகாண சபைகள் முறை நாட்டுக்கு அவசியமா, இல்லையா? இந்தச் சட்டமூலத்துக்கு திருத்தம் வேண்டுமா, வேண்டாமா? என்பதை தீர்மானிக்கும் பொறுப்பை பாராளுமன்றத்திடம் ஒப்படைப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023 ஒகஸ்ட் 09ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

ஏற்கனவே சர்ச்சைக்குரிய விடயமாக இருந்துவருகின்ற - 2017ஆம் ஆண்டுமுதல் தேர்தல் நடத்தப்படாது முடங்கி இருக்கின்ற அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைகள் முறை அவசியமற்றது என்ற வாதப் பிரதிவாதங்கள் கடந்த 2010ஆம் ஆண்டுமுதல் இருந்து வருகின்ற ஒரு விடயமாகும். பதவிக்கு வந்த அரசாங்கங்களுக்கும் பாரியதொரு நெருக்கடியை உருவாக்கி வந்திருக்கின்ற விடயமாகும். அதனால் 06 வருடங்களின் பின்னர் மீண்டும் 13 பற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சை எடுத்துள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் அது தொடர்பான பேச்சை ஆரம்பித்தார். அதற்காக சர்வகட்சி மாநாடு நடத்தப்பட்டது. முன்னாள் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஸ்டைலில் ரணிலும் சர்வகட்சி மாநாடொன்றை நடத்தினார். அதன்பின்னர் அதிகாரப் பரவலாக்கம், 13ஆவது திருத்தம், மாகாண சபைகள் முறையும் அதிகாரப் பங்கீடும் போன்ற விடயங்கள் மீண்டும் இலங்கை அரசியலில் சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கின்றது. தமிழர் தரப்பு அவர்களுக்கான அரசியல் உரிமையாக அதிகாரப் பங்கீட்டை கோரி வருகின்றது. ஆனாலும் அரசாங்கம் ஒருபோதும் அதிகாரத்தைப் பங்கீடு செய்ய முடியாது என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு அதிகாரத்தைப் பரவலாக்க எடுத்த முயற்சியாக 1988ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 30 வருடங்களாக 09 மாகாணங்களுக்கும் 09 மாகாண சபைகள் நடைமுறையில் இருந்துவந்துள்ளன.

இருந்தாலும் வடக்கும் கிழக்கும் ஒன்றாக இணைக்கப்பட்டதாக இருந்தபோது 08 மாகாண சபைகளும், வடக்கும் கிழக்கும் இரண்டாக பிரிக்கப் பட்டு தனித்தனி மாகாணங்களாக்கப்பட்ட பின்னர் 09 மாகாண சபைகளும் என்ற அடிப்படையில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டிருந்தன. 2009ஆம் ஆண்டு சிவில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டிலுள்ள இனவாதிகளும் தேசப்பற்றாளர்களும் இந்த மாகாண சபைகள் முறை அவசியம் இல்லை என்று கூக்குரல் எழுப்பி வந்தனர். அதனால் பதவியிலிருந்து ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்ரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் இதயசுத்தி யோடு இந்த மாகாண சபைகள் முறைமையை நடை முறைப்படுத்த முன்வரவில்லை. 2017ஆம் ஆண்டு கட்டம் கட்டமாக மாகாண சபைகளது பதவிக்காலம் முடிவடைந்த கையோடு தேர்தல் நடத்தப்படாது இழுத்தடிப்புச் செய்யப்பட்டது.

இவ்வாறான ஒரு நிலையில் கடந்த 09ஆம் திகதி ஜனாதிபதி பாராளுமன்றத்தில் தோன்றி நீண்டதொரு உரையை நிகழ்த்தினார். அதற்கு முன்னர் நடத்தப்பட்ட சர்வகட்சி மாநாட்டை அடிப்படையாக வைத்தே இந்த உரை அமைந்திருந்தது. குறிப்பாக, இந்த மாகாண சபைகள் நடைமுறையில் இருந்த காலப்பகுதியில் வருடாந்தம் 55,000 கோடி ரூபா மாகாண சபைகளுக்காக ஒதுக்கப்பட்டு வந்ததாகவும் அதனால் உரிய பயன் மக்களுக்குக் கிடைத்ததா என்ற கேள்வியுடன் ஜனாதிபதி அவரின் மகாண சபைகள் தொடர்பாகவும் அதிகாரப்பரவாலாக்கல் தொடர்பாகவும் இருந்துவருகின்ற நிலைப்பாட்டை அறிவித்தார்.

இதில் குறிப்பாக தற்போதைய நிலையில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாகவும் மாகாண சபைகள் தொடர்பாகவும் எங்கோ விசேடமான திட்டம் ஒன்று வகுக்கப்படுகின்றது என்ற விடயத்தை வெளிப்படுத்தும் விதமாக ஜனாதிபதியின் நடவடிக்கைகள் இருக்கின்றன. எதுவானாலும் மாகாண சபைகள் முறையானது நாட்டுக்கு பாரிய சுமையாக இருந்து வருவதால் புதிதாக கொண்டுவரப்படுகின்ற சட்டம் ஒன்றின் மூலம் முற்றாக நடைமுறையில் இருந்து ஒழித்துக்கட்டி விடுவதே உத்தேசமாக இருக்கின்றது. ஆனாலும் இலங்கையின் நேச நாடான இந்தியா ஏற்கனவே இலங்கைக்கு 5,500 கோடி ரூபாவை தவணை அடிப்படையில் செலுத்தும் வகையில் கடன் வழங்கி இருக்கின்றது.

அத்துடன், அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் என்பது இலங்கையில் இந்தியா ஈன்றெடுத்த குழந்தையாக இருந்து வருகின்றது. இலங்கையில் இனப்பிரச்சினை கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனாவுக்கும் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கைக்கு அமைவாக 13ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவராக இருந்த வேலுப்பிள்ளை பிரபாகரனை இந்தியப் பிரதமர் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியாவில் வீட்டுக்காவலில் வைத்துவிட்டு இலங்கை வந்து தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வாக இந்த உடன்படிக்கையை செய்து கொண்டார். அதே பிரதமர் ராஜீவ் காந்தியை பின்னர் அதற்கு வஞ்சம் தீர்க்கும் வகையில் தற்கொலை குண்டுத் தாக்குதல் மூலம் புலிகள் படுகொலை செய்தனர்.

ஆனாலும் இன்றுவரையிலும் இலங்கை இந்தியாவுக்கு இந்த 13ஐ அமுல்படுத்த உடன்பட்ட நிலையில் இருந்து வருகின்றது. ஜனாதிபதி அதன் காரணமாகவே இந்த மாகாண சபைகள் முறைமையை இனி இல்லாதொழிக்க முடியாது. அது அரசியலமைப்பின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட சட்டமாக மாறி இருக்கின்றது. அத்துடன், உலக நாடுகளுக்கு நாம் இவ்வாறானதோர் அதிகாரப்பரவலாக்கம் நடைமுறையில் இருக்கின்றது என்பதை வெளிக்காட்டியுள்ளோம் என்ற தகவலையும் அவரது உரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் மாகாண சபைகள் வேண்டுமா, வேண்டாமா என்பதற்கான பல நியாயங்களை முன்வைத்துள்ள ஜனாதிபதி இரண்டுக்குமான நியாயங்களையும் மும்மொழிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

இதில் மாகாண சபைகள் நடைமுறையில் இருக்க வேண்டும் என்பதற்கான நியாயங்களும் உள்ளன. மாகாண சபைகள் முறைமை மற்றும் அதிகாரப்பரவலாக்கல் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்று வாதிடுபவர்களுக்கும் அதற்கான நியாயங்களையும் தெரிவித்துள்ளார். அதில் குறிப்பாக நாட்டுக்கு சுமை, அதிக செலவினம், கடந்த 30 வருட காலப்பகுதிக்குள் மாகாண சபைகள் முறைமை நடைமுறையில் இருந்ததால் ஏற்பட்டுள்ள அரசியல், நிர்வாக நடைமுறைச் சிக்கல்கள், அதனால் ஏற்பட்டுள்ள நிர்வாக இலாகாக்கலுக்கிடையிலான முரண்பாடுகள் உட்பட பல விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள.

மறுபக்கமாக இந்த முறை அவசியம் எனில் அதற்காக என்ன செய்ய முடியும், எவ்வாறு அதிகாரப்பரவலாக்கம் என்ற அடிப்படையில் இந்த மாகாண சபைகள் முறைமையை நடைமுறைக்கு சாத்தியமானதாகவும் செயல்திறன் கொண்டதாகவும் மாற்றியமைப்பது. அதற்காக அரசியலமைப்பால் என்ன செய்ய முடியும், இந்த அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்த வரலாறு, எதிர்பார்ப்பு, இந்தியாவுக்கும் வடக்கு வாழ் தமிழர்களுக்கும் அரசாங்கம் செய்யவேண்டிய பொறுப்புணர்ச்சி, பொறுப்புக் கூறல் என்ற விடயங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

மாகாண பொலிஸ் அதிகாரங்களைத் தவிர ஏனைய அதிகாரங்களை வழங்குவதில் இருக்கின்ற சாத்தியப்பாடுகள் பற்றியும் மும்மொழியப்பட்டிருக்கின்றது. அதனால் தற்போது ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் இருந்துவருகின்ற மாகாண சபைகள் முறைமையை உயிரோட்டம் உள்ளதாக மாற்றியமைக்கும் வரையில் ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களைக்கொண்ட ஆலோசனை சபைகளை உருவாக்குவது, புதிய சட்டமூலம் ஒன்றின் ஊடாக தற்போதைய மாகாண சபைகள் முறையில் மாற்றங்களைக் கொண்டுவருவது என்ற விடயங்களை பிரஸ்தாபித்துள்ளார்.

அத்துடன், அண்மையில் தமிழ்த் தரப்புடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலைப்போன்று கிழக்கில் இருந்துவருகின்ற பிரச்சினைகள் மற்றும் முஸ்லிம் சமூகம் தொடர்பான நிலைப்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக முஸ்லிம் தரப்பினருடனும் கலந்துரையாடப்பட வேண்டும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார். அத்துடன், மலையக மக்களின் உரிமைக் கோரிக்கைகள், இந்தியாவின் பொறுப்புணர்ச்சி உட்பட பல விடயங்கள் தொடர்பாக தமிழ் முற்போக்கு பிரஜைகள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மனோ கணேசனும் அவரது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

மறுபுறமாக கடந்த 09ஆம் திகதி பாராளு மன்றத்தில் கருத்து வெளியிட்ட எதிரணி உறுப்பினர் விமல் வீரவங்ச தெரிவிக்கையில், தமிழர்களோடும் முஸ்லிம்களோடும் மாத்திரமே பேச்சுவார்த்தை நடத்தப்படுவது ஏன்? வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வாழ்கின்ற சிங்கள மக்களுக்கு பிரச்சினைகள் இல்லையா? அவர்களுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. வடக்கில் பௌத்தர்களின் புனிதத்தலங்கள் தொடர்பாக தமிழர் தரப்பால் கட்டுப்பாடுகள் உள்ளன. அதனால் சிங்களத் தரப்புடனும் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி அவ்வாறான பேச்சுவார்த்தைக்கு தயார் என்பதை தெரிவித்தார்.

மறுபுறமாக எதிர்க்கட்சித் தலைவர், முக்கிய மாக எதைப்பற்றி பேசியும் பலன் இல்லை. எல்லாம் காலத்தை விரயமாக்கும் செயல். அதனால் உடனடியாக அரசாங்கம் ஒத்திப் போட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தல் களை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். எதுவானாலும் ஆளும் கட்சியோடு இணைந்துள்ள பொதுஜன பெரமுன உட்பட ஏனைய அரசியல் கட்சிகளது நிலைப்பாடு குறித்து தெளிவாக எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை.

ஆங்காங்கே சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப கருத்துகள் முன்வைக்கப்பட்டாலும் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் தமிழர்களின் அபிலாஷை முழுவதையும் அடைய தமிழ்த்தரப்பு முயற்சி எடுக்கும்போது தொடர்ச்சி யாக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டு ஐக்கிய இலங்கை என்ற சித்தாந்தத்திற்கு வெளியே போக முடியாது. பூரணமாக அதிகாரப்பரவலாக்கம் கூடாது, அவ்வாறு செய்யும்போது நாடு பிளவுபட வாய்ப்பு இருக்கின்றது என்ற கருத்து முன்வைக்கப்பட்டு வருவதால் பதவிக்கு வருகின்ற எந்தவொரு ஜனாதிபதியும் அதனை மீறி 13ஐ நடைமுறைப்படுத்த முன்வருவதில்லை.

காலத்துக்குக் காலம் பதவிக்கு வருகின்ற ஜனாதிபதிகள் தமது அரசியல் இருப்பை ஸ்தீரப்படுத்திக்கொள்ள அல்லது தேர்தல் ஒன்றுக்கான காலம் நெருங்கும்போது தமிழர் ஆதரவை உறுதிப்படுத்திக்கொள்ள மாகாண சபைகள் பற்றியும் 13 பிளஸ் என்றும் தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க முன்வருவதாகவும் காட்டிக்கொள்ள முயற்சியெடுத்துள்ள வரலாற்றையே நாம் அவதானிக்க முடிகின்றது. 13 பற்றிய பேச்சுகளும் அதில் சொல்லப்பட்ட தற்கு மேலதிகமான அதிகாரங்களை வழங்குவதென்பதும் வெறும் அரசியல் நாடகமாகவே இருந்து வந்திருக்கின்றது. அதிலிருந்தே பேரினவாத சிங்களத் தரப்பின் ஆதரவை தீர்மானிப்பதும் தமிழர் தரப்பை திருப்திப்படுத்துவதும் இருந்து வருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் நடந்திருப்பதும் இவ்வாறான தொரு சந்தர்ப்பமாகும். நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகின்றது என்ற அடிப்படையில் எதையும் நோக்கும் ஜனாதிபதி தூர நோக்குடன் 13ஆவது திருத்தம் பற்றிய கலந்துரையாடலுக்கு கதவுகளை திறந்துள்ளார். ஆனால் இது வெறுமனே இன்னும் எஞ்சியுள்ள ஒருவருட காலத்தை எப்படியாவது கடத்துவதும் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து காய் நகர்த்துவதும் 5,500 கோடி ரூபா கடன் வழங்கியுள்ள அயல்நாடான இந்தியாவை திருப்திப்படுத்துவதும் பின்னணி இலக்காக இருந்து வருகின்றது.

அவ்வாறில்லாமல் இருக்குமாயின் அரசாங்கம் இதயசுத்தியோடு மாகாண சபைகள் முறைமையில் ஆர்வம் கொண்டிருக்குமாயின் பேசிப் பேசி காலம் கடத்தாமல் இடைநிறுத்தப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த அவசரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவே காலத்தின் தேவையாகும்.

அதன் மூலமே புதிய நம்பிக்கையை ஏற்படுத்தலாம்.

---

## நாட்டின் பொருளாதார சுமையை...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தோடு அவர்கள் பணியில் இருக்கும் காலத் தில் அடிக்கடி போனஸும் வழங்கப்படுகிறது. இதையெல்லாம் அதிகமாக வழங்குமாறு மக்களா கூறினார்கள்? இந்த நிறுவனங்கள் யாவும் நட்டத்தில் இயங்க மக்களா காரணம்?

இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள் யார்?. உள்நாட்டு உற்பத்தியைக் கூட்டாமல் இறக்குமதி மூலம் கோடிக்கணக்கில் தரகுப்பணம் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். உள்நாட்டு உற்பத்திகளைத் திட்டமிட்டுப் பாதிப்படையச் செய்து விவசாயம், உள்நாட்டுக் கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் இத்தொழிலில் ஈடுபடுவோருக்கு வாயிலும் வயிற்றிலும் மண்ணைப் போட்டு இறக்குமதி மூலம் இலாபம் உழைத்துக்கொண்டிருப்பவர்கள் யார்? கோழி முட்டை, கோழி இறைச்சி உற்பத்தியைக்கூடக் கூட்ட முடியாமல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது அரசு. இவற்றிலும் பெருமளவு ஊழல், மோசடி நிலவுவதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

முட்டை, கோழி இறைச்சி ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு வரும்போது துறைசார்ந்த அமைச்சர்கள் போதியளவு கையிருப்பு இருப்பதாக உண்மைக்குப் புறம்பாக அறிக்கை மாத்திரம் விடுகின்றனர். இவர்கள் அறிக்கை விட்டால் பொருட்களுக்குத் தட்டுப்பாடு வரப்போகிறதென மக்கள் நம்புகின்றனர். உள்நாட்டு உற்பத்தியைக் கூட்டி இறக்குமதியைக் குறைத்திருந்தால் உள்நாட்டில் பெருமளவு கையிருப்பைப் பேணியிருக்கலாம். இதுவும் போதாதென்று தடை, கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்த பொருட்கள் யாவும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் மேலும் டொலர் நெருக்கடி ஏற்பட்டு பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கப் போகின்றது. இதிலும் பல ஊழல், மோசடிகள் நிலவத்தான் போகின்றன. இத்தகைய பொருளாதாரச் சீரழிவுக்குக் காரணமானவர்கள் யார்?.

உற்பத்தியாளர்களும் விற்பனையாளர் களும் பொருட்களுக்குச் செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி 'எரிகிற வீட்டில் எண்ணெய் ஊற்றுவது போல்' தாம் விரும்பியவாறு பொருட்களின் விலையைக் கூட்டி விற்கின்றனர். இதனைக் கண்காணிப்பதற்கான முறைமை இலஞ்சம், ஊழல் நிறைந்ததாகக் காணப்படுகிறது. இந்தச் சுமைகள் முழுவதும் மக்கள்மீது சுமத்தப்படுகின்றன. அரிசி ஆலை உரிமையாளர்கள் தாம் நினைத்தவாறு நெல், அரிசி போன்றவற்றின் விலையைத் தீர்மானித்து மக்கள்மீது சுமத்துகின்றனர். எல்லாமே கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருப்பதற்கு யார் காரணம். உள்நாட்டில் பொருட்களின் கையிருப்பைச் சமநிலையில் பேணாமல் வைத்திருந்து பொருட்களின் விலையேற்றத்துக்குக் காரணமாக இருந்தவர்கள் யார்? பாராளுமன்றம் செல்வதற்குரிய வாக்குகளைப் பெறுவதற்கு மக்கள் தேவைப்படுகின்றனர். பாராளுமன்றத்துக்குத் தெரிவாகிய பின்னர் நீ யாரோ, நான் யாரோ என்பது போலவே அரசியல்வாதிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

விவசாயத்துக்கான நீர் வழங்குதல் தொடர்பான ஆரம்பக் கூட்டம் மாவட்ட செயலாளர் தலைமையில் பிரதேசத்துக்குப் பிரதேசம் நடைபெறும். அக்கூட்டத்தில் மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள், கமநல சேவைகள் திணைக்கள மாவட்ட ஆணையாளர், பெரும்பாக உத்தியோகத்தர்கள், விவசாயக் குழுக்களின் பிரதிநிதி கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொள்வார்கள்.

நீர்ப்பாசனத்துக்காக குளங்களிலுள்ள நீரின் கொள்ளளவு, செய்கைபண்ணப்பட வேண்டிய நிலங்கள் (வட்டை, கண்டங்கள்), ஏக்கர்களின் அளவு, முதலாவது நீர் வழங்கப்படும் திகதி, வயல் வேலை ஆரம்பிக்கும் திகதி, விதைப்புத் திகதி, அறுவடைத் திகதி ஆகியன பிரதேசத்துக்குப் பிரதேசம், கண்டத்துக்குக் கண்டம், வட்டைக்கு வட்டை தனியாக அறிவிக்கப்படும்.

இவை யாவும் உயர் மட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள், குறித்த நீர்த்தேக்கங்கள், குளங்கள், வாவிகள், மின்சார உற்பத்தி, குடிநீர் விநியோகம் ஆகியவற்றோடு சம்பந்தப்பட்டிருக்குமாயின் அவற்றுக்குரிய பொறியியலாளர்கள், அதிகாரிகளும் அன்றைய கூட்டத்தில் சமுகமளித்திருப்பார்கள். தீர்மானம் எடுக்கும்போது முதலில் விவசாய நடவடிக்கைகள், இரண்டாவது குடிநீர், மூன்றாவது மின் உற்பத்தி என்ற முன்னுரிமை அடிப்படையில் நீர் விநியோகத்துக்கான தீர்மானம் எடுக்கப்படும்.

இவ்வாறுதான் அம்பாந்தோட்டை உடவளவை நீர்த்தேக்க ஊட்டப் பிரதேசங்களுக்கு விவசாயத்துக்காக நீர் வழங்குதல் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இத்தீர்மானங்கள் யாவும் உயர்மட்ட அதிகாரிகள், விவசாயக் குழுக்கள், விவசாயிகள் யாவரும் சேர்ந்து எடுத்ததாகும். உடவளவை நீர்த்தேக்கத்தின் நீர்க் கொள்ளவு, விவசாயத்துக்கான முன்னுரிமை என்பவற்றுக்கு இணங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

ஒக்டோபர் மாதத்தில் மழை கிடைக்குமென எதிர் பார்த்து அதுவரை ஆவியாகும் நீரின் அளவு என்பன கணக்கிடப்பட்டுத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இது சிறுபிள்ளைத் தனமான தீர்மானம் அல்ல. நாட்டின் உள்நாட்டு உற்பத்தி, அபிவிருத்தியோடு சம்பந்தப்பட்ட தீர்மானம். பல ஆயிரம் ஏக்கர் நெற்செய்கையோடு சம்பந்தப்பட்ட தீர்மானம். நெற்செய்கைக்கு நீரின்றி நெற்பயிர் வாடி வதங்கியபோது எதையும் கருத்திற்கொள்ளாமல் மின்சக்தி, எரிசக்தி அமைச்சர், மின் உற்பத்திக்கு நீர் தேவை எனக் கூறி நீரை வழங்கவிடாமல் அடம்பிடித்துக்கொண்டிருந்தார். இவ்வாறு பலமுறை அவர் அடம்பிடித்திருக்கின்றார். விவசாயத்துக்கு நீர் வழங்காமையால் விவசாயிகளின் போராட்டம் தீவிரமடைந்தது. உண்ணாவிரதமும் இருந்தனர். அவ்விவசாயிகளுக்காக நாடுபூராகவும் குரல் கொடுக்க ஆரம்பித்தனர். ஆளும் கட்சியிலுள்ள சில அரசியல்வாதிகளும் எதிர்க்கட்சியிலுள்ள அரசியல்வாதிகளும் குரல் கொடுத்தனர். தீர்மான மெடுத்த உயர் அதிகாரிகள் விவசாயிகளைச் சந்திக்க மறுத்தனர். சமனலவெவயிலிருந்து நீரைப் பெறு வதற்கான வசதிகள் இருந்தும் அதையும் செய்ய மறுத்தனர்.

07.08.2023 இல் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானத்துக்கிணங்க மறுநாள் சமனலவெவயில் இருந்து உடவளவை நீர்த்தேக்கத்துக்கு நீரை வழங்கினார்கள். உரிய காலத்தில் நீர் வழங்கப்படாமையால் 20 வீதத் துக்கு மேற்பட்ட விளைச்சல் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாய உள்ளீடுகளின் இறக்குமதியைத் தடைசெய்த மையால் 2020, 2021, 2022 காலப் பகுதியில் விவசாய உற்பத்திகள் 40 - 60 வீதம் வரை வீழ்ச்சி கண்டன. அதனால் அரிசி, மரக்கறி, பெருந்தோட்ட உற்பத்திகளின் விலை பல மடங்கு அதிகரித்தது. இதற்கு முற்றுமுழுதாகக் காரணமாக இருந்தவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அவரின் தூரநோக்கற்ற தீர்மானத்தால் மொத்த உள்நாட்டு விவசாய உற்பத்தி பாதிப்படைந்தது. அதன் விளைவுகள் மக்கள்மீது சுமத்தப்பட்டன.

தற்போது விவசாய உள்ளீடுகள் 75 வீதத்துக்கு மேல் வழங்கப்பட்ட போதிலும் அரிசியின் விலை குறிப்பிடத்தக்களவு குறைந்ததாகத் தெரியவில்லை. சந்தையில் அரிசி மாபியாக்கள் விலையை நிர்ணயம் செய்துகொண்டிருக்கின்றனர். இந்த மாபியாக் களின் தனியுரிமையைக் கட்டுப்பத்த அரசால் முடிய வில்லை. அவர்களில் பெரும்பாலானோர் ஆளுந் தரப்பு அரசியல்வாதிகளின் கையாட்களாக இருப்பத னால் அரசும் அவர்களின் பக்கமே சார்ந்து நிற் கிறது. அரிசி ஆலை உரிமையாளர் ஒருவர் வெளிமாவட் டங்களிலிருந்து நெல் கொள்வனவுக்காக வருகை தந்த கொள்வனவாளர்களைத் தடுத்து, அப்பிரதேசங்களிலி ருந்து குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்த நெல்லை வெளியூர் வியாபாரிகளுக்கு அதிக இலாபத் துக்கு விற்பனை செய்தார். அவருக்குச் சகல செல்வாக் குகளும் இருந்தமையால் அவரின் நடவடிக்கைகளைத் தடுக்க முடியவில்லை எனக் கூறி விவசாயிகள் பெரு மூச்சு விட்டனர். இதே மாதிரியான செயற்பாடுகளே பல துறைகளிலும் வெகுவாக நடந்து கொண்டிருக்கின்றன.

அரசியல்வாதிகளில் பலர் நாட்டில் ஒரு பிரச்சினை யும் இல்லாததுபோல் அறிக்கை விட்டுக்கொண்டிருக் கின்றனர். இது 'பூனை கண்ணை மூடிக்கொண்டு உலகமே இருண்டுவிட்டது'போல் நினைப்பது போலா னது. அதுவும் உண்மைதான். மக்கள் நலன் பற்றிச் சிந்தித்திருந்தால் அவர்களுக்குப் பிரச்சினை விளங்கி யிருக்கும். அவர்களுக்குத்தான் பிரச்சினை இல்லையே. வரிசையை இல்லாமல் செய்தது. சில பொருட்களுக்கு விலை குறைத்தது. பணவீக்கம் குறைந்தது. சந்தையில் சகல பொருட்களும் அதிகரித்த விலையிலாவது கிடைக் கிறது. விவசாயம் நடைபெறுகிறது. இனி என்ன பிரச்சினை மக்களுக்கு இருக்கிறது. 'ஆபத் பாண்டவர்போல் வந்து ரணில் எல்லாப் பிரச்சினை யையும் தீர்த்துவிட்டார்' என்பதுபோல் மேடைகளில் பிரசங்கம் செய்து திரிகின்றனர்.

இலங்கைக்கு இருக்கும் கடன் சுமையும், டொல ரின் பெறுமதி அதிகரித்து ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிய டைகின்றது என்ற காரணங்கள் மாத்திரம் போதுமே எல்லாப் பிரச்சினையும் நாட்டில் இருக்கிறது என்று கட்டியம் கூற. எதிர்வரும் காலத்தில் நாட்டில் மோச மான நெருக்கடியும் ஏற்பட்டுக் காலநிலை பொய்த்துப் போனால் பஞ்சம், பட்டினி ஏற்பட்டு உணவுக்காகப் போராடும் நிலைகூட ஏற்படலாம். அத்தருணத்தில் இததகைய அரசியல்வாதிகள் பிரான்ஸ் புரட்சிச் காலத்தில் மக்கள் பாண் கேட்டுப் போராடியபோது 16ஆம் லூயி மன்னனின் பட்டத்துராணி மேரி ஆன்ட்ரோவிட் 'பாண் இல்லையென்றால் கேக் சாப்பிடுங்கள்' எனக் கூறியதுபோல் போகிற போக்கில் இவர்களும் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

காலம் பதில் சொல்லும்.

# கல்லில் தேங்காய் உரிக்கும் இலங்கை அரசியல்!

**உமர் அலி உஸ்மான்**

ஜே.வி.பி. கலவரம், விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கை போன்றவற்றின் தொடர்ச்சியாக சஹ்ரானின் ஈஸ்டர் தாக்குதலும் இலங்கை அரசியல், பொருளாதாரம், சுற்றுலா, ஒற்றுமை, இறையாண்மை, நல்லிணக்கம் போன்றவற்றை பாதித்தது. ஒரு சிறிய குழு செய்த நாசகாரச் செயலால் ஒரு தேசிய இனமே தலைகுனிந்து நிற்கும் அவலம் இலங்கையில் கறுப்பு பக்கங்களாக நீள்கின்றது. அந்தக் கறுப்பு சம்பவத்தின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்ற காரண காரியங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவர ஆரம்பித்துள்ள இந்தக் கால கட்டத்தில் முக்கிய விடயமாக அமைந்த முஸ்லிம்களின் 11 அமைப்புகள், 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் தடைசெய்யப்படுவதாக சட்ட மா அதிபர் வழங்கியிருந்த ஆலோசனையின்பேரில் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் (புதன்கிழமை, 2021 ஏப்ரல் 13) நள்ளிரவு வெளியாகியது பற்றியும் நாம் ஆராயவேண்டியுள்ளது. இந்த வெளியீட்டின் மூலம் முஸ்லிம்களின் மனோநிலை மட்டுமல்ல, இலங்கையை நேசிக்கும் பகுத்தறிவுள்ள பொதுமக்களின் மனோநிலையும் கடுமையான குழப்பத்தையும், அச்சநிலையையும் அடைந்தது உண்மையே.

அந்த வர்த்தமானி அறிவிப்பினூடாக தடை விதிக்கப்பட்டுள்ள அமைப்புகளாக ஐக்கிய தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (UTJ), சிலோன் தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (CTJ), ஸ்ரீலங்கா தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (SLTJ), அகில இலங்கை தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (ACTJ), ஜம்மியத்துல் அன்ஸாரி சுன்னதில் மொஹமதியா (JASM) - மறுபெயர் ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹமதியா, ஒழுங்கமைப்பு மறுபெயர் அகில இலங்கை ஜம்-ஈ-அது-அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹம்மதியா - மறுபெயர் அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹம்மதியா கழகம் - மறுபெயர் ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹம்மதியா, தாறுல் அதர் - மறுபெயர் ஜாமிஉல் அதர் பள்ளிவாசல், மறுபெயர் தாறுல் அதர் குர்ஆன் மத்ரஸா, மறுபெயர் தாறுல் அதர் அத்தபாவிய்ய, ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் (SLISM) - மறுபெயர் ஜம்இய்யா, ஈராக் மற்றும் சிரியா இஸ்லாமிய அரசு (ISIS) - மறுபெயர் அல்-தௌலா அல்-இஸ்லாமியா தௌலா இஸ்லாமியா, அல்கொய்தா அமைப்பு, சேவ் த பேர்ள்ஸ் அமைப்பு - மறுபெயர் சேவ் த பேர்ள் சங்கம், சுப்பர் முஸ்லிம் அமைப்பு ஆகியன வர்த்தமானி அறிவித்தல் மூலம் தடை செய்யப்பட்டன. அந்த வர்த்தமானி அறிவித்தலில் நாட்டின் சமாதானத்தைத் தொடர்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு நன்நோக்குடனும் தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் சட்டவாட்சி என்பவற்றின் நலனிலும் மேற்கொள்ளப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளை முன்னெடுப்பதில் மேற்படி அமைப்புகள் தடைசெய்யப்படு வதாக குறிப்பிடப்பட்டமை இங்கு கவனிக்க வேண்டியுள்ளது. இது இவ்வாறிருக்க, தடைசெய்யப்பட்ட அமைப்புகள் தாம் தடைசெய்யப்பட்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக அறிவித்திருந்தன. பின்னாளில் அதுவும் நடைபெறாமல் அவலம் தொடர்ந்தது.

தடைசெய்யப்பட்ட அமைப்புகள் சில சட்ட



கோஷம் பல மட்டங்களிலிருந்தும் வெளிவந்து கொண்டேதான் இருந்தது. இது தொடர்பில் பாராளுமன்றத்திலும், ஊடகங்களிலும், பொது இடங்களிலும் வாதப்பிரதிவாதங்கள் எழுந்துகொண்டேதான் இருந்தன.

எமது நாட்டில் வாழ்கின்ற சகல சமூகங்களும் பாதுகாப்பாகவும், ஒன்றுமை யாகவும் வாழ வேண்டும் என்பதுதான் இலங்கையை நேசிக்கும் இலங்கையர் ஒவ்வொருவரின் அவாவாகவும், நோக்கமாகவும் இருக்கின்றது. இலங்கை அரசால் தடை செய்யப்பட்ட இஸ்லாமிய அமைப்புகள், மார்க்க ரீதியான கொள்கை களைப் பின்பற்றுகின்ற அமைப்புகளாக செயற்பட்டார்களே ஒழிய, பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்ற அமைப்புகளாக ஒருபோதும் செயற்படவில்லை.

பௌத்த, தமிழ், மற்றும் கிறிஸ்தவ சமூகங்களில் பல்வேறு மதப் பிரிவுகளும், கொள்கைகளும், ஜாதிப் பிரிவுகளும் காணப்படுகின்றன. அவ்வாறுதான் முஸ்லிம் சமூகத்திலும் மதக் கொள்கைகள் பல இருந்துகொண்டு இருக்கின்றன. அந்தக் ...ார்களேயொழிய, பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்ற, பயங்கரவாதத்துக்கு நிதியளிப்பு செய்கின்ற அமைப்புகளாக ஒருபோதும் செயற்படவில்லை என்றும் எவ்வித விசாரணைகளும் இன்றி 11 அமைப்புகள் தடை செய்யப்பட்டன.

அதில் சில அமைப்புகள் மிக பாரம்பரிய மாக 70 ஆண்டுகளாக இந்த நாட்டில் இஸ்லாம் போதிக்கும் சமத்துவம், ஒற்றுமை, சகோரத்துவம், நல்லிணக்கத்தைப் போதிக்கும் பாடத்திட்டங்களைக்கொண்ட அரபு கல்லூரிகளை நிர்வகித்தோடு பல ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்தல், வீடுகளைக் கட்டிக் கொடுத்தல், கல்விக்காக உதவி செய்தல், இலவச உதவிகளை வழங்குதல், வாழ்வாதார உதவிகளை வழங்குதல் போன்ற அளப்பரிய சேவைகளையே இவ்வமைப்புகள் செய்து கொண்டிருந்தன. இந்த அமைப்புகள் எந்தவித விசாரணைகளுமின்றி தடை செய்யப்பட்டு பல நூற்றுக்கணக்கான பள்ளிவாசல்களும் மூடப்பட்டிருந்தமை



I ... - 2021.04.13 3A
PART I : SEC. (I) - GAZETTE EXTRAORDINARY OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA - 13.04.2021

8. For the avoidance of doubts, it is hereby declared that the provisions of these regulations shall not in any way affect the right of an international organization which the Secretary to the Ministry of the Minister assigned the subject of Defence may from time to time specify by order in writing, and which has entered into an agreement with the Government of Sri Lanka, to engage in any activity connected with the rendering of humanitarian assistance.

[Regulation 2]

SCHEDULE

1. United Thawheed (Thowheedh) Jamma'ath (UTJ)
2. Ceylon Thawheed (Thowheedh) Jamma'ath (CTJ)
3. Sri Lanka Thawheed (Thowheedh) Jamma'ath (SLTJ)
4. All Ceylon Thawheed (Thowheedh) Jamma'ath (ACTJ)
5. Jamiyathul Ansaari Sunnathul Mohomadiya (JASM) alias Jamma'ath Ansaaris Sunnathil Mohomadiya Organization alias All Ceylon Jam-E- Athu Ansaris Sunnathil Mohammadiya alias Ansaris Sunnathil Mohammadiya Association alias Jama'ath Ansaris Sunnathil Mohammadiya
6. Dharul Adhar alias Jamiul Adhar Mosque alias Dharul Adhar Quran Madrasa alias Dharul Aadhaar Ath'thabawiyya
7. Sri Lanka Islamic Student Movement (SLISM) alias Jamia
8. Islamic State of Iraq and Syria (ISIS) alias Al - Dowlatual - Islamiah Dawla Islamia
9. AL - Qaeda
10. Save the Pearls alias Save the Pearl Society
11. Super Muslim

எச்.எம்.எம்.ஹரீஸ் ஊடகங்களுக்கு கடந்த 2022.10.30 அன்று தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், இவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கவேண்டுமென நானும் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இஷாக் ரஹ்மானும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். எமது

நடவடிக்கையிலும், மனித உரிமை ஆணைக்குழுவிலும் தமக்கான நீதியைக் கோரி அலைந்தமையை யாரும் மறுக்க முடியாது. தடைசெய்யப்பட்ட அமைப்புகளில் சில அமைப்புகள் இலங்கை மக்களுக்கு பல்வேறு வகையிலும் களத்தில் நின்று பொதுத் தொண்டாற்றியவை. இரத்த தான முகாம்களை நடத்தி அதிகூடுதலாக இரத்த வங்கிக்கு இரத்தம் சேர்த்தவர்கள், உதவிகள் மற்றும் நன்கொடைகள் மூலம் நாட்டுக்கு டொலரில் நிதியை கொண்டுவந்தவர்கள், சமூக சேவையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர்கள், இஸ்லாமியர்கள் தீவிரவாதத்துக்கு எதிரானவர்கள், இஸ்லாத்தில் தீவிரவாதம் ஹராம் என்ற பிரசாரத்தை முன்னெடுத்தவர்கள். இவர்களை தீர ஆராய்ந்து தடைநீக்கம் செய்யப்பட வேண்டும் என்ற





கொள்கைகள் இன்று துரதிர்ஷ்டவசமாக பயங்கரவாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. எமது நாட்டில் பாரம்பரியமாக முஸ்லிம் சமூகம் சுன்னத்வல் ஜமாஅத் என்ற கொள்கையை பின்பற்றுபவர்களாக இருந்தாலும் மத்திய கிழக்கில் செல்வாக்கு பெற்ற அதனோடு சம்பந்தப்பட்ட தௌஹீத் பிரிவுக் கொள்கையைப் பின்பற்றுகின்ற பல்வேறு மார்க்க அமைப்புகளும் இந்த நாட்டில் செயற்பட்டு வந்தன. அவர்கள் மார்க்க ரீதியாக கொள்கைகளைப் பின்பற்றுகின்ற ஓர் அமைப்பாக செயற்பட்ட

கவலையான விடயமாகவே பொது மக்களாலும், அரசியல்வாதிகளாலும் நோக்கப் பட்டது.

இதுதான் நாட்டிலுள்ள எல்லோருக்கும் பேசுபொருளாக இருந்தது. இந்த விடயம் சம்பந்தமாக குறைந்தபட்சம் ஆளுந் தரப்போடு தொடர்புடைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையாவது அரசின் தலைவர்கள் அழைத்து இதிலுள்ள விடயங்களைப் பேசி இந்த அமைப்புகளின் தடைகளை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதே பலரின் கோரிக்கையாக அமைந்திருந்தது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் தடைப் பட்டியலிலுள்ள 11 முஸ்லிம் அமைப்புகளில் 6 அமைப்பு கள் மீதான தடையை நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும், இதன் முதற்கட்ட நடவடிக்கையாக குறித்த 6 அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகளுடன் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் கலந்துரை யாடியுள்ளதாகவும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்திருந்தார். இதனடிப்படையில் தடை செய்யப்பட்ட குறித்த 6 அமைப்புகளின் முக்கியஸ்தர்களுடன் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் தனித்தனியே கலந்துரையாடியுள்ளனர். மேலும், குறித்த 6 முஸ்லிம் அமைப்புகளிடமிருந்தும் பாதுகாப்பு அமைச்சில் சில ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் கிடைத்தவுடன் அதிகாரிகள் அதனை பரிசீலனை செய்து 6 அமைப்புகள் மீதான தடையை நீக்கவுள்ளனர் என்று அன்று தெரிவித்தார்.

இருந்தாலும் பல மாதங்களாக இழுத்தடிப்பு செய்யப்பட்டுவந்த இந்த விவகாரம் தொடர்பில் அம்பாறை மாவட்ட எம்.பி. ஹரீஸும், அநுராதபுர மாவட்ட எம்.பி. இசாக்கும் தொடர்ந்தும் அரசாங்கத்தை நேரடியாகவே வலியுறுத்தியே வந்தனர்.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

## 4,718 அதிபர் நியமனங்களும், (9ஆம் பக்கத் தொடர்ச்சி)

4,431 வெற்றிடங்கள் இருந்தபோது 4,000 பேரே மூன்று பாடங்களிலும் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்தார்கள். இது மொழி அடிப்படையில் இல்லாது பொதுவாக இருந்தாலும் தமிழ் மொழி மூலம் 1,500 பேருக்கு SLPS-3 நியமனம் கிடைத்தமையால் யாரும் வாய் திறக்கவில்லை.

2008.07.01 முதல் செயல்படும் புதிய பிரமாணக் குறிப்பின்படி இலங்கை அதிபர் சேவையின் மூன்றாம் வகுப்பு நியமனம் வழங்க 2015ஆம் ஆண்டு கல்வி அமைச்சர் பதவி ஏற்ற அகிலவிராஜ் காரியவசம் எடுத்துக்கொண்ட முயற்சியும், வழங்கப்பட்ட சேவை முன்பயிற்சி போன்ற செயல்பாடுகளும் ஆசிரியர்கள் இடையே இப்பதவியைப் பெற்றுக்கொள்ள பெரும் ஆர்வத்தையும், போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி இப்பதவியை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற உற்சாகத்தையும் தோற்றுவித்தது. 2016.05.09 முதல் இவ்வாறு செய்யப்பட்ட 4,000 நியமனங்கள் பெரும் கவர்ச்சியை உண்டாக்கின.

இங்கு ஒரு முக்கிய விடயத்தைக் குறிப்பிடவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் ஜூன் -1 அன்று பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்களை கணக்கிட்டு போட்டிப் பரீட்சை நடத்தி அதிபர் நியமனங்களை வழங்க வேண்டும் என்பது விதியாக இருந்தாலும் இந்த சேவை ஸ்தாபிக்கப்பட்டு 38 வருட காலத்தில் 1989, 1991, 1999, 2002, 2009, 2016, 2019 ஆகிய வருடங்களில் 7 முறை மட்டுமே போட்டிப் பரீட்சை நடத்தி அதிபர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பிரமாணக் குறிப்பானது முறையாக அமுல் நடத்தப்படாமையால் இச்சேவைக்கு பலவிதமான பாதகமான விடயங்கள் உண்டாகிவிட்டன. அந்த விடயங்களே இன்றும் தொடர்கின்றன. இதில் மிக முக்கியமானது கடமை நிறைவேற்று அதிபர் நியமனம்.

அரச சேவையில் அதிபர் சேவையே அதிகமான அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் தொடுக்கப்பட்ட சேவையாக உள்ளது. 1997ஆம் ஆண்டு சம்பள முரண்பாடு உட்பட இதுவரை 10க்கும் மேற்பட்ட வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. இன்னும் தொடர்கின்றன.

இன்றைய 4,718 நியமனங்கள் தொடர்பாக பேசும்போது 2018.10.19 ஆம் திகதிய வர்த்தமானியில் கோரப்பட்ட 1,918 மூன்றாம் வகுப்பு ஆட்சேர்ப்போடு அது ஆரமபமாகின்றது. இன்று ஐந்து வருட கால வரலாற்றைக்கொண்ட இந்த விடயமே இன்று பேசுபொருளாக உள்ளது. 2018.06.01 அன்று இருந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 1,918 ஆகும்.

2018.06.01 க்கு உள்ள தகைமையின்படி விண்ணப்பம் கோரப்பட்டு, போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு 2019.10.01 முதல் 198க்கு மேல் மொத்த புள்ளிகள் பெற்ற 1,918 பேருக்கு இலங்கை அதிபர் சேவையின் மூன்றாம் வகுப்பு நியமனம் வழங்கப்பட்டது. இது பிரமாண குறிப்பின்படி மொழி அடிப்படையில் வழங்கப்படவில்லை. இந்த பாதிப்பையும், வேறு பாதிப்புகளையும் சுட்டிக் காட்டி நான்கு மனித உரிமை மீறல் வழக்குகள் தொடரப்பட்டு இருந்தன. 197 மொத்த வெட்டுப் புள்ளிகளை பெற்றவர்களும் 2021ஆம் ஆண்டு நியமனம் வழங்கப்பட்டது.

விசாரணையில் இருந்த நான்கு வழக்குகளில் மூன்று வழக்குகள் தொடர்பாக சமரசம் காணப்பட்டு 2021.06.01 அன்று இருந்த 4,718 வெற்றிடங்களை நிரப்ப சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்ட நிலையில், நேர்முகப் பரீட்சைக்குச் சென்று 2018.06.01 அன்று 5 வருட சேவைக்காலத்தை கொண்டிராது, நேர்முகப் பரீட்சைக்கு அனுமதி மறுக்கப்பட்ட பிக்கு ஒருவர் 2018 முதல் 2023 வரை தகைமை பெற்றவர்களின் உரிமை மறுக்கப்படுவதாக மனித உரிமை வழக்கொன்றை தொடுத்து தடை உத்தரவைப் பெற்றுள்ளார்.

நவம்பர் 6ஆம் விசாரணை தொடங்கும் வரை இந்தத் தடை உத்தரவு இருக்கும்.

பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரி குழுக்களும், கல்வி அமைச்சும், நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களும் நகர்த்தல் மனு (Motion) ஒன்றை சமர்ப்பித்து இந்த வழக்கை முன்னெடுத்து விசாரித்து நியமனத்தை துரிதப்படுத்த முயன்று வருகின்றனர். 2023.08.04அன்று விசாரணை இடம்பெற்று மீண்டும் 2023.09.14க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழி மூலத்துக்கு நடந்த அநீதிக்கு எதிராக இரண்டு வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் போடப்பட்டு இன்றும் அவை நிலுவையில் உள்ளன. (F/R No. 387/19, F/R No.206/19) இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பில் 6.2 பிரிவில் (ii ) உப பிரிவில் பின்வருமாறு தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ii. அனுமதிக்கப்பட்ட பதவியணியினுள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யும்போது சிங்களம் மற்றும் தமிழ் என்ற மொழி ரீதியில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தனித்தனியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும்

ஆனால், 2019.10.02 அன்று வழங்கப்பட்ட நியமனத் தேர்வில் 86.73 வீதமான சிங்கள மொழியினரும், 13.27 வீதமான தமிழ் மொழியினரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு 198 என்ற வெட்டுப்புள்ளி அடிப்படையில் சுமார் 200க்கு குறைவான தமிழ்மொழி மூலமானவர்களுக்கே நியமனம் வழங்கப்பட்டது. இது 10 வீதத்துக்கும் குறைவாகும். இதன்காரணமாக பாதிக்கப்பட்ட தமிழ்மொழியினர் குழுவாக சேர்ந்து தொடுத்துள்ள FR /387/2019ஆம் இலக்க வழக்கு 2024 பெப்ரவரி மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது .

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | 649 | 135 | 784 |
| 1 | | 527 | 137 | 664 |
| 2 | | 97 | 526 | 623 |
| 3 | | 335 | 279 | 614 |
| 4 | | 376 | 87 | 463 |
| 5 | | 494 | 32 | 526 |
| 6 | | 427 | 72 | 499 |
| 7 | | 13 | 217 | 230 |
| 8 | | 275 | 40 | 315 |
| 9 | | 3193 | 1525 | 4718 |
| | | 1892 | 1266 | 4710 |
| | | 1552 | | |

இந்த வழக்கின் பயன் இந்த 4,718 நியமனத்தில் கிடைக்கலாம். 2021.06.01 அன்று மொழிவாரியாக அதிபர் வெற்றிடங்கள் கணக்கிடப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு இரண்டு மடங்கு தொகையினர் அழைக்கப்பட்டு உள்ளபடியால் இதற்குத் தீர்வு கிடைக்கலாம். 2021.06.01படி மாகாண ரீதியாக இவ்வாறு வெற்றிடங்கள் உள்ளன.

இந்த 4,718 என்ற வெற்றிட எண்ணிக்கையில் 2019ஆம் ஆண்டு நேர்முகப் பரீட்சைக்கு சென்று நியமனம் கிடைக்காத 1,552 பேரும் உள்ளார்கள். மிகுதி 3,166 பேரைத் தெரிவு செய்யவே 6,332 பேருக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது. இதுவும் இந்த நியமனம் தொடர்பாக தொடரப்பட்ட மூன்று வழக்குகள் தொடர்பாக கலந்துரையாடி 2022.12.12 அன்று உயர் நீதிமன்றத்தில் உண்டான சமரசத்தின்படியேயாகும். இதன்படி அரச சேவை ஆணைக்குழு 2023.02.14 ஆம் திகதிய PSC/ EST/02-03?01/2021 இலக்க கடிதத்தின்படி இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பின்படி நேர்முகப் பரீட்சை நடத்தி நியமனம் வழங்குமாறு அனுமதி வழங்கியிருந்தது. இதன்படியே மேற்படி நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது.

பிக்கு ஒருவர் தொடுத்த வழக்கு காரணமாக நியமனம் வழங்கல் 2023.11.06 வரை உள்ள தடை உத்தரவால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நகர்த்தல் மனுமூலம் இம்மாதம் 4ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்ட மா அதிபரின் தீர்மானம் பிரதி சட்ட மா அதிபர் மூலம் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது. பலத்த எதிர்பார்ப்புடன் தமக்கு நியமனம் கிடைக்கும் என்று காத்திருந்த 8,000 பேருக்கு இது அதிர்ச்சியைத் தந்தது. அன்றே பல ஊடகங்கள் இந்தச் செய்தியை வெளியிட்டிருந்தன. புதிய பரீட்சை நடத்தி கால அட்டவணையோடு நியமனம் வழங்கும் அவரது தீர்மானம் அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அதிர்ச்சிக்குள்ளான பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் அரச சேவை ஆணைக்குழுவுக்கு தனித்தனி கடித மூலம் அறிவித்து வருகின்றனர்.

2018.06.01 பின்னர் தகைமை பெற்றுள்ளவர்களிடம் விண்ணப்பம் கோரி 2021.06.01 பின் உண்டாகியுள்ள 2,000க்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறும், அனுமதி கிடைத்துள்ள தமக்கு நியமனம் வழங்குமாறும் இவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இன்று உரிமை மீறல் தொடர்பாக நியாயம் வேண்டுகின்றவர்களின் பக்கம் நியாயம் இல்லாமல் இல்லை. கடந்த ஐந்து வருடங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் இந்தத் தகைமையை பெற்றிருக்கலாம். புதிதாக விண்ணப்பம் கோரப்பட்டால் அவர்கள் தமது திறமையை வெளிக்காட்டி இந்த நியமனத்தைப் பெறலாம். ஆனால், தெரிவுசெய்யப்பட்டுள்ள இந்த 4,718 பேரின் நியமனத்தை இரத்துசெய்து புதிய பரீட்சை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. 4,718 நியமனங்களை எதிர்பார்த்து சுமார் 8,000 பேர் காத்துக் கிடைக்கின்றனர்

உண்மை கசப்பாக இருந்தாலும் அது சிலர் விரும்பாமையால் பொய்யாக முடியாது. 4,718 பேருக்கு நியமனம் வழங்கும் விடயத்தில் கல்வி அமைச்சர் உறுதியாக உள்ளார். ஆனால், இது தொடர்பாக தீர்மானம் எடுக்கும், செயல்படும் நிறுவனங்களும் அதிகாரிகளும் அவருக்கு போதிய ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரியவில்லை. புதிதாக நியமனம் பெற்றுள்ள அரச சேவை ஆணைக்குழுவும் முன்னர் அக்குழுவால் வழங்கப்பட்ட அனுமதியை மதித்து செயல்பட வேண்டும். கல்வி அமைச்சு அதிகாரிகளும், சட்டத்துறையும் வழக்குகள் உள்ளன, வரும் என்ற நிலைப்பாட்டில் இந்த நியமனத்தை வழங்காது இருந்தால் அது பாடசாலை நிர்வாகத்துக்கும், கல்வித்துறைக்கும் பதிப்பாகவே முடியும்.

சகலருக்கும் புதிதாக பரீட்சை நடாத்தி நியமனம் வழங்கும் விடயத்தை கல்வி அமைச்சர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த வருட பரீட்சை திணைக்கள நேரசூசியில் இடம் இல்லை, பரீட்சை நடத்த நிதி இல்லை, அடுத்த ஆண்டு முன் பகுதியில் தேசிய பரீட்சைகள், விடைத்தாள் திருத்தல் போன்ற பணிகள் உள்ளன, மிக முக்கியமாக தேர்தல் ஆண்டாக இருக்கும், 4,718 நியமனங்களை வழங்காவிட்டால் பாடசாலை நிர்வாகத்தில் பெரும் பாதிப்பு உண்டாகும் என்பவை தொடர்பாக அவர் கவனத்திற்கொள்வதாக உள்ளது.

2005ஆம் ஆண்டு விண்ணப்பம் கோரி 2008, 2009, 2012 என்று அதிபர் நியமனம் வழங்கிய வரலாறுகளும் உள்ளன. இதற்குக் காரணம் வழக்குகளே! இன்று சுமார் 3,000 பாடசாலைகள் நிரந்தர அதிபர் இல்லாது இயங்கும் நிலையில் இன்னும் ஓரிரு வருடங்கள் தாமதமானால் இந்த தொகை 5,000 வரை செல்லக்கூடும்.

இலங்கை அதிபர் சேவைக்குப் பின்னர் வந்த திருத்தங்கள் கவனத்திற்கொள்ளப்படாமை, உயர் தேசிய கல்வி டிப்ளோமா ஏற்றுக் கொள்ளப்படாமை, கடமை பார்க்கும் அதிபர்களின் கோரிக்கை இப்படி வழக்குகள் தொடர்கின்றன. ஆகவே அடுத்த வழக்கு தவணை 2023.09.14 வரை காத்திராமல் இடியப்பச் சிக்கலாகியுள்ள இந்த 4,718 அதிபர் நியமன விடயத்துக்கு உடன் தீர்வு காணவேண்டும்.

இந்த நியமனம் வழங்காவிட்டால் கூட இன்னும் பல வழக்குகள் வரலாம். காசு சேர்த்தால் வழக்கு தொடர்வது பெரிய விடயம் அல்ல. ஆனால் தீர்வு கிடைக்க வருடக் கணக்கில் செல்லும்.

# உப்புச் சப்பில்லாத விடயங்களுக்குத் தற்கொலை முடிவல்ல...



## சாகப் பிறந்தவன் அல்ல, சாதிக்கப் பிறந்தவன் மனிதன்!

### மட்டக்களப்பில் 6 மாதத்தில் 79 பேர் தற்கொலை

கனகராசா சரவணன்

மனிதப் பிறவி வாழ்வதற்காகவே தவிர, உயிரை மாய்ப்பதற்காக அல்ல. இதனை முதலில் சிறுபிள்ளைகள் தொடக்கம் முதியவர் வரையில் உணரவேண்டும். இதனை உணராத பட்சத்தில் தனது உயிரை மாய்க்கின்ற தற்கொலையை தடுக்க முடியாது. யுத்தம் முடிவுற்றதன் பின்னர் தமிழர் பகுதியான வடக்கு, கிழக்கில் இந்தத் தற்கொலை நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. இதனை முதலில் தடுப்பதற்கான வழிமுறைகளை அரச மற்றும் அரசசார்பற்ற தன்னார்வ நிறுவனங்கள், அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் கவனம் செலுத்தவில்லை என்பது ஒரு கவலைக்குரிய விடயமாகும்.

கடந்த கால யுத்தத்தால் வடக்கு, கிழக்குத் தமிழ்மக்கள் உயிர், உடைமை வீடுகளை இழந்து பொருளாதாரத்தில் பாரிய பாதிப்பு ஏற்பட்டதில் மன அழுத்தங்களுக்கு உள்ளாகியிருந்தனர். இருந்தபோதும் யுத்தம் முடிவடைந்து இன்று 14 வருடங்களுக்கும் மேலாகின்ற போதும் படித்தவர் தொடக்கம் பாமரர் வரையில் வயது வித்தியாசமின்றி 14 வயது சிறுவர் தொடக்கம் 85 வயது முதியவர் வரையில் தாம் பிறந்தது சாதிக்கத்தான் எனத் தெரியாது தமது உயிரை மாய்த்தால் தமது அனைத்து பிரச்சினையும் தீர்ந்துவிடும் என்ற கோழைத்தனமான முடிவுக்குச் சென்று ஒரு முட்டாள்தனமான செயற்பாடாக தற்கொலையை நாடுகின்றனர்.

அந்த வகையில் வடக்கு, கிழக்கில் அதிகரித்துவரும் தற்கொலைகளை நாளாந்தம் ஊடகங்கள் ஊடாக அறிந்துவரும் நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற தற்கொலை தொடர்பாக நாங்கள் ஆராய்ந்தோம். இந்தத் தற்கொலைக்குப் பெயர்போன இடம் மட்டு. கல்லடி பாலம்.

இங்கு திருக்கோவில் மற்றும் ஏனைய தூரப் பிரதேசங்களில் இருந்து வந்து பழைய பாலத்தில் இருந்து வாவியில் பாய்ந்து தமது உயிரை மாய்த்துக் கொண்டோர் அதிகளவானோர்.

இதன்போது 14 தொடக்கம் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் உப்புச் சப்பில்லாத விடயங்களுக்குத் தற்கொலைக்குச் சென்றுள்ளனர்.

அதாவது பாடசாலைக்கு ஒழுங்காக செல்லாமையால் பெற்றோரைக் கூட்டிவருமாறு பாடசாலை நிர்வாகம் பணித்த காரணத்தால் பெற்றோர் அடிப்பார்கள் என்ற பயத்தின் காரணமாகவும் கல்வியில் புள்ளிகள் குறைவாக பெற்றதை பெற்றோர், ஆசிரியர்கள் கண்டித்தல் போன்ற விடயங்களுக்கும் அதிலும் அதிகளவானோர் சிறுவயது காதல் தோல்வியாலும் தமது உயிரை மாய்க்கின்ற முடிவுக்குச் சென்றுள்ளனர்.

அதேவேளை, திருமணம் முடித்த 55 வயதுக்குட்பட்ட சில ஆண்கள் கையடக்கத் தொலைபேசி மற்றும் முகநூல் ஊடாக திருமணம் முடித்த பெண்களுடன் காதல் மற்றும் திருமணம் நடந்த உறவால் குறித்த பெண்கள் பணம் கேட்டு வற்புறுத்தல் காரணமாக குடும்பத்தில் மனைவி, கணவனுக்குள் ஏற்பட்ட குழப்பம் காரணமாகவும், சிலர் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக தனியார் லீசிங் கம்பனிகளில் வாங்கிய கடனைச் செலுத்த முடியாத மற்றும் வங்கியில் வாங்கிய கடனைச் செலுத்த முடியாத நிலையில் வீடுகளுக்கு லீசிங் கம்பனிகள் சென்று நெருக்கடி கொடுத்ததால் ஏற்பட்ட கௌரவப் பிரச்சினை காரணமாகவும் தமதுயிரை மாய்த்துள்ளனர்.

55 வயது தொடக்கம் 75 வயது வரையிலான முதியவர்கள் வீட்டில் மனைவி அல்லது கணவன் உயிரிழந்த பின்னர் பிள்ளைகளுடன் வாழ்ந்துவரும் நிலையில் பிள்ளைகளுடன் ஏற்படும் மனக்கசப்பு காரணமாகவும் தமக்கு ஏற்பட்ட நோயைக் குணப்படுத்த முடியாத காரணங்களால் மனவிரக்தியடைந்து பெற்ற பிள்ளைகள் தொடக்கம் ஒருவருக்கும் பாரமாக இருக்கக்கூடாது என முடிவெடுத்து இந்த முடிவுக்குச் சென்றுள்ளனர். இவ்வாறு சிறுசிறு பிரச்சினைகளுக்காக தமது உயிரை மாய்க்கின்றமை ஒரு வெட்கக்கேடான விடயமாகும்.

இவ்வாறான மன அழுத்தம் காரணமாக வீட்டின் கூரையில் அல்லது கூரையில் பொருத்தப்பட்ட மின்விசிறி, வயல் பிரதேசங்களிலுள்ள மரங்கள், வீடுகளிலுள்ள மரங்கள், பாழடைந்த கட்டிடங்கள் போன்ற இடங்களில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்வது அல்லது தங்களுக்குத் தாங்களே தீ வைத்து தற்கொலை செய்வது அல்லது பாலத்தில் இருந்து வாவியில் குதிப்பது அல்லது கடலில் பாய்வது, அதிக மாத்திரைகள், மற்றும் நஞ்சை குடிப்பது அல்லது ரயில் முன்னால் பாய்ந்து தற்கொலை செய்வது போன்ற பல்வேறுபட்ட வகையில் தங்களைத் தாங்களே உயிரை மாய்க்கின்றனர்

இந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஆண்டான 2022ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதிவரை 18 வயதுக்குட்பட்ட 11 ஆண்கள், 4 பெண்கள் உட்பட 15 சிறுவர்களும் 18 வயதுக்கும் மேற்பட்ட 113 ஆண்களும் 20 பெண்கள் உட்பட ஒரு வருடத்தில் 133 பேர் தன்னுயிரை மாய்த்துள்ளனர்

இதேவேளை, இந்த ஆண்டு 2023 ஜனவரி தொடக்கம் ஜூன் 30 வரையிலான 6 மாத காலப்பகுதியில் 18 வயதுக்குட்பட்ட 3 பெண்கள், ஒரு ஆண் உட்பட 4 சிறுவர்களும். 18 வயதுக்கும் மேற்பட்ட 61 ஆண்கள் 14 பெண்கள் உட்பட 79 பேர் தன்னுயிரை மாய்த்துள்ளனர்

இதில் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் 9 பேரும், மட்டக்களப்பு பொலிஸ் பிரிவில் 10 பேரும், வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் 10 பேரும், களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் 13 பேரும் தற்கொலை செய்துள்ளனர் என மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.

எனவே, கடந்த 2022ஆம் ஆண்டின் புள்ளிவிபரத்தையும் இந்த ஆண்டு 6 மாத புள்ளிவிபரத்தையும் ஒப்பிடும்போது இந்த ஆண்டு 6 மாதத்தில் 79 பேர் தற்கொலை அதிகரித்துள்ளதையும் தற்கொலை செய்தவர்களின் காரணங்களையும் காட்டுகின்றது.

இவ்வாறு தன் உயிரை மாய்ப்பதால் தன் உயிரை மாய்ப்பவருடைய மனைவி அல்லது கணவர், குழந்தைகள் தாய், தந்தையர் உட்பட குடும்பத்துக்கே ஒரு நீண்ட கால அபகீர்த்தியை அதாவது தற்கொலை செய்த குடும்பம் என்ற பட்டத்தை வழங்கி உங்களால் வாழத் தெரியாத கோழைத்தனமான சுயநல நிம்மதிக்காக அவர்களை நடு ஆற்றில் தவிக்கவிட்டுச் செல்லும் செயல்தான் தற்கொலை.

எனவே, மனிதனாகப் பிறந்த சாதாரண கிராமப்புறத்தைச் சேர்ந்தவர் தொடக்கம் அமெரிக்க ஜனாதிபதி பைடன் உட்பட எல்லோருக்கும் பிரச்சினை உண்டு. அதாவது வீட்டுக்கு வீடு வாசல்படி என்பார்கள்.

பிரச்சினை வந்ததுடன் சாவதற்கு முடிவெடுத்தால் இந்தப் பூமியில் மனிதர்களே இல்லாமல் போயிருப்பர். பிரச்சினைக்கு சாவு முடிவல்ல. இதனை நன்கு உணரவேண்டும். மனிதனாகப் பிறந்த எவரும் ஏதேவொரு காரணத்தால் பிழை செய்யாதவர்கள் இல்லை. விட்ட பிழையை அனுபவமாக்கிக்கொண்டு எதிர்காலத்தில் அதனை விடாமல் இந்த அழகான பூமியில் மகிழ்ச்சியாக வாழவேண்டும். அதனை அனுபவிக்க வேண்டும் என கற்றுக்கொள்ளுங்கள்.

தினமும் ஒரு முறையாவது படியுங்கள் என்ற தொனிப்பொருளில் சராசரியாக மனித வாழ்க்கை 70 வயதுவரை. இதில் தற்போதைய வயது, இதில் கழிந்த நாட்கள் எவ்வளவு இருக்கும். நாட்கள் எவ்வளவு என்ற ஓர் அட்டவணையை தயாரித்து அதில் முக்கியமான கேள்வி உங்களுடைய வாழ்க்கையில் மீதி நாட்களை நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதுதான். ஆயிரம் வருடம் வாழப்போவதாக நினைத்துக்கொண்டு செயல்படாதீர்கள் என எச்சரித்து ரோமோனிய சக்கரவர்த்தியும் தத்துவ ஞானியுமான மார்க் அரேலியஸ் அட்டவணை மூலமாக வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த அட்டவணையின் பிரகாரம் உங்கள் வயதின் பின்னர் இருக்கும் மிகுதியான நாட்கள் எத்தனை, இந்த காலத்தில் என்னை பெற்றெடுத்த தாய், தந்தைக்கு என்ன நன்றிக்கடன் செய்யப் போகின்றோம், என்னை நம்பிவந்த மனைவி, குழந்தைகள், கணவனுக்கு என்ன செய்யப் போகின்றோம்.

அவர்களுக்கு நன்றிக்கடனாக தற்கொலை குடும்பம் என்ற அவப்பெயரை கொடுத்துவிட்டு போவதா? கடன்காரரா கொடுத்துவிட்டுப் போவதா? குற்றம் செய்யாதவர்கள் யார்? இந்த உலகில் பிழைவிட்டவர்கள் வாழவில்லையா? நாங்கள் தெரிந்தா பிழைவிட்டோம். என்ற கேள்விகளை உங்களுக்குள் கேளுங்கள் நாங்கள் வாழப் பிறந்தவர்கள். சாதிக்கப் பிறந்தவர்கள். கோழையாக சாகப் பிறந்தவர்கள் அல்ல என்பதை உணருங்கள். அப்போது மன அழுத்தத்திற்கு உள்ளான உங்களுக்கு பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும். அதாவது வாழ்வதற்கான தீர்வு கிடைக்கும். இந்த அழகான பூமியில் வாழ கற்றுக்கொள்ளுங்கள். எந்த பிரச்சினைக்கும் உடனடியாக முடிவு எடுக்காதீர்கள். அதிலுள்ள நன்மை, தீமைகளை தீர ஆராய்ந்து வாழ்வதற்கான முடிவெடுங்கள். இறைவன் படைத்த அற்புதமான இந்த மனிதப் பிறவியை அனுபவிக்க கற்றுக்கொள்ளுங்கள்.

இதைவிடுத்து கோழைத்தனமான முடிவுகளை எடுத்து உங்கள் உயிரை மாய்ப்பதால் உங்களுக்கு என்ன லாபம்? ஒன்றுமே இல்லை. ஆனால், உங்கள் தற்கொலை முடிவால் உங்கள் தாய், தந்தை, கணவன், மனைவி, சகோதரர்கள், பிள்ளைகள் ஆகியோரை இழிவுப் பெயருடன் நடுவீதிக்கே விட்டுச் செல்வதா என சிந்தியுங்கள். தற்கொலை செய்பவர்கள் அனைவரும் கோழைகள், வாழத் தெரியாதவர்கள் என்பதுதான் உண்மை .

எனவே, வடக்கு, கிழக்கில் ஏதே ஒரு மூலையில் நாளாந்தம் ஒருவர் தன்னுயிரை மாய்த்துக்கொள்கின்றார். ஆகவே, இந்த மன அழுத்தத்துக்குள்ளாகி தற்கொலைக்கு செல்வதைக் கண்டறிந்து தடுக்கவேண்டியது அனைவரது கடமையும் பொறுப்புமாகும்.

அதற்காக முதலில் கட்சிப் பேதங்களை மறந்து அரசியல்வாதிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூக செயற்பாட்டாளர்கள், அரச திணைக்கள அதிகாரிகள் அனைவரும் ஒன்றிணைந்து கிராமம் கிராமமாக இளைஞர், யுவதிகளை ஒன்றுதிரட்டி தற்கொலையால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி தற்கொலையை தடுக்க அவசரமாக செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

### தினமும் ஒரு முறையாவது படியுங்கள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை கவனமாக படியுங்கள். நீங்கள் 70 வயது வரை உயிர் வாழ்வதாக வைத்துக் கொண்டு இந்த அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

| உங்கள் வயது | கழிந்த நாட்கள் | இருக்கின்ற நாட்கள் |
|---|---|---|
| 20 வயது | 7,300 நாட்கள் | 18,250 மிதி நாட்கள் |
| 25 வயது | 9,125 நாட்கள் | 16,425 நிதி நாட்கள் |
| 30 வயது | 10,950 நாட்கள் | 14,600 மிதி நாட்கள் |
| 35 வயது | 12,775 நாட்கள் | 12,775 மிதி நாட்கள் |
| 40 வயது | 14,600 நாட்கள் | 10,950 மிதி நாட்கள் |
| 45 வயது | 16,425 நாட்கள் | 9,125 நிதி நாட்கள் |
| 50 வயது | 18,250 நாட்கள் | 7,300 மிதி நாட்கள் |
| 55 வயது | 20,075 நாட்கள் | 5,475 மிதி நாட்கள் |
| 60 வயது | 21,900 நாட்கள் | 3,650 மிதி நாட்கள் |
| 65 வயது | 23,725 நாட்கள் | 1,775 மிதி நாட்கள் |
| 70 வயது | 25,550 நாட்கள் | இந்த நாட்களை புத்திசாலித்தனமாக செலவழித்தீர்களா? |

இதில் முக்கியமான கேள்வி உங்களுடைய வாழ்க்கையின் மிதி நாட்களை நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதுதான். ஆயிரம் வருடம் வாழப் போவதாக நினைத்துக் கொண்டு செயல்படாதீர்கள் என்று எச்சரித்தார் ரோமானிய சக்கரவர்த்தியும் தத்துவ ஞானியுமான மார்க் அரேலியஸ்.



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | 1 | 1 | - | - | 8 | 2 | - | - |
| [illegible] | 7 | 2 | 1 | - | 6 | 3 | - | - |
| [illegible] | 9 | 3 | 1 | - | 3 | - | - | - |
| [illegible] | 17 | 1 | 1 | 1 | 6 | - | - | - |
| [illegible] | 3 | - | - | - | - | 1 | - | - |
| [illegible] | 1 | - | - | - | - | - | - | - |
| [illegible] | 13 | 1 | 2 | - | 10 | - | - | - |
| [illegible] | 6 | 1 | - | - | 2 | - | - | - |
| [illegible] | 9 | - | 3 | - | 5 | 2 | - | 1 |
| [illegible] | 17 | 2 | - | - | 10 | 3 | - | - |
| [illegible] | 2 | 3 | 1 | - | 2 | 1 | - | - |
| [illegible] | 7 | 1 | 1 | 1 | 5 | 1 | 2 | - |
| [illegible] | 8 | 1 | 1 | 2 | 1 | - | - | - |
| [illegible] | 2 | - | - | - | 3 | 1 | 1 | - |
| [illegible] | 102 | 16 | 11 | 4 | 61 | 14 | 3 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| [illegible] | 84 | 15 | [illegible] | 52 | 10 |
| [illegible] | 15 | 2 | [illegible] | 9 | 1 |
| [illegible] | 3 | 2 | [illegible] | - | - |
| [illegible] | 9 | 1 | [illegible] | 3 | 2 |
| [illegible] | 1 | - | [illegible] | - | - |
| [illegible] | 1 | - | [illegible] | - | 2 |
| [illegible] | 113 | 20 | [illegible] | 64 | 15 |

## கல்லில் தேங்காய் உரிக்கும் (11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சின் தடைப் பட்டியலிலுள்ள 11 முஸ்லிம் அமைப்புகளில் 6 அமைப்புகள் மீதான தடையை நீக்குவதற்குத் தேவையான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும், விரைவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது தொடர்பில் ஜனாதிபதி சட்ட மா அதிபரிடம் ஆலோசனை பெற்றுள்ளதாகவும் தம்மிடம் தெரிவித்ததாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் 2023.04.26 அன்றும் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்திலும் சரத் வீரசேகர, சரத் பொன்சேகா, சம்பிக்க போன்ற பலரின் இனவாதக் குரல்கள் எழுந்தமை தவிர்க்க முடியாமலே போனது. இந்தச் சூழ்நிலையில் இந்த அமைப்புகள் மீது போடப்பட்ட தடை அரசால் உத்தியோகபூர்வமாக கடந்த 27.07.2023ஆம் திகதி வர்த்தமானி எண் 2223/3 மூலம் நீக்கப்பட்டுவிட்டதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. 2223/3 வர்த்தமானியின் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருந்த ஐக்கிய தவ்ஹீத் ஜமாஅத், சிலோன் தவ்ஹீத் ஜமாஅத், ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத், அகில இலங்கை தவ்ஹீத் ஜமாஅத், ஜமாஅத் அன்ஸாரி சுன்னதில் முஹம்மதிய்யா ஆகிய அமைப்புகள் இப்போது நீக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புத் தரப்பினருடனான சந்திப்புகளில் முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகள் மற்றும் தொடர் முயற்சியின் பயனாக தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புகளின் தடை நீக்கப்பட்டுள்ளமை வரவேற்கக்கூடிய விடயமாக உள்ளதுடன், இத்தடை நீக்கம் செய்ய முன்வந்து நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாதுகாப்பு ஆலோசகர் முன்னாள் அமைச்சர் சாகல ரத்னாயக்க, முன்னிலையில் இதற்காக போராடிய ஹரீஸ்,

| | தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் விபரம் |
|---|---|
| 01 | அகில இலங்கை ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதுல் முஹம்மதிய்யா (JASM) |
| 02 | அகில இலங்கை தௌஹீத் ஜமாஅத் (ACTJ) |
| 03 | ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத் (SLTJ) |
| 04 | ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் (SLISM) |
| 05 | ஐக்கிய தௌஹீத் ஜமாஅத் (UTJ) |
| 06 | சிலோன் தௌஹீத் ஜமாஅத் (CTJ) |
| 07 | தாருல் அதர் மறுபெயர் ஜாமிஉல் அதர் பள்ளிவாசல் |
| 08 | சேவ் த பேர்ள்ஸ் |
| 09 | ஈராக் மற்றும் சிரியா இஸ்லாமிய அரசு |
| 10 | அல்கைதா அமைப்பு |
| 11 | சுப்பர் முஸ்லிம் |

இசாக் போன்ற எம்.பிக்கள், பாராளுமன்றில் குரல் எழுப்பிய தலைவர்கள் அடங்கலாக பாதுகாப்புப் படைகளின் பிரதானிகள், பாதுகாப்புப் படை அதிகாரிகள், புலனாய்வு அதிகாரிகளுக்கு நன்றி அறிக்கைகள் வெளிவந்துகொண்டிருக்கையில், "மழை ஓய்ந்தாலும் தூறல் விட்ட பாடில்லை" என்பதுபோல் தடை நீக்கத்துக்கு எதிர்ப்புகள் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகின்றன. "எரிகிற நெருப்பில் குளிர்காயும்"விதமாக இனவாதக் குரல்களும், சர்வதேச அஜந்தாக் களும் தமது பணியை இந்த விடயத்தில் சிறப்பாகவே இன்றும் செய்து வருகின்றன.

எதிர்ப்புகள் மற்றும் அரசுக்கு எதிரான பிரசாரங்களுக்கு பதிலளிக்கும் வகையில் ஐந்து இஸ்லாமிய அமைப்புகளின் தடை நீக்கம் குறித்து மீள ஆராயப்போவதில்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னக்கோன் தெரிவித்த கருத்தில் எவ்வளவு தூரம் அரசாங்கம் எதிர்காலத்தில் உறுதியாக இருக்கும் என்பதை காலம்தான் பதிலளிக்க வேண்டும். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை தொடர்ந்து ஐந்து இஸ்லாமிய அமைப்புகளுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கியுள்ளார். எனினும், கத்தோலிக்க திருச்சபை அரச தரப்பு பாராளு மன்ற உறுப்பினர்கள் பலர் இதனைக் கண்டித்துள்ளனர். இந்தச் சூழ்நிலையில் தடை நீக்கப்பட்டமை குறித்து அரசு மீள் பரிசீலனை செய்யுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், தற்போதைக்கு இது குறித்து மீள்பரிசீலனை செய்யும் திட்டம் எதுவுமில்லை என்று குறிப்பிட்டார் என்ற செய்தி மகிழ்ச்சி யளித்தாலும் மகிழ்ச்சி



United Thawheed (Thowheedh) Jamma'ath (UTJ)
Ceylon Thawheed (Thowheedh) Jamma'ath (CTJ)
Sri Lanka Thawheed (Thowheedh) Jamma'ath (SLT
All Ceylon Thawheed (Thowheedh) Jamma'ath (A(
Jamiyathul Ansaari Sunnathul Mohomadiya (JASN
Organization *alias* All Ceylon Jam-E- Athu Ansaris
Mohammadiya Association *alias* Jama'ath Ansaris
Dharul Adhar *alias* Jamiul Athar Mosque *alias* Dh
Ath'thabawiyya
Sri Lanka Islamic Student Movement (SLISM) *alias*
Islamic State of Iraq and Syria (ISIS) *alias* Al - Dawl
AL - Qaeda
Save the Pearls *alias* Save the Pearl Society
Super Muslim

நீடிக்க வாய்ப்பு குறைவாகவே இருக்கிறது. கத்தோலிக்க திருச்சபைக்கும் அரச தரப்பு எதிர்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும் உண்மை என்னவென்று. ஆனாலும் அரசியல் செய்ய இதனை விட சிறந்த விடயம் இல்லையென்பதால் இதனை தூக்கிப்பிடித்து வாக்குப்பெட்டியை நிரப்ப திட்டமிடுகிறார்கள் என்பது வெளிப்படை உண்மை.

புலனாய்வுப் பிரிவினரும் பாதுகாப்புடன் தொடர்புபட்டவர்களும் இணைந்து தடை களை நீக்கும் முடிவை எடுத்தனர் என்று தெரிவித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், "விமர்சனங்கள் உள்ளதை நாங்கள் கருத்திற் கொண்டுள்ளோம். எனினும், இதனைத் தீவிரமாக ஆராய்ந்த பின்னரே தடையை நீக்கியுள்ளோம். அரசியல்வாதிகள் எவரும் இதில் தொடர்புபடவில்லை" என்று குறிப்பிட் டுள்ள விடயமும் இது குறித்து நாங்கள் மீள்பரிசீலனை செய்யவில்லை என்று அவர் கூறியுள்ளமையும் தடை நீக்கப்பட்ட அமைப்புகளின் நடவடிக்கைகளை உரிய தரப்புகள் தொடர்ந்தும் கண்காணிக்கும். அவர்கள் பிழை செய்தால் தடை மீண்டும் நடைமுறைக்கு வரும்" - என்றும் அவர் மேலும் கூறியுள்ள விடயமும் நாட்டின் அரசியலின் போக்கை வெளிப்படையாக காட்டியுள்ளதால் இங்கு ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது.

எதிர்வரும் சில மாதங்களில் இலங்கை தேசம் தொடர்ந்தும் பல தேர்தல்களை சந்திக்கவுள்ளது. அதில் ஒற்றை கும்கியாக அரசியல் அரங்கில் இருக்கும் ரணில் யானைக்கூட்டமொன்றை பாராளுமன்றுக்கு அழைத்துச் செல்லவேண்டிய தேவை உள்ளது. முஸ்லிம்களில் பெரும்பான்மை யானவர்கள் யானைகளின் விசிறிகள். தேர்தல் கால வாக்குக்காக அவர்களை திருப்திப்படுத்த வேண்டியே இந்த விஷப்பரீட்சையை ஜனாதிபதி ரணில் தயக்கமின்றி எழுப்பியுள்ளார்.

இவைகளுக்கு நடுவே முஸ்லிம் அமைப்புகளின் தடை நீக்கம் காரண மாக தமிழ்நாட்டின் பாதுகாப்பும் அதிகரிக்கப் பட்டுள்ளது என்ற இந்திய செய்தியினூடாக இந்தியா - அதிலும் குறிப்பாக தமிழகம் தன்னுடைய அரசியல் காய்நகர்த்தல்களைச் செய்ய ஆரம்பித்துள்ளது. தடைசெய்யப்பட்ட ஐந்து முஸ்லிம் அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டதன் காரணமாக தமிழ்நாட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன மட்டுமன்றி, உளவுத் துறையும் அதிவிழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை வெளியிட்டு இந்திய அரசியலின் முள்ளந்தண்டாக இருக்கும் இஸ்லாமிய எதிர்ப்பு வாதத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இருந்தாலும் அவர்களின் அச்சத்தில் குறை கூற முடியாதளவிலேயே 2019 உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். 500இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.இதைத் தொடர்ந்து பயங்கர வாதத்துடன் தொடர்புடை யவை என்று கூறப்பட்டு 11 முஸ்லிம் அமைப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டன. இந்நிலையில், ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத் அமைப்பு உள்ளிட்ட ஐந்து அமைப்புகள் மீதான தடை அண்மையில் நீக்கப்பட்டது. இந்த அமைப்புகளுக்கு தமிழகத்திலும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இந்த அமைப்புகளை தொடர்ந்து கண்காணிப்பதற்கு இலங்கை - இந்திய நாடுகளின் உளவு அமைப்புகள் நெருங்கிச் செயற்பட இணங்கியுள்ளன. இதேநேரம் தமிழ்நாட்டில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தமிழக உளவுத்துறையும் அதிவிழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்பதெல்லாம் இந்தியாவில் அரசியல் செய்ய விரும்பு பவர்கள் உசாராக வேண்டிய செய்திதானே.

இப்படி பல வெளிப்படையானதும், உள்ளர்த்தமானதுமான பிரச்சினைகளுக்கு நடுவே பலரும் அநியாயமாக சிறைவாசம் அனுபவித்துள்ளனர். இலட்சக்கணக்கான மக்கள் மனதளவில் பலவீனமடைந்துள்ளனர். தடையை விடுவிக்க போராடியவர்களுக்கு வெளிப்படையாக நன்றி கூற முடியதளவில் தடுமாற்றம், தேர்தல் நகர்வுகள், இனவாதம், காழ்ப்புணர்ச்சி போன்ற அரக்கனின் கையிலிருந்து இலங்கை மீளாத வரையில் இலங்கை முன்னேற வாய்ப்பில்லை. இலங்கை அந்நிய நாடுகளின் மாநிலமாக, மாவட்டமாக தொடர்ந்தும் இருக்க முடியாது. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு நாடாக மிளிர வேண்டும். அதற்கு நாம் இலங்கையர்களாக சிந்திக்க வேண்டும். அதுவே நாட்டின் நிலைநிறுத்தலுக்கு உசிதம்.

# பெண்களுக்கென தனி அடையாளம் தேவை!



## சொல்கிறார் ஜலனி பிரேமதாச



ஜலனி ஜயவர்தன என்ற பெயரை விட, அவரை ஜலனி பிரேமதாச என்று கூறினாலே முழு நாட்டுக்கும் தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் துணைவியான இவர் ஏதாவதொரு நாள் நாட்டின் முதல் பெண்மணியாவாரா என்று எதிர்பார்ப்பு அநேகமானவர்களுக்கு இருக்கிறது. இது, ஜலனி பிரேமதாசவுடனான சிறிய கலந்துரையாடல்,

**உங்களின் பெற்றோர் மற்றும் உங்களின் சிறுபராயத்திலிருந்து உரையாடலை ஆரம்பிப்போம்?**

எனது தாய் ஹேமானி கெஹெல்பன்னல. தந்தை நிமல் ஜயவர்தன. தாய், தந்தை இருவரும் வர்த்தகத் துறையைச் சேர்ந்தவர்கள். தந்தை தற்போது உயிருடன் இல்லை. எனக்கு தங்கையொருவரும் இருக்கிறார். நானும், தங்கையும் கொழும்பு பிஷப் வித்தியாலத்திலேயே கல்வி கற்றோம். சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு உயர் கல்விக்காக அவுஸ்திரேலியா சென்று, அங்குள்ள பல்கலைக்கழகமொன்றிலேயே உயர் கல்வியைப் பெற்றுக்கொண்டேன்.

**அவுஸ்திரேலியாவில் படிப்பை முடித்துவிட்டு இலங்கைக்கு வந்து தொழில் புரிந்தீர்களா? இல்லாவிட்டால் பெற்றோரின் வியாபார செயற்பாடுகளுடன் இணைந்து கொண்டீர்களா?**

எனது அம்மா வடிவமைப்பாளர். ( s n r ) அதனால், அதனுடன் தொடர்புடைய தொழிற்றுறையிலேயே அவர் ஆர்வம் காட்டியிருந்தார். அவுஸ்திரேலியாவில் எனது கல்வி நடவடிக்கையை முடித்துவிட்டு நாடு திரும்பியதும், அம்மாவின் வியாபார நடவடிக்கைகளுக்கு உதவிசெய்து வந்தேன். அதன்போதே சஜித்தையும் சந்தித்தேன்.

**சஜித்தை முதலில் சந்தித்த நாள் நினைவிருக்கிறதா?**

ஆம். நன்றாக நினைவிருக்கிறது. 28 வருடங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழில் நிபுணர்களின் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டபோது, எனது அம்மாவும் அதில் ஆரம்ப உறுப்பினராக இருந்தார். எனது அம்மாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருந்த அந்தத் தொடர்பின் காரணமாக ரணசிங்க பிரேமதாசவின் நினைவு தின நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு கிடைத்திருந்தது. சஜித்தே அந்த அழைப்பை விடுத்திருந்தார்.

பிரேமதாசவின் நினைவு தினத்தன்றே எனது நண்பியின் நிகழ்வொன்றும் இருந்தது. அதனால், இருவரும் ஒரே வாகனத்தில் செல்வோம். தன்னை நினைவு தின நிகழ்வு இடம்பெறும் இடத்தில் விட்டுவிட்டு வாகனத்தில் நண்பியின் நிகழ்வுக்குச் செல்லுமாறு அம்மா கூறியிருந்தார்.

நிகழ்வு இடம்பெறும் இடத்துக்குச் சென்றதும் எனது அம்மா, இவ்வளவு தூரம் வந்துவிட்டு வாகனத்திலிருந்து இறங்கி சிறிதுநேரம் இருந்துவிட்டு செல்லுமாறு கூறினார். வாகனத்திலிருந்து இறங்கி நிகழ்வு இடத்துக்குச் சென்றபோதே சஜித்தை முதலில் சந்தித்தேன்.

**அன்றைய தினம் சஜித் உங்களுடன் பேசினாரா?**

சஜித் அன்று என்னுடன் பேசினார். ஐந்து நிமிடமே அங்கு இருந்தேன். அதில் நான்கு நிமிடங்கள் நினைவு நிகழ்வுகளில் கலந்துகொள்ளவேண்டி ஏற்பட்டது. அதனால், நண்பியின் நிகழ்விலும் கலந்துகொள்ள முடியாமல் போனது.

**அன்றைய தினமே சஜித் உங்களுக்கு விருப்பம் தெரிவித்துவிட்டாரா?**

அன்று அவ்வாறு எதுவும் கூறவில்லை. ஆனால், என்மீது விருப்பத்துடன் இருக்கிறார் என்பதை உணரக்கூடியதாக இருந்தது. அந்த நிகழ்வுக்கு வந்திருந்த ரோசி சேனநாயக்கவிடம் என்னைப் பற்றி விசாரித்திருக்கிறார். அதற்கு ரோசி, எனது அம்மாவை காண்பித்து இவரின் மகள் என்று சஜித்துக்கு அடையாளம் காண்பித்துள்ளார். நினைவு தின நிகழ்வு முடிந்த மறுதினமே எனது வீட்டின் தொலைபேசி இலக்கத்தைக் கண்டுபிடித்து வீட்டுக்கு அழைப்பெடுத்திருந்தார். அவரின் அழைப்பு முதலில் அம்மாவே ஏற்றிருந்தார்.

முதல் அழைப்பிலேயே சஜித் எனது அம்மாவிடம், “அம்மா நான் உங்களின் மகளை விரும்புகிறேன்” என்று கூறியுள்ளார். அதற்கு அம்மா “அவரிடம், மகளிடம் இதுதொடர்பில் பேச வேண்டும். அவரின் விருப்பமே முக்கியம்” என்று கூறியுள்ளார். அதன்பின்னர் தொலைபேசியை என்னிடம் கொடுத்தார். சஜித் என்னுடன் சிறிது நேரம் பேசிகொண்டிருந்து விட்டு, “நான் உன்னை நேசிக்கிறேன்”என்று கூறிவிட்டார்.

**அதற்கு எவ்வாறு பதிலளித்தீர்கள்?**

அதற்கு நான், ''எடுத்தவுடன் விருப்பத்தை தெரிவிக்க முடியாது. இருவரும் உரையாடி புரிந்துகொண்டதன் பின்னர் தீர்மானமொன்றுக்கு வருவோம்'' என்று கூறினேன். அவ்வாறு சிறிதுகாலம் பேச ஆரம்பித்தோம். ஒருவருக்கு ஒருவர் புரிந்துகொண்டோம். அதன்பின்னரே திருமணத்துக்கு ஆயத்தமானோம். அறிமுகமாகி ஒன்றரை வருடங்களின் பின்னர் திருமணமும் செய்துகொண்டோம்.

**அந்த காலப்பகுதியில் சஜித் அரசியலில் நேரடியாக களமிறங்கிவிட்டாரா?**

அதன்போது, அவர் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தார். ஆனால், அப்போது அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கவில்லை. திருமணம் செய்யும் தீர்மாணத்துக்கு வந்ததன் பின்னரே, அவரின் அரசியல் அபிலாஷைகள் பற்றி எனக்கு கூறினார். அரசியலில் இருக்கும்போது முகங்கொடுக்க வேண்டிய சவால்கள் பற்றியும், பிரச்சினைகள் பற்றியும் எனக்கு கூறினார். நானும் அவர் கூறிய விடயங்கள் தொடர்பில் சிந்தித்தேன்.

அரசியல் ரீதியாக எதிர்காலத்தில் சஜித் எதிர்கொள்ளவிருக்கும் சகல சவால்களின் போதும், என்னால் அவருடன் இருக்க முடியும் என்ற நம்பிக்கையிலேயே திருமணத்துக்குத் தயாரானோம். எங்களுக்குத் திருமணமாகி 25 வருடங்களாகின்றன. இந்த 25 வருடங்களில் சஜித் அரசியல் ரீதியாக பல்வேறு சவால்களை சந்தித்திருக்கிறார். பிரச்சினைகளையும் சந்தித்திருக்கிறார். இருவரும் இணைந்து அந்தப் பிரச்சினைகளை முகங்கொடுத்தது நினைவுக்கு வரும்போதெல்லாம் நான் அன்று எடுத்த தீர்மானம் சரியானது என்று எண்ணுவேன்.

**சஜித், தொடர்ச்சியாக யால தேசிய பூங்காவில் பொழுதுபோக்கில் ஈடுபடுவதை நாங்கள் அவதானிக்கிறோம். நீங்கள் சஜித்துடனா முதலில் யால பூங்காவுக்குச் சென்றீர்கள்?**

யால தேசிய பூங்காவை பார்க்க சஜித்துடனேயே முதலில் சென்றேன். இப்போதும், நேரம் கிடைக்கும்போதும



சஜித்துடன் யால பூங்காவுக்கு செல்வேன். அங்கிருக்கும் மரஞ்செடிகள், உயிரினங்களுடன் நேரத்தை செலவிடும்போது மனதுக்கு புதுமையான மன அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.

**'ஜால் சலூன்' என்ற பெயரில் உங்களின், உங்களுக்கே உரிமையான வியாபாரமொன்று இருக்கிறது. அரசியல்வாதியொருவரின் மனைவி என்ற அடிப்படையில் ஏன் தொழில் அதிபராக எண்ணினீர்கள்?**

வர்த்தகமொன்றை ஆரம்பிப்பது என்று நீண்ட காலமாக எனது மனதில் இருந்த விடயமாகும். எனது பெற்றோரிடமிருந்து கிடைத்த வியாபார பின்னணியே இதில் தாக்கம் செலுத்தியது. கணவர் எந்தத் துறையில் இருந்தாலும், மனைவி தனக்கென சுயாதீன பொருளாதார பலத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். அதேபோன்று திருமணமானாலும், இல்லாவிட்டாலும் எந்தவொரு பெண்ணும் தனக்கென ஓர் அடையாளத்தையும் சுயாதீன பொருளாதார பலத்தையும் உருவாக்கிக் கொள்வது அவசியம் என்றே கருதுகிறேன்.



**உங்களின் வியாபாரத்தை ஆரம்பிக்கும்போது சஜித் என்ன கூறினார்?**

ஜால் சலூனை ஆரம்பிக்கும்போது, எனது கணவரே எனக்கு மிகவும் பக்கபலமாக இருந்தார். வியாபாரத்தை ஆரம்பித்தபோது, ''உங்களால் இதனை வெற்றிகரமாக்க முடியும்'' என்று கூறி சஜித் என்னை மிகவும் உற்சாகப்படுத்தினார். இந்த வியாபாரத்தை ஆரம்பித்து தற்போது 15 வருடங்கள் நிறைவடைந்துவிட்டன. இன்றும், தொழிலதிபராக நான் எதிர்கொள்ளும் சவால்களுக்கு சஜித்தே எனது பலமாக இருந்து வருகிறார். எனது மனைவி வர்த்தகர் என்று கூறிகொள்வதில் எனது கணவர் அதனை மிகப் பெருமையாகவே நினைக்கிறார்.

**உங்களின் சலூனிலா சிகை அலங்காரம் செய்துகொள்வார்?**

ஆம். ஜால் சலூன் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து அவர் அங்கேயே சிகை அலங்காரம் செய்துகொள்வார்.

**சஜித் சிகையலங்காரம் செய்துகொண்டால், அதற்கான பற்றுச்சீட்டு கொடுக்கப்படுமா?**

பற்றுச்சீட்டிலிலுள்ள கட்டணத்தை செலுத்திவிட்டே அங்கிருந்து வெளியேறுவார். இந்த சலூன் ஆரம்பித்த தினத்தன்றே, ''சிகையலங்காரம் செய்துகொள்ள நான் இங்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்கான பற்றுச்சீட்டை எனக்கு தரவேண்டும். மற்றைய நுகர்வோரைபோன்று நானும் கட்டணத்தை செலுத்திவிட்டே செல்வேன்'' என்று கூறினார்.

**இருவர் திருமணப் பந்தத்தில் இணைந்ததன் பின்னர் குழந்தை பெற்றுக்கொள்வதா? இல்லையா என்பது மிகவும் தனிப்பட்ட காரணமாகும். ஆனால், உங்கள் இருவருக்கும் குழந்தைகள் இல்லை என்ற காரணத்தைக்கொண்டு சஜித்துக்கு அரசியல் ரீதியான தாக்குதல்கள் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. எவ்வாறு அவற்றை இருவரும் சகித்துக்கொள்கிறீர்கள்?**

இந்தப் பிரச்சினைக்கு பதிலளிப்பதற்கு முன்னர், ஏன் நாங்கள் குழந்தைகளை பெற்றுக்கொள்ளவில்லை என்று கூறுகிறேன். குழந்தை பெற்றுக்கொள்ளும் விடயத்தில் நான் பல்வேறு சுகாதார பிரச்சினைகளை சந்தித்திருக்கிறேன். எனக்கு ஏற்பட்ட சுகாதார பிரச்சினைகளின் காரணமாகவே குழந்தை பெற்றுக்கொள்வதில்லை என்ற தீர்மானத்துக்கு வந்தோம். 'எமக்கு குழந்தைகள் தேவையில்லை' என்று சஜித் முதலில் கூறினார். அதற்குக் காரணம், குழந்தை பெற்றுக்கொள்ள முயற்சித்தபோது எனது உயிரை இழக்கவேண்டி சூழ்நிலை ஏற்பட்டது. ''நீங்கள் இல்லாமல் எனக்கு குழந்தை அவசியமில்லை'' என்று, அன்று சஜித் கூறியது இன்றும் என் மனதில் ஆழமாகப் பதிவாகியுள்ளது.

எனது சுகாதாரப் பிரச்சினையை வைத்து சஜித்துக்கு அரசியல் ரீதியாக தாக்குதல் மேற்கொள்ளப்படும்போது எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஆனால், குழந்தை இல்லை என்ற உணர்வுப்பூர்வமான விடயத்தைப் பிடித்துக்கொண்டு எங்களுக்கு சேறு பூசுபவர்களுக்கு எவ்வளவு மோசமான மனநிலை இருக்கும் என்பதை நான் பின்னரே புரிந்துகொண்டேன். இவ்வாறு சேறுபூசுபவர்கள் அனைவரும் தாயொருவரால் உருவாக்கப்பட்டவர்கள். அதேபோன்று, அவர்களுக்கும் மனைவி, சகோதரிகள், குழந்தைகள் இருக்கிறார்கள். குழந்தை விடயத்தை ஆதாரமாகக்கொண்டு எனக்கும் சஜித்துக்கும் சேறு பூசுபவர்கள், அவர்களின் தாய், மனைவி, சகோதரிகள் மற்றும் பொதுவாக பெண்களுக்கு மதிப்பளிப்பவர்கள் இல்லை என்றே நான் கருதுகிறேன். மேலும், சஜித் மீது முன்வைக்க வேறு குற்றச்சாட்டுகள் இல்லாததன் காரணமாகவே இவ்வாறு சேறு பூசுகிறார்கள்.

**சஜித்தின் மனைவியாக நீங்கள் அவரிடம் பார்க்கும் சிறந்த குணம் எது? பலவீனமான குணம் எது?**

பொறுமையே நான் அவரிடம் பார்க்கும் சிறந்த குணம். சுஜித்திடம், அதிசயமான பொறுமை குணமே இருக்கிறது. அதேபோன்று, சஜித் மற்றையவர்கள் மீது வைத்துள்ள மரியாதையையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். அதுவும் அவரிடமுள்ள சிறந்த குணமாகும்.

பலவீன குணமென்று சஜித்திடம் நான் எதைனயும் அவதானிக்கவில்லை. ஆனால், அதுதொடர்பில் இவ்வாறு கூற முடியும். சகல விடயங்களுக்கும் நூற்றுக்கு நூறு வீதம் முறையாக இருக்கவேண்டும் என்று எண்ணுவார். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் அதனை எதிர்பார்ப்பார். சுஜித்தின் பலவீனமென்றால் அதனையே சுட்டிக்காட்ட வேண்டும்.

**இரகசியமாக நீங்கள் பல்வேறு சமய வழிபாடுகளில் ஈடுபவதாக தெரிவிக்கப்படுகிறதே?**

திஸ்ஸமகாராம விகாரையில் ஆரம்பித்து தற்போதுவரையில் நான் 20 கட்டின வழிபாடுகளை முன்னெடுத்துள்ளேன். இந்த வழிபாடு இடம்பெறும் விகாரையின் அபிவிருத்தியை மையமாகக்கொண்டே வழிபாடுகளை முன்னெடுத்து வருகிறேன். கொரோனா தொற்றுப் பரவலின் பின்னர் இந்த வழிபாட்டை ஆரம்பித்திருந்தேன். பின்னர் மஹியங்கனை ரஜமகா விகாரையில் வழிபாடு செய்திருந்தேன்.

**சஜித்தும் நீங்களும் மிகவும் வேலைப்பளுவில் இருக்கிறீர்கள். இதற்கிடையில் பாடல் கேட்க, புத்தகம் வாசிக்க, திரைப்படம் பார்ப்பது போன்று விடயங்களுக்கு இருவரும் ஒரே நேரத்தை ஒதுக்கிக்கொள்வீர்களா?**

சஜித் கொழும்பில் இருக்கும் ஒவ்வொரு நாளும், எங்களுக்காக அரை மணிநேரமாவது ஒதுக்கிக்கொள்வோம். அதன்போது நாங்கள் பாடல் கேட்போம். ஒருசில சந்தர்ப்பங்களில் சஜித் பியானோ வாசிப்பார். புத்தகம் வாசிப்போம். இரு வாரங்களுக்கு ஒருமுறை திரைப்படம் பார்க்கச் செல்வோம். சில நேரங்களில் பகல் உணவுக்காக வெளியில் செல்வோம்.

**2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட போவதாக சஜித் கூறியபோது, நீங்கள் அவருக்கு என்ன சொன்னீர்கள்?**

அதன்போது சஜித் பலத்த எதிர்ப்பை சந்தித்திருந்தார். மத்திய வங்கி பிணைமுறி, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் உள்ளிட்ட அப்போதிருந்த அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுடனேயே சஜித் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டிருந்தார். மறுபுறம் சஜித்துக்கு வேட்பாளர் உரிமை கிடைத்தபோது எதிர்முனையில் போட்டியிடுபவர்கள் தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்து நீண்ட நாட்களாகியிருந்தன. இதனால், ''மிக இலகுவான சவாலை நீங்கள் ஏற்கவில்லை. இறுதியில் என்ன முடிவு வந்தாலும் நான் உங்களுடனேயே இருப்பேன்'' என்று கூறினேன்.

**தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் ஊடக சந்திப்பில் கூட நீங்கள் சஜித்தின் அருகிலேயே இருந்ததை நாங்கள் அவதானித்திருந்தோம். சஜித் தோல்வியை சந்தித்துவிட்டார் என்று தெரிந்ததும் அவருக்கு நீங்கள் என்ன கூறினீர்கள்?**

முதலில், மிக விரைவில் அரசியல் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறே கூறினேன். ''இது தோல்வி இல்லை. 55 இலட்சத்துக்கும் மேலான மக்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள். அதனால், அரசியலில் அடுத்த பயணத்துக்குத் தயாராகுங்கள்'' என்று கூறினேன்.

(நேர்காணல் - ஹசித குருப்பு)

(நன்றி – தரணி)



காரைக்கவி

# சீத்துவக்கேடு 252

நாங்கள் உப்பிடிக் கதைச்சுக்கொண்டு நிக்க அங்கை வந்த வள்ளிப்பிள்ளை ஆச்சி, அடியே உவள் சரசியின்ரை இளைய சிதறுவான் வயல் சாடுவாயிலை மேஞ்சுகொண்டு நிண்ட மயிலாத்தை வீட்டு வன்னி நாம்பனிலை அதுகின்ரை எரியைப்பிடிச்சு ஏறி விளையாட அது அவனைக் கீழை விழுத்தி கொம்பால குத்திப்போட்டுதாம் எண்டு கொண்டு வயல்பக்கம் போனா. எங்கடை வயல் சாடுவாயிலை மாடுகள் நிண்டு மேயேக்கை எங்கடை பெடியள் உப்படித்தான் மாடுகளுக்கு மேலே ஏறி இருந்து சவாரி செய்வாங்கள் இல்லாட்டில் அதுகளின்ரை ஏரியை கட்டிப்பிடிச்சுக் கொண்டு கோ ...கோ ..எண்டு கத்திக்கொண்டு இழுபட்டுக்கொண்டு ஓடுவாங்கள். உது அவங்களுக்கு நல்ல பொழுதுபோக்கு சில நேரங்களிலை மாடுகள் உப்புடித்தான் இடிச்சுத் தள்ளுங்கள். இல்லாட்டில் தள்ளி விழுத்தி உழக்கிப்போட்டு ஓடுங்கள்.

வள்ளிப்பிள்ளை ஆச்சி கத்திக்கொண்டு போக தானும் போய் என்ன ஏது எண்டு பாத்துக்கொண்டு வாறன் எண்டு எங்கட ஆச்சியும் வயல் பக்கம் போனா. ஆச்சி போகவும் அப்பு, உப்பிடி உந்த மாடுகளோடை விளையாடுறதை எங்கட சங்க இலக்கியங்கள் ஏறு தழுவுதல் எண்டு சொல்லுது எண்டு போட்டு ஏறுகோடல், ஏறுகோள், ஏறு விடுதல் எண்டும் உதை எங்கட இல்லகியங்கள் சொல்லுது எண்டார். பேந்து இப்ப உந்த ஏறுதழுவலைத்தான் இப்பத்தே ஆக்கள் சல்லிக் கட்டு, மஞ்சு விரட்டு, மாடுபிடித்தல், கூளிபிடித்தல், கூளியாடுதல்,பொல்லெருது பிடித்தல் எண்டு சொல்லுறாங்கள் எண்டார்.



சங்க இலக்கியத்திலை எட்டுத்தொகை எண்டு இருக்கெல்லோ. அதிலை வாற கலித்தொகையை "கற்றறிந்தார் ஏத்தும் கலி" எண்டு படிச்ச ஆக்கள் சொல்லுறவை .அதில நூற்றி ஐம்பது கலிப்பாக்கள் எண்ட பாட்டுவகை இருக்குது. இதிலை பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, நெய்தல்கலி, மருதக்கலி எண்டு அஞ்சு திணைகளுக்கும் தனித்தனியா எண்டு அஞ்சு புலவர்கள் பாடி இருக்கினம். பெருங்கடுங்கோன் பாலை பற்றி 35 பாட்டுகள், கபிலர் குறிஞ்சி பற்றி 29 பாட்டுகள், மருதன் இளநாகனார் மருதம் பற்றி 35 பாட்டுகள், சோழன் நல்லுருத்திரன் முல்லை பற்றி 17 பாட்டுகள், நல்லந்துவனார் நெய்தல் பற்றி 33 பாட்டுகள் எண்டு பாடி இருக்கினம் .

உதிலை முல்லைக்கலியிலை முதல் ஏழு பாட்டுகளிலையும் ஏறு தழுவுதல் பற்றி சோழன் நல்லுருத்திரன் விலாவாரியாச் சொல்லி இருக்கிறார். முல்லைக்கலியில முல்லை நிலத்திலை சீவிச்ச ஆயர் குடிச் சனத்தின்ரை வீரத்தையும் ஆயர் குலத்து குமர்ப்பெட்டையள் ஏறு தழுவி வெண்ட இளந்தாரியளை மட்டுமே காதலிச்சவளவை பேந்து அவனவையையே கலியாணம் கட்டினவளவை எண்ட செய்தியளையும் அவர் சொல்லுறார்.

கொல்லேறு தழுவுதல் எண்டது உயிருக்கு உலை வைக்கிற ஆபத்தான வேலை எண்டாலும் அப்பத்தேக் குமரியள் வெல்லுறவனை மட்டுமே ஆம்பிளை எண்டு மதிப்பாளவை எண்டபடியால அவங்கள் அப்பத்தே பெடியள் உந்த விளையாட்டை உயிரைப்பணயம் வைச்சு விளையாடி இருக்கிறாங்கள். அப்பிடி விளையாடேக்கை கன பேர் செத்தும் இருக்கிறாங்கள். அதுமாதிரி கனபேர் காயப்பட்டும் இருக்கிறாங்கள். உதிலை ஆகப் பகிடி என்னண்டால் தோத்தவங்களை அந்தக் குமரியள் இந்தப் பிறப்பில மட்டும் இல்லை அடுத்த பிறவியிலையும் கூட கலியாணம் கட்ட விரும்பமாட்டாளவையாம் எண்ட செய்தியை "கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்புல்லாளே ஆய மகள்" எண்ட வரியிலை புலவர் சொல்லுறார் எண்டார் அப்பு.

அப்ப முல்லை நிலத்தில இருந்த ஆயர்களுக்கு புலி மாதிரியான மிருகங்களிட்டை இருந்து தங்கடை மாடுகளைப் பாதுகாக்கிற தேவை இருந்ததோடை அவங்கள் நாட்டின்ரை எல்லைப் பகுதிக்காடுகளிலை இருந்த படியால சண்டை வரேக்கை அவங்ககளைத்கான் முதலிலை தாக்குவாங்கள் எண்டபடியாலை பாதுகாப்பாகவும் இருக்க வேணும் எண்டு போட்டு அவங்கள் வீரம் உள்ளவங்களாக இருக்க வேண்டிய ஒரு தேவை இருந்தது . அதாலைதான் அவங்கள் தன்கடி பெட்டையளைக் கட்டுரவங்கள் நல்ல வீரமா இருக்க வேணும் எண்டு போட்டு உந்த ஏறு தழுவலைக் கொண்டு வந்தவங்கள் எண்டார் அப்பு .

(இன்னும் ஆடுவம் )



வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

# இவ்வார இராசி பலன்கள்

### மேஷ ராசி அன்பர்களே!

பொருளாதார வசதி திருப்திகரமாக உள்ளது. கூடுதல் செலவுகள் ஏற்பட்டாலும் உங்களால் அதைச் சமாளித்துவிட முடியும். குடும்பத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும்போது பொறுமை அவசியம். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் தீர்ந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். தடைப்பட்டு வந்த சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை நல்லபடி முடியும். சிலருக்கு பணிச்சுமை அதிகரிப்பதால் உடல் அசதி ஏற்படும்.

அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். உங்கள் வேலைகளில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டியது முக்கியம். பதவி உயர்வையோ ஊதிய உயர்வையோ தற்போது எதிர்பார்க்க முடியாது.

வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் விடயத்தில் தகுந்த எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். மற்றபடி வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும்.

### ரிஷப ராசி அன்பர்களே!

குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த சிறுசிறு பிரச்சினைகள் நீங்கி, குதூகலம் குடிகொள்ளும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் எண்ணப்படி நடந்துகொள்வார்கள். தாயின் தேவைகளைப் பூர்த்திசெய்து, மகிழ்ச்சியடைவீர்கள். சகோதரர் நீங்கள் கேட்ட உதவியை செய்து தருவார். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். சிலருக்கு பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். முக்கியமான ஒரு பிரச்சினையை சமயோசிதமாகத் தீர்த்து நிர்வாகத்தினரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். எதிர்பாராத சலுகைகள் கிடைப்பதற்கும் வாய்ப்பு உண்டு.

வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை எதுவும் இருக்காது. பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பார்கள்.

### மிதுன ராசி அன்பர்களே!

உடல் ஆரோக்கியம் மேம்படும். தேவையான பணவரவு உண்டு. சிலருக்கு வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். நீண்டநாட்களாகத் தடைப்பட்டுவந்த ஒரு காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தாயாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகள் வழியில் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அதிகாரிகளிடம் பேசும்போது பதற்றம் வேண்டாம். சிலருக்கு எதிர்பாராத இடமாற்றம் ஏற்படக்கூடும்.

வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவதற்காக பாடுபடுவீர்கள். அதிக உழைப்பின் காரணமாக அசதியும் சோர்வும் ஏற்பட்டு நீங்கும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்கள் மிகவும் பொறுமையாக இருக்கவேண்டியது அவசியம். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் கிடைப்பதில் பிரச்சினை எதுவும் இல்லை.

### கடக ராசி அன்பர்களே!

பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். ஆனாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். சிலருக்குச் சிறிய அளவில் உடல் ஆரோக்கியம் பாதித்தாலும் உடனே சரியாகிவிடும். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. தந்தையின் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

அலுவலகத்தில் உற்சாகமாக உங்கள் பணிகளைச் செய்வீர்கள். ஒருசிலருக்கு இருக்கும் இடத்தில் இருந்து வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். அதனால் நன்மையே உண்டாகும். சக ஊழியர்களால் ஏற்பட்ட அவப்பெயர் நீங்கும்.

வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் திருப்தி தருவதாக இருக்கும். பங்குதாரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு உதவி செய்வார்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் கடன் வாங்க நேரும்.

### சிம்ம ராசி அன்பர்களே!

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், போதுமான பணவரவு இருப்பதால் எளிதாகச் சமாளித்துவிடுவீர்கள். நீண்டநாட்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படும். திருமணத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். நல்ல இடத்தில் வரன் அமைவதற்கு வாய்ப்பு உள்ளது. சிலருக்கு வீட்டுக்கு அருகிலுள்ள ஆலயத்தில் சிறப்பு வழிபாடு செய்யும் வாய்ப்பு ஏற்படும். அரசாங்கக் காரியம் அனுகூலமாகும்.

புதிய வேலைக்கு முயற்சி செய்துகொண்டு இருப்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். சில சலுகைகளும் கிடைக்கும்.

வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கக் கூடுதலாக உழைக்கவேண்டியிருக்கும். பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சக வியாபாரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது.

குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் வாரமாக இருக்கும்.

### கன்னி ராசி அன்பர்களே!

வருமானத்துக்குக் குறைவிருக்காது. கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் செய்தி கிடைக்கும். சகோதரர்களால் சில சங்கடங்கள் உண்டாகும். புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் வீண் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். வேறு வேலைக்கு இப்போது முயற்சி செய்ய வேண்டாம். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும். சிலருக்கு பணி நிமித்தமான பயணங்கள் உண்டு.

வியாபாரத்தில் சந்தை நிலைவரத்தை அறிந்து செயல்படும் திறன் அதிகரிக்கும். சக வியாபாரிகள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். பணியாளர்கள் நல்லபடி ஒத்துழைப்பர்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குத் தேவையான பணம் இருப்பதால் சிரமம் எதுவும் இருக்காது.

### துலா ராசி அன்பர்களே!

புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தாயாரின் உடல்நலனில் கவனம் செலுத்தவும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெறுவதற்கான வாய்ப்பு கூடி வரும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். வாரப் பிற்பகுதியில் உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. நண்பர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையே காணப்படும். புதிய வேலைக்கு விண்ணப்பித்து இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

புதிதாக வியாபாரம் தொடங்க விரும்புபவர்களும், வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்களும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். சாதகமாக முடியும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு நிம்மதியான வாரம். புகுந்தவீட்டு உறவினர்கள் உங்களிடம் மிகுந்த அன்பு பாராட்டுவார்கள்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். பணவரவுக்குக் குறைவிருக்காது. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பெண் அல்லது பிள்ளையின் திருமணம் தொடர்பான முயற்சி சாதகமாக முடியும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருந்தாலும் அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். அதிகாரிகள் அனுசரணையாக இருப்பார்கள்.

வியாபாரத்தில் புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். விற்பனையும் லாபமும் வழக்கம்போலவே காணப்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

குடும்ப நிர்வாகத்தை கவனித்துவரும் பெண்கள் குடும்ப நிர்வாகத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். புகுந்தவீட்டு உறவினர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம்.

### தனுசு ராசி அன்பர்களே!

பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். வீண் செலவுகளும் ஏற்படுவதற்கில்லை. நண்பர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்னைகள் ஏற்படக் கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். அதிகாரிகள் அவ்வப்போது கண்டிப்பு காட்டுவார்கள்.

வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும். சக வியாபாரிகளுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி, சுமுகமான உறவு ஏற்படும். பங்குதாரர்களின் ஆதரவு உற்சாகம் தரும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதில் சிறுசிறு சலனம் ஏற்படக் கூடும். கணவர் கண்டிப் பாகப் பேசினாலும் பொறுமையுடன் இருப்பது மிகவும் அவசியம்.

### மகர ராசி அன்பர்களே!

பணவரவு திருப்தி தரும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் சாத்தியம் உள்ளது. சகோதர வகையில் இருந்துவந்த கருத்துவேறுபாடுகளும் கசப்பு உணர்வுகளும் மாறி, சுமுகமான உறவு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவுடன் தேவையான உதவியும் கிடைக்கும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். ஒரு சிலருக்கு பதவி உயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைப்பதற்குமான சந்தர்ப்பம் கனிந்து வரும்.

வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பழைய கடன்கள் தீரும். பங்குதாரர்கள் மூலம் தேவையான உதவி கிடைக்கும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும். குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு சற்று சிரமமான வாரம் என்றே சொல்ல வேண்டும். கணவர் மற்றும் பிள்ளைகளால் பணிச்சுமை அதிகரிக்கும் என்பதால் உடல் அசதி ஏற்படும்.

### கும்ப ராசி அன்பர்களே!

பணவரவு போதுமான அளவு இருக்கும். செலவுகளும் அளவாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் தேவையறிந்து நண்பர்கள் உதவி செய்வது ஆறுதலாக இருக்கும். பழைய கடன்களைத் தந்து முடிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். சிலருக்குக் குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். சக பணியாளர்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்வார்கள். ஒரு சிலருக்கு அவர்கள் விரும்பியபடி இட மாறுதல் கிடைக்கும்.

வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கி இணக்கமான சூழ்நிலை உண்டாகும். விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு திருப்திகரமான வாரம். கணவருடன் ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

### மீன ராசி அன்பர்களே!

குடும்பத்தில் கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கி அந்நி யோன்யம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வாரப் பிற்பகுதியில் அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். பணவரவைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவும் இல்லை. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளில் சகோதரர்கள் உதவி செய்வார்கள். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதில் சற்று அலைச்சல் ஏற்படும்.

அலுவலகத்தில் திருப்திகரமான போக்கே காணப்படும். வேறு வேலைக்குச் செல்ல விரும்புபவர் கள் அதற்கான முயற்சிகளில் இப்போது ஈடுபடலாம். நல்ல வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு.

வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கும். அவர் மூலம் முதலீடு செய்வதற்கான பண உதவியும் கிடைக்கும். விற்பனையும் லாபமும் அதிகரிக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புகுந்தவீட்டு உறவினர்கள் உங்கள் நிர்வாகத் திறனை சிலாகித்துப் பேசுவார்கள்.

# தூறல்கள்

## பட்டாம் பூச்சிகள்!

காதல் மழையில்
நனைந்து கொள்கிறேன்
கனவுகள் முழுக்க
பட்டாம் பூச்சிகள்.

★★★

நீ உதித்துச் சென்ற
சொட்டுப் புன்னகை
நிரம்பி வழிகிறது
இதயக் கிண்ணம்.

★★★

விழிகளால் தினம்
பேசிச் செல்கிறாய்
குறித்துக் கொள்கிறது
என் இதயப் புத்தகம்.

★★★

நீ உதித்த வார்த்தைகளை
சேர்த்து வைக்கிறேன்
காதல் சொட்டும்
கவிதை என்கிறார்கள்.

★★★

காதல் புத்தகத்தை
புரட்டிப் பார்க்கிறேன்
மௌன மொழியால்
கவிதைகள் சொல்கிறாய்.

★★★

உன் வார்த்தைகள்தான்
என்னை வெறுக்குது
கண்களில் நிறைய
காதல் சொட்டுது.

★★★

பல கோடி நன்றிகள்
உனக்கு
துரோகங்களை
பரிசளித்து
கவிதைகள் தந்தாய்.

நீ தினமும்
வந்து போகிறாய்
என்னை ஏனடி
கொன்று போகிறாய்.

★★★

வலிகளை மறைத்து
ஒதுங்கி வாழ்கிறேன்
வீண் பலிகளை சுமத்தி
ஏனடி கொல்கிறாய்.

★★★

சாபம் இட்டு
நாசம் செய்யமாட்டேன்
திருந்திக் கொள்
வாழ்த்துகள் உனக்கு.

*- அய்ஷத்அப்சத் -*
*பாலமுனை - 04*

## இவன் யார்

மௌனமாய் இருந்தேன்
இவன் மடையன் என்றார்கள்
சகஜமாய் சிரித்தேன்
இவன் பைத்தியக்காரன்
என்றார்கள்

ஓய்வின்றியும் உழைத்தேன்
இவன் ஏமாளி என்றார்கள்
நேரத்திற்கு உழைத்தேன்
இவன் பிழைக்க
தெரியாதவன் என்றார்கள்

விரும்பிய செலவுகள்
செய்தேன்
இவன் ஊதாரி என்றார்கள்
அளவுக்கு செலவு செய்தேன்
இவன் கஞ்சன் என்றார்கள்

அன்பாக பேசி
அழகாய் நடித்து
தேவைகள் தீர்ந்ததும்
தூரமாய் செல்பவனே
தேவ தூதுவன் என்றால்
இவன் பித்தனே..........

*- தேவந்தி (சயூரன்)*
*காரைதீவு -*

## மயிலே எந்தன் மனமெங்கே..?

உன்னைக் கண்ட
நாள்முதலாய் நானும்
என்னை உனக்குள்
தொலைத்தேன் நாளும்

நான் நீயாகியே
உன் நிழலானேன்
உன் உயிராய்
தினம் நிஜமானேன்

உன் பார்வையில்
வழுக்கியே வீழ்கிறேன்
மென் புன்னகையில்
புதையுண்டே மீள்கிறேன்

உந்தன் காதலில்
துளிர்த்தே வளர்கிறேன்
எந்தன் எதிர்காலத்தை
உனக்குள் வரைகிறேன்

மயிலே எந்தன்
மனமெங்கே சொல்லாயோ
குயிலே உன்மனதில்
என்னை அள்ளாயோ

அன்பே உன்னால்
இழந்தவை அதிகம்
வெண்பாவே மிஞ்சியது
என்னுயிர் பாரும்

தினமும் உன் கனவோடு
விழிக்கின்றேனே
நாணமும் கொள்ளுமுன்
நினைவோடு
களிக்கின்றேனே

தந்துவிடு எனக்கும்
காதல் சிறகினை
வந்துவிடு நீயும்
உலாவிடுவோம்
புவியினை..!

*- ஏரூர் கவிமாமணி*
*எம்.ரி.எம்.அன்ஸார் -*

## நட்பு

நண்பனே நண்பனே
நாங்கள் பேனா
நண்பரே
பாரினில் எங்கோ
வாழ்கிறோம்
கருவறை வேறு
கல்லறை வேறு
நாங்கள் சிரிக்கிறோம்
செல்லில் கதைப்போம்

இதயச் செல் நின்று
போனால் அழுவோம்
இருப்பவர் போனால்
இருப்பவர் கதைப்பார்

இருப்பவர் இறந்தால்
யார் நம்மை
கதைப்பார்

மை பூசக் காதல் நட்பு
காமனும் காணக்
காதல் நட்பு
காலத்தால் அழியாத
காதல் நட்பு

இரத்த உறவில்
வராத காதல் நட்பு

இன்பம் துன்பம்
இரண்டில்
இருக்கும்
காதல் நட்பு
நானும் நீயும்
உள்ள வரை
நாளும் வாழும்
காதல் நட்பு

*- சி. மேகவர்ணன் -*
*( மார்க்கோணி )*
*கனடா*

## வானம் தொடும் நீ

வானம் தொடும்
விருப்பம் கொள்கையில்
ஏணியாக வந்து
உயரம் நோக்கி
அனுப்பி வைத்தாய்

ஒவ்வொரு அடிகளிலும்
உயரம் நோக்கிய
பயணத்தில்
மேல் நோக்கிப்
போய்க்கொண்டிருப்பதான
நம்பிக்கை நெஞ்சை
நிரப்புகிறது

அனுப்பிய உன்னைத்
தேடுகிறேன்
இன்னும் கீழே
ஒரு புள்ளியாகப்
புலப்படுகிறாய்

சுடரால் மூட்டிய
நெருப்பில்
காணாமல் போன
சுடராகவும்
துளிகளால் உருவாக்கிய
வெள்ளத்தில்
அடையாளம் இழந்த
துளிகளாகவும் மறைந்து
போகிறாய்

அடுத்தவரை
முன் நகர்த்தும்
எண்ணங்களை
விதைத்து விட்டு
மகிழ்வு கொள்ளும் நீ
காலத்தின் நகர்வில்
வானம் தொடும்
உயரத்தில் காத்திருப்பாய்
உன்னால்
அனுப்பப்பட்டவரின்
வரவுக்காக

*- அ. ஜெகன்*
*சுவிஸ் -*




**இது போன்று உங்களுடைய கவிதைகளையும் பிரசுரிக்க வேண்டுமானால் thamilanweekly@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்**




## பறவைகளின் அண்ணன்



'ஜியோடிங்கியா ஜெங்கி' என்ற இதற்கு முன் கேள்விப்பட்டிராத சீன விலங்கின் வரைபடம் இது. பாறைப் படிமங்களில் உறைந்து கிடந்த பழங்கால எலும்புகளை வைத்து இந்த மாதிரிப் படத்தை உருவாக்கியுள்ளனர். இரண்டு பெரிய பிரம்மாண்டமான இறக்கைகள், சின்ன கூர்மையான மூக்கு மற்றும் தடிமனான கால்கள் கொண்ட இவை, டைனோசர் போன்ற வடிவமுள்ள பறவை இனத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று சீன தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இது 'டைனோசர் லேட் ஜுராசிக்' காலகட்டத்தில் வாழ்ந்ததாம். வெறும் 800 கிராம் எடையே கொண்ட குட்டி இனமான இதுவே, பறவைகளின் முன்னோடியாக இருக்கலாம் என்கிறார்கள்.

## செவ்வாய் ஓவியம்



பார்ப்பதற்கு நவீன ஓவியம் போலத் தோன்றும் இது, உண்மையில் செவ்வாய் கிரகத்தில் எடுத்த ஒரு போட்டோ. பாலைவனங்களில் காணக் கிடைக்கும் அழகிய காட்சிகளில் ஒன்று, மணல் குன்றுகள்.

சுழற்றியடிக்கும் காற்று மணலைச் சேர்த்தும் கரைத்தும் சின்னச்சின்ன குவியல்களாக வரிசை கட்டி வைத்திருக்கும். இப்படி செவ்வாய் கிரகத்தில் சிறியதும் பெரியதுமாக ஏராளமான மணல் குன்றுகள் இருக்கின்றனவாம். இதை வைத்து செவ்வாயில் காற்றின் திசை மற்றும் தரைப்பகுதியின் வடிவமைப்பை அறிந்துகொள்ள முடியும்.

## பச்சோந்தியின் நிறம் மாறும் பண்பு!





பச்சோந்தி ஊர்வன வகையைச் சார்ந்தது. இந்த வகை உயிரினங்கள், வாழும் இடத்துக்கு ஏற்ற நிறத்தை நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ பெறுகின்றன.

உதாரணமாக, பச்சைப் பாம்பு நிரந்தர பச்சை வண்ணத்தைப் பெற்றுள்ளது. வேலிகளில் வாழும் ஆண் ஓணான் சிலநேரங்களில் நிறம் மாறித் தோன்றுவதைக் காண முடியும். வீட்டில் நம்மோடு வசிக்கும் பல்லிக்கும் இந்தப் பண்பு உண்டு. சுவரிலுள்ள பல்லி வெள்ளை, சாம்பல் நிறமாக உள்ளது. மரக்கட்டையில் வாழும் பல்லி மரப்பட்டையின் நிறத்திலேயே உள்ளது.

இதைப் போன்றதுதான் பச்சோந்தியின் நிறம் மாறும் பண்பு.

இந்தப் பண்பானது பரிணாமத்தின் மூலம் வந்ததே. பூச்சிகளை உண்ணக்கூடிய பச்சோந்திக்கு நிறம் மாறும் தகவமைப்பு அவசியமாகிறது. இதன் தோலின் உட்பகுதியில் (டெர்மிஸ்) வெவ்வேறு அளவுகளிலான சுருங்கி விரியக்கூடிய நிறமி செல்கள் உள்ளன. இந்தச் செல்களே நிறமிகளை உருவாக்குகின்றன. இந்த நிறமாற்றச் செயல்கள் தானியங்கு நரம்பு மண்டலத்தின் உதவியால் நடைபெறுகிறது.

இன்னொரு தகவல்: இலங்கையிலும், இந்தியாவிலும் இருப்பது ஒரே ஒரு பச்சோந்தி இனம்தான்!

## முதலைகளின் முப்பாட்டன்!



வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் வாழ்ந்த 'ஷீல்டுக்ரோக்' என்ற இனத்து முதலையின் மாதிரிப் படம் ஒன்றை வெளியிட்டிருக்கிறது அமெரிக்காவின் மிசௌரி பல்கலைக்கழகம். இப்போது உலகெங்கும் வாழும் முதலை இனங்கள் அனைத்துக்கும் மூதாதை இதுதானாம். இதன் வாய்ப்பகுதிக்கு முன்பாக ஒரு பாதுகாப்புக் கவசம் அமைந்திருந்ததாம். அதனாலேயே இப்படிப் பெயர் வந்திருக்கிறது.

முதலை இனம் எப்படிப் பரிணாம வளர்ச்சி அடைந்தது என்பதை அறியவும், அரிய முதலை இனம் அழிந்துவிடாமல் காக்கவும் இந்தக் கண்டுபிடிப்பு உதவும் என்கிறார்கள்.

## உலகின் விலையுயர்ந்த ஓவியங்கள்!

ஓவியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள், ஒரு சிறந்த ஓவியத்துக்காக என்ன விலை கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். அந்த வகையில் உலகின் மிக விலையுயர்ந்த ஓவியங்களில் சிலவற்றை நீங்கள் தெரிந்து கொண்டால் ஆச்சரியப்படுவீர்கள்.

**மோனலிசா -** இன்றுவரை விலை மதிப்பிட முடியாத இடத்தில் இருப்பது மோனலிசாதான். இத்தாலிய எழுச்சியின்போது, பிரபல இத்தாலிய ஓவியர் லியனார்டோ டா வின்சி இதை வரைந்தார். இப்போது பிரான்ஸ் நாட்டின் லாவ்ரே அருங்காட்சியகத்தில் பொக்கிஷமாக மாட்டிப் பாதுகாக்கப்படும் மோனலிசா ஓவியத்தை இன்சூரன்ஸ் செய்வதற்காக 1962ஆம் ஆண்டு மதிப்பிட்டார்கள். அப்போது, '460 கோடி ரூபா பெறும்' என கணக்கிட்டனர். ஐம்பது ஆண்டுகள் கழித்து இன்றைய கணக்கில் மதிப்பிட்டால், இது சுமார் 3,220 கோடி ரூபா. இந்த விலையிலும் இதனை வாங்கி தங்களிடம் சொந்தமாக்கிக்கொள்ள உலகின் பெரும் பணக்காரர்கள் ரெடி. ஆனால், பிரெஞ்சு அரசுதான் விற்க ரெடியாக இல்லை.

'தி கார்டு பிளேயர்ஸ்' ஓவியம், இதுவரை ஏலங்களிலும் தனிப்பட்ட முறையிலும் உலகெங்கும் விற்கப்பட்ட









ஓவியங்களிலேயே மிக அதிக விலைக்கு விற்பனையாகி சரித்திரம் படைத்தது. இரண்டு பேர் உட்கார்ந்து சீட்டாடும் காட்சியில் அப்படி என்ன ரசனைக்குரிய அம்சம் இருக்கிறதோ தெரியவில்லை... இதேபோல பல ஓவியங்களை வரைந்திருக்கிறார் பிரெஞ்சு ஓவியர் பால் செழான். அதில் 1892ஆம் ஆண்டு வரைந்த இந்தக் குறிப்பிட்ட ஓவியத்தை கடந்த ஆண்டு கட்டார் அரச குடும்பம் விலைக்கு வாங்கியது. பொது ஏலத்தில் இல்லாமல் தனிப்பட்ட முறையில் வாங்கியது என்பதால் சரியான விலையை அவர்கள் சொல்லவில்லை. என்றாலும், கிட்டத்தட்ட 1,250 கோடி ரூபா கொடுத்து அவர்கள் வாங்கியதாகத் தகவல்கள்.

அமெரிக்க ஓவியர் ஜாக்ஸன் போல்லாக் வரைந்த 'நம்பர் 5, 1948' என்ற ஓவியம் விற்பனை சாதனையில் மூன்றாம் இடத்தில் இருக்கிறது. நவீன ஓவியங்களுக்கு முன்மாதிரியாகக் கருதப்படும் இது 1948ஆம் ஆண்டு வரையப்பட்டது. கோடுகளும் வண்ணங்களும் தாண்டி இதில் என்ன உருவம் இருக்கிறது என்பது சாதாரணர் கண்களுக்குப் புலப்படாது. கடந்த 2006ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த ஏலத்தில் இந்த ஓவியம் 700 கோடி ரூபாவுக்கு ஏலம் போனது.

நெதர்லாந்தில் பிறந்து அமெரிக்காவில் வசித்த வில்லெம் டி கூனிங் என்ற ஓவியர் வரைந்த 'வுமன் 3' என்ற ஓவியம் இந்தப் பட்டியலில் நான்காவது இடத்தில் இருக்கிறது. பெண்களை மையக் கருவாக வைத்து இவர் வரைந்த ஆறு ஓவியங்களில் இதுவும் ஒன்று. 1953ஆம் ஆண்டு வரையப்பட்டது. கடந்த 2006ஆம் ஆண்டு இது 681 கோடி ரூபாவுக்கு ஏலம் போனது.

இந்தப் பட்டியலில் ஐந்தாவது இடம் பிடித்திருப்பது 'அடேல் ஃப்ளாச் பாயர்-1' என்ற ஓவியம். ஹஸ்டவ் கிலிம்ட் என்ற ஓவியர் 1907ஆம் ஆண்டு வரைந்து முடித்த ஓவியம் இது. முழு வேலைப்பாடுகளுடன் கூடிய இந்த மங்கையை சித்திரித்து முடிக்க, 3 வருடங்கள் ஆனதாம் அவருக்கு. நியூயோர்க் நகரிலுள்ள நியூ கேலரிக்காக, ரோஸ்ட் லாடர் என்பவர் 2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்த ஓவியத்தை 621 கோடி ரூபா விலை கொடுத்து வாங்கினார்.

# தமிழன் தொடர்கதை



# சூரன் போர்

அத்தியாயம்

பாலா சங்குப்பிள்ளை

ரோஸி நேரத்தை மறுபடியும் பார்த்தாள். சரியாக இரவு ஒன்றரை மணி. இனிமேலும் அவன் சுடலையான் வருவானா? தந்தையை சிறுவயதில் இழந்த ரோஸி, தாய் திரேசாவின் அரவணைப்பில் படித்தாள். நன்றாக கல்வி கற்று ஆசிரியராக பணி புரிந்துகொண்டிருந்தவளை சுடலையான் ஒரு கடையில் வைத்துக் கண்டான். அவன் சவப்பெட்டிக் கடையில் மாதச் சம்பளத்துடன் பணிபுரிந்தான். ஒரு பிணம் விழுந்தால் அதற்கான பெட்டியை பேசி முடித்தால் பிரத்தியேகமாக கை நிறைய கமிஷனும் கிடைக்கும்.

ரோஸி கொஞ்சம் கொஞ்சமாக அவனை காதலித்தாள். அவனும்தான். ஆனால், தாய் அந்தக் காதலை ஏற்கவில்லை. அவனுடைய நடவடிக்கை மட்டுமல்ல, தொழிலும் பிடிக்கவில்லை. எனவே, திருமணத்துக்குப் பின் அந்தத் தொழிலை விட்டுவிட்டான். ஏற்கனவே திருமணச் செலவுக்காக நிறைய கடன் வாங்கிய நிலையில், ஒரு பலசரக்குக் கடையை ஆரம்பித்தான். ஏற்கனவே அவன் சவப்பெட்டி கடையில் வேலை செய்தமையால் அவனிடம் பொருட்கள் வாங்குவதற்கு வாடிக்கையாளர்கள் அருவருப்படைந்தார்கள். வியாபாரம் படுத்துவிட்டது. ஊரைச் சுற்றி கடன். ரோஸி இரண்டு முறை கர்ப்பமாகி இரண்டு முறையும் கரு கலைந்துவிட்டது. இனி மூன்று வருடங்களுக்கு கவனமாக இருக்கும்படி வைத்தியர் எச்சரித்துவிட்டார்.

சுடலையானுக்கு எல்லோர் மேலேயும் கோபம் ஏற்பட்டது. மனைவி மேல் பாசம் குறையத் தொடங்கியது. நிம்மதியில்லாமல் காடு மேடெல்லாம் அலைந்தான். நண்பர்களுடன் சேர்ந்து குடித்தான். அப்போதுதான் அந்தத் தகவல் கிடைத்தது. அதை மட்டும் சரியாக செயல்படுத்தினால் அவன் மிகப் பெரிய அதிர்ஷ்டசாலிதான். ஆனால், அதற்காக நிறைய கஷ்டப்பட வேண்டும். பல ஆபத்துகளை சந்திக்க வேண்டி வரலாம்.

ரோஸி மறுபடியும் மணியைப் பார்த்தாள். அப்போது வெளியே யாரோ நடந்துவரும் ஓசை கேட்டது. ரோஸி சட்டென எழுந்தாள். அவனாகத்தான் இருக்குமோ. வரட்டும் இன்று இரண்டில் ஒன்று முடித்துவிட வேண்டும். அவள் வாயில் கதவை நோக்கி நடந்தாள். சட்டென கதவைத் திறந்தாள். வெளியே ஒரே பனிமூட்டம். யாரும் கண்ணுக்குப் புலப்படவில்லை. அவள் ஏமாற்றத்துடன் கதவை மூடிவிட்டு திரும்பியபோது அங்கே கோபத்துடன் ரோஸியின் தாய் திரேசா நின்றிருந்தாள்.

''படிச்சி படிச்சி சொன்னேன். அவனை நம்பாதேன்னு. என் அண்ணன் மகன் ஜோசப்பை மணம் முடிச்சிருந்தா உனக்கு இந்த நிலை வந்திருக்குமா? இப்பவும் ஒண்ணும் கெட்டுப்போகலை. அவனை கை விட்டிடு. கோர்ட்டுல விவாகரத்து வாங்கிடலாம். கொஞ்ச காலம் கழிச்சி நீ நல்ல முடிவா எடுக்கலாம்.''

''இங்க பாரும்மா. இப்போ நான் இன்னொருத்தரோட மனைவி. எதுவாயிருந்தாலும் அவரோட கலந்தாலோசிச்சிதான் என்னால ஒரு முடிவுக்கு வர முடியும். அவருக்கு என்மேல ரொம்ப பாசம் இருக்கு. முதல்ல வரட்டும். அப்புறம் பார்க்கலாம். நீ போய் தூங்கு.''

திரேசா கோபத்துடன் அந்த இடத்தை விட்டு வேகமாக செல்ல, ரோஸி மறுபடியும் முன்னறை சோபாவில் படுத்தவாறு சுடலையானுக்காக காத்திருக்கத் தொடங்கினாள்.

சுடலையான் புயல் வேகத்தில் மோட்டார்சைக்கிளை ஓட்டினான். அப்போது அவனுக்கு அந்த ஓசை கேட்டது. மிக மெல்லிய குரலில் அவன் பெயரை யாரோ அழைத்தார்கள். அவன் சட்டென சைக்கிளின் வேகத்தைக் குறைத்தான். அது மெதுவாக ஓடி நின்றது. அவன் நின்றிருந்த இடம் அதே அல்லிமலை போகும் வழி. மரங்கள், செடி கொடிகள் அடர்ந்திருந்த அந்த இடத்தில் மிகத் தூரத்தில் அந்த மலை இருந்தது. மற்ற இடங்களைவிட அந்த இடம் முழுவதும் மிக இருட்டாக இருந்தது.

அவன் ஏதோவொரு தைரியம், வேகத்துடன் மோட்டார்சைக்கிளை பிரதான பாதையைவிட்டு விலக்கி குறுக்குப் பாதையில் செலுத்தத் தொடங்கினான். முதலில் பள்ளத்தை நோக்கி பயணப்பட்ட சைக்கிள் பின் சிறிய பாலத்தையடைந்தவுடன் அங்கிருந்து மேலே ஏறி பின் சமதரையில் குறுகிய பாதையில் ஓடத் தொடங்கியது. வாழ்க்கையில் ரொம்பவும் அடிப்பட்டுவிட்டான். இதிலிருந்து உடனடியாக மீள வேண்டும். ரோஸியை சந்தோசமாக வைத்துக்கொள்ள வேண்டும். அதற்காக எந்த எல்லைக்கும் அவன் போகத் தயார். ரோஸிக்கு பிறந்த நாள் வாழ்த்து சொல்லத்தான் வேகமாக புறப்பட்டான். ஆனால், இந்த இடத்தை நெருங்கும்போது யாரோ சிரித்தார்கள். அது அவனை கேலி செய்வதைப்போல் இருந்தது. அவனுக்கு கோபம், ஆத்திரம் எல்லாம் ஒரேயடியாக வந்தது. அதனால்தான் போகும் பாதையை முடிந்த மட்டும் போய் பார்த்துவிடுவோம் என்ற துணிச்சலுடன் புறப்பட்டுவிட்டான்.

மோட்டார்சைக்கிள் மேடு பள்ளங்களைக் கடந்து ஓடிக்கொண்டிருந்த நிலையில், சட்டென நின்றுவிட்டது. அவனுக்கு வியர்த்தது. புறப்படுகிற அவசரத்தில் போதுமான எரிபொருள் இருக்கின்றதா என்று பார்க்க மறந்துவிட்டான். இனி மேற்கொண்டு முன்னேறிச் செல்ல முடியாது. வந்த வழியே இறங்கிச் செல்வதே புத்திசாலித்தனம். அதுவும் அவ்வளவு சுலபமில்லை. வெளிச்சம் வேண்டும். நடந்தே செல்வதற்கு நிறைய நேரமும் களைப்பும் ஏற்படும். இப்போது என்ன செய்வது. அவசரப்பட்டு விட்டோமே. அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். எதையும் காணவில்லை. மோட்டார்சைக்கிள் விளக்கு இன்னும் சிறிதுநேரத்தில் அணைந்துவிடும். அவன் கீழே இறங்க வலது காலை எடுத்துவைத்தான். உடம்பை அசைக்க முடியவில்லை.

''இது எங்களுக்கு சொந்தமான இடம். இங்கே வந்தது மிகப் பெரிய குற்றம்.''

(தொடரும்)

## மலையகத்தின் சொல்ல மறந்த கதை

பச்ச மூங்கி ரெண்டவெட்டி
பிழந்து அத மரிச்சிக்கட்டி
ஓலை பாயில் பாகட்டி
காத்தமுத்த ஏத்துறாங்க
காத்தமுத்து மூச்சடங்க
பெத்தமவ பேச்சடங்க
ஒப்பாரி பாட்டடங்க
ஊழையிட்ட நாயடங்க...

ஒத்தயா வீட்டுக்குள்ள
தனிச்சிருந்த முனியாண்டி
செவ்வந்திய தேத்துகிறா
தேறவில்ல அந்தபுள்ள
நாள்கணக்கா
செயிலுக்குள்ள இருந்த
அந்த கஸ்டங்கள
காத்தமுத்து மரணமிப்போ
பொறட்டியாந்து
போட்டுருருச்சி...

பாப்பாத்தி இருக்குமெடோ
ஏதோ ஊரு ராகலையாம்
மூக்காயி புள்ளக்கூட
ஏதோ ஒரு காட்டில்
உசுரோட இருப்பாளோ
கண்டிப்பா
இருப்பாளுன்னு
முனியாண்டி நம்பி வந்தா
தேடி அத பாக்குன்னு
மனசார நெனச்சிக்கிட்டா..

ஆரம்பத்திலசெவ்வந்திக்கு
முனியாண்டி மேல ஒரு
அறியாத பாசமொன்னு.
மூக்காயி கதையோடு
பரிதாபமாச்சி பாசக்கத
அண்ணனாக தங்கச்சியா
ரெண்டுபேரும் இருந்தாங்க
தங்கச்சிய ஒருத்தனுக்கு
கைகொடுக்கவேணுமின்னு
கனவு ஒன்னும் கண்டு
வந்தா..

மூனா சந்தி முட்டு சந்தி
நடுவாச பொட்டலில
கூடிநிக்கும் பெரட்டுக்களம்
பேரு போட காத்திருக்கும்
கங்காணி காளியாத்தா
பேர சொல்லி பேரெழுத
தொடங்கிவிட...

குண்டு சட்டி கழுவியத
பாதியில போட்டுவந்த
அப்பன பறிகொடுத்த
சிருக்கி மவ செவ்வந்தி
பாடையில போனவிங்க
நேரத்தோட வந்துட்டாங்க
நிமிசோ ரெண்டுதப்பிருந்தா
என் நெலம நாரிருக்கும்
சொல்லி சலிச்சிக்கிறா...

"பெரட்டு நடக்கிறது "

என்னடா செயிலுக்கு
போனவனே
சோம்பேறி பயமவனே
திரும்பவும் வந்துட்டியா
கூறுகெட்ட குப்பையனே...

மூடிகிட்டு வேளசெய்யி
நாவு வாய அடக்கி வையி
அக்குரும்பு செஞ்சியினா
வாழ்கையெல்லாம்
செயிலுலதான்...

முனியாண்டிக்கு
முகமெல்லாம்
வேர்த்துவிசும்பிவிட
கோபத்த அடக்கிக்கிட்டு
காட்டுமல போயிகிறான்...

வரிசையில நின்னவிங்க
பேர சொல்லி மாறிவிட
தம்பேரு சொல்லியாச்சா
என்று சொல்லி செலபேரு
ரகசியமா கேக்குறாய்ங்க...

படங்கு சாக்குக்கட்டி
மாறாப்ப மேல போட்டு
மடிஞ்சிருக்கும்
இடைமடிப்பில் சொருகி
வெச்சி சூரிகத்தி முன்னாடி
நீட்டி நிக்க...

களையப்போகும் பெரட்ட
நோக்கி நேரம் போன
கோபத்துல பாஞ்சி பாஞ்சி
முன்னவந்தா வாயாடி
பெண்ணொருத்தி...

வேர்வ துளிகளெள்ளாம்
நெலத்தில் வெதையாக
எம்பேர போட்டுக்கோங்க
என்று சொல்லி
இடைநடுவில் கூவி நிக்க...

நாளு துவங்கியது
பெரட்டு களத்தோட திட்டி
திட்டி ஆளு போக....
எந்த மல என்று சொல்லி
செலபேரு தேடி நிக்க
நாளும் மாறியது
பெரட்டு களத்தோட.....

காலம் பெரும் போக்கா
கடந்து தான் போகிறது
முணியாண்டி காதோற
முடிகள் எல்லாம்
வெள்ளையாய் போகிறது..

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

எம்.ராமதாஸ்
இறம்பொடை.

# தமிழன் சிறுகதை

# இயற்கையின் சீற்றம்



பசறை சீரா

ஏப்ரல் மாத வெயிலின் தாக்கம் அதிகமானதால் வீட்டின் முற்றத்தில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த அவருக்கு மரங்களிலிருந்து வரும் தென்றல் காற்றும், பறவைகளின் சப்தமும், அனில்களின் ஓட்டமும் ஆட்டமும் மனதுக்கும் உடம்புக்கும் இதமாய் இருந்தன. கண்களை மூடிய அவருக்கு ஏற்கனவே நடந்த சம்பவம் ஒன்று நினைவிற்கு வந்தது.

"ஐயோ கடவுளே, நான் என்ன செய்யப் போறேனோ தெரியல..? ஏம் புள்ள என்ன விட்டு போயிடும் போல இருக்கே" என்ற சத்தம் கேட்டு பக்கத்து வீட்டிற்கு விரைந்து சென்றாள் நல்ல தம்பியின் மனைவி வசந்தி. அங்கு அவளுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. ஆம் பக்கத்து வீட்டு ராமசாமியின் மகள்தான் புவனா. அவள் விசக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியம் செய்யாமல் காய்ச்சல் அதிகமாகி சாப்பாடு ஏதும் சாப்பிடாமலும் கண்கள் மேலே சொருகி பேச்சு, மூச்சு இல்லாமல் கிடந்ததைப் பார்த்த உடனே ஆஸ்பத்திரிக்கு கூட்டிக்கொண்டு போவோம். உடுப்பு, தேவையான பொருட்களை எடுத்து வைங்க புவனா அம்மா. நான் போய் எங்க மகனை ஆட்டோவ எடுத்துக்கிட்டு வரச் சொல்றன் என்று வீட்டிற்கு வந்து படுத்திருந்த மகனிடம் விடயத்தை சொல்ல, அவனும் விரைவாக உடுத்திக்கொண்டு ஆட்டோவையும் தயார்நிலைப்படுத்தினான். பின்பு சுகமில்லாத பிள்ளையை ஏற்றி புவனா அம்மாவுடன் தனது மனைவியும் சேர்ந்து சென்று ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். பரிசோதனை செய்த மருத்துவர் உடனடியாக "வாட்டுல நிப்பாட்ட சொல்லி" சேலைன், மருந்து ஏற்றப்பட்டது.

"காய்ச்சல் கூடும் மட்டும் இவ்வளவு நாள் என்ன செய்தீர்கள். இன்னும் ஒரு நாள் வீட்டுல இருந்திருந்தா புள்ளய உயிரோட பார்க்கவே முடியாமல் போயிருக்கும்" என்று நர்ஸ்மார்களும் ஏசியதாக வசந்தி கூறியது நினைவிற்கு வந்தது.

"என்னங்க, என்னங்க இந்த ரீய குடிங்க" என்று மனைவி வந்து எழுப்ப கண்களை திறந்த அவருக்கு, " இந்த நேரத்துக்கு வந்துருவான். இன்னும் ஆளைக் காணோம்" என்று பார்த்தபோது வேலியில் உள்ள ஓட்டை வழியாக ஷபிங்கோ (நாய்க்குட்டி) ஓடி வருவதைப் பார்த்து "அந்த பிஸ்கட்டையும் தா, யோகட் கப்பையும் தா" என்று கூற வசந்தி இரண்டையும் எடுத்து வந்தாள். கப்பில் கொஞ்சம் ரீயை ஊற்றி பிஸ்கட் துண்டுகளைப் போட்டாள். வாலை வாலை ஆட்டிக்கொண்டு அருகில் வந்து ரீ, பிஸ்கட்டை சாப்பிட்டுக் கொஞ்ச நேரம் உட்கார்ந்துவிட்டு மறுபடியும் வந்த வழியே ஓடி விடுவான்.

"எவ்வளவோ உதவி செய்த நம்மள பொலிஸுல என்ரி போட்ட ராமசாமியை என்னன்னு சொல்றது. இன்னக்கி புவனா மகள் உயிரோட இருக்குதுன்னா அதுக்கு என் மனைவிதான் காரணம் அதகூட மறந்துட்டான்." என மனதுக்குள் நினைத்து வருத்தப்பட்டார்.

நல்லதம்பியின் மன ஓட்டத்தை புரிந்தவளாய், "அத எல்லாம் விட்டுத் தள்ளுங்க." அவர்களுக்கு தெரிந்தது அவ்வளவுதான் "நாம எப்பயும் நல்லதையே நினைப்பம்" என்று கூறியவளாய் வீட்டுவேலையில் மூழ்கத் தொடங்கினாள். அப்போது கேட்டைத் தட்டும் சத்தம் கேட்டு எழுந்து சென்று கேட்டைத் திறந்தார். பொலிஸ் சீருடையுடன் நின்ற அவர் "ஒயாத நல்லத்தம்பி..?" என்று சிங்களத்தில் வினவ ஆரம்பித்தார். அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளித்த நல்லத்தம்பி கடைசியில் இன்னும் "இரண்டு, மூன்று நாட்களில் மரவாதுகளை வெட்டி போட்டுறன்" என சிங்களத்தில் கதைத்தவராய் இருவரும் நல்ல நண்பர்களாகவே மாறிவிட்டனர்.

"மினிசு தன்னெத்த மேமதமாய் இன்னே" எனக்கூறி விடைபெற்றுச் சென்றார். பொலிஸ்காரருக்கு உள்ள இரக்கம் கூட இவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது. மரங்கள் இருந்தால் இலை, குழை கொட்டத்தான் செய்யும். அதற்காக மரத்தை வெட்ட முடியுமா ?, "எத்தனை நாள் பலாக்காய், பலாப்பழம் கொடுத்திருப்பம்." ராமசாமியின் பசியை போக்கி இருக்கும் இந்த மரம். "இப்ப அவர் கண்ண குத்துது" என ஏசிக்கொண்டே மரம் வெட்டுகிறவனை தொலைபேசியில் வரச்சொன்னார். அவனும் வந்து மரவாதுகளும் வெட்டப்பட்டன. அவர்கள் வீட்டுப்பக்கம் நின்ற தென்னை மரமும், பலா மரமும் ஒன்றுசேர்ந்து உரசும் சத்தம் காதுக்கு இனிமையாய் இருக்கும். இப்போது தனித்து விடப்பட்ட தென்னை மரம் ஏனோ சோகமாய் காட்சியளித்தது. மரவாதுகள் வெட்டியதால் முற்றத்தில் கட்டில் போட்டு படுப்பதையே நிறுத்திவிட்டார்.

ஐந்து, ஆறு மாதத்திற்கு பிறகு பலா மரம் மீண்டும் துளிர்த்து வளர்ந்து இருந்தது. நேற்று முன்தினம் அடித்த பலத்த காற்றினால் தென்னை மரத்து அடிமட்டையும், பெரிய தேங்காய் குலை ஒன்றும் சேர்ந்து விழுந்ததில் ராமசாமியின் வீட்டு முன்பகுதி உடைந்துவிட்டது. மனிதனுக்கு மனிதன் செய்யும் துரோகத்தை இயற்கை அன்னையால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவளின் சீற்றத்தைக் காட்டிவிட்டால் போலும். தென்னைக்கீற்றும் புதிதாய் முளைத்த வாதும் சேர்ந்து மறுபடியும் உரசும் சத்தம் கேட்க ஆரம்பித்துவிட்டது. புதிய மரக்கிளையில் ஒரு பலகை தட்டையும் வைக்க ஏற்பாடு செய்தார். இப்போது மரங்கொத்தியும், குயிலும், புறாவும், மைனாவும் அழையா விருந்தாளிகளாய் வரத் தொடங்கின. அனில்களின் ஆட்டமும் அதிகரித்துவிட்டது. தென்றல் காற்று அவ்வப்போது அவரை தீண்டிவிட்டுச் சென்றது. வழமைப்போல் ரீ கப்பை கையில் வைத்துக்கொண்டு ஷபிங்கோவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தார் நல்லதம்பி.

# திருமண வாழ்த்துகள்



Vino & Madhu
Diksan Photography
0772758985

# VIVAHA விவாஹா

## திருமண தோஷம் நீக்கும் 12 ராசிக்கான மந்திரங்கள்

சரியான வயதில் திருமணம் நடக்காதவர்கள், சில தோஷங்களால் திருமணத் தடையை எதிர்கொள்ளக்கூடியவர்கள் ஒவ்வொரு ராசிக்கு ஏற்ற மந்திரத்தை உச்சரித்தால் திருமண தோஷம் நீங்கும். ராசிக்கு ஏற்ற மந்திரத்தை அதற்கேற்ற கிழமைகளில் உச்சரித்தால் திருமணத் தடை நீங்கும்.

**மேஷம் :**
தினமும் அல்லது வெள்ளிக்கிழமைகளில் ''ஓம் சும் சுக்ராய நமஹ'' என்று 108 முறை ஜெபித்து வரவும்.

**ரிஷபம் :**
தினமும் அல்லது செவ்வாய்க்கிழமைகளில் ''ஓம் அங் அங்காரகாய நமஹ'' என்று 108 முறை ஜெபித்து வரவும்.

**மிதுனம் :**
தினமும் அல்லது வியாழக்கிழமைகளில் ''ஓம் வ்ரீம் ப்ருஹஸ்பதயே நமஹ'' என்று 108 முறை ஜெபித்து வரவும்.

**கடகம் :**
தினமும் அல்லது சனிக்கிழமைகளில் ''ஓம் சம் சனைச்சராய நமஹ'' என்று 108 முறை ஜெபித்து வரவும்.

**சிம்மம் :**
தினமும் அல்லது சனிக்கிழமைகளில் ''ஓம் சம் சனைச்சராய நமஹ'' என்று 108 முறை ஜெபித்து வரவும்.

**கன்னி :**
தினமும் அல்லது வியாழக்கிழமைகளில் ''ஓம் வ்ரீம் ப்ருஹஸ்பதயே நமஹ'' என்று 108 முறை ஜெபித்து வரவும்.




**துலாம் :**
தினமும் அல்லது செவ்வாய்க்கிழமைகளில் ''ஓம் அங் அங்காரகாய நமஹ'' என்று 108 முறை ஜெபித்து வரவும்.

**விருச்சிகம் :**
தினமும் அல்லது வெள்ளிக்கிழமைகளில் ''ஓம் சும் சுக்ராய நமஹ'' என்று 108 முறை ஜெபித்து வரவும்.

**தனுசு :**
தினமும் அல்லது புதன்கிழமைகளில் ''ஓம் பும் புதாய நமஹ'' என்று 108 முறை ஜெபித்து வரவும்.

**மகரம் :**
தினமும் அல்லது திங்கட்கிழமைகளில் ''ஓம் சோம் சோமாய நமஹ'' என்று 108 முறை ஜெபித்து வரவும்.

**கும்பம் :**
தினமும் அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் ''ஓம் ஹ்ராம் சூர்யாய நமஹ'' என்று 108 முறை ஜெபித்து வரவும்.

**மீனம் :**
தினமும் அல்லது புதன்கிழமைகளில் ''ஓம் பும் புதாய நமஹ'' என்று 108 முறை ஜெபித்து வரவும்.

## திருமணம் தாமதமாகும் என்பதை எவ்வாறு ஜாதகத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம்?

லக்கினத்திலிருந்து 2, 4, 6, 8, 12 ஆகிய ஸ்தானங்களில் செவ்வாய் இருந்தால் செவ்வாய் தோஷம் ஏற்படுகிறது. இதற்கு பல்வேறு வகையான விதிவிலக்குகள் உள்ளன. இந்த செவ்வாய் தோஷம் என்பது திருமண தாமதத்துக்கான மிக முக்கியமான காரணமாகும்.

ராகு அல்லது கேது லக்னம் 2, 7, 8 ஆகிய இடங்களில் தனிமையில் அமர்ந்திருந்தால் அவர்களின் திசை நடக்கும்போது திருமணம் காலதாமதமாவதற்கு வாய்ப்புண்டு.

லக்கினத்திலோ ஏழாம் இடத்திலோ சனி அமர்ந்திருக்கும் பட்சத்தில் இவர்களுக்குத் தாமதமாக திருமணம் நடக்க வாய்ப்புள்ளது.

சனி மற்றும் செவ்வாய் இணைந்து லக்கினத்திலோ, 7ஆம் இடத்திலோ அல்லது எட்டாம் இடத்திலோ அமர்ந்திருக்குமாயின் இவர்களுக்குத் திருமணம் தாமதமாகும்.

சனி, செவ்வாய் பார்வை இரண்டாம் இடத்திலோ, ஏழாம் இடத்திலோ அல்லது எட்டாம் இடத்திலோ இணையும் பட்சத்தில் இவர்களுக்குத் திருமணம் தாமதமாக வாய்ப்புண்டு.

ஏழாம் இடத்து அதிபதியோ அல்லது இரண்டாம் இடத்து அதிபதியோ சனி, ராகு, கேதுவுடன் சேர்ந்திருப்பது திருமண தாமதத்தை உருவாக்கும்.

இரண்டாம் இடத்து அதிபதி, ஏழாம் இடத்து அதிபதி ஆகிய இருவரில் ஒருவர் 6, 8, 12இல் மறைந்து அல்லது நீசம் பெற்றிருந்தால் திருமணம் தாமதமாக வாய்ப்புள்ளது.

ஏழாம் இடத்திலும் இரண்டாம் இடத்திலும், நீசம் பெற்ற கிரகங்கள் இருந்தால் திருமணம் தாமதமாக வாய்ப்புள்ளது.

இரண்டாம் இடத்து அதிபதியும் ஏழாம் இடத்து அதிபதியும் ஐந்தாம் இடத்தில் அமர்ந்திருந்தால் திருமணம் தாமதமாக வாய்ப்புள்ளது.

6, 8, 12ஆம் இடத்து அதிபதிகள் ஏழாம் இடத்தில் அல்லது இரண்டாம் இடத்தில் இருந்தால் தாமதமாக வாய்ப்புள்ளது.

லக்கினத் துக்குப் பாதகாதிபதியான கிரகங்கள் ஏழாம் இடத்திலும், இரண்டாம் இடத்திலும், அமர்ந்தி ருந்தாலும் திருமணம் தாமதமாக வாய்ப்புள்ளது.

இம்மாதிரியான கிரகச் சேர்க்கைகள் உள்ள ஜாதகங்களில் ஆண் ஜாதகமாக இருந்தால் திருமணம் என்பது குறைந்தது 30 அல்லது 32 வயதிற்கு மேல்தான் நடக்கிறது.

பெண் ஜாதகமாக இருக்கும் பட்சத்தில் குறைந்தபட்சம் 26, 29 வயதுகளில்தான் திருமணம் நடைபெறுகிறது. திருமணத் தடை பரிகாரங்கள் செய்தாலும் தாமதத்தை தவிர்க்க முடிவதில்லை.

திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது. மாப்பிள்ளை வீட்டார் அல்லது பெண் வீட்டார் தேடிக் கண்டுபிடித்து உருவாக்கி



வைக்கும் உறவுநிலை அல்ல திருமணம். ஏற்கனவே இறைவன் வகுத்து வைத்த ஒரு வரனை கண்டுபிடிப்பதற்குத்தான்.

நாமாக ஒரு வரனை உருவாக்கிக் கட்டிவைப்பதாக இருந்தால் என்ன ஆகியிருக்கும். 80 வயதானாலும் வாழ்க்கைத்துணையைத் தேடிக்கொண்டே இருக்கவேண்டியதுதான்.

## திருமணப் பரிகாரங்கள்



காதல் திருமணம் செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், சில ஜோதிட பரிகாரங்களை முயற்சி செய்யலாம். இதனால் உங்கள் விருப்பத்தின்படி திருமணம் நடக்கும், உங்கள் திருமண வாழ்க்கையும் மகிழ்ச்சியாக இருக்கும்.

திருமணம் என்பது ஒருவரின் வாழ்விலுள்ள 15 சடங்குகளில் ஒன்றாகும். ஆனால், உறவில் நிறைய காதல் ஏற்பட்ட பிறகும், சில சமயங்களில் திருமணத்தில் பிரச்சினைகள் உருவாகத் தொடங்குகின்றன. எனவே, இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பிய துணையை மணக்க விரும்புகிறார்கள். இந்நிலையில், காதல் திருமணம் செய்ய விரும்புவோர் பண்ண வேண்டிய எளிய பரிகாரங்களைப் பற்றி இங்கு காணலாம்.

**அன்னை பார்வதி வழிபாடு:**
செவ்வாய் முதல் பார்வதி சுயம்வர மந்திரத்தை குறைந்தது 108 முறை உச்சரிக்க வேண்டும். முடிந்தால், இந்த மந்திரத்தை ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் 1008 முறையும், மீதமுள்ள நாட்களில் 108 முறையும் ஜெபிக்கலாம்.

**மகாதேவருக்கு அபிஷேகம்:**
காதல் திருமணம் வெற்றிபெற, மகாதேவருக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பூச்சாறு அபிஷேகம் செய்ய வேண்டும் மற்றும் அபிஷேக நேரத்தில் சிவபெருமானின் மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்.

**கிருஷ்ணர் தொடர்பான பரிகாரங்கள்:**
கிருஷ்ணர் மற்றும் ராதா ராணிக்கு புல்லாங்குழல் மற்றும் வைஜயந்தி மாலையை வழங்குங்கள். இந்தப் பரிகாரத்தை ஒவ்வொரு மாதமும் இரண்டு ஏகாதசி திதிகளிலும் செய்ய வேண்டும். ஸ்ரீகிருஷ்ணருக்கு ஒரு ஸ்லோகி பகவத் சொல்லுங்கள்.

**மங்கள கௌரி விரதம்:**
மங்கள கௌரி விரதமும் மிகுந்த பலன் தரும். காதல் திருமண வெற்றிக்கு 23 மங்கள கௌரி விரதத்தை சடங்குகளுடன் செய்ய வேண்டும். செவ்வாய் கிழமையில் முடிந்தால் அன்னதானம் செய்யவும். அது இன்னும் சிறந்தது மற்றும் காதல் திருமணத்திற்கு உதவுகிறது.

## திருமணப் பொருத்தத்தில் 10 பொருத்தங்கள் மிக முக்கியமானவை



திருமணப் பொருத்தத்தில் குறிப்பிடப்படும் 10 பொருத் தங்கள் மிக முக்கியமானவை. 10 பொருத்தங்களும் இருந்தால் அது மிகவும் சிறப்பானது. அவர்களின் வாழ்க்கையில் இனிமையான நிகழ்வுகள் இருக்கும். அவற்றில் சில பொருத்தங்கள் சரிவர அமையவில்லை என்றால் அதற்காக கவலைப்பட வேண்டாம். முக்கிய திருமணப் பொருத்தங்கள் இருந்தாலே திருமணம் செய்துகொள்ளலாம்.

ஒரு தம்பதியிடையே மகேந்திர பொருத்தம் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு குழந்தை பாக்கியத்தை தரக்கூடிய மற்ற அமைப்புகளான தினப் பொருத்தம், கண பொருத்தம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று இருந்தாலே, அவர்களுக்கு மகேந்திர பொருத்தம் இல்லாவிட்டாலும் திருமணம் செய்துகொள்ளலாம்.

# “நமஸ்தே இந்தியா”

# துவாலிபையர் ஆடி துவாலிட்டியாக வருகிறோம்

ICC MEN'S CRICKET WORLD CUP INDIA 2023

## கத்துக்குட்டிகளுடன் காட்டிய ஆட்டத்தை டொப் - 10 அணிகளுடன் காட்டுமா இலங்கை ?

ஆசிர் அப்துல் காதர்

மாஸ்டர் பிளாஸ்டர் சனத் ஜயசூரிய, களுவித்தாரன, மார்வன் அத்தபத்து, சமிந்த வாஸ், முரளிதரன் என 1996இல் அர்ஜுன ரணதுங்க தலைமையில் உலகக்கிண்ணத்தை தனதாக்கி வரலாற்றுச் சாதனையை நிகழ்த்திய அணி நம் இலங்கை அணி.

2007 மற்றும் 2011 போன்ற ஆண்டுகளில் இறுதிப் போட்டிவரை சென்று போராடி இரண்டாம் இடத்தைப் பெற்ற ஆசியாவின் மிகப் பலமான ஓர் அணி. 2007 உலகக்கிண்ண இறுதியாட்டம் மழை காரணமாக ஓவர் குறைக்கப்பட்டும், இலங்கையின் மிடில் ஓர்டர் பேட்ஸ்மேன்களின் அசமந்தையான ஆட்டத்தினாலும் தோல்வியடைந்ததை மனம் சிறிது ஏற்றுக்கொண்டாலும், 2011 இந்தியாவுடனான இறுதிப் போட்டியும், அந்த நாள் நினைவுகளும் இன்னும் கண் முன்னேதான் வந்துபோகின்றன.

தோனியின் மிரட்டலான பினிசிங் ஆட்டமும், அடுத்தவன் வெற்றியில் புன்னகை பூத்து தனித்து நின்ற சங்காவின் முகமும் எத்தனை காலம் சென்றாலும் மறந்திடாது. சங்கக்கார தலைமையில் 2014 வரை கட்டுக்கோப்பான அணி அமைக்கப்பட்டிருந்தாலும் காலப்போக்கில் முன்னணி வீரர்களின் ஓய்வினாலும், புதுப்புது வீரர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுவந்த வேகத்தில் காணாமல் போனதினாலும், 2015,2016இற்குப் பின்னர் வலுவான அணியை உருவாக்கவும் வெற்றிகளை ஈட்டவும் இலங்கை அணிக்கு எட்டாக்கனியாகவே காணப்பட்டது.

2015, 2019 போன்ற உலகக்கிண்ணத்தில் கண்ணுக்கு எட்டும் தூரத்தில் நின்று கூட கிண்ணத்தை தொட முடியாதளவு பின்னேதான் காணப்பட்டது. இருந்தாலும் ஒருநாள் போட்டிகள் என்று வருகின்றபோது சில அதிசயமான வெற்றிகளை இலங்கை அணி பெற்றிருப்பதையும் நாம் அறிவோம். அஞ்சலோ மெத்தியூஸ், லசித் மாலிங்க, குசல் பெரேரா, திமுத் கருணாரத்ன என்று அடிக்கடி தலைமைகளில் மாற்றம் கொண்டுவந்தாலும் தொடர் போட்டிகள் என்று வருகையில் தொடராக வெற்றிகளைப் பெறுவதில் பாரிய இன்னல்களை இலங்கை அணி நேரிட்டு வருகின்றது.

2019 பாகிஸ்தானில் நடைபெற்ற ரி20 போட்டியின்போது அனுபவ வீரர்கள் அங்கு செல்ல மறுத்தமையால், தசுன் சானக்க அணியைத் தாங்கி அங்கு சென்று சீரிஸ் வென்று நீண்ட நாள் தவிப்பை - தாகத்தை தீர்த்து வைத்ததன் பிற்பாடு இலங்கை ஓரளவுக்கு நம்பிக்கை பிறந்தது.

அதேபோல் கடந்த 2022 ஆசியக் கிண்ணத்திலும் பல அசத்தல் வெற்றிகளைப் பெற்று சம்பியன்களான பின்னர் குசல் மென்டிஸ், பெதும் நிஸ்ஸங்க, சரித் அசலங்க, தனஞ்ஜய டி சில்வா போன்ற அதிரடி ஆட்டக்காரர்களும், டில்சான் மதுசங்க, துஸ்மந்த சமீர, லஹிரு குமார போன்ற வேகப்பந்தாளர்களும், பெரும் நம்பிக்கைக்குரிய சுழல் வீரர்களான வனிந்து ஹசரங்க, மஹீஸ் தீக்ஷனவும் கூடவே சகலகலா வல்லவன் தனஞ்சய டி சில்வாவும் ஸ்பின் பந்து எறிந்து தேவையான விக்கெட்டுகளை எடுப்பதனால் வெற்றிகளை நிச்சயித்து சொல்லக்கூடிய திறமையான அணி உருவாக்கப்பட்டுள்ளதெனலாம்.

கூடவே இம்முறை டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன, சதீர சமரவிக்ரம போன்றவர்களும் அணியுள்ளே அமையப் பெற்றமையால், உலகக்கிண்ண ஒருநாள் போட்டிகளில் பல வெற்றிகளை ஈட்டலாம் என்ற நம்பிக்கை எல்லோர் மனதிலும் விதைக்கப்பட்டுள்ளது. 2023 ஒக்டோபரில் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடித் தகுதியில்லாமல் தகுதிகாண் போட்டிகளை ஆடச் சென்றிருந்தாலும், தொடராக பத்து போட்டிகளையும் இலங்கை அணி வென்றிருப்பதை பார்க்கையில் வீரர்கள் முன்பை விட சற்று நிதானமாகவும், அர்ப்பணிப்புடன் செயற்படுவதை கடந்த போட்டிகளில் அவதானித்திருப்போம்.




இப்போதைய காலத்தில் சிறிய அணி, பெரிய அணி என்று இலகுவில் பிரித்து நோக்க முடியாது. சிம்பாப்வே, நெதர்லாந்து அணிகள் இருமுறை உலக சம்பியன்களையே (மேற்கிந்திய தீவுகள்) தோற்கடித்து விட்டு முன்வரிசையில் நின்றனர். இலங்கை அணி இலகுவாக அதனை முடித்துவிட்டு நமஸ்தே இந்தியா வணக்கத்துடன் உலகக்கிண்ணம் - 2023 எதிர்வரும் ஒக்டோபர் தென்னாபிரிக்காவுடனான முதல் போட்டியை ஆடவுள்ளது.

இளம் வீரர்களும், அனுபவமும் நிறைந்திருப்பதனால் சானக்க தலைமையிலான இலங்கை அணி துடுப்பாட்டத்திலும், பந்துவீச்சிலும் சிறப்பாக செயற்பட்டு தொடர் வெற்றிகளை பெறும் என்ற நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் ரசிகர்கள் பட்டாளம் காத்திருக்கின்றனர்.






ஸ்ரீலங்கா எனும் கிரிக்கெட்டுக்கு உரித்தான பழமையான பலம் பொருந்திய நம் தேசம் இம்முறை உலகக்கிண்ணத்தைப் பெற்று நாட்டின் பெருமையை பாரெங்கிலும் ஒலிக்கச் செய்வதே அனைவர்களினதும் பெரும் கனவும், அவாவும். வாழ்த்துகள் கூறி ஆதரவைக் கொடுப்போம் நம் இலங்கைத் தாய்நாட்டுக்கு!

தற்போது விற்பனையில்...

புலமைப்பரிசில் வழிகாட்டி



நுண்ணறிவு நுட்பங்களும் விளக்கங்களும்

வினாத்தாள் I, II வழிகாட்டி செயலட்டைகள்

மாதிரி வினாத்தாள்

தொடர்புகளுக்கு: 0741684643

விலை ரூ.60 மட்டுமே

## பளுதூக்கலில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு மூன்று தங்கம்



(பு.கஜிந்தன்)

மாகாண ரீதியிலான பளுதூக்கல் போட்டிகள் அண்மையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு 3 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் என்பன கிடைத்தன.

17 வயதுக்குட்பட்ட பளுதூக்கல் 45 கிலோ பிரிவில் வி.ஜஸ்மின் 3ஆம் இடத்தையும், 55 கிலோ பிரிவில் நி.நிறுக்சிகா 3ஆம் இடத்தையும், 59 கிலோ பிரிவில் சி.யுஷாந்தி 1ஆம் இடத்தையும், 64 கிலோ பிரிவில் ரா.லிசனா 1ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

அதுபோல் 20 வயதுக்குட்பட்ட 49 கிலோ பிரிவில் சூ.டிலக்சி 3ஆம் இடத்தையும், 55 கிலோ பிரிவில் இ.றம்மியா 2ஆம் இடத்தையும், 71 கிலோ பிரிவில் வி.ஜெஸ்மினா 1ஆம் இடத்தையும், 76 கிலோ பிரிவில் அ. சுஜாத்தா 2ஆம் இடத்தையும் பெற்றனர்.

இவர்களுக்கான பயிற்சிகளை பயிற்றுவிப்பாளர்களான பிரபாகரன் பிந்துஷா, கே.கஜேந்திரன் ஆகியோர் வழங்கினர். இந்தப் பாடசாலையானது கடந்த சில மாதங்களுக்கு முன்னர், தேசிய மட்டத்தில் நடைபெற்ற பாடசாலைக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில் தங்கப் பதக்கம் உட்பட பல பதக்கங்களை பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இளம்பிறை கிண்ணம் ஓட்டமாவடி ரேஞ்சர்ஸ் வசம்

(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் இயங்கிவரும் மீராவோடை இளம்பிறை விளையாட்டுக் கழகம் நடத்திய 5 ஓவர்கள் மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரை ஓட்டமாவடி ரேஞ்சர்ஸ் அணி கைப்பற்றியது.



16 கழகங்கள் பங்குபற்றிய இத்தொடரின் இறுதிப்போட்டி கடந்த வாரம் மாஞ்சோலை அல்-ஹிரா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இறுதிப்போட்டியில் ஓட்டமாவடி ரேஞ்சர்ஸ், வாழைச்சேனை நியூஸ்டார் ஆகிய அணிகள் மோதிக்கொண்டன. இதில் 15 ஓட்டங்களால் ஓட்டமாவடி ரேஞ்சர்ஸ் அணி சம்பியனானது.

இப்போட்டியில் வெற்றிக் கிண்ணம் வழங்கும் நிகழ்வில் சட்டத்தரணி எம்.எம்.முகம்மட் ராஷிக், ஓட்டமாவடி பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கே.பி.எஸ்.ஹமீட், பொலிஸ் உத்தியோகத்தர் பதுர்தீன் உட்பட விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## அரையிறுதிக்கு முன்னேறி வரலாறு படைத்த ஸ்பெயின்



நடப்பு பீபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்து தொடரின் வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதல் காலிறுதி ஆட்டத்தில் நெதர்லாந்தை வீழ்த்திய ஸ்பெயின் உலகக்கிண்ண வரலாற்றில் முதல் முறையாக அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

மகளிர் உலகக்கிண்ண உதைபந்து தொடர் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளில் நடைபெற்று வருகிறது. முதல் காலிறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் - நெதர்லாந்து அணிகள் மோதின. முதல் பாதி ஆட்டத்தில் கோல் எதுவும் விழவில்லை. இதையடுத்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஸ்பெயின் அணி 81ஆவது நிமிடத்திலும், நெதர்லாந்து அணி கூடுதல் நேரமான 91ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தன.

மேலதிக 30 நிமிட நேரத்தில் ஸ்பெயின் மேலும் ஒரு கோல் அடித்து அசத்தியது. இதன்மூலம் 2-1 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தி ஸ்பெயின் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

# ஹெல்த்

# ஹெல்த்

மலர் :1 இதழ் : 2- 13.08.2023



சர்க்கரை நோயாளிகளுக்கு அடிக்கடி மயக்கம் வருவது ஏன்?

படபடப்பை குறைக்கும் சுவாசப் பயிற்சிகள்

கர்ப்பிணிகள் மேக்கப் போடலாமா?

டாட்டூவால் ஏற்படும் பிரச்சினைகள்

# டாட்டூவால் ஏற்படும் பிரச்சினைகள்



டாட்டூ (பச்சைக் குத்துவது) போடுவதென்பது இன்றைய இளைஞர்கள் மத்தியில் மிகுந்த பெஷனாகி வருகிறது. எந்தளவுக்கு அழகும் பேஷனும் நிறைந்துள்ளதோ அந்தளவுக்கு ஆபத்தும் இதில் இருக்கத்தான் செய்கிறது என்கிறார்கள் சரும நிபுணர்கள். ஏனெனில், நீங்கள் பச்சை குத்துவதால் பலவித நோய்த் தொற்றுகளுக்கு இன்னலாகக் கூடும்.

டாட்டூ போடும்போது நோய்க்கிருமிகள் உட்செல்வதால் சொறி, கொப்புளங்கள், வலி மிகுந்த கொப்புளங்கள் மற்றும் கடுமையான புண்கள் ஏற்படுகின்றன. டாட்டூக்கு பயன்படுத்தும் அசுத்தமான மைகளில் காசநோய் அல்லாத மைக்கோ பக்டீரியாக்கள் காணப்படுகின்றன. இந்த பக்டீரியாக்கள் மண்ணிலும் நீரிலும் காணப்படுகின்றன. இந்த பக்டீரியாக்கள் சருமத்தினுள் செல்லும்போது ஏகப்பட்ட சரும பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

**டாட்டூ போடும்போது பின்பற்ற வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

★ டாட்டூ மைகளை மிகுந்த பாதுகாப்புடன் சுத்தமாக வைத்திருப்பது அவசியம். டாட்டூ மைகளை தயாரிக்கும் மற்றும் பேக்கிங் செய்யும் விதங்கள் தரமானதாக இருக்கவேண்டும்.

★ டாட்டூ போடும்போது பயன்படுத்தப்படும் மையை அப்படியே திறந்தவெளியில் வைக்கக் கூடாது. மையை மூடி வைக்க வேண்டும். இதனாலும் தொற்றுகள் உண்டாக வாய்ப்புள்ளது.

★ டாட்டூ மை தயாரிக்க பயன்படுத்தும் பாத்திரங்கள் மற்றும் அதை கிளற பயன்படுத்தும் கரண்டிகள் மிகவும் சுத்தமாக இருக்கவேண்டும்.

★ டாட்டூ போடுபவர் பொருத்தமான உடைகள், கையுறைகள், மாஸ்க்களை அணிந்திருக்க வேண்டும்.

**தொற்றுகள் அபாயம்**

★ நோய்த் தொற்றுகள் பெரும்பாலும் தோலில் ஊடுருவி பெரிய சிவப்பு கொப்புளங்கள், கட்டிகள், மெல்லிய சீரற்ற கோடுகளை உருவாக்கும்.

★ மே 2019ஆம் ஆண்டின்படி, நுண்ணுயிர்களால் அசுத்தமான டாட்டூ மைகளை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். நுகர்வோர் மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு இது குறித்து FDA பாதுகாப்பு எச்சரிக்கை வழங்கியுள்ளது.

★ புகழ்பெற்ற மை உற்பத்தியாளர்கள் காமா கதிர்வீச்சு எனப்படும் செயல்முறையை பயன்படுத்துகின்றனர். இந்தக் கதிர்வீச்சு முறை நுண்ணுயிர்களைக் கொல்ல உதவுகிறது.

★ கடந்த ஆண்டுகளில் ஹெபடைடிஸ் மற்றும் எச்.ஐ.வி. பரவும் அசுத்த ஊசிகள் டாட்டூ போடுவதில் அச்சத்தை ஏற்படுத்தியது. ஆனால், தற்போது அந்த மாதிரியான பிரச்சினைகள் இப்போது இருப்பதில்லை என்று அவர் கூறியுள்ளார். டாட்டூவை அழிக்க அறுவை சிகிச்சை முறை தேவைப்படுகிறது. ஆனால், அறுவை சிகிச்சை வடுவுடன் நீங்கள் நீண்டகாலம் இருக்கவேண்டியிருக்கும் என்கிறார்கள் நிபுணர்கள்.

## இந்த வார பாட்டி வைத்தியம்

★ கர்ப்பிணிப் பெண்கள் கேரட் சாறுடன் சிறிது தேன் கலந்து பருகி வர வாந்தி நிற்கும். உடல் வலுவாகும். பித்த நோய்கள் தீரும்.

★ சுக்கு, மிளகு, திப்பிலி, தாமரை இதழ், வெல்லம் ஆகியவற்றை தண்ணீரில் விட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டி இரவில் ஒரு டம்ளர் சாப்பிடுவதால் மாரடைப்பைத் தடுக்கலாம்.

★ முட்டைக் கோஸுடன் பசுவின் வெண்ணெய் கலந்து சாப்பிட்டால் உடல் தளர்ச்சி விலகும்.

★ மாதுளம் பழத்தைப் பிழிந்து கற்கண்டு சேர்த்து பருகி வர உடல் வெப்பம் தணிந்து குளிர்ச்சி உண்டாகும்.

★ பாகற்காயைச் சமைத்துச் சாப்பிட்டால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும்.

★ சீரகத்தை வறுத்து பொடி செய்து மோரில் கலந்து சாப்பிட வயிற்று வலி குணமாகும்.

★ முட்டை கோஸ் சாற்றை முகத்தில் தடவி வர முகச்சுருக்கம் மறையும்.

★ அத்திப்பழத்தை உலர்த்தி பொடி செய்து ஒரு ஸ்பூன் காலை, மாலை பாலில் உட்கொண்டு வந்தால் இதயம் வலுவாகும். இரத்தம் ஊறும்.

## எடை குறைப்பு TIPS

**சோம்பு தண்ணீர்**

தாகமாக இருக்கும் போது சாதாரண தண்ணீர் குடிப்பதற்குப் பதிலாக, சோம்பு கலந்த நீரைக் குடித்து வந்தால், உடலில் தேங்கியுள்ள கொழுப்புகள் கரைந்து, அழகிய உடல் வடிவத்தைப் பெறலாம்.

**சுரைக்காய்**

வயிற்றில் சேர்ந்துள்ள கொழுப்பைக் கரைப்பதில் சுரைக்காய் பெரும்பங்கு வகிக்கிறது. எனவே, வாரம் ஒருமுறை சுரைக்காயை உட்கொண்டு வாருங்கள்.

**பப்பாளிக்காய்**

பப்பாளிக்காயை அவ்வப்போது சமைத்து சாப்பிட்டு வந்தாலும், உடல் எடை குறையும்.

**எலுமிச்சைச் சாறு**

தினமும் டீ குடிக்கும் போது, அதில் பாலுக்குப் பதிலாக எலுமிச்சைச் சாறு சேர்த்து கலந்து குடித்து வந்தால், விரைவில் உடல் எடையில் மாற்றத்தைக் காண முடியும்.

**வெங்காயம், பூண்டு**

கட்டாயம் சமையலில் வெங்காயம், பூண்டு போன்றவை இருக்கும். ஆனால், இவற்றை உணவில் சற்று அதிகமாக சேர்க்கும்போது, அதனால் உடல் எடை குறையும்.

**அருகம்புல் ஜூஸ்**

அருகம்புல் ஜூஸை தினமும் காலையில் ஒரு டம்ளர் குடித்து வந்தால், உடல் எடையில் நல்ல மாற்றத்தைக் காணலாம்.

**வாழைத்தண்டு ஜூஸ்**

வாழைத்தண்டு ஜூஸில் உப்பு சேர்க்காமல் குடித்து வந்தால், சிறுநீரகக் கல் உருவாவது தடுக்கப்படுவதோடு, கொழுப்புகள் கரைந்து உடல் எடையும் குறையும்.

# அகம் நோய் தீர்க்கும் அகத்திக் கீரையின் அற்புத பலன்கள்



அகத்திலுள்ள நோய்களைத் தீர்க்கக்கூடிய ஆற்றல் இதில் இருப்பதால், இதற்கு அகத்திக் கீரை என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. இது வருடம் முழுவதும் சுலபமாகக் கிடைக்கக்கூடியது. மேலும் வெற்றிலைத் தோட்டத்துக்கு உறுதுணையாகவும், பொதுவாக வெற்றிலைத் தோட்டம் உள்ள பகுதிகளில் இந்த அகத்திக் கீரை ஏராளமாகக் கிடைக்கும். முற்றின கீரையை சமையலுக்குப் பயன்படுத்தக்கூடாது, அவை ஒவ்வொமை மற்றும் வயிற்றுப் பிரச்சினையை ஏற்படுத்திவிடும், இளங்கீரையை எடுத்து சமையலுக்குப் பயன்படுத்த வேண்டும்.

### அகத்திக் கீரையின் மருத்துவப் பண்புகள்

இதில் 50க்கும் மேற்பட்ட சத்துகள் உள்ளன. இரண்டு வகையான அகத்திக் கீரை உள்ளது, ஒன்று, வெள்ளை நிறப் பூக்கள் கொண்டது, மற்றொன்று, சிவப்பு நிறப் பூக்கள் கொண்டது. இந்த மரத்தின் அனைத்துப் பகுதிகளும் மூலிகைத்தன்மை கொண்டவை. பெரும்பாலும் வெள்ளை நிறப் பூக்கள் கொண்ட அகத்திக் கீரையே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. இக்கீரை சற்று கசப்பாக இருக்குமென்பதால், மற்ற கீரையைபோல் விலை போவதில்லை. இந்த கசப்புத்தன்மை தெரியாமல் இருக்க சமைக்கும்போது, தேங்காய்ப்பால் சேர்த்து சமைத்தால் ருசியாக இருக்கும். ஆனால், இதிலுள்ள மருத்துவக் குணங்களும், உயிர்ச்சத்துகளும் பற்றி தெரிந்துகொண்டால், உடலின் பல்வேறு ஆரோக்கியத்துக்குப் பெரும் பங்கு இதற்கு உண்டு. புகை பிடிக்கும் பழக்கம், மது அருந்துதல், குட்கா, புகையிலை போன்ற பழக்கத்தில் உள்ளவர்கள், அடிக்கடி உணவில் சேர்த்துவர, இப்பழக்கத்திலிருந்து விடுபடலாம். இக்கீரையில் வாயு தன்மை இருப்பதால், சமைக்கும்போது பெருங்காயம் சேர்த்துக்கொண்டால் முற்றிலும் வாயுவை வெளியேற்றிவிடும்.

### குழந்தைகளின் பல் வளர்ச்சி, உடல் பலம் பெற

இதில் கல்சியம் சத்து அதிகம் இருப்பதால் முக்கியமாக பற்கள், மற்றும் எலும்புகளுக்கு மிகவும் நல்லது. இக்கீரையை சமைத்து உண்டபின், செரிமானம் மெதுவாக இருக்கும், எனவே, குழந்தைகள், பெரியவர்கள் மத்திய உணவில் மட்டும் சேர்த்துக்கொள்வது நல்லது. வாரத்தில் 2 முறை உணவில் சேர்த்துக்கொண்டு வந்தால், முதிர் வயதிலும் எலும்பு உறுதியாக இருக்கும்.

### பலவிதமான நோய்களுக்கு மருந்து

தேமல் மற்றும் சொரியாசிஸ் ஆரம்ப நிலையில் இருப்பவர்களுக்கு இக்கீரையை மைய அரைத்து, தேமல், சொரியாசிஸ் உள்ள இடத்தில் தடவி வந்தால், கொஞ்சம் கொஞ்சமாக குணமடைய வாய்ப்புண்டு. பித்தம், உடல் சூடு, மூளை சம்பந்தமான பகுதியில் கோளாறு ஏற்படுவதால், அறிவு ஆற்றல் மற்றும் நியாபக குறைவு ஏற்படும். இவற்றை சரிசெய்ய அடிக்கடி உணவில் சாப்பிட்டுவந்தால், இப்பிரச்சினையிலிருந்து பூரண குணமடையலாம். அகத்திக் கீரையின் பூக்களை கண்களில் வைத்து சிறு துணி வைத்து கட்டிக்கொண்டால், கண் சம்பந்தமான கோளாறுகள் நீங்கி, நல்ல தெளிவான பார்வை கிடைக்கும்.

# கர்ப்பக் காலத்தில் எந்த மாதிரியான உடற்பயிற்சிகள் பாதுகாப்பானவை



கர்ப்பக் கால சிக்கல்கள் இல்லாதவர்கள் தாராளமாக உடற்பயிற்சி செய்யலாம். உடற்பயிற்சி செய்யும்போது உடல் செயல்பாடுகளுடன் ஆரோக்கியமாக இருக்கும். இதன் மூலம் மலச்சிக்கல், அஜீரணம், வயிற்று வலி, முழங்கால் வலி போன்ற பல பிரச்சினைகளிலிருந்து நிவாரணம் பெறலாம். மேலும் கர்ப்பக் காலத்தில் செய்யப்படும் உடற்பயிற்சி, உங்கள் கருவில் இருக்கும் குழந்தைக்கும் மிகவும் நல்லது. நீங்கள் ஆரோக்கியமாக இருந்தால், உங்கள் கர்ப்பத்தில் எந்தச் சிக்கல்களும் இல்லை என்றால், உங்கள் தினசரி வழக்கத்தில் உடற்பயிற்சியை சேர்த்துக்கொள்ளலாம். இது குறைப்பிரசவம் மற்றும் கருச்சிதைவு அபாயத்தையும் குறைக்கும். ஆனால் இதய நோய், ஆஸ்துமா, சர்க்கரை நோய் போன்ற பிரச்சினைகள் இருந்தால் உடற்பயிற்சி செய்யக்கூடாது. மேலும், நீங்கள் எந்தவொரு உடற்பயிற்சியையும் செய்வதற்கு முன், உங்கள் மருத்துவரை ஆலோசிக்க வேண்டும்.



### கர்ப்பத்தின் முதல் மூன்று (First Trimester) மாதங்களில் இந்த உடற்பயிற்சிகளை செய்யுங்கள்

கர்ப்பத்தின் முதல் மூன்று மாதங்களில் நீங்கள் 15 நிமிடங்கள் சுறுசுறுப்பான நடைப்பயிற்சியை மேற்கொள்ளலாம்.

இது தவிர, முதுகெலும்புகளுக்கு வலுவளித்து முதுகு வலிகளைக் குறைக்கும் பயிற்சிகளையும் செய்யலாம். இதனுடன் சில நீடிப்பு பயிற்சிகளையும் நீங்கள் செய்யலாம்.

கர்ப்பக் காலத்தில் மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த உடற்பயிற்சியும் செய்யக்கூடாது.



### கர்ப்பத்தின் இரண்டாவது மூன்று மாதங்களுக்கான உடற்பயிற்சி

கர்ப்பத்தின் இரண்டாவது மூன்று மாதங்களில் நடைப்பயிற்சியுடன் சேர்த்து மென்மையான மேல் உறுப்புகள் சார்ந்த உடற்பயிற்சிகளைச் செய்யலாம்.

கால்கள் தொடர்பான பயிற்சிகள் செய்யலாம் மற்றும் கெகல் (Kegel) உடற்பயிற்சிகள் செய்யலாம்.

### கர்ப்பத்தின் மூன்றாவது மூன்று மாதங்களுக்கான உடற்பயிற்சி

இந்த நேரத்தில் அதிக சிரமம் ஏற்படாதவாறு எளிமையான நடைப்பயிற்சியை சிறிதுநேரம் மேற்கொள்ளலாம்.

இது தவிர கை, கால்கள், இடுப்பு சம்பந்தமான சில பயிற்சிகளைச் செய்யலாம். இதனால் பிரசவத்தின்போது ஏற்படும் சிரமங்களைக் குறைக்கலாம்.

கர்ப்பக் காலத்தில் பயமின்றி உடற்பயிற்சிகள் செய்யலாம், அதேசமயம் மருத்துவர் அல்லது நிபுணரின் ஆலோசனையின்றி எந்த உடற்பயிற்சியும் செய்யக்கூடாது என்பதையும் மனதிற்கொள்ள வேண்டும். இல்லையெனில் அது உங்களுக்கும் கருவில் இருக்கும் குழந்தைக்கும் தீங்கு விளைவிக்கும்.

# படபடப்பை குறைக்கும் சுவாசப் பயிற்சிகள்



* கைகளை உள்ளும் வெளியுமாக அசைத்துச் செய்யும் சுவாசப் பயிற்சி முறை
* கைகளை நீட்டிச் செய்யும் சுவாசப் பயிற்சி செய்யும் முறை
* கணுக்கால்களை உயர்த்திச் செய்யும் சுவாசப் பயிற்சி செய்யும் முறை

### கைகளை, உள்ளும் வெளியுமாக அசைத்துச் செய்யும் சுவாசப் பயிற்சி முறை

நேராக நிமிர்ந்து நின்று கைகளை முன்னால் நீட்டிக்கொள்ளவும்.

மூச்சை உள்ளிழுத்தபடி கைகளை அகட்டி, மார்பை விரிக்கவும். பின்பு மூச்சை வெளியே விட்டபடி பழைய நிலைக்கு வரவும்.

15 முதல் 20 முறை மெதுவாகச் செய்யவேண்டும்.

### கைகளை நீட்டிச் செய்யும் சுவாசப் பயிற்சி முறை

நிமிர்ந்து நிற்கவும்.

கை விரல்களை கோத்துக்கொண்டு நிற்க வேண்டும்.

மூச்சை உள்ளிழுத்தபடி கைகளை முன்னே நீட்டவும்.

உள்ளங்கைகள் வெளியே பார்த்தபடி, கைகளை இழுத்து நீட்டவும்.

மூச்சை வெளியே விட்டபடி, பழைய நிலைக்கு வரவும். 15 முதல் 20 முறை இதேபோல் செய்யவும். இதேபோல் கைகளைத் தலைக்கு மேலே உயர்த்தி, பிறகு கீழே கொண்டு வரவும். மூச்சை உள்ளிழுத்து, மேலே உயர்த்தி மூச்சை வெளிவிட்டுக் கீழே இறக்கவும்.

### கணுக்கால்களை உயர்த்திச் செய்யும் சுவாசப் பயிற்சி முறை

நேராக நின்று மூச்சை உள்ளிழுத்தபடி கைகளை மேலே உயர்த்தவும். அதேநேரத்தில் குதிகால்களை உயர்த்தி கால் விரல்களில் நிற்கவும்.

மெதுவாக மூச்சை வெளியே விட்டபடி கைகளைக் கீழிறக்கும்போதே, குதிகால்களையும் கீழே வைத்து சமநிலைக்கு வரவும்.

இந்த சுவாசப் பயிற்சிகளை தொடர்ந்து செய்துவந்தால் கோபம், படபடப்பு குறையும். ஞாபக சக்தி அதிகரிக்கும்.

# சர்க்கரை நோயாளிகளுக்கான கால் பயிற்சிகள்

### கெண்டைக்கால் சதையை நீட்டுதல்



முழங்கை மடங்காமல் கைகளை நீட்டி, உள்ளங்கைகளை சுவரில் பதிக்க வேண்டும். கால்கள் சுவரிலிருந்து சிறிது தூரத்தில் இருக்கும் நிலையில் உள்ளங்கால்களால் தரையைக் கெட்டியாக அழுத்தியபடி நிற்கவேண்டும். பின்னர் கைகளை மடித்து, நீட்ட வேண்டும். அதேசமயம் உடல், கால்கள், பாதங்கள் நேராக இருக்கும்படியும் வைத்து முன்னும் பின்னும் அசையவேண்டும். இப்பயிற்சியை 10 முறை செய்யவும். இப்பயிற்சியால் கெண்டைக்கால் பிடிப்பு நீங்கும். கால் மரத்துப் போகாது.

### குதிகாலை உயர்த்துதல்

பாதத்தின் முன்பகுதியை அழுத்தி குதிகாலை உயர்த்தி, தாழ்த்த வேண்டும். இதுபோல் 20 முறை செய்யவேண்டும். உங்கள் உடலின் முழு எடையையும் ஒரு காலில் தாங்கிக்கொண்டு நிற்க வேண்டும். இன்னொரு காலுக்கும் அதேபோல் செய்யவும்.



### நாற்காலி பயிற்சி

ஒரு நாற்காலியில் உட்கார வேண்டும். கைகளைக் குறுக்காகக் கட்டிக்கொண்டு நாற்காலியில் இருந்து எழுந்து உட்கார வேண்டும். இவ்வாறு 10 முறை செய்யவேண்டும்.

### கால் வீசுதல்

ஒரு ஸ்டூலில் ஏறி நின்று அருகிலுள்ள மேஜை அல்லது ஏதாவது ஒன்றைப் பிடித்துக்கொண்டு ஒரு காலை ஸ்டூலில் இருந்து எடுத்து முன்னும் பின்னுமாக வேகமாக ஆட்ட வேண்டும். இதுபோன்று 10 முறை செய்ய வேண்டும். இன்னொரு காலுக்கும் இதேபோல் பயிற்சி செய்ய வேண்டும்.



### நடத்தல்

தினமும் 30 நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரம் வரை சற்று வேகமாக நடக்க வேண்டும். நடக்கும் தூரத்தைப் படிப்படியாக அதிகரிக்க முயற்சிக்க வேண்டும்.

### மாடிப்படி பயிற்சி

பாதத்தின் முன்பகுதியை மட்டும் ஊன்றியபடி மாடிப்படிகளில் வேகமாக ஏறவேண்டும்.

### நுனி விரல்கள் பயிற்சி



ஒரு நாற்காலியின் பின்புறமாக நின்று பிடித்துக்கொள்ள வேண்டும். நின்ற இடத்திலேயே கால் விரல்களை உயர்த்தி, தாழ்த்த வேண்டும்.

### முழங்கால் வளைத்தல்

ஒரு நாற்காலியைக் கையால் பிடித்துக்கொள்ள வேண்டும். முதுகை வளைக்காமல் (நேராக வைத்துக்கொண்டு) முழங்காலை 10 முறை மடக்க வேண்டும்.

கால்களை நீட்டி தரையில் உட்கார வேண்டும். பின்னர் உள்ளங்கைகளைத் தரையில் பதித்து, சிறிது பின்னால் சாய்ந்தபடி உட்கார வேண்டும். காலை உயர்த்தி முன்னும், பின்னும், பக்கவாட்டிலும் அசைக்க வேண்டும். கால் பிடிப்பு நீங்கும் வரை இவ்வாறு செய்யவேண்டும்.

# ஞாபக சக்தியை அதிகரிக்கும் வோக்கிங் பயிற்சிகள்



தினமும், வோக்கிங் செல்வதால், உடல் தசைகள் சுறுசுறுப்பு அடைகின்றன. தசைகளின் இயக்கத்துக்கு தேவைப்படும் குளுக்கோஸ், இரத்தத்திலிருந்து, அவற்றுக்கு தொடர்ந்து கிடைப்பதன் மூலம், இன்சுலின் சுரப்பது சீராக்கப்பட்டு, நீரிழிவு நோய் வராமல் தடுக்கப்படுகிறது. உடல் உழைப்பற்ற வாழ்க்கை முறையால், நீரிழிவு நோய், உயர் ரத்த அழுத்தம் போன்ற தொற்று அல்லாத நீண்டகால நோய்களும் அதிகரித்து வருகின்றன.

நடுத்தர வயதினரை மட்டுமன்றி, இளம் தலைமுறையையும் ஆட்டிப் படைக்கும் இந்நோய்கள் வராமல் தடுக்க, சிறந்த, எளிய வழி, 'வோக்கிங்' எனப்படும் நடைப்பயிற்சி. தினமும், குறைந்தபட்சம் ஒரு மைல் தூரம் நடக்கும்போது, உடல் ஆற்றலில், 200 கலோரிகள் செலவிடப் படுகின்றன. இதனால், உடல் உயரம் மற்றும் வயதிற்கேற்ப உடல் எடை பராமரிக்கப்பட்டு, உடல் பருமன் பிரச்சினை, உயர் ரத்த அழுத்த நோய் ஆகியவை தவிர்க்கப் படுகின்றன. உடலில், கொழுப்பு குறைவதால், மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பும் குறைகிறது.

நடைப்பயிற்சியில், மனம் ஒருமுகப் படுவதால், மன அழுத்தம், மன இறுக்கம் ஆகியவை குறைந்து, மன நோய்கள் வருவதற்கான வாய்ப்பும் வெகுவாக குறைகிறது. வோக்கிங் செல்வதால், மூளைக்கு நல்ல இரத்த ஓட்டம் கிடைத்து, ஞாபக சக்தி கூடுகிறது. இதனால், வயோதிகத்தில், 'அல்சீமர்', 'டிமென்ஷியா' போன்ற ஞாபக மறதி தொடர்பான நோய்கள் வருவது தடுக்கப்படுகிறது.

நடைப்பயிற்சியால், இரவில் நல்ல தூக்கம் வருவதுடன், உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகரிக்கிறது. உடல் எலும்புகள் வலுவடைவதால், மூட்டு தேய்மானம், எலும்பு மெலிதல் போன்ற நோய்கள் வருவதில்லை.



# இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் பேரீச்சம்

எளிதாக ஜீரணமாகும் சதைப்பகுதி மற்றும் ஒற்றைச் சர்க்கரைகள் நிறைந்தது பேரீச்சம். சாப்பிட்டதும் புத்துணர்ச்சியும், சக்தியும் உடலுக்குக் கிடைக்கிறது. அதனால்தான் விரதத்தை நிறைவு செய்பவர்கள் பேரீச்சைப் பழத்தை எடுத்துக்கொள்கிறார்கள். பேரீச்சம் எளிதில் ஜீரணமாகும் நார்ச்சத்துக் கொண்டது. குடற்பகுதியிலிருந்து கெட்ட கொழுப்புகளை உறிஞ்சி அகற்றும் ஆற்றல் பேரீச்சைக்கு உண்டு.

பெருங்குடற் பகுதியில் புற்றுநோயை உருவாக்கும் இரசாயனங்களை நீக்குவதிலும் பேரீச்சைப் பழம் பங்கெடுக்கிறது. டேனின்ஸ் எனும் நோய் எதிர்ப்பொருள் பேரீச்சையில் உள்ளது. நோய்த் தொற்று, இரத்தம் வெளியேறுதல், உடல் உஷ்ணமாதல் ஆகியவற்றுக்கு எதிராக செயற்படக்கூடியது டேனின்ஸ். விற்றமின் ஏ பேரீச்சையில் ஏராளமான அளவில் உள்ளது. இது கண் பார்வைக்கும், குடல் ஆரோக்கியத்துக்கும், சருமத்துக்கும் அவசியமானது.

சிறந்த நோய் எதிர்ப்பொருட்களான லுடின், ஸி-சாந்தின் மற்றும் பீட்டா கரோட்டின் நிறைந்துள்ளது. இவை உடற்செல்களைக் காப்பதோடு, தீங்கு விளைவிக்கும் பிரீ-ரேடிக்கல்களை விரட்டுவதிலும் பங்கெடுக்கிறது. குடல், தொண்டை, மார்பகம், நுரையீரல், இரப்பை ஆகிய உறுப்புகளைத் தாக்கும் புற்றுநோய்களுக்கு எதிராக செயற்படக்கூடியது.

பேரீச்சைப் பழம் இரும்புச்சத்தை ஏராளமாக அள்ளி வழங்கும். 100 கிராம் பேரீச்சை பழத்தில் 0.90 மில்லிகிராம் இரும்பு உள்ளது. இரும்புத் தாது, இரத்தத்திற்கு சிவப்பு நிறம் வழங்கும் ஹிமோகுளோபின் உருவாக்கத்தில் பங்கு வகிப்பதாகும். இது இரத்தம் ஒக்சிஜனை சுமந்து செல்லும் அளவை தீர்மானிப்பதிலும் பங்கெடுக்கிறது.

பொட்டாசியம் தாது குறிப்பிட்ட அளவில் உள்ளது. உடலுக்குத் தேவையான மின்னாற்றலை வழங்கும் தாதுவாக பயன்படுகிறது. உடற்செல்களும், உடலும் வளவளப்புடன் இருக்கவும் பொட்டாசியம் அவசியம். இதயத்துடிப்பு மற்றும் இரத்த அழுத்தம் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதிலும் பங்கு வகிக்கிறது. பக்கவாதம், இதய வியாதிகள் ஏற்படாமலும் காக்கிறது.

கல்சியம், மாங்கனீசு, தாமிரம், மக்னீசியம் போன்ற அத்தியாவசிய தாதுக்களும் உள்ளன. கல்சியம் எலும்புகள் மற்றும் பற்களின் பலத்திற்கு அவசியம். நாடித் துடிப்பை சீராக்குதல் மற்றும் இரத்தக் கட்டி ஏற்படுவதைத் தடுத்தல் ஆகியவற்றிலும் பங்கு வகிக்கிறது. இரத்த சிவப்பணுக்கள் உற்பத்தியில் தாமிரம் பங்கு வகிக்கிறது. மக்னீசியம் எலும்புகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது. பி-காம்ப்ளக்ஸ் விற்றமின்கள் பேரீச்சம் பழத்தில் மிகுந்துள்ளன.

# கல்லீரல் பிரச்சினை அறிகுறிகள்

**கால்களில் வீக்கம்**

ஒருவருக்கு கல்லீரல் சரியாக செயல்படாமல் இருந்தால், கால்களில் இலேசாக வீக்கம் அவ்வப்போது ஏற்படும். எனவே, திடீரென்று கால்கள் வீங்கியிருந்தால், உடனே மருத்துவரை சந்திக்கவும்.



**மஞ்சள் காமாலை**

எப்போது ஒருவரின் சருமம் மற்றும் கண்கள் மஞ்சள் நிறத்தில் இருக்கிறதோ, அத்தகைய வருக்கு மஞ்சள் காமாலை காரணமாக பித்தநீர் தேங்கியுள்ளது என்று அர்த்தம்.

**வயிற்று உப்புசம் மற்றும் வலி**

கல்லீரலில் கட்டிகளானது அவ்வளவு சீக்கிரம் வராது. ஆனால், கல்லீரலானது தீவிரமாக பாதிக்கப்பட்டிருந்தால்தான், கல்லீரலில் கட்டிகள் உருவாகும். உங்கள் கல்லீரலில் கட்டிகள் இருந்தால், வலது பக்கத்தில் அடிவயிற்றுக்கு சற்று மேலே வலி எடுப்பதோடு, வயிறு உப்புசத்துடனும் இருக்கும்.

**வாந்தி, சோர்வு, காய்ச்சல்**

கல்லீரலை வைரஸ் தாக்கினால் உருவாவதுதான் ஹெபடைடிஸ் என்னும் கல்லீரல் அழற்சி. உங்களுக்கு கல்லீரல் அழற்சி இருந்தால், வாந்தி, சோர்வு, காய்ச்சல், மயக்கம், குளிர் போன்றவற்றை சந்திக்கக்கூடும்.

**தலைச்சுற்றல்**

ஒல்கஹால் குடிப்பவராக இருந்தால், விரைவில் கல்லீரல் பாதிக்கப்படும். ஒல்கஹால் அதிகம் பருகி கல்லீரல் பாதிக்கப்பட்டிருந்தால், தலைச்சுற்றல் மற்றும் குழப்பம் அடிக்கடி ஏற்படும்.

**குமட்டல்**

கல்லீரல் சரியாக இயங்காமல் இருப்பின், குமட்டலை சந்திக்கக்கூடும். எனவே, உங்களுக்கு அவ்வப்போது குமட்டல் ஏற்பட்டால், உடனே மருத்துவரை சந்தியுங்கள்.

**அடர் நிற சிறுநீர்**

கல்லீரலில் பிரச்சினைகள் இருந்தால், உங்கள் சிறுநீர் அடர் மஞ்சள் நிறத்தில் வெளிவரும். எனவே, இந்த நிலையை நீங்கள் சந்தித்தால், தவறாமல் மருத்துவரை சந்தியுங்கள்.

**சோர்வு**

நாட்பட்ட சோர்வு கூட கல்லீரல் பிரச்சினைக்கான அறிகுறியே. ஆகவே உங்களுக்கு அடிக்கடி சோர்வு ஏற்பட்டால், மருத்துவரை சந்தித்து முறையான பரிசோதனையை மேற்கொண்டு, சரியான காரணத்தைக் கண்டறியுங்கள்.

# "வாய் விட்டு சிரி, நோய் விட்டுப் போகும்"



பல நேரத்தில் நம்மிடம் உள்ள பல அருமையான பண்புகள் நம்மால் உணராமலேயே தெரியாமல் போய்விடும். அதேபோல் எந்த மருந்தையும் நாடாமல் பல நோய்களைத் தடுக்கும் திறனை நாம் பெற்றுள்ளோம் என்பது நம்முள் பலருக்குத் தெரியாமலேயே இருக்கின்றது. நம்மால் வெளியிடப்படும் 'சிரிப்பு' என்ற வெளிப்பாட்டுக்கு நிகர் இவ்வுலகில் எதுவும் இருக்க முடியாது.

நாம் பல இலட்சம் மதிப்புள்ள உடைகளையும் அணிகலன்களையும் அணிந்துகொண்டு, சிரிக்க வேண்டிய இடத்தில சிரிக்காமல், முகத்தை ஏழுக்கோணத்துக்கு 'உம்' என்று வைத்துக்கொண்டால் பார்க்கவே சகிக்காது. நம்மை சூழ்ந்துள்ள சில நபர்களின் எதிர்மறையான எண்ணங்களையும் ஆற்றலையும் கூட நேர்மறையானதாக மாற்றியமைக்கக்கூடும் சக்தியைக் கொண்ட ஒரே முக வெளிப்பாடு 'சிரிப்பு' மட்டுமே ஆகும். இவை நம்மையும் நம்மைச் சுற்றி உள்ளவர்களையும் மகிழ்விப்பது மட்டுமல்லாமல் நம் உடல் நலத்தையும் பேணிப் பாதுகாக்கிறது.

பல ஆராய்ச்சிகளில் இவை உறுதிசெய்யப்பட்டு, 'சிரிப்பு சிகிச்சை' என்று கூட தொடங்கப்பட்டுவிட்ட நிலையை பெற்றுள்ளது. பல ஹோர்மோன் செயல்பாட்டுக்கு உகந்த சிகிச்சை அளிக்கும் திறனைப் பெற்றுள்ளது. முக வசீகரத்தை மெருகேற்றி சுமாராக இருப்பவர்களைக் கூட மிகவும் அழகுடையவர்களாக காட்சி அளிக்கிறது. தற்போது மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டோர்களின் எண்ணிக்கை, பல கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டோர்களையே மிஞ்சும் அளவுக்கு உள்ளது. இதற்குக் காரணம், போதிய அளவுக்கான சந்தோஷ சூழ்நிலை குறைபாடேயாகும்.

மகிழ்ச்சி நம்மை தேடி வரும் என்று நின்றுகொண்டு இருக்காமல், அத்தகைய சூழலை நாம் ஏற்படுத்த வேண்டும். குழந்தைகள், செல்லப் பிராணிகள், வயதானவர்கள் போன்றவர்களின் செயல்களை மிகவும் உன்னிப்பாக ஒரு ஐந்து நிமிடம் கவனித்தால், நம்மை அறியாமலேயே நம்முள் சிரிப்பும், பூரிப்பும் வந்தடையும். குழந்தைகளின் சிரிப்புச் சத்தமும் அவர்களுடைய குறு குறு பார்வையும், செல்லப் பிராணிகளின் சேஷ்டையும், வயதானவர்கள் வெற்றிலையை இடித்துக்கொண்டே பேசும் வம்புக் கதைகளையும் பார்த்தால் வயிறு வலிக்கும் அளவுக்கான சிரிப்பும் சந்தோஷமும் நம்மைத் தேடி வரும்.

உலகிலேயே மிகவும் கடினமாகக் கருதப்படும் செயல் மற்றவர்களை சிரிக்க வைப்பதுதான். ஒரு திரைப்படத்தை எடுத்துக்கொண்டால், நகைச்சுவை பகுதி என்பது மிகவும் முக்கியமான ஒன்றாக உள்ளது. மக்களை சிரிக்க வைப்பதற்காக, நகைச்சுவை நடிகர்கள் தங்களின் முழு படைப்பாற்றலையும் பயன்படுத்துகின்றனர். சிரிப்புக்கு இவ்வளவு முக்கியத்துவமும் மகத்துவமும் இருக்கின்றபடியால்தான் இவை அனைத்தும் மேற்கொள்ளப்படுகின்றன.

"வாய் விட்டு சிரி, நோய் விட்டுப் போகும்" என்ற பழமொழி ஏதோ வாய்ப்போக்கில் சொன்ன ஒரு வாக்கியம் அல்ல. சிரிப்பின் மதிப்பை அறிந்து, உணர்ந்து, புரிந்து கொண்டவர்களால் மட்டுமே இதை கூறியிருக்க முடியும். ஒரு சிறு புன்னகை புரிதல், வாய் விட்டு சிரித்தல் போன்றவை நம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி நோய் நொடி இல்லாத நாட்களை நமக்கு அளித்து மகிழ்விக்கும் என்பதே இதன் பொருளாகும்.

# குடல்புழுவைத் தவிர்க்க என்ன வழி?



குழந்தை சரியாகச் சாப்பிடாமல் வயிற்று வலியால் அவதிப்பட்டால், குழந்தைக்குக் குடல்புழு பாதிப்பு இருக்கலாம் என அம்மாக்கள் நினைப்பார்கள். அந்தளவுக்குக் குழந்தைகளைப் பரவலாகப் பாதிக்கக்கூடிய ஒரு முக்கியமான பிரச்சினை, குடல்புழுத் தொல்லை. சுயசுத்தம் குறைவதால் இது உண்டாகிறது. சுற்றுச்சூழல் சுகாதாரம் பெரிதும் மோசமாக இருக்கும் இன்றைய சூழ்நிலையில் குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல் பெரியவர்களுக்கும் சிறுவர், சிறுமிகளுக்கும் இளம் வயதினருக்கும்கூட இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது.

★ சுயசுத்தம் காக்கப்பட வேண்டும். சுற்றுப்புறச் சுகாதாரம் மேம்பட வேண்டும்.

★ குளிப்பறை மற்றும் கழிப்பறைகளை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள்.

★ திறந்தவெளிகளையும் தெருவோரங்களையும் கழிப்பறைகளாகப் பயன்படுத்தக் கூடாது.

★ கழிப்பறைக்குச் சென்று வந்தவுடன் கைகளை சோப்பு போட்டு நன்றாகக் கழுவுங்கள். குழந்தைகளையும் இவ்வாறு செய்வதற்குப் பழக்கப்படுத்துங்கள்.

★ சகதி, சேறு உள்ள அசுத்தமான இடங்களில் குழந்தைகளை விளையாடவிடக் கூடாது. சுத்தமான இடங்களில் விளையாடுவதை ஊக்கப்படுத்துங்கள்.

★ நகங்களைப் பத்து நாட்களுக்கு ஒருமுறை வெட்டிவிட வேண்டும்.

★ குழந்தைகள் விரல் சூப்பக் கூடாது.

★ குழந்தை ஈரப்படுத்திய உள்ளாடைகளை உடனுக்குடன் மாற்றுவதும், தினந்தோறும் மாற்ற வேண்டியதும், சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியதும் மிகவும் அவசியம்.

★ எக்காரணத்துக்காகவும் உள்ளாடைகளை அடுத்தவர்களுடன் பகிர்ந்துகொள்ளக் கூடாது.

★ ஈக்கள் மொய்த்த பண்டங்களைச் சாப்பிடக் கூடாது. காரணம், மலத்திலுள்ள புழுக்களின் முட்டைகளைக் குடிநீருக்கோ, உணவுக்கோ கொண்டுவருவதில் ஈக்களுக்குப் பெரும் பங்கு உண்டு.

★ சாலையோரக் கடைகளில் எதையும் வாங்கிச் சாப்பிடக் கூடாது.

★ காய், கனிகளை உண்பதற்கோ சமைப்பதற்கோ பயன்படுத்தும் முன்பு தண்ணீரில் நன்றாகக் கழுவிக்கொள்ள வேண்டும்.

★ நன்றாகக் கொதிக்க வைத்து ஆற வைத்த தண்ணீரையே குடிக்க வேண்டும்.

★ பாதுகாக்கப்பட்ட உணவு வகைகளையே உண்ண வேண்டும்.

★ சாப்பிடுவதற்கு முன்பு கைகளைச் சோப்பு போட்டுக் கழுவ வேண்டியது அவசியம்.

★ காலில் செருப்பு அணிந்துதான் வெளியில் செல்ல வேண்டும்.

★ அசுத்தமான குளம், குட்டை, ஏரி, நீச்சல்குளம் போன்றவற்றில் குளிப்பதையும் நீச்சலடிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

★ வீட்டுக்குள் நுழைந்ததும் பாதங்களை நன்றாகக் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டும். பித்த வெடிப்பு, சேற்றுப்புண் இருந்தால் உடனே சிகிச்சை பெற்றுவிட வேண்டும்.

★ தரமான கடைகளில் மட்டுமே இறைச்சியை வாங்க வேண்டும்.

★ மீன், இறைச்சி போன்றவற்றை நன்றாக வேகவைத்த பின் சாப்பிட வேண்டும்.

★ வீட்டில் வளர்க்கப்படும் நாயாக இருந்தாலும் அதைத் தூக்கி கொஞ்சினாலோ, விளையாடினாலோ கண்டிப்பாகக் கைகளை சோப்பு போட்டுக் கழுவ வேண்டும்.

# பாதத்தில் ஏற்படும் வெடிப்புகளை குணமாக்குவது எப்படி?



தரையைச் சுத்தம் செய்யப் பயன்படும் சோப் எண்ணெயிலுள்ள இரசாயனம், கால்களில் பட்டால் சிலருக்கு வெடிப்பு உண்டாகும்.

ஒரு நாள் விட்டு ஒரு நாள் எலுமிச்சை தோலால் பாதங்களை நன்றாக தேய்த்துக் கழுவுங்கள். இது வெடிப்பிலுள்ள அழுக்குகளை நீக்கி, பாதத்தை சுத்தமாக்கும்.

கடுகு எண்ணெயை கால், கைகளில் தேய்த்து கழுவி வந்தால், சொரசொரப்பு தன்மை நீங்கி, மிருதுவாகும்.

ஒரு நாள் பாத்திரம் தேய்க்கும் நாரில் தயிரை தொட்டு உள்ளங்காலில் தேயுங்கள். மறுநாள் தண்ணீரில் கல் உப்பைப் போட்டு நாரில் தொட்டு தேயுங்கள். தொடர்ந்து இப்படிச் செய்து வர, பாதம் மென்மையாக மாறுவதைக் காணலாம்.

வெந்தயக் கீரையை அரைத்து கை, கால்களில் பத்துபோல் அப்பி தேய்த்துக் கழுவி வந்தாலும், முரட்டுத்தன்மை போய் மிருதுவாகும்.

மருதாணி பவுடருடன் தேயிலைத்தூள், சர்க்கரை, தேங்காயெண்ணெய் கலந்து கை, கால்களில் இட்டுக்கொள்வது மிகவும் நல்லது. இது வெடிப்பு மற்றும் சொர சொரப்பை நீக்கி குளிர்ச்சியாக்கி, பஞ்சு போன்று மென்மையாக்கும்.

உருளைக்கிழங்கை சீவி உலர்த்தி பவுடராக்கி தண்ணீரில் குழைத்து பூசி வந்தால், வெடிப்பால் ஏற்பட்ட கருமை நீங்கி மிளிரும்.

# மாதவிடாய் சுழற்சி முறை

மாதவிடாய் மாதம் ஒரு முறை ஏற்படுவதே சரியான சுழற்சி. இரண்டு, மூன்று மாதங்கள் இடைவெளியில் தோன்றாமல் மாதம் ஒரு முறை தோன்றுவதற்கு முக்கியமான காரணம் உண்டு. பெண் பல ஆண்டுகள் கழித்து கருக்கொள்ள, பூப்பெய்தியதில் இருந்தே மாதம் ஒரு கரு முட்டை வெளியீடு நடக்க வேண்டும் என்பது இயற்கை.



இத்தகைய பெண்களுக்கு கருத்தரித்தலில் பிரச்சினை இருக்காது. மாதவிடாய் ஏற்படுவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் பெண்ணின் உடல் தயாராவது மார்பக வளர்ச்சி மூலம் வெளிப்படையாகவே தெரியத் தொடங்கும். இந்த நேரத்தில்தான் பெற்றோர் மாதவிடாய் குறித்து விளக்க வேண்டும். இத்தகைய மாறுதல்கள் இயல்பாகவே குறித்த காலத்தில் ஏற்படாவிட்டால், கால தாமதம் செய்யாமல் மகப்பேறு மருத்துவரை அணுக வேண்டும்.

முதல் முறை மாதவிடாய் ஏற்பட்ட பின், இரண்டாவது சுழற்சி தள்ளிப் போகலாம். இதனால் பிரச்சினை ஒன்றுமில்லை. ஆனால், பொதுவாக ஒவ்வொரு மாதமும் 21 நாளிலிருந்து 35 நாட்கள் இடைவெளிக்குள் வர வேண்டும். இதில் மாறுபாடு ஏற்பட்டால் மகப்பேறு மருத்துவரை அணுக வேண்டும். பெண்கள் பூப்பெய்தும் காலம் 13 வயதிலிருந்து 14 வயது வரை இருக்கலாம்.

இயல்பான மாதவிடாய் சுழற்சி ஏற்பட சத்துள்ள உணவு உட்கொள்ள வேண்டும். உடற்பருமன் ஏற்படாமல் இருக்க ஓடியாடி விளையாட வேண்டும். அன்றாட உடற்பயிற்சி மிக அவசியம்.

சிலருக்கு உடல் பருமனால் முதல் மாதவிடாய் முன்கூட்டியே வந்துவிடும். சிலருக்குக் கால தாமதமாகும் நிலையும் உண்டு.

ஒல்லிக்குச்சியாக, அதாவது ஜீரோ சைஸ் இருக்க விருப்பமுள்ளவர்கள் உணவை அறவே தவிர்ப்பார்கள். இது தவறானது. உடற்பயிற்சி மற்றும் சத்தான உணவு ஆகியவற்றை உட்கொண்டு ஒல்லியான உடல்வாகு என்றால் பிரச்சினை இல்லை. இவை அனைத்தும் இருந்தால், பூப்பெய்த 17 வயதுவரைகூடக் காத்திருக்கலாம். அதிகமான ஊட்டச்சத்து முன்கூட்டி பூப்பெய்த செய்துவிடும்.

அதேபோல் ஊட்டச்சத்து குறைந்தால் காலதாமதமாகும். இதைத் தவிர்க்க சத்தான உணவில் புரதச் சத்து, இரும்புச் சத்து மற்றும் கல்சியம் ஆகியவை இருக்க வேண்டும். புரதச் சத்து என்றால் முளைவிட்ட பயிறு, மாமிசத்தில் ஈரல், மீன், முட்டை, உலர் கொட்டைகள் முக்கியமாக வேர்க்கடலை.

இரும்புச் சத்து என்றால் முருங்கைக் கீரை, வெல்லம், பேரீச்சம் பழம், ஈரல், முட்டையின் கரு, பிஸ்தா, காய்ந்த திராட்சை. கல்சியத்துக்கு பால், சீத்தாப்பழம் ஆகியவற்றை உட்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட இடைவெளியில் மாதவிடாய் ஏற்பட்டு வந்தால் பின்னாளில் கருத்தரித்தல் பிரச்சினை வராது.

# மகளிரும் மூலிகை சுகவாழ்வும்



பெண்கள் மூலிகை உணவுகளையும், மூலிகைத் தடுப்பு மருந்துகளையும், மூலிகை நோய் நீக்கும் மருந்துகளையும் உட்கொண்டு வருவதன் மூலம் சுகவாழ்வையும், நீண்ட ஆயுளையும் பெற்றுக் கொள்ளலாம்.

**வெள்ளைபடுதல்**

பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைபடுதல் நிலையில் அறுகம்புல்லுடன் மிளகும் சேர்த்து குடிநீராக்கி அருந்தும்போது சிறந்த பலனைக் காணலாம். மேலும் மோர், பால், தயிர் ஆகியவற்றுள் அறுகம்புல்லை ஊறவிட்டு மிளகு சேர்த்து அரைத்து வெள்ளைபடுதல் நிலையில் உட்கொள்ளலாம். அருகம்புல் ஒரு சிறந்த கிருமித் தொற்றுநீக்கி மூலிகையாகும். சந்தனச் சூரணமானது பாலுடன் சேர்த்து வெள்ளைபடுதலுக்கு பயன்படுத்தலாம்.

**தோல் நோய்கள்**

குப்பிளாய் இலையுடன் மஞ்சளைச் சேர்த்து அரைத்துப் பூசுவதன் மூலம் கிரந்தியால் ஏற்படும் தோல் நோயில் (Eczema), காளாஞ்சுகப் படைநோய் அல்லது செதில் உரிப்படை நோயில் (Psoriasis) சிறந்த பலனைக் காணலாம். மஞ்சளானது தொற்றுநீக்கி மூலிகையாகும். வேப்பிலை மஞ்சள் அவித்த நீர், வேப்பிலை மஞ்சள் களிம்பு என்பன கிரந்தியால் ஏற்படும் தோல் நோயில் (Eczema) பயன்படுத்தலாம். வெண் குழியங்களில் இயோசினோபில் அதிகரிப்பை மஞ்சள் சூரணம் கட்டுப்படுத்தும்.

**பழைய நோ**

மஞ்சளுடன் விராலி இலைகளை அரைத்து பற்றிட பழைய நோ தீரும்.



டாக்டர் வெற்றிவேல் சக்திவேல்
A . m c . b
மூலிகை சுகவாழ்வு நிறுவனம்,தெல்லிப்பழை.

## சங்கு முத்திரை செய்வதால் கிடைக்கும் பலன்கள்



**செய்முறை:** இடது கை பெருவிரலை படத்தில் காட்டியுள்ளபடி வலது கை விரல்களால் மூடிக்கொள்ளவும். இடது கையின் மற்ற விரல்கள் வலது கை விரல்களின் பின்பகுதியில் சாய்த்து வைத்துக்கொள்ளவும்.

வலது கை பெருவிரல் நுனியால் இடது கை நடு விரல் நுனியை தொட்டுக்கொள்ளவும், மற்ற இடது கை விரல்கள் நடுவிரலை சார்ந்து இருக்கவேண்டும். இந்த முத்திரை சங்கு வடிவம் போல் இருக்கும். இதனால் இது சங்கு முத்திரை என அழைக்கப்படுகிறது.

**பலன்கள்:** தைராய்டு நோய் குணமடைகிறது. திக்கிப் பேசுவது குணமடைகிறது. குரல் வளம் நன்றாகி பேச்சு நன்றாக வருகிறது. இந்த முத்திரை நமது தொப்புளுக்கு கீழே உள்ள 72,000 நரம்புகளை சக்தியுடன் இயங்கவைக்கிறது. நல்ல பசி கொடுக்கிறது. ஜீரண சக்தி அதிகமாகிறது.

உடலிலுள்ள எரிச்சல் நீங்குகிறது. காய்ச்சல் குணமடைகிறது. அலர்ஜி மற்றும் தோல் நோய் குணமடைகிறது. தசை வலுவடைகிறது. தொண்டையில் ஏற்படும் நோய்கள் குணமடைகிறது. மன அமைதி கிடைக்கிறது. மன ஒருமைப்பாடும் ஞாபகசக்தியும் அதிகரிக்கிறது. சங்கு முத்திரையை தொடர்ந்து செய்து வந்தால் தைராய்டு நோய் குணமடையும். தியானத்தின்போது இந்த முத்திரைப் பயிற்சி அதிக பலன் கொடுக்கும். இம்முத்திரையை 20 நிமிடங்கள் வரை இருமுறை செய்யலாம்.

## சர்க்கரை நோயாளிகளுக்கு அடிக்கடி மயக்கம் வருவது ஏன்?



சர்க்கரை நோயாளிகள் அடிக்கடி தங்களுக்கு மயக்கம் வருகிறது என்று கூறுவதைப் பார்த்திருக்கிறோம். அந்த வகையில் அவர்களுக்கு அடிக்கடி ஏன் மயக்கம் வருகிறது என்பதை பார்ப்போம்

சர்க்கரை நோயாளிகள் அடிக்கடி சிறுநீர் கழிப்பார்கள் என்பதால் அதன் மூலம் அவர்களுக்கு நீர்ச்சத்து குறைகிறது. இதனால் தலைச்சுற்றல் மயக்கம் ஏற்படலாம்.

அதேபோல் இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகமாக இருப்பது, இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு ஆகியவை காரணமாகவும் மயக்கம் வர அதிக வாய்ப்புள்ளது.

எனவே, சர்க்கரை நோயாளிகள் இரத்த அழுத்தத்தை அவ்வப்போது சரிபார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் சர்க்கரை நோயாளிகள் அடிக்கடி தலைச்சுற்றல் வந்தால் உடனடியாக மருத்துவரிடம் சென்று உரிய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

## கர்ப்பிணிகள் மேக்கப் போடலாமா?

மேக்கப் போடுவது என்பது பெண்களுக்கே உரிய ஒரு கலை என்றாலும் கர்ப்பிணிகள் மேக்கப் போடுவதில் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேக்கப் பொருட்களில் உள்ள இரசாயன கலவைகள் வயிற்றில் இருக்கும் கருவை பாதிக்க வாய்ப்பு இருக்கிறது என்றும் எனவே மருத்துவரிடம் ஆலோசனை செய்து மேக்கப் போட்டுக்கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

குறிப்பாக, செயற்கை நிறங்கள் மற்றும் அமிலம் கொண்ட மேக்கப் பொருட்களைத் தவிர்ப்பது நல்லது என்றும் செயற்கையான இரசாயனங்களில் இருக்கும் சில பொருட்கள் வயிற்றில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்பிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நெயில் பொலிஷ் போன்ற இரசாயன கலவையை பயன்படுத்தினால் நாம் சாப்பிடும்போது அதிலுள்ள இரசாயனக் கலவை வயிற்றில் செல்ல வாய்ப்பு இருக்கிறது. அப்போது கர்ப்பமாக இருக்கும் பெண்களின் கருவிலுள்ள குழந்தைக்கு இது பாதிப்பு ஏற்படுத்த வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. எனவே, கர்ப்பக் காலத்தில் பெரும்பாலும் மேக்கப் போடுவதை தவிர்ப்பது நல்லது என்றே கூறப்படுகிறது



## குழந்தைகள் உயரமாக வளர இந்த உணவுகளைக் கொடுங்கள்...!



குழந்தைகளுக்கு ஒருசில உணவுகளைக் கொடுத்தால் அவர்கள் உயரமாக வளர்வார்கள் என்று கூறப்படுகிறது.

ஒன்று முதல் பருவம் அடையும் காலம் வரை குழந்தைகளுக்கு சத்தான உணவு கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பாக, டீன் ஏஜ் பருவத்தில் குழந்தைகளுக்கு நல்ல ஊட்டச்சத்து உள்ள உணவு கொடுக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

குழந்தைகளுக்கு பால் அதிகமாக கொடுக்க வேண்டும் என்றும் அதேபோல் பன்னீர், தயிர் ஆகியவற்றையும் கொடுக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

நன்றாக வளர்வதற்கு பீன்ஸ், முட்டைக்கோஸ் ஆகியவை கொடுத்து பழக வேண்டும் என்றும் கீரை வகைகள், பயறு வகைகள் ஆகியவை குழந்தைகளின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறது என்றும் கூறப்படுகிறது.

மேலும் முட்டையில் புரதச்சத்து இருப்பதால் அது குழந்தைகளை உயரமாக வளர வைக்கும் என்றும் கேரட் போன்ற காய்கறிகளையும் கொடுக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

# நவீன வாழ்க்கை முறையில் யோகாவின் பயன்கள்



நவீன வாழ்க்கை முறை உடல் நலத்துக்கு பெருந்த சவால்களைக் கொண்டுவந்துள்ளது. உலகெங்கும் வாழக்கூடிய மக்களின் பலவித நோய்களுக்கு காரணமாக இருக்கிறது. மன அழுத்தம், முறையற்ற உணவுப் பழக்கங்கள், சுறுசுறுப்பில்லாத வாழ்க்கை போன்றவை உடல் நலத்திலும், செயல்பாட்டிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தி நீரிழிவு, ஆஸ்த்மா, இதய நோய்கள், வளர்சிதை மாற்றக்குறைபாடுகள், புற்றுநோய் போன்றவை உருவாகக் காரணமாகின்றன. இத்தகைய நவீன கால உடல்நலக் குறைபாடுகளில் பெரும்பாலானவை தவறான வாழ்க்கை முறைகளால் ஏற்படுபவை. இத்தகைய குறைபாடுகளை எதிர்த்துப் போரிடுவதற்கு யோகா பயன்படுகிறது. அறிவியலும், ஆன்மீகமும் எப்போதுமே தனித்தனியாக பார்க்கப்பட வேண்டியவை அல்ல என்று யோகா காட்டுகிறது. வாழ்க்கை முறையால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளையும் உடலும் மனமும் சார்ந்து வரக்கூடிய நோய்களையும் தீர்ப்பதற்கு திறனுடையதாக யோகா இருக்கிறது.

நோய்களைத் தவிர்ப்பதிலும், மன அழுத்தம், உடல் மனம் சார்ந்த நோய்கள் ஆகியவற்றை சமாளிப்பதிலும், உடல்நலத்தை மேம்படுத்துவதிலும் யோகா பயன்படுகிறதா என்பது பற்றி உலகம் முழுவதிலும் ஏராளமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உடற்செயலில் உயிர் வேதியியல், உளவியல் ஆகியவற்றில் மாறுபட்டு தென்படக்கூடிய மதிப்புகளை ஆய்வுகள் மூலம் கண்டறிந்தும் அளந்தறிந்தும் உடல்நலத்தில் யோகா ஏற்படுத்தும் விளைவுகள் கணக்கிடப்பட்டன. யோகா பயிற்சி பெறுபவர்களின் இச்சை செயல் நரம்பு மண்டலம், நாளமில்லா சுரப்பி மண்டலம் ஆகியவற்றில் உடலணுக்களின் அளவில் யோகா நுணுக்கமாக செயல்பட்டு செல்வாக்கு செலுத்துவதாக அறியப்பட்டுள்ளது. இச்சை செயல் சமநிலைக்கும், அனிச்சை செயல் மண்டலத்தை வலுப்படுத்தி பல்வேறு உடற்செயலியல் மண்டலங்களில் பழுதுகளை நீக்கி வயதாகும் தன்மையை தாமதப்படுத்துவதற்கும் யோகப் பயிற்சிகள் உதவுகின்றன.

உடலின் வளர்சிதை மாற்றத்தை சீர்படுத்தி, மன அழுத்தம் ஏற்படுத்தும் எதிர்வைத் தாக்குதலின் வேகத்தைக் குறைக்கும் வேலையையும் யோகா செய்கிறது. உடலியல், அறிவாற்றல் செயல்பாடுகளை மேம்படுத்தி, உடல் வெப்ப சீர்மையை ஒழுங்குபடுத்தி, உடலைத் தளர்ச்சியாக்கி, அழுத்தத்தைத் தாங்கிக்கொள்ளும் வலுவை யோகப் பயிற்சி தருகிறது. நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்து நோய்கள் வராமல் தடுக்கிறது. இரத்த அழுத்தம், இதய இரத்தக்குழாய் நோய், நீரிழிவு போன்றவற்றுக்கு காலாகாலமாக செய்யப்பட்டு வரும் மருத்துவ மேலாண்மைச் செயல்களுக்கு துணைபுரியக்கூடிய யோகா இருக்கிறது. நீரிழிவு, இரத்த அழுத்தம் உடைய நோயாளிகளுக்கு மருந்துகளின் தேவையை மட்டுப்படுத்துவதற்கு யோகா உதவுகிறது. இதய இரத்தக்குழாய் பிரச்சினைகளைத் தவிர்க்கவும், சமாளிக்கவும் உதவுகிறது.

யோகாவால் ஏற்படக்கூடிய பயன்களை மூன்று நிலைகளில் சிந்திக்கலாம். உடலளவில் நல்ல ஆரோக்கியத்தை இது தருகிறது. மனதளவில் சிந்தனையை ஒன்று குவிக்கிறது. மன அழுத்தத்தை நீக்கி செயல்திறனை அதிகரிக்கிறது. ஆன்ம நிலை சார்ந்து செயற்பட்டு மனித மதிப்பீடுகளை மேம்படுத்தி வாழ்க்கையில் அமைதியையும், ஆறுதலையும் கொண்டுவந்து சேர்க்கிறது.

யோகாவால் ஏற்படக்கூடிய பொதுவான உடல், உடற்செயலியல் பயன்கள் சில கீழே தரப்பட்டுள்ளன:

## யோகா

* இசைவு இணக்கம் ஆகியவற்றை அதிகரிக்கிறது.
* தசைகளின் நலத்தையும் வலிமையையும் பேணுகிறது.
* சுவாசத்தை சீராக்கி உயிர்வீரியத்தை மிகுவிக்கிறது.
* வளர்சிதை மாற்ற சமநிலையைப் பேணி வளர்க்கிறது.
* உடல் எடையைக் குறைக்கிறது.
* இதயம், இரத்த ஓட்டம் ஆகியவற்றை சீர்படுத்துகிறது.
* உடற்பயிற்சி வல்லமையைக் கூட்டுகிறது.
* நோய் எதிர்ப்புச் சக்தியை மிகுவிக்கிறது.
* இதய இரத்த நாளங்களின் திண்மையைப் பாதுகாக்கிறது.



## பொதுவான சில உடற்செயலியல், ஆன்மீக ஆதாயங்கள்

* உணர்ச்சிகளிலிருந்து விடுபட்ட ஓய்வை அளிக்கிறது.
* தற்போதைய தருணத்தைப் போற்றும் தன்மையை வழங்குகிறது.
* மனக் கட்டுப்பாட்டை அதிகமாக்கி சிந்தனை சிந்தையில் தெளிவை ஏற்படுத்துகிறது.
* கவனம் சிதறாமல் ஒருமுகப்படுத்துகிறது.
* சுய ஒழுங்கை அதிகரிக்கிறது.
* கற்பனையையும் படைப்பாற்றலையும் விரிவாக்குகிறது (குறிப்பாக குழந்தைகளிடம்)
* மனநிறைவை உண்டாக்கி மனநிலையை மேம்படுத்துகிறது. தன்னை அறியச் செய்கிறது. தன்னம்பிக்கையை ஊட்டுகிறது.
* மனவலிமையையும் செயலுறுதியையும் ஏற்படுத்துகிறது.
* பதற்றம், மனச்சோர்வு அறிகுறிகளைக் குறைக்கிறது.
* அன்றாட வாழ்வில் நேர்மறை சிந்தனைகள் வெளிப்படும் ஆற்றலை அளிக்கிறது.
* வாழ்க்கையின் நோக்கம், அர்த்தம் பற்றி புரிய வைக்கிறது.
* அகமனதோடு அதிகம் ஒத்துப்போகும் நிலையை உருவாக்குகிறது.
* மற்றவர்களோடும் உலகத்தோடும் தொடர்புகொண்டிருக்கத் தூண்டுகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07

# தமிழ் முரசு

තමිල් මුරසු

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மலர் : 3 இதழ் : 07 - 13.08.2023




## உலகமெங்கும் புகழ் பரப்பும் இலங்கையின் ஆளுமைமிக்க பெண் படைப்பாளி

கலாநிதி நிர்மலா ஜோனின் மாணவிகளும் தாயும் மகளுமான திருமதி வினோதா ககனானந்தா, செல்வி தனிஸ்கா ககனானந்தா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் கொழும்பில் இடம்பெற்றபோது...



## பங்களாதேஷ் டாக்கா திரைப்பட விழாவில் பாராட்டைப் பெற்ற பவனீதா லோகநாதனின் ‘46 Mondays’

## காற்றில் கலை படைத்துக் காற்றலையில் சங்கமமாகிய மூத்த வானொலியாளர்

தமிழ் முரசு
Thamil Murasu
நிகரென்று கொட்டு முரசே - இந்த நீனிலம் வாழ்பவ ரெல்லாம்

மின்னஞ்சல்: thamilanmurasu@gmail.com
தொலைபேசி: 0115 200 900/011 588 6187
விளம்பரம் : 0114 846 097

# பெண்களும் படைப்புலகும்

பெண்களின் வகிபாகம் மானுட வரலாற்றில் மகத்தானதும் தனித்துவமானதுமாகப் பார்க்கப்படுகிறது. தாய்மையின் வடிவில் இந்த உலகத்தில் உயிர்களைப் பிரசவிக்கும் உன்னதம் பெண்களுக்கு வாய்த்திருக்கிறது. அத்தோடு குடும்ப அலகின் அச்சாணியாகவும் திகழ்ந்து நாளாந்த வாழ்வின் ஓட்டத்துக்கும் உந்துதல் அளிப்பவர்கள் பெண்களே.

இவர்களது வாழ்வு தனியே தாய்மையோடும், குடும்பத்தோடும் மாத்திரம் தங்கிவிடாமல், அவர்களது அறிவும் ஆற்றலும் அங்கீகரிக்கப்படவேண்டியது. இன்றைய உலகில் கற்றலிலும், தொழிற்படையிலும் கூட கணிசமான பங்கைப் பெண்கள் வகிக்கின்றபோதும், இந்த ஆணாதிக்க உலகில் தீர்மானம் எடுக்கும் பொறுப்புகளில் இன்னும் பெண்கள் இடம்பிடிப்பதென்பது பெரும் சவாலாகவே உள்ளது.

கலை, இலக்கியப் படைப்புகளில் பெண்களுக்கு கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் கலை, இலக்கியப் படைப்புகளில் ஈடுபடும் பெண்களுக்கு வழங்கப்படுகின்றதா எனும் கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது.

பெண்களின் படைப்புகளுக்குத் தனித்துவம் உண்டு. உலகை அவர்கள் காணும் நோக்கு வேறானது. அவர்களது அனுபவங்கள் வேறானவை. எனவே, அதனை அவர்கள் வெளிப்படுத்தும்போது அதன் பிரதிபலிப்புகளும் வித்தியாசமானவையாக அமைகின்றன.

குறிப்பாக, ஆசிய கலாசார சூழலில் கலாசார கட்டமைப்புகள் பெண்களின் கருத்துச் சுதந்திர வெளிப்பாட்டுக்குப் பெரும் தடையாக உள்ளன எனலாம். அதிலும் குறிப்பாக, தென்னாசிய மட்டத்தில் இந்திய கலாசார தாக்கம் கொண்ட நாடுகளில் இந்தக் கலாசார பண்பாட்டுத் தாக்கம் பெண்கள் தமது கலை, இலக்கியப் படைப்புகளில் வெளிக்கொணர்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இறுக்கமான சமூகக் கட்டமைப்பும், சாதி, சமய, மதம்சார் கோட்பாடுகளும் பெண்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்துவதற்குப் பல்வேறு தடைகளை ஏற்படுத்துவதுடன், அதனையும் உடைத்துக்கொண்டு அவர்கள் வெளியே வரும்போது அவை அச்சுறுத்தலாகவும் அமைந்துவிடுகின்றன.

ஆனால், தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் ஔவையார் முதலாக ஆங்காங்கே பெண் படைப்பாளுமைகள் தம்மை நிரூபித்தும் உள்ளனர்.

சமகால தமிழ்ச் சினிமா, தொலைக்காட்சித் தொடர் நாடகங்களில் பெண்களை போகப்பொருளாக அல்லது ஆணாதிக்கக் கருத்து வெளிப்பாட்டின் கருவியாக கையாள்வதையே அதிகம் காணமுடிகின்றது.

இதனையும் தாண்டி கலை, இலக்கியச் சூழலில் பல பெண்கள் தமது படைப்பாற்றலை வெளிப்படுத்தி உச்சந்தொட்டு வருகின்றனர்.

தமிழ் கலை, இலக்கியப் படைப்பாளர்களை ஊக்குவிக்கும் இதழாக 'தமிழ் முரசு' எப்போதுமே பெண் படைப்பாளர்கள், கலைஞர்களுக்கும் சம வாய்ப்பளித்து வருகிறது.

இந்த வார 'தமிழ் முரசு' இதழும் இரண்டு பெண் ஆளுமைகள் குறித்த விரிவான பதிவுகளை சுமந்து வருகிறது. மூத்த இலக்கிய படைப்பாளியான ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், இளம் சினிமா படைப்பாளியான பவனீதா லோகநாதன் ஆகிய இருவருக்கும் 'தமிழ் முரசு' தனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு தொடர்ந்தும் பெண் படைப்பாளிகள், கலைஞர்களை ஊக்குவிக்க திடசங்கற்பம் கொள்கிறது.



# இர. சிவலிங்கம் 24ஆவது ஞாபகார்த்த நினைவுப் பேருரைகளும் அதனையொட்டிய நிகழ்வுகளும்




மலையக சமூகத்தின் கல்வி இலக்கிய, சமூக, கலாசார, அரசியற்றுறை போன்றவற்றை நெறிப்படுத்திய தலைமையாளர் இரா.சிவலிங்கம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. சமூக வாஞ்சையை தன் உணர்வோடு கொண்டு வாழ்ந்தமையினாலேயே அமரர் இர.சிவலிங்கம் மலையக சமூக மாற்றத்தின் புதிய பிரவாகமாகவும், எதிர்கால ஏற்றங்களுக்கு வித்திடக்கூடிய அறைகூவலாள ராகவும் மதிக்கப்படுகின்றார். ஓர் ஆசிரியரின் விளக்க ஞானம், ஒரு சட்ட நிபுணரின் தாக்கம், ஒரு விடுதலை மோகியின் ஆவேசம், ஒரு போராளியின் துணிச்சல், ஓர்அறிஞனின் தெளிவு, ஒரு தலைவனின் சாதுர்யம். இவை எல்லாமே இணைந்த கைவண்ணக் கலவையே சிவா என மு.நித்தியானந்தன் (2001) குறிப்பிடுவதும் இங்கு பொருத்தப்பாடுடையதாக அமைகின்றது.





நல்லாசிரியராக, அதிபராக, மேடைப் பேச்சாளராக, எழுத்தாளராக, இலக்கியப் படைப்பாளராக, ஆலோசகராக திகழ்ந்த இரா.சிவலிங்கம் 1999ஆம் ஆண்டு இவ்வுலகைவிட்டு நீங்கினாலும் அவரது சிந்தனைகள், செயல்கள் என்பவற்றைப் பின்பற்றி நடக்கக்கூடிய மாணவர்களை உருவாக்கிச் சென்றுள்ளமை ஆசிரியத்துவத்துக்கே உரிய உயர்ந்த கைங்கரியமாகும். அதன் காரணமாகவே அமரர் இரா.சிவலிங்கம் ஞாபகார்த்த குழுவை அவர்களது மாணவர்கள் சிலர் உருவாக்கி நடத்தி வருகின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

23 ஆண்டுகள் ஞாபகார்த்த நினைவுப் பேருரைகளை நடத்தி முடித்திருக்கின்ற அமரர் இரா.சிவலிங்கம் ஞாபகார்த்த குழுவினரின் ஏற்பாட்டில் 24ஆவது ஞாபகார்த்த நினைவுப் பேருரை, மலையகம் - 200 இளைஞர்களுக்கான கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு, நூல் வெளியீடு ஆகிய நிகழ்வுகள் 05ஆம் திகதி சனிக்கிழமை கொட்டகலை அரசினர் ஆசிரிய கலாசாலையின் சோ.சந்திரசேகரம் மண்டபத்தில் இடம்பெற்றன.

இரு அமர்வுகளாக இடம்பெற்ற இந்நிகழ்வுகளின் முதலாவது அமர்வில் 24ஆவது ஞாபகார்த்த நினைவுப் பேருரை ஞாபகார்த்தக் குழுவின் தலைவர் எம்.வாமதேவனின் தலைமையில் மலையக சமூக உருவாக்கத்தில் கோ.நடேசய்யரும் அவரது அறியப்படாத எழுத்துகளும் என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பெ.சரவணக்குமார் பேருரை நிகழ்த்தினார். உரையின் பின்னர் அவருக்கான கௌரவம் இடம்பெற்றது.

இரண்டாவது அமர்வில் மலையகம் - 200 இளைஞர்களுக்கான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு, நூல் வெளியீடு என்பன ஞாபகார்த்தக் குழுவின் உறுப்பினர் பேராசிரியர் தை.தனராஜ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் போட்டியில் வெற்றிபெற்ற கட்டுரையாளர்களின் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியிடப்பட்டது. இதன்போது நூல் தொடர்பான அறிமுக உரையை ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் ஆசிரியர் எஸ்.தவச்செல்வன் நிகழ்த்தினார். வெற்றிபெற்ற கட்டுரையாளர்களை பாராட்டி வாழ்த்துரைகள் இடம்பெற்றதுடன், பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிகளை கொட்டகலை அரசினர் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர் ஆ. கலையரசு தொகுத்து வழங்கினார்.

மலையகம் - 200 என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற கட்டுரைப்போட்டியில் வெற்றிபெற்ற போட்டியாளர்களின் கட்டுரைகள் நூல் வடிவில் வெளியிடப்படவுள்ளன. இப்போட்டியில் முதலாம் இடத்தை கிழக்குப் பல்கலைக்கழக புவியியல் சிறப்புக் கற்கைப் பிரிவு மாணவி செல்வி வை. பேபிசாலினி பெற்றுள்ளார். இரண்டாம் இடத்தை யாழ். பல்கலைக்கழக உளவியல் சிறப்புக் கற்கைப் பிரிவு மாணவி செல்வி ஆர். பவித்ரா பெற்றுள்ளார். மூன்றாம் இடத்தை கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் சிறப்புக் கற்கைப் பிரிவு மாணவி செல்வி பி. சிறிதேவி பெற்றுள்ளார். ஆறுதல் பரிசுகளை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் கற்கைப் பிரிவு மாணவி செல்வி என்.சாந்தினி, கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பிரிவு முதலாம் ஆண்டு மாணவன் எஸ்.டேனியல் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக முகாமைத்துவ சிறப்புக் கற்கைப் பிரிவு மாணவி செல்வி.எஸ்.கிருபாசினி ஆகியோர் பெற்றுள்ளனர்.

அமரர் இரா. சிவலிங்கம் மறைந்து ஓராண்டின் பின்னர் அவரின்பால் பற்றுகொண்ட மாணவர்கள் சிலரால் தோற்றுவிக்கப்பட்டதே அமரர் இரா. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழுவாகும். இக்குழுவின் பணியானது மலையக சமூகத்தின் மேம்பாட்டை நோக்கமாகக்கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. ஞாபகார்த்த நினைவுப் பேருரைகள், நூல் வெளியீடுகள், ஆய்வு பயிற்சிப் பட்டறைகள், கட்டுரைப் போட்டிகளை நடத்துதல், சாதனையாளர்களை கௌரவித்தல் என பரந்து விரிந்த இவர்களது பணியினூடாக சமூக மட்டத்தில் அமரர். இரா.சிவலிங்கத்தின் பணிகள் நினைவுகூரப்படுவதோடு அத்தகைய சமூகப் பற்றாளர்களை உருவாக்குகின்ற கடப்பாடும் ஆற்றப்படுகின்றது. குறிப்பாக, இலங்கையில் அமரரான கல்விமான் ஒருவருக்கு தொடர்ச்சியாக நினைவுப் பேருரைகளை 24 வருடங்கள் நடத்தி வருகின்ற பெருமை இந்த ஞாபகார்த்த குழுவுக்கு மட்டுமே உரித்துடையது என்பது கவனத்திற்கொள்ளத்தக்கது.

ஒவ்வொரு வருடமும் நினைவுப் பேருரைகள் நிகழ்த்தப்படுவதோடு அவை நூல் வடிவிலும் வெளியிடப்பட்டு வருகின்றன. ஞாபகார்த்த நிகழ்வுகள் ஹட்டன், கொழும்பு, பதுளை, மஸ்கெலியா, கண்டி, இராகலை, கொட்டகலை, மாத்தளை ஆகிய இடங்களில் இதுவரை இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு: ஜீவா சதாசிவம்

# இடர்கால இலக்கியங்கள்

## நினைவு நல்லது – ஓர் அனுபவப் பகிர்வு

அண்மையில் பல நூல்கள் அனுபவப் பகிர்வுகளாக வெளிவந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. அந்த வரிசையில் பிரபல ஊடகவியலாளர் பீ.விக்கினேஸ்வரனின் 'நினைவு நல்லது' என்ற நூலும் வெளிவந்திருக்கிறது. இந்த நூல் இம்மாத இறுதியில் யாழ். பல்கலைக்கழகத்தில் வெளியீடு காணவுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. அந்தவகையில் அந்நூலாசிரியர் பீ.விக்கினேஸ்வரன் பற்றிய ஒரு சிறு அறிமுகம்.

அவர் 1970களில் இலங்கை ஊடகப் பரப்பில் தன்னை இணைத்துக்கொண்டவர். அப்போது பிரபல ஒலி ஊடகமாக இருந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்து ஒலிபரப்புத் துறையில் பல சாதனைகளைச் செய்தவர். பின்னர் ஒளி ஊடகமான 'ரூபவாஹினி'இல் இணைந்துகொண்டார். அந்தக் காலகட்டத்தில் தமிழ் மக்கள் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து கொண்டதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

இலங்கையில் மட்டுமல்லாது தென்னாசியாவிலே யும் மிகச் சிறந்த வானொலியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் விளங்கியது. அதன் தமிழ் மொழிப் பயன்பாட்டைப் பலரும் மெச்சினர். அதிலே பணியாற்றிய அத்தனைபேரும் மிகவும் அக்கறையுள்ளவர்களாக இருந்து, ஒலிபரப்பப்பட்ட அத்தனை நிகழ்சிகளும் சிறப்புற அமைவதற்கு அயராது உழைத்தவர்கள்.

நல்ல தமிழை வளர்த்தொரு ஊடகமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ் சேவை காணப்பட்டது. அந்தவகையில் ஒரு தலைசிறந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களில் ஒருவராக அறியப்பட்டவர் பீ.விக்கினேஸ்வரன். நாடக வல்லுனர் க.பாலேந்திராவின் 'கண்ணாடி வார்ப்புகள்' என்ற மேடை நாடகத்தை ரூபவாஹினி தொலைக்காட்சியில் தொலைக்காட்சி நாடகமாகத் தயாரித்து ஒளிபரப்பாக்கிய பெருமை அவரைச் சார்ந்தது.

'நினைவு நல்லது' என்ற நூலில் பீ.விக்கினேஸ் வரன் எழுதியிருக்கும் முகவரையின் இடையே தனது எழுத்து பற்றி இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நூலை எழுதும்போது எனக்கு ஓர் உண்மை புரிந்தது. இப்படித் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு, ஏதேனும் ஒரு துறையில் அனுபவங்களைப் பெற்றிருக்க வேண்டிய அவசியம் இல்லை. எந்தவொரு மனிதனும் தனது வாழ்க்கை அனுபவத்தைத் திறந்த மனதோடு உண்மையாக எழுதினால், அந்த அனுபவப் பகிர்வு வாசிப்பதற்கு சுவாரஸ்யமானதாகவே இருக்கும். இங்கே முக்கியமானதாகக் கவனிக்கப்பட வேண்டியது உண்மைகளை எழுதுவதென்பது.

ஆழ்ந்து வாசிப்பவர்களுக்கு ஒருவர் எழுதுவது உண்மையானதா, இல்லையா என்பது புரிந்துவிடும். உண்ளுணர்வு என்பது விளக்க முடியாத சக்தி. இந்நூலை எழுதும்போது ஒரேயொரு விடயத்தைத்தான் மிகவும் கண்டிப்பாகக் கடைப்பிடித்தேன். வெளியுலக வாசகர்களுக்கு நான் எழுதுபவை உண்மையா, பொய்யா என்பது தெரியாது என்பதால் நான் விரும்பிய படி எதையும் எழுதலாமென்று ஒரு சிறிதும் நினைத்த தில்லை. வெளி வாசகர் களைவிட என்னுடன் ஊடகத்துறையில் சேர்ந்து பயணித்த வர்கள் ஓர் இடத்தில் கூட "விக்கி பொய் சொல்கிறார்" என்று நினைத்துவிடக் கூடாது. அப்படி நினைப்பது, நான் இவ்வளவு காலமும் எனது ஊடகத் தொழில்துறையில் சம்பாதித்த நற்பெயருக்கு இழுக்காக அமைந்துவிடும் என்பதில் மிகக் கவனமாக இருந்தேன். அதனால் ஆதாரத்துடன் கூற முடியாத பலவற்றைத் தவிர்த்திருக்கிறேன்.




நான் இந்த நூலில் எழுதியுள்ளவை ரொறன்ரோவில் மாதந்தோறும் வெளியாகும் 'தாய்வீடு' பத்திரிகையில் தொடராக வெளிவந்த போது தவறாது வாசித்த எனது சமகால ஊடக வியலாளரான வீ.என்.மதியழகன், ஒவ்வொரு கட்டுரையை வாசித்ததும் என்னை அழைத்து "இதுவரையில் வந்ததில் இதுதான் சிறந்தது" என்று பாராட்டுவது எனக்கு உற்சாகமாக இருந்தது. என்னுடன் பணியாற்றியவர் ஓரிடத்தில் கூட நான் கூறியவற்றில் உண்மை இல்லை என்று கூறாதது எனது நோக்கம் வெற்றியளித்ததை உணர்த்தியது. என்னுடன் ஒரே சமயத்தில் தொலைக்காட்சித் துறைக்குள் பிரவேசித்த எஸ்.விஸ்வநாதன், நான் அவ்வப்போது அனுப்பும் கட்டுரைகளை வாசித்துவிட்டு "மிகவும் சரியாக எழுதுகிறீர்கள். இதை வெகுவிரைவில் நூலுருவில் கொண்டுவாருங்கள்" என்று உற்சாகப்படுத்துவார். இந்த இரண்டு சமகாலத்தவர்களும் தந்த உற்சாகம், நான் பிழையின்றி எழுதுகிறேன் என்று உறுதிப்படுத்தியது. சிலர் நான் தவறவிட்ட தகவல்களைச் சுட்டிக்காட்டியபோது அவற்றைச் சேர்த்திருக்கிறேன்.

ஊடகத்துறையைச் சாராத ஒரு பொது வாசகரான கந்தவேல் என்பவர், ஒவ்வாரு தாய்வீடு பத்திரிகை வெளியாகியதும் தொலைபேசியில் என்னை அழைத்து மிகவும் பாராட்டுவார். அவர் காட்டிய ஆர்வமும் உற்சாகமும் ஊடகத்துறை சாராதவர்களும் இந்த நூலை வாசிப்பார்கள் என்ற நம்பிக்கையை எனக்குத் தந்தது.

இந்த அனுபவத் தொடரை நான் 'தாய்வீடு' பத்திரிகையில் எழுதத் தொடங்கிய காலத்தில் நண்பர் பி.எச்.அப்துல் ஹமீட் அதைப் பாராட்டி, தாய்வீடு பத்திரிகைக்குக் கடிதம் எழுதியிருந்தார். அது நான் தொடர்ந்து எழுதுவதற்கான உந்துதலைத் தந்தது. – பீ.விக்கினேஸ்வரனின் எழுத்து முற்றுப் பெறுகிறது.

மொத்தம் 932 பக்கங்களில் வடிவமைக்கப்பட்ட இந்நூலுக்கூடாக இலங்கை ஒலி, ஒளித்துறை வரலாற்றை வாசிக்கக் கூடியதாக இருக்கிறது. ஒலி, ஒளிபரப்புத்துறைக்குள்ளே உள்ளவர்களை மட்டுமல்ல, அதற்கு வெளியேயும் துறைசார்ந்து பயணித்தவர்களைப் பற்றி அறிய முடிகிறது. நூலாசிரியர் பீ.விக்கினேஸ்வரனின் அனுபவங்களோடு பயணித்தவர்கள், அத்தகைய அனுபவங்களுக்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள், சமகால நிகழ்வுகள், அவை சார்ந்து அவர் அனுபவித்த சிரமங்கள் எனத் தொடரும் எழுத்துகளுக்கூடாக நாம் பெறும் அறிவுகள், அனுபவங்கள், சிந்தனைகள் ஏராளம்.

"நினைவு நல்லது" நல்ல நினைவுகளை இரைமீட்ட உதவுகிற அதேவேளை, எமது சிறு வயது காலத்தையும் ஒருமுறை திரும்பிப்பார்க்க உதவுகிறது. அக்காலத்து வானொலி பற்றிய விடயங்கள், இன்றும் மறக்க முடியாதவைகளாக மனதில் நீட்சி பெறுகின்றன.

**கணபதி சர்வானந்தா**

## 'திறக்கப்பட்ட பூட்டுக்கள்' நூல் வெளியீடு

*(எம்.எஸ்.அமீர் ஹுஸைன்)*

மாவனல்லை ஆயிஷா உயர் கல்வி கல்லூரி மாணவி நபீஸா நவ்ஷாட் எழுதியுள்ள அல்-குர்ஆனின் அற்புதங்கள் பற்றி விளக்கும் 'திறக்கப்பட்ட பூட்டுக்கள்' என்ற நூல் வெளியீடு அண்மையில் மாவனல்லை ஆயிஷா சித்தீகா கலாபீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இந்த நூலின் முதல் பிரதியை மாவனல்லை பிரபல தொழில் அதிபர் அல்ஹாஜ் எம்.எம். வதூத் பெற்றுக்கொண்டதோடு, சிறப்புப் பிரதிகளை ஜீவா நிறுவன உரிமையாளர் யசீர் அரபாதுரூபவ், அரோமா நிறுவன உரிமையாளர் நஜீம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

நூல் பற்றிய அறிமுகத்தை ஆயிஷா உயர் கல்வி கல்லூரி விரிவுரையாளர் அஷ்ஷெய்க் ஸியாஸ் நிகழ்த்தினார்கள்.



'திறக்கப்பட்ட பூட்டுக்கள்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள இந்த நூல் 206 பக்கங்களைக் கொண்டதாக அல்-குர்ஆனில் இடம்பெற்றுள்ள விஞ்ஞானம் ரூபவ், வரலாற்றியல் ரூபவ், அணுவியல் ரூபவ், கருவியல் ரூபவ், வானியல் ரூபவ், புவியியல் ரூபவ், விலங்கியல் ரூபவ், கணிதவியல் ரூபவ் அல்-குர்ஆனின் மொழி அற்புதங்கள் என்ற 09 தலைப்புகளின் கீழ் அல்-குர்ஆன் எடுத்துக் கூறும் அற்புதமான அறிவியல் பற்றி விளக்குவதாக அமைந் திருக்கின்றது.



# காற்றில் கலை படைத்துக் காற்றலையில் சங்கமமாகிய மூத்த வானொலியாளர்



**கானா பிரபா - அவுஸ்திரேலியா**

ஈழத்தின் மூத்த வானொலிப் படைப்பாளி விமல் சொக்கநாதன் ஓகஸ்ட் முதலாம் திகதி அகால மரணத்தைத் தழுவிக்கொண்டதை அதிர்ச்சியோடு ஒட்டுமொத்தத் தமிழ் உலகமே எதிர்கொண்டது.

ஈழத்தின் யாழ்ப்பாணத்தில் பிறந்த விமல் சொக்கநாதன் இலங்கை வானொலியின் சிறுவர் மலர் நிகழ்ச்சி வழியாக 1959ஆம் ஆண்டு வானொலிக் கலையகத்தில் நுழைந்தவர் என்ற தகவலைப் பகிர்ந்துகொண்டவர் அவரின் வானொலிச் சகபாடி பி.எச்.அப்துல் ஹமீத்.

இலங்கையில் சட்டம் பயிலும் மாணவராக வானொலியின் தேசிய சேவையில் பகுதிநேரக் கலைஞராக இணைந்த விமல், சட்டக்கல்வியை முடித்த பின்னரும் 1971இல் இலங்கை வானொலியின் வர்த்தக சேவையில் முழுநேரத் தயாரிப்பாளராக இணைந்துகொண்டார்.

1971ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டு வரையான குறுகிய காலப் பகுதியிலேயே சங்க நாதம், வாலிப வட்டம், இசையும் கதையும் போன்ற



நிகழ்ச்சிகளின் வழியாக தமிழ் நெஞ்சங்களின் பேரபிமானம் பெற்ற அறிவிப்பாளராக விளங்கினார்.

பின்னாளில் புகழ்பூத்த பெரும் படைப்பாளிகளின் கதைகளை இசையும் கதையுமாக அரங்கேற்றிப் பெரும் புகழைச் சம்பாதித்தவர்.

வி.ஏ.அப்துல் கபூர், கே.எஸ்.நடராஜா (ஞானக்கவிஞர் நாவற்குழியூர் நடராசன்) போன்ற மூத்த வானொலி ஆளுமைகளைத் தன் குருவாக நேசித்தவர். அவுஸ்திரேலியாவில் நம்மிடையே வாழ்ந்த இலங்கை வானொலி ஆளுமை திருமதி பொன்மணி குலசிங்கம் (இலங்கை வானொலித் தமிழ்ப் பகுதி முன்னாள் இயக்குநர்) மிகுந்த பயபக்தியோடு எதிர்கொள்வார்.

இலண்டன் பிபிசி தமிழ்க் குடும்பத்தில் தன்னை இணைத்து, உலகத் தமிழ் ஒலிபரப்பில் புடமெடுத்துப் பிரகாசிக்க வைத்த "தமிழ் மாகடல் சங்கரண்ணா" என்ற தமிழோசை சங்கர் என்ற சங்கரமூர்த்தியைத் தன் வாழும் காலந்தோறும் நேசித்தவர் என்பதற்கு அவரது ஒவ்வொரு பேட்டிகளும் சான்று.

இசையும் கதையும் நிகழ்ச்சியில் அவர் குறித்த கதை சொல்லியாகவும், பாத்திரமாகவும் மாறி மாறிப் பயணிக்கும் உத்தியை வெகு சிறப்பாக வேறுபடுத்திக் காட்ட வல்லவர்.

இவரும், அப்துல் ஹமீதுமாக இசையும் கதையும் நிகழ்ச்சிக்காக பாடல்கள், சிறப்புச் சப்தங்கள் கொண்ட ஒலிப் பேழைகளோடு மிகவும் சிரத்தையாகச் செய்து முடித்த களைப்பில் வானொலிக் கலையகத்தை விட்டு வெளியேறும் போது, "என்ன இசையும் கதையும் ஒலிப்பதிவா?" என்று கேட்பார்களாம்.

அவ்வளவுக்கு முகம் அழுது வடிந்த நிலையில் குறித்த படைப்பின் சோகப் பாத்திரமாக மாறி விடுவார்களாம்.

இலங்கை வானொலி நேர்முகப் பரீட்சையில் தனக்குக் கிடைத்த நிரந்தர அறிவிப்பாளர் பதவியை புவனலோஜினி (வேலுப்பிள்ளை) நடராஜசிவம் என்ற புதியவருக்குக் கொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்திவிட்டு, ஒலிபரப்பு ஒழுங்கு உதவியாளராக விமல் பொறுப்பேற்றுக் கொண்டது அவரின் பெருந்தன்மைகளில் ஒன்று என்று இவர் வாழும் காலத்திலேயே தன்னருகில் வைத்துக் கொண்டு அப்துல் ஹமீத் நெகிழ்ந்திருக்கிறார்.




விமல் சொக்கநாதனின் 'வாலிப வட்டம்' நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இளைஞர்கள் பின்னாளில் இலங்கைப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாகவும் விளங்கிய தலைமைத்துவப் பண்பைக் கொண்டதுவும், அவர்களோடு இன்னும் அந்த நிகழ்ச்சியைக் கேட்டு மகிழ்ந்த நேயர்கள் இன்று தாத்தா நிலையிலும் விமலின் ரசிகர் என்று பெருமையோடு சொல்லிக் கொள்வதாகவும் அப்துல் ஹமீதோடு, விமல் சொக்கநாதன் கலந்துகொண்ட ஐபிசி நேர்காணலில் சொல்லி மகிழ்ந்தார்.

''அறிவிப்பாளரோடு அரை மணி நேரம்" என்ற புதுமையான இலங்கை வானொலி நிகழ்ச்சி வழி, சக அறிவிப்பாளர்களையும் அவர்களை நேசிக்கும் நேயர்களையும் கலந்துறவாட வைத்து மகிழ வைத்ததும் விமல் சொக்கநாதனின் இன்னொரு



பரிமாணம்.

1976ஆம் ஆண்டு லண்டனில் குடியேறிய விமல் சொக்கநாதன், அங்கு தனது சட்டத்தரணியான துணைவியார் சகிதம் ஒரு சட்ட நிறுவனத்தை நடத்தி வந்திருந்தார்.

விமல் சொக்கநாதனின் வானொலி வேட்கைக்குத் தீனி போட்டது லண்டன் பிபிசி.

லண்டன் பிபிசியின் தமிழோசையில் பகுதி நேரமாக நிகழ்ச்சி வழங்குனராகவும் பணியாற்றி வந்தார். இலங்கை வானொலியில் பல்சுவை நிகழ்ச்சிகளை வழங்கிவந்த விமல் சொக்கநாதனுக்கு பிபிசியில் செய்தி ஒலிபரப்புப் பணி. அவர் ஆரம்பத்தில் பணிபுரிந்த சட்ட நிறுவனத்தின் இயக்குநர், தன்னிடம் சட்ட உதவிகளைத் தேடி வரும் தமிழர்களுக்கு "இவர் பிபிசியில் வேலை செய்கிறார்" என்று பெருமையாக விமல் சொக்கநாதனை அறிமுகப்படுத்துவாராம்.

சிறந்த அறிவிப் பாளராகவும் மொழி பெயர்ப்பாளராகவும் தனது சக ஒலிபரப்பாளர்களால் அங்கு அவர் பாராட்டப்பட்டார்.

இலங்கை வானொலியில் குறுகிய காலத்தில் பெரும் நேயர் வட்டத்தை உருவாக்கியவர். பின்னர் பிபிசி தமிழோசை கேட்கும் உலகத் தமிழ் நெஞ்சங்களின் இதயத்தில் மட்டுமல்ல. ஈழத்தில் போர் முற்றிய நெருக்கடியான சூழலில் அவரது குரலை மின்சாரமில்லா இரவுகளில் ஈழத்தாயகத்தில் உள்ளோர் மறுபக்கச் செய்திகளைக் கேட்பதற்காகத் தவம் கிடந்ததெல்லாம் வரலாறு.

பிரான்ஸை மையப்படுத்திய TRT வானொலி மற்றும் தொலைக்காட்சி, TTN தொலைக்காட்சி, GTV தொலைக்காட்சி, IBC தமிழ் வானொலி மற்றும் தொலைக் காட்சி ஆகிய ஊடகங்களும் அவரது வானொலி அறிவுச் சொத்தை உள் வாங்கிப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

'மனதைத் திறவுங்கள்' நிகழ்ச்சி வழியாகவும், ஐபிசி சிற்றலை ஒலிபரப்பின் வழியே ஈழத்துக்கு உறவுப்பாலம் அமைத்த 'களம் பல காண்போம்' நிகழ்ச்சி வழியாகவும் ஈழத்து மண்ணில் தன் வேரைப் பரப்பினார். அதன் விளைவாக வன்னிக்கு விருந்தினராய் அழைக்கப்பட்டு, ஒரு வாரம் சிறப்பு வானொலி வழிகாட்டல் பயிற்சிநெறியை வன்னியில் உள்ள ஊடகருக்கு வழங்கவும் பயணப்பட்டு அப்பணியைச் செம்மைப்படுத்தினார்.

**(தொடர்ச்சி 05ஆம் பக்கம்...)**

# அஸ்மியா அஷ்ரப் எழுதிய 'நேந்தம்பியும் நிலாப்பெண்ணும்'



சாய்ந்தமருதில் பெண் எழுத்தாளரின் முதல் நாவலான 'நேந்தம்பியும் நிலாப் பெண்ணும்' என்ற நாவல் திருமதி அஸ்மியா அஷ்ரபினால் (06) ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் வெளியிடப்பட்டது.

கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஷ்ரப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக சட்டம், ஒழுங்கு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் ஏ.எல்.எம்.சலீம் கலந்துகொண்டார்.

சாய்ந்தமருது ஜும்ஆப் பெரியபள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம் சிறப்பு அதிதியாகவும், முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி ஏ. பீர் முஹம்மட், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். நிம்சான் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டதோடு, நூல் நயவுரையை ஏ. பீர் முஹம்மட் வழங்கினார்.

மருதம் கலைக்கூடல் மன்றத்தின் செயலாளர் கலைஞர் அஸ்வான் மௌலானா பாடலொன்றைப் பாடியதோடு, மருதம் கலைக்கூடல் மன்றத்தின் உபதலைவரும் பல்துறைக் கலைஞருமான என்.எம்.அலிக்கான் கவிதை மற்றும் பாடல் பாடியும் சபையோரைப் பரவசப்படுத்தினர்.



இதன்போது நூலாசிரியர் திருமதி அஸ்மியா அஷ்ரப் தனது அன்புக் கணவர் அஷ்ரபிடம் முதற் பிரதியைக் கையளித்த தோடு, கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், குடும்பத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

நிகழ்வை அறிவிப்பாளர் எம்.பி. எம்.றின்சான் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

**எம்.எஸ்.எம்.ஸாகிர்**





## என். நஜ்முல் ஹுசைனின் 'வேறாகா வேர்கள்' நூல் வெளியீடு



என். நஜ்முல் ஹுசைன் எழுதிய "வேறாகா வேர்கள்" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா கடந்த ஞாயிறன்று கொழும்பு, அல்-ஹிதாயா பஹார்தீன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஸ்ரீலங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்ற ஏற்பாட்டில் நடந்த நிகழ்வுக்கு மன்றத் தலைவர் தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமை வகித்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு நூல் நயவுரையும் ஆற்றினார். இலக்கியப் புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் முன்னிலை வகிக்க சமூக சேவையாளர் டாக்டர் அல்ஹாஜ் எம்.சீ.பஹார்தீன் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்

## காற்றில் கலை படைத்துக்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

லண்டனில் வாழும் மூத்த பத்திரிகையாளர் ஈ.கே.ராஜகோபாலின் புதினம் பத்திரிகையிலும் பின்னாளில் தன் இறப்பு நேரும் வரை 'விமலின் பக்கம்' என்ற தொடரின் வழியாக சமூக நடப்புகளைத் தன் பாணியில் கொடுத்து வந்தார்.

2007ஆம் ஆண்டில் அவர் வெளியிட்ட 'வானொலிக் கலை' என்பது ஒவ்வொரு ஒலிபரப்பாளன் வீட்டிலும் இருக்கவேண்டிய ஆகச் சிறந்த கையேடு. ஒவ்வொரு அத்தியாயத்திலும் பொருள் நிறைந்த வழிகாட்டியாகக் கொண்டு போவார். அந்த நூல் வெளியீட்டு விழாவை சென்னையிலிருந்து கனடா, சிட்னி காண எடுத்திருந்தார்.

விமலின் பக்கங்கள் என்ற நூலைத் தொடர்ந்து 'இலண்டனில் இருந்து விமல்' என்ற நூல் எங்கள் விமல் சொக்கநாதனின் நிறைவான பங்களிப்பாக அமைந்து தன் தாயகத்திலும் விழாக் கண்டு விடைபெற்றுக்கொண்டார்.

ஒரு பழுத்த கல்விமானாக இருந்தாலும் ஒலிபரப்புத்துறை மீது கொண்ட காதலால் தன்னுடைய வாழ்நாளின் அடிநாதமாக அந்த



வேட்கையை ஊடகத்துறை மீது நாட்டம் கொண்ட ஒவ்வொருவரும் செய்யவேண்டும் என்று அவா கொண்டவர் என்பதை அவரின் பேட்டிகளின் வழியாக உணரலாம்.

தான் கல்வியில் பெரிய உயரத்தைத் தொட்டாலும் வானொலிப் பணியே மகத்தான ஆத்ம திருப்தி தந்த பணியாக அவர் மனது திடம் கொண்டதால்தான் 50 ஆண்டுகளைக் கடந்து வானொலி வாழ்வோடு அவரை இருக்க வைத்தது.

"முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஒலிபரப்புத் துறையில் பணியாற்றிய அனுபவம் எனக்கிருந்தாலும், விமல் சொக்கநாதனைக் கண்ட நாள் முதலாக அவருடைய மாணவனைப் போலச் செய்திகளைப் படித்துப் பழகினேன்" என்கிறார் பிபிசி புகழ் எஸ்.சம்பத்குமார் என்ற மூத்த ஊடகர்.

"அவரவர் வாழ்க்கையில்
ஆயிரம் ஆயிரம் அர்த்தங்கள்"

பாடல் தன்னை ஈர்த்ததொன்றாகத் தன் வாழ்வியல் பயணத்தை ஒப்பிட்டுப் பார்க்க வைத்ததாக இலங்கை வானொலி 'தென்றல்' அதிதியாகப் போன போது விமல் சொக்கநாதன் குறிப்பிட்டிருந்தார்.

அதே பாடலில் வந்து போகும்
"நிலவுகள் சேர்ந்து பூமியில்
வாழ்ந்ததே அது ஒரு பொற்காலம்"

என்று வாழ்ந்து மறைந்த நம் வானொலிக் குயில்களை நினைத்து மனம் பாடுகிறது.

காற்றில் கலை படைத்துக் காற்றலையில் சங்கமமாகிய எங்கள் விமல் அண்ணா என்ற விமல் சொக்கநாதன் உலகத் தமிழ் ஊடகப் பரப்பில் அழியாச் சொத்தாக விளங்கி நிற்பார்.



# உலகமெங்கும் புகழ் பரப்பும் இலங்கையின் ஆளுமைமிக்க பெண் படைப்பாளி

**ஆளுமைகளின் அடையாளம்**

பாவேந்தல் பாலமுனை பாறூக்

இலங்கையின் கலை இலக்கியப் பெறுமானத்தையும், பெருமையையும் உலகறியச் செய்யும் உன்னத படைப்பாளி, இலங்கை, இந்தியா, கனடா, பிரான்ஸ், நோர்வே, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, நெதர்லாந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து வெளிவரும் காத்திரமான சஞ்சிகைகள், பத்திரிகைகளில் தனது படைப்புகளைத் தந்ததன் மூலம் சர்வதேசமெங்கும் பிரபலம் பெற்றிருக்கும் முக்கிய எழுத்தாளர்,

ஆறு தசாப்தங்களுக்கும் மேற்பட்ட படைப்பிலக்கிய அனுபவமும் ஆற்றலும் நிறைந்த மூத்த பெண் ஆளுமை, எழுத்தாளர், பத்திரிகையாளர், ஆய்வாளர், மனித உரிமைப் பிரசாரகர், சமூக சேவகர் சுதந்திரத் திரைப்படத் தயாரிப்பாளர் என்று பல்துறைகளிலும் இயங்குபவர், அகதிகள், குழந்தைகள், பெண்கள், மனித உரிமை, வரதட்சணைக் கொடுமை, சாதீய ஒடுக்கு முறை, இனத்துவ அடக்கு முறை என்பவற்றைக் கருப்பொருட்களாகக்கொண்ட பல படைப்புகளைத் தந்திருப்பவர், தமிழ்ச் சமூகத்தின் சமகால அரசியல், சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக அவதானித்து சமூகப் போராளியாகச் செயற்பட்டு அரசியல், சமூக மாற்றம் வேண்டி எழுதுபவராக இலக்கிய விமர்சகர்களால் எடுத்துக் காட்டப்படு பவர் - இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்.

அவர் வடக்கு இலண்டனில் வாழ்கின்ற இலங்கை மண்தந்த படைப்பாளி. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேசத்தில் கோளாவில் என்ற ஊரில் குழந்தைவேலு - மாரிமுத்து தம்பதியின் மகளாகப் பிறந்தவர். பெண்கள் கல்வி கற்பதையோ, வெளியே வருவதையோ விரும்பாத ஒரு சமூகக் கட்டமைப்பிலிருந்து எழுத்துலகுக்கு வந்தவர்.

பழைமை தழுவிய பண்பாடு கலாசாரங்களில் பின்னிப் பிணைந்து கிடந்த கிராம வாழ்க்கைப் பண்பாட்டை அடித்தளமாக் கொண்டிருந்த கிராமத்திலிருக்கும் அத்தனை முரண்பாடுகளும் அங்கிருந்தன. ஆண் அதிகார ஆளுமையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட சமூகக் கோட்பாடுகளும், பெண்களுக்கெதிரான பலதரப்பட்ட ஒடுக்குமுறைகளும் இளம் வயதிலேயே பல கேள்விகளை என் மனதில் உண்டாக்கிய




காரணிகளாகவிருந்தன.

ஒரு பெண் 'பெரிய பிள்ளையான' பின் (சாமர்த்தியப் படுவது) வெளியில் தனியே செல்ல அனுமதியில்லை. அதிலும் இருட்டில் போவது முற்றுமுழுதாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. படிப்பைத் தொடர முடியாது. சிறு பெண்பிள்ளைகள்கூட மரத்தில் ஏறி விளையாட முடியாது. எனது மூன்று தம்பிகளுடன் மரமேறியும் ஆறு குளங்களில் நீச்சலடித்தும் விளையாடி, பெத்தாவிடம் பல தடவைகள் அடி வாங்கியிருக்கிறேன்.

காலகோளாவில் என்ற அவரின் ஊர் பற்றிக் குறிப்பிடும் அவர், தந்தை எழுதி வைத்திருந்த நாட்டுக் கூத்துகளை பிரதி பண்ணியதால் ஏற்பட்ட உந்துதலாலும் தந்தை வாங்கி வைத்திருந்த கல்கி, கலைமகள், கற்கண்டு, குமுதம் போன்ற சஞ்சிகைகளை வாசித்ததில் ஏற்பட்ட ஆர்வத்தாலும் எழுத்துலகுக்கு வந்தவர்.

பாடசாலைக் காலத்தில் கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றி பரிசுபெற்ற அவரின் எழுத்துலகப் பிரவேசம் 1958 -1959 காலப்பகுதியில் இடம்பெற்றது.

"ஐம்பதாம் ஆண்டுகளின் கடைசிப் பகுதியில் மாதமொருதரம் 'சிறி லங்கா ' என்றொரு பத்திரிகை அரச தகவல் நடுவத்தால் பிரசுரிக்கப்பட்டது. 1958ஆம் அல்லது 1959ஆம் ஆண்டில் நான் எழுதிய 'எங்கள் ஊர்க்கோயில் வரலாறு' பற்றிய கட்டுரை வெளிவந்தது. அதை படித்த ஆசிரியர்களும் அப்பாவும் எனது எழுத்துத் திறமையைப் பாராட்டினார்கள். அதன்பின் யாழ்ப்பாணம் போக முதலான காலகட்டத்தில் ஏதோ ஒருசில சிறுகதைகள் வீரகேசரியில் பிரசுரமாயின.

யாழ்ப்பாணம் போனதும் எனது பல கதைகள் பல பத்திரிகைகளில் வெளிவந்தன. 'வசந்தம்' பத்திரிகை யில் 'சித்திரத்தில் பெண்ணெழுதி' என்ற கதை வந்ததுபோல், மல்லிகையிலும் எழுதினேன். அப்போது எழில்நந்தி என்ற புனைப் பெயரில் எழுதினேன். பெரும்பாலான கதைகள் சாதிக் கொடுமைகள், பெண்களுக்கான ஒடுக்கு முறைகளைத் தொடுபவை யாகும்" என்று தனது எழுத்துலக வரலாற்றின் ஆரம்பப் பகுதியைக் குறிப் பிடுகிறார் எழுத்தாளர் இராஜேஸ்வரி.

தாதியர் பாடசாலையில் கற்பதற்காக இளம் வயதில் யாழ்ப்பாணம் சென்ற அவர், பயிற்றப்பட்ட தாதியாக 1970இல் இலண்டனுக்கு கணவர் பாலசுப்ரமணி யத்தோடு புலம் பெயர்ந்தார். அங்கு தனது கல்வியை மேம்படுத்திக் கொண்டு, இலக்கியம் சமூக நடவடிக்கை களில் தொடர்ந்து இயங்குபவராகத் திகழ்கின்றார்.

மருத்துவ மானுடவியல் துறையில் முதுமாணிப் பட்டமும் (1996), திரைப்படத் துறையில் கலைமாணி (சிறப்பு) பட்டமும் (1988)பெற்றிருப்பவர் அவர். இலண்டனில் மருத்துவ மானுடவியலில் முதுமாணி பட்டம் பெற்ற முலாவது ஆசியப் பெண்மணி என்ற பெருமையும் அங்கு திரைப்படத் துறையில் பட்டம் பெற்ற முதலாவது ஆசியப் பெண்மணி என்ற பெருமையும் அவருக்கு உண்டு.

இலக்கிய உலகில் தனித்துவம் மிக்க படைப்பாளராக மிளிர்பவர் எழுத்தாளர் இராஜேஸ்வரி.

நாவல்கள் சிறுகதைத் தொகுப்புகள் உட்பட ஆய்வுகள், மானுடவியல், மருத்துவத் துறை என்பன சார்ந்து 18 நூல்களைத் தந் திருப்பவர். அவரின் அநேக நூல் களைத் தமிழகத்தின் வெளியீட்டு நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. பல நூல்கள் மீள் பிரசுரம் கண்டவை. சில நூல்கள் ஆங்கில - சிங்கள மொழிக்கு மாற்றம் பெற்றவை.

இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் வீடியோ படங்களின் மூலமாகவும் மக்கள் கவனத்தை ஈர்த்திருப்பவர். தமிழ் அகதிகளை அடிப்படையாக வைத்து அவர் படைத்தளித்த Escape from genocide (இனப்படு கொலையிலிருந்து தப்பிக்க) என்ற வீடியோவும், திருமணத்தில் கற்பழிப்பு தொடர்பான பிரச்சனை களைப் பற்றிய 16mm படமான The Private place உம் (தனிப்பட்ட இடம்) முக்கியத்துவம் பெற்றவை.

கலை, கலாசார செயற்பாடுகளோடு




சமூக நடவடிக் கைகளில் அதிக அக்கறை செலுத்தி யவர் இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்.

தமிழ் அகதிகள் வீட்டுவசதி சங்கத்தின் நிறுவுனராகவும் தலைவியு மாக இருந்து பணியாற்றியவர் (1985-1987), தமிழ் அகதிகள் நடவடிக்கை குழுவின் நிறுவுனர் (1985-1987) மற்றும் தலைவியாகச் சேவை புரிந்தவர்.

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

# ‘வாழ்வும் பணியும்’ நூல் வெளியீட்டு விழா









கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவையின் ஏற்பாட்டில் பேராசிரியர் மர்ஹூம் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ்வின் வாழ்வும் பணியும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவையின் தலைவரும், தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் இஸ்லாமிய கற்கை அரபுமொழி பீடத்தின் முன் னாள் பீடாதிபதியுமான பேராசிரியர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.ஜலால்தீன் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் உரையாற்று கையில், தமிழ், முஸ்லிம் நல்லுறவுக்காக செயற்பட்டவர் பேராசிரியர் மர்ஹூம் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ். ஆய்வுத்துறை தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அதனூடாக முஸ்லிம் சமூகத்தின் கல்வியை வளப்படுத்துவதில் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என தன்னாலான முழு முயற்சிகளையும் எடுத்திருந்தார். சிறந்த தலைமைத்துவப் பண்பும் ஆளுமை விருத்தியும் கொண்ட ஹஸ்புல்லாஹ் பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற காலத்தில் மாணவர்களிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடுநிலையாக நின்று செயற்பட்டவர்.

பேராசிரியர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.ஜலால்தீன் தலைமையுரையில், இந்நூற்றாண்டில் இலங்கை முஸ்லிம்களின் அரசியல், பொருளாதார மீள் கட்டமைப்புக்கான





மூலோபாயங்களை வகுப்பதிலும், குறிப்பாக முப்பது வருட உள்நாட்டுப் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டு இலங்கையின் நாலாபுறங்களிலும் இடம்பெயர்ந்து சிதறியிருந்த வடமாகாண முஸ்லிம்களின் மீள் எழுச்சிக்கும் அவர்களின் மீள் வாழ்வியல் கட்டமைப்புக்கும் தனது துறையுடனான அறிவியல், ஆத்மார்த்த பங்களிப்புகளை வழங்கியவர்களில் பேராசிரியர் ஹஸ்புல்லாஹ்வுக்கு இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் தனியிடமுண்டு.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீட பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் நூல் அறிமுக உரையாற்றுகையில்,

பேராசிரியர் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் இன்று நம்மிடையே இல்லை. ஆனால், அவர் ஆற்றியுள்ள கல்விச் சேவைகளும் சமூகத்தை மையப்படுத்திய அவரது ஆய்வுப் பணிகளும் எமது மனதைவிட்டு அகலாதவை. அவர் அடிப்படையில் ஒரு புவியியலாளர். சமூகத்துக்கான விடிவு பற்றிய சிந்தனைகளுடன் வாழ்ந்தவர். அதற்காக பல்வேறு பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்தவர். தடைகளுக்கு அஞ்சாத மனவுறுதி ஹஸ்புல்லாஹ்வுக்கு இருந்தது.

இந்தப் பிரசுரம் வெளிவருவதோடு மாத்திரமல்லாது இதிலுள்ள செய்திகள் சமூகத்தின் எல்லா மட்டங்களுக்கும் கொண்டுசெல்லப்பட வேண்டும். இவரது பணிகள் பேசுபொருளாக்கப்பட வேண்டும். இவற்றினூடாக எதிர்கால சந்ததியினருக்கு பல முக்கிய செய்திகள் கடத்தப்பட வேண்டும்.

**பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ்வின் சமூக மற்றும் உயர்கல்விப் பங்களிப்புகள்**

இந்த நூல் பேராசிரியரின் வாழ்வையும் பணியையும் அவரோடிருந்தவர்கள் வெளிப்படுத்துவதைப் பேசுகிறது. பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் ஓரிடத்தில் நிலையாக இருந்தவர் அல்ல. அவரைப் பற்றி சொல்கின்றவர்கள், அவர் ஓடித் திரிந்தவர் என்றுதான் சொல்கிறார்கள். அந்தளவுக்கு ஆய்வுலகில் அவர் சஞ்சரித்தார். அதுவும் குறிப்பாக வடபுலத்து முஸ்லிம்களுக்கு நிகழ்ந்த அந்தக் கொடூரத்துக்குப் பின்னர் அவரது ஓட்டம் மிக வேகமானது. அந்த மக்களின் துயரங்களை ஆற்றுவதில் அவர் மிகுந்த கரிசனை கொண்டிருந்தார்.

அவர்களின் ஆண்டாண்டு கால இருப்பை நிறுவுவதில் மிகப் பிரயத்தனங்களைச் செய்தார். அவர் இறுதிவரை இந்த பல்கலைக்கழக உலகில் நேர்மையாக இருந்ததற்கு சாட்சி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையில் அவர் நியமனம் பெற்றமையாகும். அந்தப் பயணத்திலேதான் அவரது இறுதிப் பயணம் நிச்சயப்படுத்தப்பட்டிருந்தது.

ஆகவேதான், இலங்கை முஸ்லிம்களின் கல்வியியலாளரான அவர் வடபுலத்து சமூகத்துக்காக வாழ்ந்து மறைந்தார் என்பது முற்றிலும் பொருந்தும் என நினைக்கிறேன்.

இந்நூலின் கட்டுரையாளர்களாக எம்.எஸ்.அஸீஸ், பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், பேராசிரியர் பி.ஏ. ஹுஸைன்மியா, பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ், பேராசிரியர் எம்.எஸ்.எம்.ஜலால்தீன், பேராசிரியர் எம்.பி.எம்.இஸ்மாயில், பேராசிரியர் எம்.எம்.பாஸில், கலாநிதி எம்.வை.எம். சித்தீக், சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.ஜே.எல்.வஸீல், முன்னாள் இராஜதந்திரி ஏ.எல்.அப்துல் அஸீஸ், எஸ்.எச்.எம்.நிஸ்னி, எம்.அஜிவதீன் (பாராளுமன்றம்), எஸ்.எல்.மன்சூர், ஏ.ஆர்.ஜெஸ்மில், எம்.றயிசுத்தீன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

தற்காலத்தில் முஸ்லிம்களின் உயர்கல்வி வளர்ச்சியில் மட்டுமல்லாது சமூகப் பணிகளிலும் காத்திரமாக தம்மை அர்ப்பணித்தவர் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் என்ற செய்தியை இந்நூல் எடுத்துரைக்கிறது. இவ்வாறு ஒரு தகைசார் ஆளுமையின் வாழ்வையும் பணியையும் கலந்துரையாடலுக்கு கொண்டுவர வழிவகுக்கும் ஆவணம் ஒன்றை வழங்கிய கட்டுரையாளர்களுக்கும் இந்தத் தொகுப்பு முயற்சியை மேற்கொண்ட கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவைக்கும் மிக்க நன்றி.

**கலாபூஷணம்**
**பி.எம்.எம்.ஏ.காதர்**

## உலகமெங்கும் புகழ்..
## (6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

2005இல் இலண்டனில் பெண்கள் சந்திப்பு ஏற்பாடு செய்தவர். இலண்டன் தமிழ் இலக்கிய மன்றத்தின் தலைவராக இலண்டனில் 2006இல் இலக்கியச் சந்திப்பு நடத்தியவர். சமூக சேவகர்களுக்காக கோளாவில் என்ற அவரின் ஊரில் ராஜேஸ்வரி மணி மண்டபம் அமைத்தவர்.தமிழ் பெண்கள் கழகத்தின் நிறுவுனரும் தலைவியும் என்ற பொறுப்பில் 1982 முதல் பணிபுரிபவர்.

இந்தியா, கோயம்புத்தூரில் பெண் கள் சிறுகதைப்போட்டி நடைபெறு வதற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதியுதவி புரிபவர். (200 கதாசிரியர் கள் இப்போட்டியின் மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்).

இலங்கை யாழ். தாதியர் பாடசாலையின் தாதியர் இதழின் ஆசிரியராக (1967) இருந்தவர். தமிழ் சமாதான அமைப்பின் உறுப்பினர் (2005 முதல்). இலங்கை டயஸ்போரா உறுப்பினர் (2006 முதல்).

கலை இலக்கியப் பணிக்காக அவர் பெற்ற விருதுகள் பல.

இலங்கை சுதந்திர எழுத்தாளர் விருது ‘தேம்ஸ் நதிக் கரையில்’ 1993.

இந்திய சுபமங்களா இதழ் விருது ‘யாத்ரா’ சிறுகதை 1994.

ஸ்ரீலங்கா சாகித்திய விருது ‘பனி பெய்யும் இரவுகள்’ 1994.

தேவசிகாமணி விருது, ‘இன்னும் சில அரங்கேற்றம்’ 1995.

இலங்கை சுதந்திர எழுத்தாளர் விருது "வசந்தம் வந்து போய்விட்டது" 1995.

வில்லி தேவசிகாமணி விருது "அரை குறை அடிமைகள்" 1999.

திருப்பூர் தமிழ்ச்சங்க விருது "நாளைய மனிதர்கள்" 2005.

யாழ். வெண்மேரி அறக்கட்டளையின், "கோகிலம் சுப்பையா ஞாபகார்த்த விருது - 2023" (பரிஸில் அண்மையில் இடம்பெற்ற விழாவில்) என்பன அவற்றில் முக்கியமானவை.

"இலக்கியப் பிரவேசமும் படைப்புகளும், மனிதநேயத்தை முன்னேடுப்பவை. பலதரப்பட்ட மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளை, போராட்டங்களை, இயலாமையை, ஏக்கங்களை, சந்தோஷங்களை யதார்த்தமாகக் காட்டுபவை. கற்பனை இலக்கியம் படைக்க என்னால் முடியாது. யதார்த்த இலக்கியம் படைக்க வேண்டும் என்ற எனது கொள்கையால் பல தடவைகள் பல தரப்பட்டவர்களால் பல விதமாக விமர்சிக்கப் பட்டிருக்கிறேன். நேர்மை எனது அடிப்படைத் தத்துவம். ஆதலால், பலதரப்பட்ட பின்னணியிலிருந்து வரும் விமர்சனங்களையும் முகம் கொடுக்கிறேன்" என்று தனது இலக்கியப் பிரவேசம், பயணம் என்பவை பற்றிச் சொல்பவர் மூத்த எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்.

சர்வதேச மெங்கும் புகழ்பரப்பும் இலங்கைப் படைப்பாளி இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் இன்னும் பல்லாண்டு காலம் தேகநலத்தோடு வாழவேண்டும், சமூக மேம்பாடு கருதிய அவரின் கலை இலக்கியப் பணி தொடரவேண்டும் என்பவையே நமது விருப்பமும் பிரார்த்தனையுமாக உள்ளது.

# பங்களாதேஷ் டாக்கா திரைப்பட விழாவில் பாராட்டைப் பெற்ற பவனீதா லோகநாதனின் '46 Mondays'



இலங்கையின் இளம் படைப்பாளிகள் வரிசையில் மிகவும் குறிப்பிடத்தக்கவரும் வித்தியாசமானவரும் என்றால் அவர் பவனீதா லோகநாதன்தான். இலங்கை சினிமாவின் புதிய தலைமுறை இயக்குனராகவும் தயாரிப்பாளராகவும் சர்வதேச அரங்கில் தொடர்ச்சியாகவும் காத்திரமாகவும் இயங்கிவருகிறார்.

பவனீதா லோகநாதன், தெஹிவளையை பிறப்பிடமாகக்கொண்டவர். மிகவும் வறுமையான சூழலில் பிறந்து வளர்ந்த இவருக்கு பத்து வயதிலிருந்து சர்வதேச சினிமாவில் சாதிக்க வேண்டும் என்ற கனவு இருந்திருக்கிறது. அதற்காக தொலைக்காட்சித் துறை, விளம்பரத் துறையில் கடுமையாக உழைத்தவர், திரைப்படத் துறையில் மெல்ல மெல்ல கால்பதித்தார். இவரின் முதல் குறும்படத்தில் இவர் வெளிப்படுத்திய திறமை, சிறப்பான திரைமொழி மற்றும் படைப்பாற்றல் காரணமாக இலண்டன், பேர்லினில் இயக்குனராக திரைப்படப் பயிற்சிகளை பெறும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. தற்போது தென்கொரிய நாட்டில் தங்கியிருந்து தயாரிப்பாளராக சர்வதேச பயிற்சிபெற்று வருகிறார். பெரும்பாலான திரைக்கலைஞர்கள் உள்ளூர் சினிமாவை இலக்காகக்கொண்டு வளர்ந்துவரும் நிலையில், மாபெரும் போட்டிமிக்க சர்வதேச சினிமாவில் சாதிக்க வேண்டும் என்ற இலக்கோடு போராடி வருகிறார். தற்போது ஒரே ஆண்டில் 5 சர்வதேச திரைப்படக் களங்களில் தடம்பதித்த இவரின் சமீபத்திய சாதனைகள், இவர்மீதான மிகப்பெரிய நம்பிக்கையை நம் மத்தியில் விதைத்துக் கொண்டிருக்கின்றன.

2023ஆம் ஆண்டுக்கான பவனீதா லோகநாதனின் சர்வதேச பயணம் பங்களாதேஷிலிருந்து ஆரம்பித்திருக்கிறது. பங்களாதேஷ் நாட்டில் 21 வருடங்களாக தொடர்ச்சி யாக நடந்துவரும் டாக்கா சர்வதேச திரைப்பட விழாவின் திரைக்கதை ஆய்வகத்துக்கு தெற்காசிய திரைக்கதைகள் போட்டியிட்டிருந்தன. அதில் 65இற்கும் மேற்பட்ட திரைக்கதைகளிலிருந்து இறுதிப் போட்டிக்குத் தெரிவான Final Top 10 படங்களில் பவனீதா லோகநாதனின் '46 Mondays' படமும் ஒன்றாகும். இந்தப் போட்டியில் கலந்துகொள்ளும் முதல் தமிழ் படம் என்ற அடையாளத்தோடு இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பவனீதா லோகநாதன் கலந்துகொண்டார்.

'46 Mondays'படத்தின் கதைக்கு இந்தியா, ஈரான், நோர்வே உட்பட பல நாடுகளைச் சேர்ந்தவர்களும் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர். இந்தப் படத்தின் கதையானது மனதை உருக்கும் கனமான கதையென்றும், நிச்சயம் சர்வதேச களங்களில் மிகப்பெரிய கவனத்தைப் பெறக்கூடிய இலங்கை சினிமாவாக இந்தப் படம் அமையும் என்றும் அங்கு கலந்துகொண்ட பல முக்கிய மான சர்வதேச திரைப்படக் கலைஞர்கள் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர்.

அதிலும் முக்கியமாக ஈரானின் மிகப் பிரபலமான இயக்குனர் Pouran Derakhshandeh, பவனீதாவின் திரைக்கதைக்கு Mentor ஆக கடமையாற்றியுள்ளார். ''மிகவும் அற்புதமான கதை இது; உன் சமுகத்துக்கு வழிகாட்டக்கூடிய படம் இது. அத்தோடு மலையக மக்களைப் பற்றி உலகம் அறிந்துகொள்ள இந்தப் படம் வாய்ப்பாக அமையும். இந்தப் படத்தின் வளர்ச்சியை நான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன். எப்போது வேண்டுமானாலும் என்னோடு நீ இந்தப் படம் தொடர்பாக பேசலாம்'' என்று வாழ்த்தியுள்ளார்.

'46 Mondays' - தெஹிவளை நகரில் வாழும் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் நடந்த உண்மை சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்ட கதையாகும். பவனீதாவின் படங்கள் ஒடுக்கப்படும் சமூகங்கள் மீதான தனித்துவமான சமூக, அரசியல் பார்வையைக்கொண்ட படங்களாகும். அதன் தொடர்ச்சியாக இந்தப் படமும் மிக முக்கியமான சமூக பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு உருவாகி வருகிறது. இவருடைய குறும்படங்கள், அனிமேஷன் படங்கள் அனைத்துமே சிறுபான்மைச் சமுகத்தைச் சேர்ந்த மனவுறுதிமிக்க பெண் கதாபாத்திரங்களை மையப்படுத்தி எடுக்கப்பட்ட படங்களாகும். இந்தப் படமும் ஒரு பெண்ணின் கதை என்று சொல்லும்போதே பல்வேறு எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. முக்கியமாக '46 Mondays' என்ற தலைப்பே பல கதைகளை உள்ளடக்கியதுபோல் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

தனது Big Eyes Cinemas நிறுவனம் சார்பாக இந்தப் படத்தை உருவாக்கிவரும் பவனீதா முதலீட்டாளர்களையும், இணை தயாரிப்பாளர்களையும் தேடி வருகிறார். இதுபற்றி அவர் கூறுகையில், ''திரைப்படம் என்பது ஒரு expensive art. நிறைய பணமும் கூட்டு உழைப்பும் கொண்ட கலைவடிவம். அதைச் செய்ய எனக்கு பலரின் ஒத்துழைப்புத் தேவை, என்னை நம்பி வருபவர்களையும் பார்வையாளர்களையும் எப்போதும் ஏமாற்றக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றேன். நாங்கள் சில வருடங்களுக்கு முன்னரே பட வேலைகளை ஆரம்பித்துவிட்டாலும் என் மீதான நம்பகத் தன்மையையும் அடிப்படை உறுதிப்பாட்டையும் ஏற்படுத்திய பின்னரே பிறருக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்று காத்திருந்தேன். தற்போது அதற்கான நேரம் ஆரம்பித்திருக்கிறது.

'46 Mondays' கதை வடிவத்தில் இருக்கும்போதே மிக முக்கியமான சர்வதேச அங்கீகாரத்தைப் பெற ஆரம்பித்துள்ளது. இந்தப் படம் உருவானால் நிச்சயம் பல கதவுகள் திறக்கும் என்பது நிருபிக்கப் பட்டுவிட்டது. பொருளாதார ரீதியாக என் படம் வெற்றிபெறும் என்பதற்கான உறுதியை நான் ஆரம்பத்திலேயே வழங்கிவிட்டேன், தொடர்ந்தும் வழங்கி வருவேன். இதன்மூலம் இந்தப் படத்தில் முதலிடுவது பாதுகாப்பானது என்றும் உறுதியாக இலாபமீட்டும் என்கிற நம்பிக்கையை முதலீட்டாளர்களுக்கு ஏற்படுத்திவிட்டேன். என்னோடு பயணிக்க விரும்பும் இணை தயாரிப்பாளர்களுக்கும் குழுவினருக்கும் சர்வதேச அங்கீகாரத்தை இணைந்து பெற முடியும். இந்தப் பயணம் இன்று நேற்று ஆரம்பிக்கவில்லை, பல வருடங்களாக உழைத்து வெற்றிக்கான வழிமுறைகளைக் கற்றுள்ளேன். காலம் அதை எல்லோருக்கும் தெரியப்படுத்தி என் மீதான நம்பிக்கையை ஏற்படுத்தும் என்றும் நமது சினிமாவில் நிறைய மாற்றங்கள் உருவாக வழிவகுக்கும் என்றும் தீவிரமாக நம்புகிறேன்.''

'46 Mondays' திரைக்கதை மூலம் மலையக மக்களை பற்றிய சர்வதேச கவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பவனீதாவின் பேச்சை கேட்ட பலரும் அதன் பிறகு மலையக மக்களை தேடி அறிய ஆரம்பித்தனர் என்பது குறிபிடத்தக்கது. பங்களாதேஷில் கிடைத்த வரவேற்பை தொடர்ந்து '46 Mondays' தற்போது தென்கொரியாவுக்குச் சென்றுள்ளது. அங்கே இந்தப் படத்தின் மேம்படுத்தல் வேலைகளை ஆரம்பித்துள்ளார் பவனீதா. '46 Mondays' அடுத்தடுத்து இன்னும் பல நாடுகளுக்கு பயணிக்கக் காத்திருக்கிறது.

பவனீதா – தனியொரு பெண்ணாக தன் சொந்த முயற்சியில் நீண்ட தூரம் வந்திருக்கிறார். தெளிவான இலக்கும், திறமையுடன் கூடிய உழைப்பும் இருந்தால் வறுமையை வெல்லமுடியும் என்பதை நிரூபித்துவரும் அவருடைய பயணமும் இந்தச் சாதனைகளும் நிச்சயம் பலருக்கு உந்துசக்தியாக இருப்பதோடு இலங்கை சினிமாவுக்கும் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தி வருகிறது என்பதில் ஐயமில்லை.



சுவாதி

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் சோனக இஸ்லாமிய கலாசார நிலைய பங்களிப்பு

முஸ்லிம் சேவைக்கு வளம் சேர்த்து புகழ்சேர்த்தோர் வரிசையில் மூத்த உலமாக்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களை அடையாளப்படுத்தி வந்த பாரம்பரியம் தொடர் நிகழ்ச்சியில் இம்முறை அல்ஹாஜ் சேர்.ராஸிக் பரீத் அவர்களதும், இன்னும் அவர் ஸ்தாபித்த "சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்" அமைப்பின் ஊடாகவும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் வளர்ச்சிக்கு ஆரம்ப காலத்தில் வழங்கிய பங்களிப்புகளின் நினைவுகள் பரிமாறப்படவிருக்கின்றன.

இந்நிகழ்ச்சி எதிர்வரும் 15ஆம் திகதி (15.08.2023) செவ்வாய்க்கிழமை இரவு 8.15 மணிக்கு இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாக இருக்கிறது.





இதுபற்றிய தகவல்களை இலங்கை வானொலி அறிவிப்பாளரும், முஸ்லிம் சேவையின் சிரேஷ்ட கலைஞரும், வானொலி நாடக எழுத்தாளருமான கலாநிதி எம்.சீ.ரஸ்மின் நேயர்களோடு பகிர்ந்துகொள்கிறார்.

நிகழ்ச்சியை முஸ்லிம் சேவை பொறுப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஷியா தயாரித்தளிக்க, எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுத்தளிக்கிறார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7



# கிக்

வாசிக்க
வாசிக்க...

மலர் : 02, இதழ் : 37 - 13.08.2023

நம்பிக்கையுடன்
மீண்டு வருகிறார்
மொடல் அழகி
பெல்லா ஹெடிட்

சந்திரமுகியாக
மாறிய
கங்கனா

“விவாகரத்து
இலகுவானதல்ல”
- கிசெலே பன்ட்சென்

கங்கனா ரணாவத்





# கறுப்பில் கவர்ச்சி காட்டும் ரம்யா

தமிழில், டம்மி டப்பாசு, ஜோக்கர், ஆண் தேவதை உள்ளிட்ட படங்களில் நடித்த ரம்யா பாண்டியன், போட்டோஷுட் மூலம் மிகவும் பிரபலமானார். பின்னர் சின்னத்திரை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட அவர், பிக்பொஸ் நிகழ்ச்சியின் 4ஆவது சீசனில் போட்டியாளராக களமிறங்கி இறுதிப் போட்டி வரை முன்னேறினார். இந்நிகழ்ச்சி மூலம் அவரது ரசிகர்கள் வட்டம் பெரிதானது.

இவர் நடிப்பில் வெளியான "இராமே ஆண்டாலும் இராவணே ஆண்டாலும்'' திரைப்படம் நல்ல வரவேற்பைப் பெற்றது. சூர்யாவின் 2டி எண்டெர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரித்த இப்படத்தில் ரம்யா பாண்டியனின் நடிப்பு அனைவராலும் பாராட்டப்பட்டது. ரம்யா பாண்டியன் மலையாளத்தில் 'நண்பகல் நேரத்து மயக்கம்' என்ற படத்தில் நடித்திருந்தார்.

அவ்வப்போது தனது புகைப்படங்களை சமூகவலைத் தள பக்கத்தில் வெளியிட்டு ரசிகர்களை கவர்ந்துவரும் ரம்யா பாண்டியன், தற்போது கறுப்புநிற கவர்ச்சி உடையில் இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டுள்ளார். இந்தப் புகைப்படங்கள் லைக்குகளை குவித்து தற்போது வைரலாகி வருகிறது.



# சந்திரமுகியாக மாறிய கங்கனா

'சந்திரமுகி 2' படம் எதிர்வரும் செப்டெம்பர் 15ஆம் திகதி வெளியாகவுள்ள நிலையில் படத்தின் நாயகி கங்கனா ரனாவத் தோற்றம் வெளியாகி ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பி.வாசு இயக்கத்தில் 2005ஆம் ஆண்டு வெளியாகி வெற்றி பெற்ற படம், 'சந்திரமுகி'. சுப்பர்ஸ்டார் ரஜினிகாந்த், ஜோதிகா, நயன்தாரா, பிரபு, வடிவேலு உட்பட பலர் நடித்திருந்தனர். இப்படத்தின் இரண்டாம் பாகம் 'சந்திரமுகி 2' என்ற பெயரில் உருவாகிறது. இதில் ராகவா லாரன்ஸ், கங்கனா ரனாவத், வடிவேலு, ராதிகா உட்பட பலர் நடிக்கின்றனர்.

லைகா தயாரிக்கும் இதன் படப் பிடிப்பு மைசூர், ஹைதராபாத், சென்னை உள்ளிட்ட பகுதிகளில் இடம்பெற்றுவந்த நிலையில கடந்த சில தினங்களுக்கு முன்பு இப்படத்தின் முழு படப்பிடிப்பும் முடிவடைந்ததாக படக் குழுவினர் அதிகாரப்பூர்வமாக அறிவித்தனர். தற்போது படத்தின் டப்பிங், எடிட்டிங் உள்ளிட்ட இறுதிக்கட்ட பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் 'சந்திரமுகி 2' படத் தின் முக்கிய அங்கமான 'வேட்டையன் ராஜா' கதாபாத்திரத்தின் முதல் தோற் றத்தை படக்குழு அண்மையில் வெளி யிட்ட நிலையில் சில தினங்களுக்கு முன்னர் கங்கனா ரனாவத்தின் தோற்றத்தை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர்.

# அட்லி படத்தில் வாமிகா

பொலிவுட் நடிகை வாமிகா கபி தமிழில் 'மாலை நேரத்து மயக்கம்' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார். பின்னர் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 'மொடர்ன் லவ் சென்னை' தொடரில் தியாகராஜன் குமாரராஜா இயக்கிய 'நினைவோ ஒரு பறவை' படத்தில் நடித்திருந்தார்.

ஹிந்தி, பஞ்சாபி மொழி படங்களில் அதிகம் நடித்துவரும் வாமிகா சமீபத்தில் அமேசானில் வெளியான 'ஜுப்ளி' இணையத் தொடரில் அற்புதமாக நடித்து பாராட்டுகளைப் பெற்றார். சோனி லைவிலும் 'சார்லி சோப்ரா' எனும் புதிய தொடர் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது.

தற்போது ஜெயம் ரவியுடன் 'ஜீனி' படத்தில் நடித்து வருகிறார். எஸ்.ஜே.சூர்யாவுடன் நடித்துள்ள 'இரவாக்காலம்' படம் வெளியாகாமல் இருக்கிறது.

இந்நிலையில், 'தெறி' படத்தின் ஹிந்தி ரீமேக்கில் நாயகன் வருண் தவானுக்கு ஜோடியாக நடிகை வாமிகா கபி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அட்லி தயாரிப்பில் காளீஸ் இயக்கத்தில் உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




கிக் - 'வார இதழ்'

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 7.

தொலைபேசி : 011 588 6187

வட்ஸ்அப் : 076 139 3805

தொலைநகல் : 011 267 3442

g l tk mk

Kick - கிக்

g l tk m h l tk nl

h g l tk m

தொகுப்பு: நிர்ஷன் இராமானுஜம்

வடிவமைப்பு : ஆர்.எஸ்.தர்ஷி



# நம்பிக்கையுடன் மீண்டு வருகிறார் மொடல் அழகி பெல்லா ஹைடிட்





2ஆம் ஆண்டின் அதிக செல்வாக்குமிக்க 100 பேரில் இடம்பெற்ற அமெரிக்க மொடல் பெல்லா ஹைடிட் ஒருவகையான தோல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டு மொடலிங் துறைக்குள் நுழைந்த இவருக்கு இப்போது 26 வயதாகிறது.

அண்மைக்காலமாக தோல் நோயால் பாதிக்கப்பட்டுள்ள அவர், தற்போது அதிலிருந்து மீண்டு வருகிறார். நம்பிக்கையுடன் பழைய நிலைமைக்குத் திரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வண்டு வகைகளின் மூலம் பரவும் லிமி டிசீஸ் என்றழைக்கப்படும் நோய் அவரை தாக்கியுள்ளது. இந்த நோய் தோலில் வலியை ஏற்படுத்தாமல் அரிப்பை உண்டாக்குமென வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பெல்லாவுக்கு இந்நோய் தாக்கியுள்ளதாக அறிந்தவுடன் ரசிகர்கள் பெரும் மனவருத்தமடைந்தார்கள். ஏனென்றால், மொடலிங், புகைப்படங்கள் மூலம் அவர் ரசிகர்களைக் கவர்ந்து வந்தார். மேலும் வோக் சஞ்சிகையில் 2022ஆம் ஆண்டு 29 தடவைகள் முகப்பை அலங்கரித்து தனக்கென தனியிடத்தை தக்கவைத்திருந்தார்.

அவர் உடல்நலத்துடன் மீண்டும் துறைக்குள் பிரவேசித்து ரசிகர்களை மகிழ்விப்பார் என மொடலிங் துறை காத்திருக்கிறது.



# “விவாகரத்து இலகுவானதல்ல”

**- கிசெலே பன்ட்சென்**



தனது கணவரான உதைபந்தாட்ட வீரர் டொம் பிரெடியை (வயது 46) கடந்த வருடம் விவாகரத்து செய்த நடிகையும் மொடல் அழகியுமான கிசெலே பன்ட்சென் (வயது 43), அது பற்றிய தனது மனநிலையை தற்போது வெளிப்படுத்தியுள்ளார்.

“வாழ்க்கையில் ஒவ்வொரு விடயமும் ஏதோவொரு காரணத்துக்காக நிகழ்கிறதென நம்புகிறேன். எந்தவொரு சவாலும் எமது வளர்ச்சிக்கான உந்துசக்தியாகும். நான் பல்வேறு சவால்களை சந்தித்து வருகிறேன். அதில் முக்கியமானது எனது கணவருடனான விவாகரத்தாகும். அது இலகுவானதல்ல” என அவர் நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் டொம் பிரெடியை கடந்த 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் விவாகரத்து செய்தார். அவர்களுடைய திருமண வாழ்க்கை 13 ஆண்டுகளின் பின்னர் நிறைவுக்கு வந்தது.

இது பற்றி அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு வெளிப்படையாக அவர் கருத்து வெளியிட்டுள்ளார். ஊடகங்கள் எனது தனிப்பட்ட வாழ்க்கையில் அதிகமாக தலையிட்டன. அதனால் அச்சமடைந்த நாட்களும் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விவாகரத்தான இந்தத் தம்பதியினருக்கு பெஞ்சமின் என்ற 13 வயது மகனும் விவியன் என்ற 10 வயது மகளும் உள்ளனர். அவர்களை வளர்த்து ஆளாக்குவதும் தொழில் ரீதியான புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுமே தனது நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாடகர் டோரிக்கு 10 ஆண்டுகள் சிறை



நடிகை ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட குற்றச்சாட்டில் கனேடிய ரெப் பாடகர் டோரி லேனஸுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. லொஸ் ஏஞ்சல்ஸ் உயர் நீதிமன்ற நீதியரசர் டேவிட் ஹெரிபோர்ட் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

2020ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஹொலிவுட் ஹில்ஸில் இடம்பெற்ற விருந்துபசார நிகழ்வின்போது சக இசைக் கலைஞரான மேகன் தி ஸ்டெலியன் மீது டோரி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார். இதன் காரணமாக அவரது காலில் காயம் ஏற்பட்டு சத்திரசிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டார்.

அந்த விருந்துபசாரத்தின்போது தன்னை நடனமாடுமாறு டோரி வலியுறுத்தியதாகவும் அதற்கு மறுப்புத் தெரிவித்ததால் துப்பாக்கியால் சுட்டதாகவும் மேகன் சாட்சியம் அளித்துள்ளார்.



இந்த வழக்கில் தீர்ப்பை அறிவித்த நீதியரசர், நல்லவர்கள் சிலநேரம் தவறான காரியங்களில் ஈடுபடுகிறார்கள் எனக் குறிப்பிட்டார். இந்த வழக்கின் தீர்ப்பு குறித்து கருத்து வெளியிட்ட மேகன், நான் குணமடைந்து வருகிறேன் ஆயினும் நான் அமைதியான மன நிலையில் இல்லை எனக் கூறியுள்ளார்.

# கோடியில் புரளும் லில்லி சிங்...!

போர்ப்ஸ் பத்திரிகை, உலகில் அதிகம் சம்பாதிக்கும் யூடியுப்பராக லில்லி சிங்கை இரு முறை பட்டியலிட்டுள்ளது.

2010இல் யூடியுப்பராகக் களமிறங்கிய லில்லி சிங் 'சுப்பர் வுமன்' என்ற புனைப்பெயரில் உலகளவில் பிரபலமானார்.

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் பிறந்த லில்லி சிங், கனடாவுக்கு புலம்பெயர்ந்தார். தமது தொழில் வாழ்க்கையை விரிவுபடுத்தும் விதமாக அங்கிருந்து அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு மாறினார்.

இவரது காணொளிகள் பொதுவாக, ஊக்கமளிக்கும் குறிப்புகள், தினசரி செயற்பாடுகள் குறித்து என பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் இருக்கும். இதனால் வெகுவிரைவில் பல மில்லியன் பார்வையாளர்களைச் சம்பாதித்தார் சிங். தொடர்ந்து வித்தியாசமான கெட்டப்களில் அசத்தி பார்வையாளர்களை கவர்ந்து வருகிறார்.

லில்லி சிங் 2015இல் அவுஸ்திரேலியா, டுபாய், ஹொங்கொங், சிங்கப்பூர் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு தொழில்முறை சுற்றுப்பயணமொன்றையும் மேற்கொண்டார். இதனிடையே, தாம் ஒரு இருபாலின ஈர்ப்பாளர் என்பதை 2019இல் வெளிப்படையாகவே அறிவித்தார்.

அமெரிக்காவில் 6,000 சதுர அடி கொண்ட அவரது குடியிருப்பின் மொத்த மதிப்பு 4.1 மில்லியன் டொலர்கள். இவரது நிகர சொத்து மதிப்பு சுமார் 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.



# ரசிகர்களுடன் ரசிகனாக ஜெயிலர் பார்க்க வந்த தனுஷ்

சுப்பர் ஸ்டார் ரஜினியின் 'ஜெயிலர்' திரைப்படம் கடந்த வியாழக்கிழமை (10) திரையரங்களில் வெளியாகிய நிலையில் ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்நிலையில், படத்தை நடிகர் தனுஷ் சென்னையிலுள்ள திரையரங்கொன்றில் ரசிகர்களுடன் பார்த்துள்ளார்.

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிப்பில் உருவாகியுள்ள 'ஜெயிலர்'. இதில் மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார் மற்றும் பிரியங்கா மோகன், ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

பெரும் எதிர்பார்ப்பில் உருவாகியுள்ள இப்படத்தைப் பார்க்க ரசிகர்கள் திரையரங்குகளில் கூடி, மேள தாளம் அடித்து பாலபிஷேகம் செய்து கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில், ஜெயிலர் படத்தின் முதல் நாள் முதல் காட்சியை நடிகர் தனுஷ் ரசிகர்களுடன் சென்னை ரோகினி திரையரங்கில் பார்த்துள்ளார். ரசிகர்களுடன் படம் பார்க்க வந்த தனுஷை ஆரவாரம் செய்து ரசிகர்கள் வரவேற்றனர்.



# செப். 28இல் அமீரின் 'உயிர் தமிழுக்கு'




இயக்குநர் அமீர் கதாநாயகனாக நடித்துள்ள 'உயிர் தமிழுக்கு' படம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி வெளியாக வுள்ளது என படக்குழு அறிவித்துள்ளது.

இயக்குநர் அமீர் கதாநாயகனாக நடித்திருக்கும் படம் 'உயிர் தமிழுக்கு'. இப்படத்தை மூன் பிக்சர்ஸ் சார்பில் தயாரிப்பாளர் ஆதம்பாவா தயாரித்து இயக்கியுள்ளார். இப்படத்தில் சாந்தினி சிறிதரன், ஆனந்த்ராஜ், இமான் அண்ணாச்சி, மாரிமுத்து, ராஜ் கபூர், சுப்ரமணிய சிவா, மகாநதி சங்கர், ராஜசிம்மன், சரவணசக்தி உட்பட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

வித்தியாசாகர் இசையமைத் திருக்கும் இப்படத்திற்கு தேவராஜ் ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் வெளியீட்டு உரிமையை சுரேஷ் காமாட்சியின் வி ஹவுஸ் புரொடக்ஷன் நிறுவனம் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில், 'உயிர் தமிழுக்கு' திரைப்படத்தின் ரிலீஸ் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி இப்படம் செப்டெம்பர் 28ஆம் திகதி வெளியாகவுள்ளதாக போஸ்டர் வெளியாகியுள்ளது.

# வசூலை அள்ளும் 'மாவீரன்'

இயக்குநர் மடோன் அஸ்வின் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான திரைப்படம் 'மாவீரன்'. இப்படத்தின் வசூல் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது.

மடோன் அஸ்வின் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிப்பில் கடந்த ஜூலை 14ஆம் திகதி திரையரங்குகளில் வெளியான படம் 'மாவீரன்'. இப்படம் தமிழ், தெலுங்கு ஆகிய 2 மொழிகளில் வெளியானது. இதில் அதிதி ஷங்கர், சரிதா, இயக்குநர் மிஷ்கின் மற்றும் யோகி பாபு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.



இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்று ரூ.75 கோடிக்கு (இந்திய ரூபாப்படி) மேல் வசூல் செய்திருந்தது.

சுப்பர் ஸ்டார் ரஜினி 'மாவீரன்' படத்தைப் பார்த்துவிட்டு தன்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு வாழ்த்தியதாக சிவகார்த்திகேயன் தெரிவித்திருந்த நிலையில், 'மாவீரன்' திரைப்படத்தின் வசூல் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது.

அதன்படி இப்படம் ரூ.89 கோடி வசூல் செய்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

'மாவீரன்' திரைப்படம் எதிர்வரும் 11ஆம் திகதி அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் வெளியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நான் ஆடை அணிந்திருக்கிறேனா, இல்லையா என்று யோசிப்பதில்லை

**அப்சரா ராணி அதிரடி**

நான் கெமராவுக்கு முன்னால் இருக்கும்போது, ஆடை அணிந்திருக்கிறேனா, இல்லையா என்று யோசிப்பதில்லை - என கவர்ச்சி நாயகி அப்சரா ராணி தெரிவித்துள்ளார்.

தெலுங்கு படங்களில் நடித்து பிரபலமான இளம் நடிகை அங்கீதா மஹாராணா. அவர் ஆர்.ரகுராஜின் படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானார். அவரது அடுத்த படம் 2020ஆம் ஆண்டில் சத்ய பிரகாஷ் இயக்கிய காதல் திகில் படமான 'ஒல்லல்லா ஊலல்லா'.

ராம் கோபால் வர்மாவின் படத்தில் நடிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. அங்கிதா என்ற பெயரை அப்சரா ராணியாக மாற்றிக்கொண்டார். அந்தப் படத்தில் அவர் படு கவர்ச்சியாக நடித்துள்ளார். அப்சரா சிறுவயதிலிருந்தே நடிப்பிலும் மொடலிங்கிலும் ஆர்வம் கொண்டவர்.

ராம் கோபால் வர்மாவின் டேஞ்சரஸ் படத்தில் நைனா கங்குலியுடன் இணைந்து இந்தியாவின் முதல் லெஸ்பியன் கிரைம் ஆக்ஷன் படத்தில் நடித்தார்.

அப்சரா ராணி படு கவர்ச்சியாக நடிப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதற்கு சமீபத்தில் அவர் அளித்த அதிரடி பதில் வருமாறு:-

டைரக்டர் என் மீது வைத்த நம்பிக்கையை முழுமையாக நிறைவேற்றுவதே எனது பணி. அதனால் என் அந்த படத்தின் கேரக்டர் என்ன கேட்கிறதோ அதை அணிய தயாராக இருப்பேன். நான் கெமராவுக்கு முன்னால் இருக்கும்போது, நான் ஆடை அணிந்திருக்கிறேனா, இல்லையா என்று யோசிப்பதில்லை.

ஏனென்றால் நான் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. கதாபாத்திரம் கேட்கும் உடைகளை அணிவேன். அது அங்கே மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதில் டைரக்டர் உறுதியாக இருப்பார். இவ்வாறு அப்சரா ராணி தன்னை விமர்சித்தவர்களுக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

# "படிக்காத பழங்குடிக தானேன்னு எங்களை ஏமாத்த நினைச்சா ஏமாத்திட்டுப் போகட்டும்"

**கண்ணீரில் பொம்மன் - பெள்ளி**

ஒஸ்கர் விருது வென்ற இந்தியாவின் முதல் ஆவணக் குறும்படமான 'The Elephant Whisperers' முதுமலை தெப்பக்காடு வளர்ப்பு யானைகள் முகாமில் நடந்த உண்மைச் சம்பவம்.

தமிழக வனத்தில் தாயை இழந்து தவித்த இரண்டு யானைக் குட்டிகள் மற்றும் அவற்றை தாயுள்ளத்துடன் கண்ணும் கருத்துமாகக் காத்த பழங்குடி பாகன் தம்பதி பொம்மன், பெள்ளி ஆகியோரை அழகியலோடு காட்சிப்படுத்தி ஒஸ்கர் வரை கொண்டுசென்று உலக மக்களிடம் கொண்டுசேர்த்திருக்கிறார் ஊட்டியைச் சேர்ந்த ஆவணப்பட இயக்குநர் கார்த்திகி கொன்சால்வ்ஸ்.

இந்த ஆவணப்படத்தின் மூலம் பொம்மன், பெள்ளி, கார்த்திகி கொன்சால்வ்ஸ், ரகு பொம்மி யானைகள் மற்றும் தெப்பக்காடு முகாம் என அனைத்துமே உலகளவில் கவனம் பெற்றது.

ஒட்டுமொத்த திரை உலகமும் கொண்டாடிய இவர்களை இந்தியப் பிரதமர் மோடி முதல் கிரிக்கெட் வீரர் தோனி வரை பிரபலங்கள் பலரும் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர். இந்தியாவின் முதல் பழங்குடி குடியரசுத் தலைவரான திரௌபதி முர்மு அண்மையில் இவர்களைச் சந்தித்து கலந்துரையாடிவிட்டுச் சென்றிருக்கிறார்.

கொண்டாட்டங்கள் இப்படி யிருக்க, ஆவணப்படத்தின் உயிர்நாடியாக இருந்த தங்களை பண விடயத்தில் இயக்குநர் கார்த்திகி ஏமாற்றிவிட்டதாக பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார் காவடி (பாகனுக்கு உதவியாக யானையைப் பராமரிக்கும் பணி) பெள்ளி.

"உங்களையும் ரகு பொம்மியையும்



படம் எடுக்கப்போறோம்ன்னு சொல்லி கார்த்திகி பொண்ணு வந்தது. சீக்கிரமே நாங்க நல்லா பழகிட்டோம். பெத்த மகள் மாதிரி நினைச்சுத்தான் கார்த்திகியோட பழகினோம். ரெண்டு வருஷமா வீடியோ எடுத்தாங்க. கல்யாணம் பண்ணுற மாதிரி வீடியோ எடுக்கணும். ஊர் மக்களுக்கு சாப்பாடு, கோயில் செலவுக்கு உங்கள் பணத்தைக் கொடுங்க. அப்புறமா திருப்பிக் கொடுக்கிறேன்னு கார்த்திகி சொன்னாங்க.

என்னோட மகள் இறந்தப்ப வந்த பணத்தை பேத்திக்காக போஸ்ட் ஆபீஸ்ல சேத்து வச்சிருந்த ஒரு இலட்சம் ரூபா பணத்தை எடுத்து செலவு செஞ்சோம். இப்போ வரை அந்தப் பணத்தை கார்த்திகி திரும்ப கொடுக்கலை. அதுகூட போனால் போகட்டும். எங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறேன், கார் வாங்கிக் கொடுக்கிறேன். பேங்கல பணம் போட்டிருக்கேன்னு எல்லார்கிட்டயும் சொல்லிருக்காங்க.

ஆனால், எங்களுக்கு எதுவுமே வந்து சேரலை. பேங்கல வந்து பாருங்க வெறும் 60, 70 ரூபா தான் எக்கவுண்ட்ல இருக்கு. போன் பண்ணி



கேட்டாலும் சரியான பதில் இல்லை. எங்களுக்கு மனசு வெறுத்துப் போச்சு. எதுவும் தெரியாமல் யதார்த்தமா இருந்து ஏமாந்துட்டோம். படிக்காத பழங்குடிகதானேன்னு எங்களை ஏமாத்த நினைச்சா ஏமாத்திட்டுப் போகட்டும். எங்க பேரக்குழந்தைகளை எப்படியோ படிக்க வச்சிக் கிறோம். கார்த்திகி நல்லா இருந்தா போதும்" என கண்களில் கொப்பளித்த ஏமாற்றத்தைத் துடைத்துக்கொண்டு கிளம்பினார் பெள்ளி.

இதுகுறித்து சமூக ஆர்வலர் பிரவீன்ராஜ் என்பவர் தெரிவிக்கையில்,

இந்த ஆவணப்படம் எடுக்க பொம்மன் - பெள்ளி தம்பதி பல்வேறு கஷ்டங்களை சந்தித்துள்ளனர். படப்பிடிப்பு முடிவில் வீடு, பணம், பேரன்களுக்கு படிப்பு கொடுப்பதாக வாய்மொழி உத்தரவாதம் அளித்துள்ளனர். ஒஸ்கர் விருது என்பது அதில் நடித்த யானை, புனை என எல்லோருக்கும் சொந்தமானதுதான். அந்த ஒஸ்கர் விருதை இரண்டு நாட்கள் பொம்மன் வீட்டில் வைத்திருக்கலாமே.

அப்படி என்ன தீண்டத்தகாதவர் களா அவர்கள். ஒஸ்கர் விருது கிடைத்ததன் மூலமாக தயாரிப்பாளர், இயக்குனருக்கு ரூ.7 கோடி வரை பணம் கிடைத்துள்ளதாக தெரிகிறது. ஆவணப்படத்தின் மூலமாக கிடைக்கும் பணத்தில் ஒரு பகுதியை பொம்மன் - பெள்ளிக்கு கொடுப்பதாக உறுதியளித்தனர்.

ஆனால், அதனை செய்யவில்லை. வீடு கட்டி தருவதாகவும் தெரிவித்துள்ளனர். இப்போது தொடர்புகொண்டால் அவர்கள் போனை எடுப்பதில்லை.

இதையடுத்து தயாரிப்பாளர், இயக்குநர் ஆகியோரின் முகவரிக்கும், மெயிலுக்கும் நோட்டீஸ் அனுப்பியுள்ளோம். இதேபோல் ஒஸ்கர் விருது குழுவுக்கும் இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பாரத விலாஸ் - பொன் விழா ஆண்டில் இந்தப் படங்கள்

## ஸ்வீட் சிக்ஸ்டி

ச.சுந்தரதாஸ்

பாரத நாடு சுதந்திரமடைந்து 76 ஆண்டுகளாகி விட்டன. பல்வேறு சமயங்கள், இனங்கள், மொழிகள், கலாசாரங்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழும் நாடாக பாரதம் திகழ்கிறது. இந்த ஒற்றுமையைத்தான் தேசிய ஒருமைப்பாடு என்று பெருமிதத்துடன் போற்றுகிறார்கள். இந்த தேசிய ஒருமைப்பாட்டை விளக்கும் வகையில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் படம் ஒன்று வந்தது. அந்தப் படம்தான் பாரத விலாஸ்.



சிவாஜி கணேசனின் நடிப்பில் தனது சினி பாரத் நிறுவனத்தால் பாபு படத்தை தயாரித்து இயக்கி வெற்றி கண்ட ஏ.சி.திருலோகசந்தர் இரண்டாவது தயாரிப்பாக இந்தப் படத்தை எடுத்தார். திரைக்கதை எழுதி படத்தையும் தயாரித்து இயக்கினார் அவர்.

சென்னையில் ஒரு வெள்ளைக்கார அதிகாரிக்குச் சொந்தமான வீட்டில் சந்தர்ப்ப வசத்தால் நான்கு குடும்பங்கள் வாடகைக்கு குடியேறுகின்றன. தமிழ், மலையாள முஸ்லிம், கன்னட தெலுங்கு பேசும் தம்பதி, பஞ்சாப் குடும்பம் என குடியேறும் இந்த நான்கு குடும்பங்களும் தாங்கள் வாழும் வீட்டுக்கு 'பாரத விலாஸ்' என்று பெயரிட்டு ஒற்றுமையுடன் வாழ்கின்றன. இவர்கள் குடும்பங்களில் நடக்கும் சம்பவங்களே படத்தின் கதை. இந்தக் கதையை நகர்த்த ஏராளமான நடிகர்கள் படத்தில் இடம்பெற்றிருந்தார்கள்.

தமிழ்த் தம்பதியாக சிவாஜி, கே.ஆர்.விஜயா, பஞ்சாபி தம்பதியாக சுந்தரராஜன், தேவிகா, கன்னட தெலுங்கு தம்பதியாக எம்.ஆர்.ஆர்.வாசு, மனோரமா, மலையாள முஸ்லிம் தம்பதியாக வி.கே.ராமசாமி, ராஜசுலோசனா இவர்களுடன் ஜே.பி.சந்திரபாபு, ஏ.சகுந்தலா, சிவகுமார், ஜெயசுதா, ஜெயசித்ரா, சசிகுமார், எஸ்.வி.ராமதாஸ், சிஐடி சகுந்தலா, ராஜபாண்டியன், நீலு, டைபிஸ்ட் கோபு, ராஜவேலு என்று ஒரு நடிகர் பட்டாளமே படத்தை ஆக்கிரமித்திருந்தது.

இவர்கள் போதாதென்று தெலுங்கு நடிகர் ஏ. நாகேஸ்வர ராவ், மலையாள நடிகர் மது, ஹிந்தி ஹீரோ சஞ்சீவ்குமார் ஆகியோரும் கௌரவ நடிகர்களாக படத்தில் இடம்பெற்றார்கள். எல்லா நடிகர்களும் அனுபவசாலிகள். அதனால் அவர்களை இயக்குவதில் டைரக்டருக்கு பெரிய சிரமம் எதுவுமில்லை. ஆனால், படம் முழுதும் வாசு கத்தி கத்தி பேசுவதை கட்டுப்படுத்தியிருக்கலாம்.



சிவாஜி அப்பாவியாக, அசடாக, கோபக்காரராக, பயந்தவராக, ஆவேசம் கொள்பவராக படத்தில் வருகிறார். தன் இமேஜை பற்றி கவலைப்படாது நடித்து நிறைந்த நடிப்பைத் தருகிறார். அவருடைய அத்தனை குணாம்சங்களுக்கும் ஈடு கொடுப்பவராக கே.ஆர்.விஜயா பாந்தமாக நடிக்கிறார். தேவிகா இருந்தும் இல்லாத நிலை. வி.கே.ராமசாமி சோகமாகவும் நடிக்க முடியும் என்று நிரூபிக்கிறார். படத்தில் வருபவர்கள் பல மொழி பேசுபவர்களாக இருந்தபோதும் பொது மொழியாக அவர்கள் பேசுவது தமிழ்தான்.

படத்துக்கு இசை எம்.எஸ். விஸ்வநாதன். ''சக்கை போடு போடு ராஜா'' பாடல் மனசாட்சியுடன் சேர்ந்து பாடுவதுபோல் வித்தியாசமாக அமைந்தது. ''நாற்பது வயது நாய்க் குணம்'' பாடல் வேடிக்கையான கருத்துப் பாடல். ''இந்திய நாடு என் வீடு'' தேசியத்தை வலியுறுத்தும் பாடல். எல்லாம் வாலியின் கை வண்ணம்.



படத்தின் வசனங்களை மதுரை திருமாறன் எழுதினார். நான் பெண்ணுக்கு ஆட கற்றுக் கொடுத்தேன், பாட கற்றுக் கொடுத்தேன். ஆனால், அழ கற்றுக் கொடுக்கவில்லை, பணம்தான் மனுஷன் காலில் விழவேணும், மனுஷன் பணத்தின் காலில் விழக் கூடாது போன்ற வசனங்கள் பிரகாசித்தன.

எம்.விஸ்வநாத் ராய் ஒளிப்பதிவு செய்தார். பாபு படத்தை கறுப்பு வெள்ளையில் எடுத்த திருலோக் இந்தப் படத்தை கலரில் எடுத்தார். தேசிய ஒற்றுமையை விளக்க எடுத்த படம் என்பதால் கதை ஓரளவு செயற்கை யாகவே இருந்தது. ஆனாலும் நோக்கம் சிறப்பாக இருந்ததால் அந்தக் குறையை கண்டுகொள்ளத் தேவையில்லை. ஆங்கிலத்தில் வெளிவந்த ஹிந்தி திரைப்பட செய்திகளை தரும் பிலிம் பெயர் சஞ்சிகை 1973ஆம் ஆண்டுக் கான சிறந்த தமிழ் படம் என்ற விருதை படத்துக்கும், சிறந்த தமிழ் டைரக்டர் என்ற விருதை திருலோகச்சந்தருக்கும் வழங்கி கௌரவித்தது.

r rtms d c r ns h nl

# நீச்சல் உடையில் கவர்ந்திழுக்கும் மாளவிகா மோகனன்



பேட்ட, மாஸ்டர், மாறன் படங்களைத் தொடர்ந்து தற்போது விக்ரம் நடிக்கும் தங்கலான் படத்தில் நடித்துள்ளார் மாளவிகா மோகனன். இந்தப் படத்தில் மலைவாழ் பெண்ணாக அவர் நடித்திருக்கிறார். அது குறித்த போஸ்டர் ஒன்றை கடந்த ஓகஸ்ட் 4ஆம் திகதி அவரது 30ஆவது பிறந்தநாளின்போது படக்குழுவினர் வெளியிட்டு வாழ்த்துத் தெரிவித்தனர்.

இந்நிலையில், மாளவிகா தற்போது நண்பர்களுடன் இணைந்து சுற்றுலா சென்றுள்ளார். அங்கு தனது நண்பர்களுடன் பிறந்தநாளை கேக் வெட்டிக் கொண்டாடி மகிழ்ந்துள்ளார். இதுதொடர்பான போட்டோ, வீடியோக்களை மாளவிகா பகிர்ந்துள் ளார். மற்றொரு பதிவில் ரெசார்ட் ஒன்றில் நீச்சல் குளம் அருகே பச்சை நிறத்திலான நீச்சல் உடையை அணிந்து ஸ்டைலாக கிளாஸ் அணிந்து, படுத்துக்கொண்டே புத்தகம் படிப்பது, ஹாயாக உலா வருவது மாதிரியான போட்டோக்களை பகிர்ந்துள்ளார். இதைப் பார்த்த ரசிகர்கள், பச்சை நிறமே பச்சை நிறமே.... இச்சை மூட்டும் பச்சை நிறமே... என கவிதை வாசித்து வருகின்றனர்.





# சந்தோஷத்தின் முற்றுப்புள்ளி

# சந்தேகம்

நம் வாழ்நாளில் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் யார் மீதாவது சந்தேகப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாதது. ஆனால், எல்லாவற்றுக்கும் எல்லோரையும் சந்தேகப்பட்டுக் கொண்டே இருந்தவர்கள் நன்றாக வாழ்ந்ததில்லை என்பது மட்டும் உண்மை.

ஒருவர் வரும்போது பேசிக் கொண்டிருக்கும் இரண்டு நபர்கள் அவரைப் பார்த்தவுடன் உடனடியாக பேச்சை மாற்றினால் மூன்றாவது நபருக்கு தம்மிடம் எதையோ மறைக்கிறார்கள் என்ற சந்தேகம் எழும்.

அப்பாவிகள் சிலர் குற்றவாளிகளோ என பொலிஸாரின் சந்தேகத்திற்கு ஆளாவது உண்டு. நன்றாக உடல் நலத்துடன் இருந்தவர் திடீரென இயற்கை எய்தினால் அவரது இறப்பில் சந்தேகம் ஏற்படுவது இயல்பு.

பிரேத பரிசோதனை மூலம் காரணம் அறிய முடியும். உண்மையான பெற்றோரைக் கண்டறிய டி.என்.ஏ. போன்ற பரிசோதனை உள்ளது. பேய் இருக்கா, இல்லையா என சந்தேகம் கேட்கும் சிறுவர்கள் உள்ளனர். பாடசாலை வகுப்பறையில் பாடத்தில் சந்தேகம் கேட்கும் மாணவர்கள் அந்த நொடி மட்டுமே முட்டாள்.

சந்தேகத்தை மூடி மறைத்து கேட்காமலேயே இருப்பவன் வாழ்நாள் முழுவதும் முட்டாள். கணவனோ, மனைவியோ இன்று தொழில் ரீதியாக எதிர்பாலாருடன் பழகினால் தன்னை கைவிட்டுவிட்டு ஒன்றுசேர்ந்து விடுவார்களோ என்கிற சந்தேகம் ஏற்படுவது இந்தக் காலத்தில் அதிகரித்துள்ளது.

வாழ்க்கைத்துணை அழகாகவும், நல்ல வேலையிலோ, சொந்த தொழிலோ செய்பவர்களாக இருந்தால் இது மேலும் அதிகமாக உள்ளது. கணவன் மீது சந்தேகம் கொள்ளும் மனைவியர் உள்ளனர். மனைவியின் நடத்தையில் சந்தேகம் கொள்ளும் கணவன்மார் உள்ளனர்.

கட்டிய மனைவி வேறு யாரோ ஒரு ஆணுடன் செல்போனில் அடிக்கடி வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தால் சந்தேகப்படுபவர்கள் உள்ளனர். மனைவி அடுத்த ஆணுடன் செல்போனில் வெகுநேரம் பேசுவதைக் கண்டு சண்டை ஏற்படும் குடும்பங்கள் இன்று ஏராளம். அந்நிய ஆண்களுடன் எல்லை மீறாமல் வரம்புடன், அளவுடன் பழகுவதே நல்லது.

மகிழ்ச்சியும், இன்பமும் நிலவிய சிகரத்திலிருந்து அவமானமும், துவேஷமும் நிறைந்த படுகுழியில் விழ வைத்துவிடும் வல்லமை கொண்டது. இந்தச் சந்தேகம். சந்தேக புத்தியால் அழித்துக்கொண்ட சந்தோஷத்தை திரும்பப் பெறுவது ஒருபோதும் முடியாதது.

சந்தேகம் நரக வாழ்க்கையின் முதல்படி, எல்லா வகையிலும் நமது நிம்மதியைக் கெடுத்து விடுகிறது. குடும்ப முன்னேற்றத்தின் தடைக்கல், நல்ல உறவுகளை காலாவதியாக்கி விடுகிறது.

# ஜிகினாவிடம் கேளுங்கள்!

**தினசரி வாழ்வை எளிதாக்க சில குறிப்புகள் யாவை?**

**ஜோதிமணி - வட்டவளை**

★ அளவாக ஆறு வேளை சாப்பாடு மற்றும் 7 மணிநேரம் தூக்கம் நம்மை சுறுசுறுப்பாக நாள் முழுவதும் இயங்க வைக்கும்.

★ எந்தக் காரியத்தையும் முடிந்த அளவுக்கு முன்கூட்டியே முடித்து வைத்துவிட்டால் மன அமைதி நிலவும்.

நிறைய வேலைகளை கவனிப்பவர்கள் கைத்தொலைபேசி அல்லது குறிப்பேடு மூலம் தங்களது வேலைகளை குறித்து வைத்து முடிக்கலாம்.

★ சிரமம் பார்க்காமல் எந்தவொரு இடத்துக்கும் அரை மணிநேரம் முன் கூட்டியே செல்வது பயண நெரிசல் அல்லது தேவையற்ற தாமதங்களைத் தடுக்கலாம்.

★ நாம் இருக்கும் இடத்தில் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கலாம். அதை சமாளிக்க நம்மால் முடியும். ஆனால், அதை எப்படி சமாளிப்பது என்பதை யோசிக்க நேரம் ஒதுக்குவதில்லை. அதற்கான நேரம் ஒதுக்கி யோசித்து தீர்வு காண வேண்டும்.

**ஒருவர் வாழ்க்கையை வீணடித்துக் கொண்டிருக்கிறார் என்பதற்கான அறிகுறிகள் என்னென்ன ஜிகினா ?**

**மதி - கொட்டாஞ்சேனை**

கூடுமானவரை தனக்குத்தானே செய்துகொண்டிருக்கும் வேலை வீணானது என்று நமக்குத் தோன்றும் வரை நம் செயலுக்கான தனி காரணம் நம்மால் கொடுக்க முடியும். ஆனால், விளைவுகளைப் புரிந்துகொண்டு சற்று திருத்திக்கொண்டால் இந்த நிலையை மாற்றிக்கொள்ளலாம்.

★ காலையில் குறிப்பிட்ட நேரம் எழ முடியாமல் போவது.

★ வேலைகளைத் தள்ளிப்போடுவது.

★ உரிய வேளைக்கு உணவு அருந்தாமல் தவிர்ப்பது.

★ சிறிய விடயத்துக்கும் மாதிரி கோபப்படுவது.

★ தட்டில் இருக்கும் உணவு என்ன என்றுகூட தெரியாமல் சாப்பிட்டு முடிப்பது.

★ நாளை என்ன திகதி என்று கூட தெரியம் இருப்பது.

★ நேரத்துக்குத் தகுந்தாற்போல் முடிவை மாற்றிக்கொள்வது.

★ எங்கு செல்கிறோமோ அங்கேயே தங்கிவிடுவது.

★ ஆபாச வலைத்தள பாவனை.

★ அதிகாலையில் தூங்கச் செல்வது.

★ எந்த வேலை செய்வதற்கும் ஒருவேளை வரும் என்று காலவரையற்று தள்ளிப்போடுவது.

★ குறிப்பிட்ட வேலை செய்து முடிக்காமல் தப்பிக்க தகுந்த காரணம் தேடுவது.

★ இன்று ஒருநாள் மட்டும் என்று தினமும் சொல்லிக்கொள்வது.

★ நீங்கள் செய்வது தவறு என்று தெரிந்தும் ஒப்புக்கொள்ளாத மனநிலை.

★ இன்று தேவை எவ்வளவு என்று அதற்கு மட்டும் வேலை பார்ப்பது.

★ நாளை என்பதை நாளை பார்த்துக்கொள்ளலாம் எனும் மனநிலை.

★ பாத்ரூமுக்குள் செல்போன்.

மேலே குறிப்பிட்ட அனைத்தையும் ஒரு சிறிய விடயத்தைக் கடைப்பிடிப் பதன் மூலம் மாற்றிக்கொள்ளலாம். நாளை என்ன செய்யவேண்டும் என்று இன்று இரவு ஒரு சிறு குறிப்பு எடுத்துக்கொள்ளுங்கள். இரவு 10.30 மணிக்குள் படுத்துவிடுங்கள் 5 நாட்களுக்கு காலை 6.00 மணிக்கு எழுந்து கொள்ளுங்கள். அப்போது தெரியும் ஒருநாள் எவ்வளவு நீண்டது என்று.



உங்கள் கேள்விகளை 65 0 8 7 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கலாம்.
'ஜிகினாவிடம் கேளுங்கள்'
வட்ஸ்அப் : 076 139 3805



# விமர்சனம்

# சான்றிதழ்

நடிகர்: ஹரிகுமார்
நடிகை: ஆஷிகா
டைரக்ஷன்: ஜேவிஆர்
இசை: பைஜு ஜேக்கப்
ஒளிப்பதிவு : ரவிமாறன் சிவன்



மக்கள் அனைவரும் அறத்தோடும் சுய ஒழுக்கத்தோடும் வாழ்ந்தால் நாடும் வீடும் நலமாக இருக்கும் என்பதை கனவு கிராமம் மூலம் ஜனரஞ்சகமாக சொல்லியுள்ளார் இயக்குனர்.

அங்கு வசிப்பவர்கள் எல்லோரும் எந்தவித கெட்ட பழக்கமும் இல்லாமல், ஜாதி, மத பேதம் பார்க்காமல் ஒற்றுமையாக, ஒழுக்கமாக வாழ்கிறார்கள். அந்த ஊருக்குள் அத்துமீறி யாரும் நுழையாதபடி ஊர் வாசலில் அரண் அமைத்து காவல் காக்கிறார்கள். அந்த ஊர் மக்களின் நல்ல செயலைக் கண்டு அரசாங்கம் சிறந்த கிராமத்துக்கான விருதை அளிக்கிறது. சிறந்த கிராமத்துக்கான விருது கிடைப்பதற்கு அந்த ஊரைச் சேர்ந்த சமூக சேவகரான ஹரிகுமார் முக்கிய பங்கு வகிக்கிறார். அதற்கு அவர் கொடுத்த விலை என்ன? ஊர் மக்களின் முந்தைய வாழ்க்கை எப்படி இருந்தது? என்பது பிளாஷ்பேக்கில் வரும் மீதி கதை.

ஊர் பெரியவர் தோற்றத்துக்கு ஹரிகுமாரின் ஆஜானுபாகுவான தோற்றம் கைகொடுக்கிறது. மனைவி, மகன் என்று குடும்பத்துக்காக பாசத்தைக் கொட்டி நேசிப்பது, ஊர் மக்கள் நலனுக்காக வாழ்க்கையை அர்ப்பணிப்பது என அறம் பேசும் கேரக்டரை ரசித்துப் நடித்திருக்கிறார். அவரது முடிவு பரிதாபம்.

படத்தில் நாயகனாக நடித்திருக்கும் ஹரிகுமார், இரண்டாம் பாதியில்தான் வருகிறார். இவரது நடிப்பு ரோபோ போல் இருக்கிறது. இவரது மனைவியாக வரும் ஆஷிகா கவர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறார். திருப்பம் தரும் இவரது காட்சி அதிகம் எடுபடவில்லை.

அமைச்சராக வரும் ராதாரவி வசனம் பேச வேண்டிய அவசியமே இருக்காது என்பதுபோல் முகபாவனையிலேயே பேசி அசத்தியுள்ளார்.

மனோபாலா, ரவிமரியா இருவரும் படத்தை கலகலப்பாக வைத்திருக்க உதவியிருக்கிறார்கள். ரோஷன் பஷீர், அருள்தாஸ், கவுசல்யா, ஆஷிகா. காஜல் பசுபதி ஆகியோருக்கு சிறிய வேடம் என்றாலும் மனதில் நிற்கிறார்கள்.



கதை களமான கிராமத்தை தெளிந்த நீரோடைபோல் அழகாக காண்பித்துள்ளார் ஒளிப்பதிவாளர் ரவிமாறன் சிவன்.

பைஜு ஜேக்கப் இசையில் பாடல்களும் பின்னணி இசையும் கவர்ந்திழுக்கிறது. மக்கள் அனைவரும் அறத்தோடும் சுய ஒழுக்கத்தோடும் வாழ்ந்தால் நாடும் வீடும் நலமாக இருக்கும் என்பதை கனவு கிராமம் மூலம் ஜனரஞ்சகமாக சொல்லியுள்ளார் இயக்குனர் ஜேவிஆர்.

## ஹுக்கும் டைகர்கா ஹுக்கும்



**திரைப்படம்: ஜெயிலர்**
**பாடலாசிரியர்: சூப்பர் சுபு**
**இசை, பாடகர்: அனிருத் ரவிசந்தர்**

ஆண் : ஹுக்கும் டைகர்கா ஹுக்கும்

ஆண் : அலப்பறை கிளப்புறோம் தா பாருடா
கலவரம் எறங்குனா தா டாருடா
நிலவரம் புரியுதா உக்காருடா
தலைவரு களத்துல சூப்பர் ஸ்டாருடா

ஆண் : வரமொற ஓடச்சிட்டா செட் ஆனவன்
தலைமுறை கடக்குற ஹிட் ஆனவன்
எளியவன் மனசுல ஃபிட் ஆனவன்
முடிவுல ஜெயிச்சுட உரித்தானவன்

ஆண் : நடக்குற நடை புயலாச்சே
முடி ஒத்துகுற ஸ்டைலாச்சே
கனவில்லை இது ரியலாச்சே
தல முதல் அடி வரை தலைவரு அலப்பறை

ஆண் : பளபள பளக்குற வெயிலாச்சே
அடி 100க்கு டயலாச்சே
செதுக்குற திரையென ஜெயிலாச்சே
சிறை முதல் திரை வரை தலைவரு அலப்பறை

ஆண் : உன் அலும்ப பார்த்தவன்
உங்க அப்பன் விசில கேட்டவன்
உன் மவனும் பேரனும்
ஆட்டம் போட வைப்பவன்

ஆண் : பேர தூக்க நாலும் பேரு
அத்தனை பட்டத்த பறிக்க நூறு பேரு
குட்டி செவுத்த எட்டி பார்த்தா
உசிரு கொடுக்க கோடி பேரு

ஆண் :ஹுக்கும் டைகர்கா ஹுக்கும்...

ஆண் : நீ எண்டு கார்டு வச்சா
இவன் ட்ரெண்ட மாத்தி வைப்பான்
நீ குழிய பறிச்சு வச்சா
இவன் மலையில் ஏறி நிப்பான்

ஆண் : சுத்தி அடிக்குற லத்திகிட்ட சிக்கினா
அட்டகத்தி எல்லாம் பொடிதான்
கண்டபடி நீ கம்பு எடுத்து சுத்துனா
உச்ச தலையில இடிதான்

ஆண் : நரையிருச்சுன்னு முறைச்சா
துரைகிட்ட வந்து கொலைச்சா
சிறையில் சிக்கி தொலையாதே
ஒரச்சற வரையில உனக்கொரு கொறையில

ஆண் : தொட நெருங்கிட முடியாதே
எது இழுக்கிது தெரியாதே
குள்ள நரிக்குது புரியாதே

ஆண் : விதிகளை திருப்புற தலைவரு அலைப்பற

ஆண் : உன் அலும்ப பார்த்தவன்
உங்க அப்பன் விசில கேட்டவன்
உன் மவனும் பேரனும்
ஆட்டம் போட வைப்பவன்

ஆண் : பேர தூக்க நாலும் பேரு
அத்தனை பட்டத்த பறிக்க நூறு பேரு
குட்டி செவுத்த எட்டி பார்த்தா
உசிரு கொடுக்க கோடி பேரு

ஆண் : அலப்பறை கிளப்புறோம்
தலைவரு நிரந்தரம்
அலப்பறை கிளப்புறோம்
தலைவரு நிரந்தரம்

ஆண் : டைகர்கா ஹுக்கும் அர்த்தமாயிந்த ராஜா

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07